ஹோமியோ சிகிச்சை

HOMEOPATHIC THERAPEUTICS.



DIGITIZED

Dr. S. SRINIVASAN.

Hahnemann Homeo Institute, Tiruvarur.

1960

L:4 :6
N49
01624

LL:4:6
N49
101624

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 -MAR 1949
MADRAS

11 Apr. 1755 to 2 July 1843.
ஸாமுவேல் ஹானிமான்.
SAMUEL HAHNEMANN.

" SIMILIA SIMILIBUS CURENTUR."

"யஸ்ச ஆமயோ பூதாநாம்
யேன ஜாயதே ஸர்வ்ரத
தேஷாம் ஹி ஆமயம் திரவியம்
ந புனதி சிகித்ஸிதம்!"

Dr. S. SRINIVASAN.
ஹோமியோ பிஸிஷியன் & ஸர்ஜன்,
திருவாரூர்.

முன்னுரை.

ஹோமியோபதி வைத்திய முறையின் முழு உபயோகத்தையும் ஒருவர் புரிந்துகொள்ளவேண்டுமென்றால் அதற்கு சாதனங்கள் பல உள. அவைகளில் முக்கியமானது வியாதியைக் கண்டுபிடித்து என்ன மாதிரியான சிகிச்சை செய்யவேண்டுமென்பதே. அதற்கு உபயோகமுள்ளது இப்புத்தகமே.

முதன் முதலில் இம்மாதிரி புத்தகங்கள் வைத்திய உலகத்தில் நடமாடுவது சில வைத்தியர்களுக்கு பிடிப்பதில்லை. ஏனென்றால் இம்மாதிரி புத்தகங்களால் ‘தான்தோன்றி’ வைத்தியர்கள் காளான் மாதிரி கிளம்பிவிடுகிறார்களாம். ஒழுங்கான முறையில் காலேஜில் படித்து பயிற்சியுடையவர்களுக்கு இது சங்கடமாயிருக்கிறதாம். இது வாஸ்தவமான சமாசாரமல்ல. ஏனென்றால் நம் நாட்டில் குடும்பத்தில் ஒவ்வொரு வீட்டிலும் விளக்கெண்ணை, கடுக்காய் கஷாயம், சித்தரத்தை, முக்கடுகம், கந்தகம் கலந்த மருந்து, வீரம் பூரம் சம்பந்தப்பட்ட மருந்துகள், பாஷாண மருந்துகள் கொயினா இன்னும் எவ்வளவோ, தற்போது நாகரீக மோஸ்தர் படைத்த மேதாவிகள் வீட்டில் டாக்டரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளாமலேயே M & B 693, சிபசால் காடி ஆஸ்பிரின், ஸாரிடோன் முதலிய விஷ மருந்துகள் தாராளயாக கையாளப்படுகின்றன. மற்றும் அலோபதிக் டாக்டர்களே தமிழிலும், ஆங்கிலத்திலும் ‘குடும்ப வைத்தியம்’ புத்தகம் பிரசுரித்திருக்கிறார்கள். அவைகளைவிட நம்புத்தகம் கெடுதலானதல்ல. குடும்ப வைத்தியத்தை சீர்திருத்தி நல்ல மருந்துகளை, நல்ல விதத்தில் எல்லோரும் உபயோகப்படுத்தி சௌகரியம் அடைய வேண்டுமென்பதே இப்புத்தகத்தின் நோக்கம்.

ரொம்ப சிக்கலான கேசுகளைத்தவிர மற்றவைகளைச் சுலபமாகப் புரிந்துகொள்ளவும், அவைகளுக்கு சரியான சிகிச்சை செய்யவும் இப்புத்தகத்தின்கண் அவசியமான விஷயங்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன. ரொம்பச் சிக்கலான கேசுகளில் மாத்திரம், இப்புத்தகத்தின்கண் சொல்லப்பட்டிருக்கும் சிகிச்சையினால் பயன் ஏதும் இல்லாவிட்டால் உடனே ஒரு அனுபவமுள்ள, திறமையான ஹோமியோபதி டாக்டரைக் கலந்துகொள்ளலாம். வியாதியை பரிபூர்ணமாகத் தெரிந்துகொள்ளுவதற்கும், அதை நன்றாக சௌகரியப்படுத்துவதற்கும் நம் "ஹோமியோ கீ நோட்ஸ்" என்னும் மருந்துகளின் விசேஷக்குணங்களின் குறிப்புப் புத்தகத்தையும், மற்றும் பற்பல நோய்களின் விசேஷ வெளியீடுகளையும் அறவே படித்துத் தெரிந்துகொண்டாலொழிய சாத்தியமில்லை. அனேக வியாதிகளில் அனேக விதமான உடற்கூறுகளிலும் பற்பல பேதங்களுண்டு. அவைகளை சீர்தூக்கிப் பார்த்து சரிசெய்வது நன்றாக படித்துத் தேர்ச்சி பெற்றவர்களுக்கே சாத்தியமாகும். ஆகவே இப்புத்தகத்துடன்கூட நம்மால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் மற்றப் பல புத்தகங்களையும் படித்தறியவும். இப்புத்தகத்தின்கண் சிகிச்சை முறை வேண்டும் அளவிற்கு விரிவாகவே விளக்கப்பட்டிருக்கிறது.

இதில் பிரதான அம்சம் வியாதிகளின் சிகிச்சை முறை கூறப்பட்டிருக்கும் விதமேயாம். பத்து வருஷ அனுபவமும், ஆயிரக்கணக்கான நோயாளிகளை சௌகரியப்படுத்தின அனுபவமும், பற்பல மாணாக்கர்களுக்கு போதித்ததன் பயனும், இதைப்படிக்கும் மாணாக்கர்களுக்குத் தகுந்தபடி சிறப்பான, தெளிவான, பிராக்டிகல் முறையில் கூறப்படுவதற்கு உபயோகமாகயிருந்தது. சற்றே

றக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் சாமுவேல் ஹானிமான் ஆரம்பித்த வைத்திய முறையின் சிறப்பையும், வேதவ்யாசர் அருளிச் செய்த பொன்மொழியையும் எவ்வளவோ பெயர்கள் ஆட்சேபித்தும், பொய்யாக்க முயன்றும் தோல்வி அடைந்தே வந்திருக்கின்றனர். திரும்பத் திரும்ப அனுபவ பூர்வமான இம்முறையின்கண் அளவிலா நம்பிக்கை பூண்டு இதைப் பரப்புவதே நம் கடமை எனக்கொண்டு சகலரும் பயன்பட கடினமான பதங்களை நீக்கி புரியும்படியாக எழுதப் பட்டிருககிறது.

படிப்பவர்கள் யாவரும் எதிர்பார்க்கும் பலனை தங்கள் அனுபவத்தில் கண்டறிவார்களென நம்பும்.

Dr. S. SRINIVASAN.

Tiruvarur,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 MAR 1949
MADRAS

பொருளடக்கம்.

முன்னுரை	i
பொருளடக்கம்	v
ஹோமியோபதி வைத்திய முறை	xiii
வியாதிகளின் குறிகள்	xLv
நாடி	xLv
சரீர உஷ்ணம்	xLix
சுவாசம்	Li
நாக்கு	Li
வலி	Liii
தோல்	Liv
மூத்திரம்	Liv
ஒற்றடம்	Lv
எனிமா	Lvi
சிகிச்சை :—	
1. சுரம்	1
2. பெரியம்மை	3
3. நீர்க்குளுவான்	7
4. சின்னம்மை	8
5. ஸ்கார்லட் சுரம்	10
6. ஜெர்மன் மீசில்ஸ்	13
7. டைபஸ் சுரம்	13
8. டைபாயிடு	15
9. பஞ்ச சுரம்	26
10. சாதாரண சுரம்	27
11. தாளம்மை	30

12.	டெங்கு	32
13.	வாயு சுரம்	32
14.	தசை வாயு	39
15.	நாட்பட்ட வாயு	41
16.	கவுட்	44
17.	கிரானிக் கவுட்	49
18.	ஆர்த்ரைடிஸ்	50
19.	மதுமேகம்	52
20.	ரிக்கெட்ஸ்	60
21.	பெரி-பெரி	64
22.	ஸ்கர்வி	66
23.	பர்பூரா	67
24.	பெல்லகரா	69
25.	காலரா	69
26.	டிப்தீரியா	72
27.	கக்குவான்	74
28.	ரண ஜன்னி	76
29.	பைத்திய நாய்க்கடி	77
30.	இன்ப்ளுயன்ஸா	78
31.	எரிசிபிலஸ்	79
32.	பிளேக்	80
33.	ரத்த சீதபேதி	82
34.	இளம்பிள்ளை வாதம்	84
35.	மால்டா சுரம்	84
36.	மூளை சுரம்	85
37.	காலா-அசார்	86
38.	மஞ்சள் சுரம்	87

39.	நித்திரை வியாதி	89
40.	மலேரியா	89
41.	ஆந்திராக்ஸ்	93
42.	கிளாண்டர்ஸ்	93
43.	க்ஷயம்	95
44.	குஷ்டம்	95
45.	ஸிபிலிஸ்	96
46.	யாஸ்	99
47.	கட்டிகள் (டியூமர்)	100
48.	யானைக்கால்	103
49.	கொக்கிப் புழு	104
50.	கினிப் புழு	106
51.	கிரானிக் கழிச்சல்	107
52.	ரத்த சோகை	108
	ரசாயனப் பொருள்களினால் ஏற்படும் வியாதிகள்:—	
53.	சூரிய உஷ்ண ஜன்னி	110
54.	கெயிஸன் வியாதி	111
55.	சாராயக்குடி	111
56.	அபின் கொகேன் வியாதி	112
57.	ஈயப் பாஷாணம்	113
58.	வெள்ளைப் பாஷாணம்	114
59.	சாப்பாட்டு விஷம்	114
	அன்னக் குழாயின் வியாதிகள்:—	
60.	வாய்ப் புண்	115
61.	வாய் நாற்றம்	115
62.	வாய்க் குழிப்புண்	116
63.	பல் மூளைத்தல்	117
64.	பல் வலி	118

65. பல் ஈரல் சிரங்கு 120
66. நாக்கு வீக்கம் 120
67. தொண்டை கரகரப்பு... 120
68. டான்சில்ஸ் 120
69. கிரானிக் டான்சில்ஸ் 121
70. வின்செண்ட் வியாதி 122
71. தொண்டை வீக்கம் 122
72. தொண்டை அடைப்பு 123
73. தொண்டை கட்டி 123
74. வயிற்று வீக்கம் 123
75. வயிற்று ரணம் 125
76. வயிற்றுப் புற்று 127
77. ரத்த வாந்தி 127
78. வயிற்று விரிவு 129
79. அஜீரணம் 129
80. வயிற்று வலி 131
81. மயக்கம் 131
82. பித்தத் தலைவலி 132
83. கடல் வாந்தி 132
84. வாந்தி 133
85. குடல் வீக்கம் 133
86. பேதி — 134
87. குடல் வலி 135
88. குடல் பூச்சிகள் 136
89. மலச்சிக்கல் 136
90. அப்பெண்டிசைடிஸ் 137
91. ஹெர்னியா 138
92. குடல் கட்டிகள் 139
93. பவித்ரம் 140

94. மூலம் 140
95. ஆசனவாய் வெடிப்பு 142
96. ஆசனவாய் அரிப்பு 142
97. ஆசனவாய் தள்ளுதல் 143

ஈரல் வியாதி.

98 ஈரல் கடமை 144
99. மஞ்சட்காமாலை 144
100. ஈரல் சிறுத்தல் 146
101. ஈரல் கட்டி 146
102. ஈரல் சிரங்கு 147
103. ஈரல் கிரந்தி 148
104. ஈரல் புற்று 148
105. பித்தப்பை கல் 148
106. மகோதரம் 149
107. பெரிடோனியம் வீக்கம் ... 151

ரத்தக்குழாய் வியாதிகள்

108. ஹிருதயத்தின் வியாதிகள் ... 152
109. ஹிருதய வலி 153
110. மயக்கம் 154
111. படபடப்பு 155
112. இரத்தக் குழாய் வீக்கம் 156

குழாயில்லாத கிளாண்டு வியாதிகள்.

113. தைராயிட் வியாதி 157
114 காயிடர் 158
115. டிடானி 158
116. அடிசன் வியாதி 159
117. அக்ரோமிகாலி 159
118. ஸ்பிளீன் கட்டி 160

சுவாசக் குழாய் வியாதிகள்.

119. தொண்டை கம்மல் …. …. 160
120. பிராங்கைடிஸ் …. …. 161
121. ஜலதோஷம் …. …. 164
122. ஆஸ்த்மா …. …. 166
123. நிமோனியா …. …. 167
124. பிளூரஸி …. …. 170

மூத்திரக்காய் வியாதிகள்.

125. மூத்திரப் பரிசோதனை …. 171
126. ஆல்புமன் மூத்திரம் …. …. 175
127. மூத்திர விஷம் …. …. 175
128. பிரைட்ஸ் வியாதி …. …. 176
129. மூத்திரப்பை வீக்கம் …. …. 177
130. மூத்திரக்காய்க்கல் …. …. 178
131. பிராஸ்டேட் கிளாண்டு வீக்கம் …. 179
132. நீர்க்கடுப்பு …. …. 180
133. நீரடைப்பு …. …. 180
134. வெள்ளை—வெட்டை …. …. 181
135. இந்திரிய ஸ்கலிதம் …. …. 184

நரம்பு வியாதிகள்.

136. அபாப்ளக்ஸி …. …. 186
137. குழந்தை வலிகள் …. …. 188
138. பாரிச வாயு …. …. 189
139. காக்கை வலிப்பு …. …. 192
140. நரம்பு வலி …. …. 195
141. ஒற்றைத் தலைவலி …. …. 200
142. ஹிஸ்டிரியா …. …. 202
143. நரம்பு வீக்கம் …. …. 204
144. நரம்புத் தளர்ச்சி …. …. 205
145. காரியா …. …. 206

146. டார்டிகாலிஸ் …. …. 207
147. தூக்கமின்மை …. …. 207

கண் வியாதிகள்.

148. கண்வலி …. …. 209
149. கண் அசதி …. …. 212
150. கண்ணில் அந்நிய வஸ்துக்கள் …. 213
151. தூரதிருஷ்டி …. …. 213
152. சமீபதிருஷ்டி …. …. 213
153. காடராக்ட் …. …. 215
154. ஓரக்கண் …. …. 216
155. க்ளாகோமா …. …. 217
156. கண்கட்டி (கிரிக்கட்டி) …. 218

காது வியாதிகள்.

157. காது வலி …. …. 219
158. காது செவிடு …. …. 222

மூக்கு வியாதிகள்.

159. சளி …. …. …. 225
160. மூக்கிலிருந்து ரத்தம் வருதல் …. 226
161. மூக்கில் சதை வளருதல் …. 228
162. அடினாய்ட்ஸ் …. …. 228

தோல் வியாதிகள்.

163. தோல் அரிப்பு …. …. 229
164. அர்டிகேரியா …. …. 231
165. பிடிரியாசிஸ் (பொடுகு) …. 231
166. ஸோரியாசிஸ் …. …. 232
167. அக்கி …. …. …. 233
168. கரப்பான் …. …. 235
169. பரு …. …. …. 238

170. பரியாரிப்படை 239
171. புண் 240
172. கடி, படை 243
173. பிளவை 245
174. சிரங்கு, கட்டி 247
175. விரற்சுத்தி 249
176. ஆணி 250
177. பாலுண்ணி 251
178. மண்டைக்கரப்பான் 252
179. மயிர் உதிர்தல் 253
180. பேன் 253
181. சொரி சிரங்கு 255
182. விஷப்பூச்சி கடிகள் 256

மற்றவை.

183. சீழ்க்கட்டி 259
184. நெருப்புச்சுட்ட புண் ... 261
185. மூச்சு நின்றுவிடுதல்.... 264
186. காயங்கள் 267
187. சிராய்ப்பு—அடி 269
188. சுளுக்கு 270
189. எலும்பு முறிவு 270
மருத்துவமும் சிசு சம்ரக்ஷணையும் 272
கர்ப்பச் சின்னங்கள் 272
கர்ப்பச் சிதைவு 273
பிரசவம் 274
கஷ்டப் பிரசவம் 277
பிரசவ இசிவு — 282
பால் சுரம் 283
பிரசவ சுரம் — 284
உன்மத்தம் 284
தனிப்பட்ட வியாதிகள் 289
வெள்ளை, வெட்டை 294
சினைப்பை 296
யோனிக்குழாயின் வியாதிகள் ... 296

ஹோமியோபதி வைத்திய முறை.

வியாதிக்கு மருந்து கொடுக்கவேண்டிய வழியைக்
கண்டுபிடித்ததில்தான் ஹானிமானின் சாமர்த்
தியம் விளங்குகிறது. நமக்கு வியாதியின் பெயர்
அவ்வளவு முக்கியமானதல்ல. ஏனென்றால் ஒவ்
வொரு வியாதியும் அநேக குறிகளைக்கொண்ட நிலை
மையே யாகும். ஆகவே ஒவ்வொரு வியாதிக்கும்
அநேக மருந்துகள் உண்டு. ஒவ்வொன்றும் அத
னதன் குறிகளைக்கொண்டே ஆராயவேண்டும்.
வியாதிகளின் சிகிச்சையைப்பற்றி எழுதிவரும்போ
தெல்லாம், மருந்துகளின் பேதங்கள் நன்றாக ஆரா
ய்ந்து விவரித்துரைக்கப்பட்டிருப்பதுதான் பிரத்தி
யேக அம்சம். இதை வைத்துக்கொண்டு சகல வியா
திகளையும் சுலபமாக நிவர்த்திக்கலாம். குறிகளைக்
காட்டிலும் குறிகள் எப்பொழுது மாறுகின்றன
என்பதுதான் முக்கியம்.

இதை நிரூபிக்க ஒரு உதாரணம்:—

1943-ம் வருடம் ஒரு கிழவி, வயது 62, மலேரி
யா என்ற சுரத்திற்கு எம்மிடம் வைத்தியத்திற்கு
வந்தாள். இது அவளுக்கு 2 மாத காலமாக தொந்
திரவு கொடுத்துக்கொண்டிருந்தது. தினம் மத்தி
யானம் 3 மணிக்கு கடியாரம் மாதிரி ஒரே குளிர்
நடுக்கும். 1½ மணிநேரம் நடுங்கிக்கொண்டேயிருக்
கும். பிறகு வேர்த்து விட்டுவிடும்.

இம்மாதிரி கேஸ் நம்மிடம் வந்தால்—நமக்கு
அதை மலேரியா என்று பெயர் வைத்து கூப்பிட்டு
கொயினா, மெபாக்ரின், பாலுட்ரின் முதலியன
கொடுத்தால் இது சௌகரியமாகவே ஆகாது.

மலேரியா என்று கண்டுபிடித்தபின், அதன் பிரத்தியேகமான குணங்களை ஆராயவேண்டும்.

முதல் பாயிண்ட்:— மலேரியா ஜுரத்திற்கு பொதுவான மூன்று ஸ்திதிகளும் அதாவது குளிர், சுரம், வேர்வை மூன்றும் இல்லை. குளிர் மாத்திரந்தான் இருக்கிறது.

இரண்டாவது பாயிண்ட்:- சரியாக தினம் ஒரே டயத்தில்வந்து ஒரு நியமமான டயம் இருக்கிறது.

மூன்றாவது பாயிண்ட்:- போர்த்துக்கொண்டே இருக்கவேண்டி யிருக்கிறது. தாகம், வரட்சை, ஒன்றும் இல்லை.

அடுத்த பாயிண்ட்: சரியாக மத்தியானம் 3 மணிக்கு வந்து 4½ மணிக்கு நின்றுவிடுகிறது.

உடனே நம் ஹோமியோபதியின் பதார்த்த குணங்களைப் படியுங்கள். மலேரியா என்ற தலைப்பின்கீழ் மேற்கண்ட பாயிண்டுகள் இருக்கும். மருந்து (Cedron) 'செட்ரான்' இரண்டு மாதம் சிரமப்பட்டுக்கொண்டிருந்த அந்த கிழவி மறுநாள் சுரத்திலிருந்து அதிசயமாக விடுபட்டுவிட்டாள். இதைக் கொயினா செய்யுமா? கேளுங்கள் அலோபதிக் வைத்தியரை அல்லது வேறு யாரையாவது? மற்றொன்று மெடீரியா மெடிகாவையாவது அல்லது ஹோமியோ ரெபர்ட்டரியாவையாவது ஏடுகளைப்பிரட்டி செட்ரானைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் அது மிக மிகச் சிரமம். நம் பாடங்களின் வழியாக கண்டுபிடிப்பது மிகசுலபம். அதுதான் நம் பிரத்தியேக அம்சம்.

ஒவ்வொரு மருந்திற்கும் பொதுவான சில குணங்கள் உண்டு. அதாவது எந்த வியாதியாய் இருந்தாலும் இந்த குணங்கள் கூடவேயிருக்கும். ஆகை

யால் அந்தமாதிரி குணங்களை ஒரு வியாதியஸ்தனிடம் கண்டால் அதை வைத்துக்கொண்டு மருந்தைப் பொறுக்கலாம். என்னயிருந்தாலும் அவரவர்களின் ஞாபகசக்திதான் சிறந்த சாதனம். நமது பாடங்களில் மருந்துகளின் குணங்கள் அம்மாதிரி தொகுத்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஒரு வியாதியஸ்தனுடைய தலையில் அதிகமான வியர்வை, அவயவங்களில் சில்லிப்பு, உடம்பு பெருத்தும் அவன் ஈரத் தரையில் நின்று வேலைசெய்யும்படியாய் இருந்தால் அவன் எந்த வியாதியால் சிரமப்பட்டுக்கொண்டிருந்தாலும், இந்தக் குறிகளெல்லாம் இருக்குமானால் **கால்கேரியா கார்பானிகா** தான் மருந்து. இதுபோல.

(Chronic Diseases) நாள்பட்ட சீக்குகள்:— தன்னுடைய கேசுகளில் சரியானபடி மருந்து கொடுத்தும் வியாதி சரிவர குணமாகவில்லை என்பதைக் கண்டான் **சாமுவேல் ஹானிமான்**. உதாரணமாக ஒரு ஆஸ்த்மா கேசை எடுத்துக்கொள்ளுவோம். அது மேல்வாரியாகப் பார்த்தால் தனி வியாதியாகத்தான் தென்படும். பெரும்பாலும் சரியான மருந்து தேடிக் கொடுத்தபோதிலும் சௌகரியமாகாமலிருக்கும். விசாரித்துப் பார்த்தால் அந்தநோயாளிக்கு ஏதோ ஒரு தோல்வியாதியோ அல்லது வயிற்றுப் போக்கோ ஒரு காலத்தில் முந்தியிருக்கலாம். இதெல்லாம் வெவ்வேறு வியாதியல்ல. ஆனால் ஒரே நாள்பட்ட நோயின் பலவிதமான தோற்றங்களே. இந்தமாதிரி ஆலோசனைசெய்து வியாதிகளை மூன்றுவிதமாகப் பிரித்தார். அதாவது சகல வியாதிகளுக்கும் காரணம் மூன்றுவிதமான தத்துவங்கள்தான்.

(PSORA) **பசோரா:**— இது ஒரு முக்கியமான தத்துவம்—இந்த சோராவினால் தாக்கப்பட்டிருப்ப

வர்களுக்கு ஒருகாலத்தில் கரப்பான் அல்லது அக்கியைப்போன்ற தோல்வியாதியிருக்கும்.

இரண்டாவது **ஸிபிலிஸ்** (SYPHILIS)—: இது கிரந்திப்புண், கிரந்தி நீருள்ள ஸ்திரீ புருஷ சம்போகத்தினால் ஏற்படுவது. இதை நாட்டு மருந்து, இங்கிலீஷ் மருந்தான அலோபதி மருந்து முதலியவைகளால் அமுக்கப்பட்டு விட்டால் உள்ளிருந்து கொண்டே ஹிருதயம், கண், முதலிய முக்கியமான அவயவங்களை தாக்கிவிடும். ஹோமியோபதி முறைப்படி மருந்து கொடுத்து சௌகரியம் செய்யாவிடில் பலவிதமாகவெளியில் தோன்றிக்கொண்டே இருக்கும்.

மூன்றாவது SYCOSIS—**சைகோஸிஸ்**:- இது வெட்டை. இதுவும் சம்போகத்தினால் ஏற்பட்ட வியாதியேயாகும்.

யானைக்கால் வியாதி ஆரம்பித்து பல நாட்கள் ஆகாவிட்டாலும் அது நாள்பட்ட சீக்குதான். அதே மாதிரி ஸோரா முதலிய மூன்றும் க்ரானிக் (நாள்பட்ட) சீக்குதான்.

நாள்பட்ட வியாதி என்றால் மருந்து கொடுத்து சௌகரியம் செய்யாவிட்டால் தானாக சௌகரியமாகாது. டைபாயிட், நிமோனியா, காலரா முதலியன அக்யூட் (Acute) வியாதிகள். அதாவது ஒரு நாள்வரை இருந்து தானாக சௌகரியமாகிவிடும். அல்லது ஆளைத் தீர்த்துவிடும்.

ஆகையினால் ஒரு வியாதியை சிகிச்சை செய்யும்போது அதுவும் நாள்பட்ட (Chronic) வியாதியாய் இருந்தால் கண்டிப்பாக வியாதியஸ்தருக்கு என்ன என்ன சீக்கு இருந்தது என்ற விவரம் தெரிந்து

கொண்டு 'ஸோரா' முதலிய மூன்றில் எதைச் சேர்ந்தது என்று அறிந்து அதற்குத் தகுந்தபடி மருந்து கொடுக்கவேண்டும். ஆகையால் மருந்து பொறுக்கிக் கொடுக்கும்போது மருந்துகளின் விசேஷ குணங்களையும் வியாதியின் அதாவது வியாதியஸ்தரின் விசேஷ குணங்களையும் பொருக்கிக்கொடுத்தும்கூட அனேக தடவைகளில் ஸோரா முதலிய மூன்றிற்குள் மருந்து பொருக்கிக் கொடுத்தால்தான் சௌகரியமாகும். ஸோராவிற்கு 'ஸோரினம்'—ஸிபிலிஸுக்கு 'ஸிபிலினம்'—சைகோஸிற்கு 'மெடரினம்'—இதை மூன்றையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆகவே ஹோமியோபதி முறையில் ஆரம்ப பயிற்சியுடையவர்கள் அநாவசியமாக எல்லா மருந்துகளையும் படித்துக் குழப்பிக்கொள்ளாமல் பொறுக்கின மருந்துகளாக ஒரு முப்பது மருந்துகளைப்பற்றி நன்றாக தெரிந்து கொண்டால் அவைகளை வைத்துக்கொண்டு முக்கால்வாசி வியாதிகளை குணப்படுத்திவிடலாம். மற்ற மருந்துகளைப்பற்றி அறிய அறிய நல்லதே. அதை மெள்ள கற்றுத் தெரிந்துகொள்ளலாம்.

மற்றமுறை வைத்தியர்களைப்போல் அல்லாமல் ஹோமியோபதி வைத்தியன் கவனிக்கவேண்டியது சில உள:—

சீக்காளி தன்னைப்பற்றி என்ன சொல்கிறான், அவனுடைய உணர்ச்சி என்னமாக இருக்கிறது. அவனுக்கு எந்தெந்த குறிகள் சட்டென்று நீங்க வேண்டும் என்பதெல்லாம் சாவதானமாய் கேட்டுக் கொள்ளவேண்டும். அவன் முடித்த பிறகு அவனுடைய பழைய வியாதிகள், அவனுடைய குடும்ப வியாதிகள். தற்போது உள்ள வியாதிகளின் கார

ணம் (அவனுக்குத் தெரிந்தவரைக்கும்) கடைசியில் அவன் செய்துகொண்ட வைத்திய சாதனங்கள், இவையெல்லாவற்றையும் கண்டிப்பாய் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

பரம்பரை வியாதிகள் முக்கியமாய் கவனிக்கப் படவேண்டியது. அப்போதுதான் க்ரானிக் (நாள் பட்ட) வியாதிகளை சௌகரியம் பண்ணவேண்டும். 'ஸோரா' முதலிய மூன்று தத்துவங்களுடன் ஒன்று நிச்சயம் இருக்கும். தற்காலத்தில் இன்னும் இரண்டு தத்துவங்களை கூட சேர்த்திருக்கிறார்கள். அவைகள் ஒன்று டியூபர்குளோசிஸ், மற்றொன்று 'கான்ஸர்' என்ற புற்று நோய்.

இவை இரண்டிற்கும் இரண்டு மருந்துகள் இருக்கின்றன. 'டியூபர்குலினம்' கான்ஸரோஸின்.

ஒன்று மாத்திரம் நிச்சயம். இந்த அக்கிரமமான 'அம்மை' வைத்தியத்தினாலேயே உலகத்தில் தற்போது டியூபர்குலோசிஸ் அதிகம் ஆகிவிட்டது. எந்த கேஸிலும் அம்மை அடிக்கடி வைத்துக் கொண்டிருக்கிறான் என்று சொன்னால் 'தூஜா' ஒன்றிரண்டு டோசும் டியூபர்குலினம் சில டோசும் கொடுக்கவேண்டியது அவசியம்.

குடும்பத்தில் யாருக்காவது டியூபர் குலோசிஸ் வந்து இறந்திருந்தாலே போதும். வியாதியஸ்தருக்கு டியூபர்குலினம் கொடுத்தே ஆகவேண்டும்.

இந்த சமயத்தில் ஒரு வார்த்தை தற்போதும் நம் இந்தியா கவர்மெண்ட் டியூபர்குலோஸிஸை வென்றுவிட அந்நிய நாட்டிலிருந்து ஒரு மருந்தையும் (B. C. G. Vaccine) பி. ஸி. ஜீ. வாக்ஸின் என்று பெயர். அதை ஜனங்களுக்கு குத்த சில மேதாவிகளையும் அழைத்திருக்கிறார்கள். இந்த மருந்து

என்னவென்று கேட்பீர்களோ! டியூபர்குலோசிஸ் பூச்சியிலிருந்து ஒரு பிரத்யேகமான வழியால் தயாரிக்கப்பட்ட மருந்து.

Koch:- (காச்) என்பவர்—இவர் ஒரு பெரிய அலோபதிக் வைத்தியர் 1882ம் வருஷம் டியூபர்குலோஸிஸ் பூச்சியைக் கொன்று அதை மருந்தாகச் செய்து வைத்தியம் செய்து பார்த்தார். அவர் பெயர் பெரிதும் புகழப்பட்டது. பாவம் சின்னாட்களிலேயே அவர் புகழ் புஸ்வாணமாகிவிட்டது. ஏன் என்றால் அவர் மருந்துகொடுக்கப்பட்ட ஒவ்வொருவரும் வெகு சீக்கிரமாக யமலோக யாத்திரை செய்தனர். ஆகையால் அது கைவிடப்பட்டது.

இந்த 'காச்' என்ற ஜெர்மன் வைத்தியர் உபயோகப்படுத்துவதற்கு சில வருஷம் முந்தியே நம் வைத்திய பிரபல இங்கிலாந்து டாக்டரான டாக்டர் **(Burnett)** என்பவர் டியூபர்குலோஸிஸ் பூச்சியைக் கொன்று அதை வீரியப்படுத்தி 'பாஸில்லினம்' என்ற பெயரில் உபயோகப்படுத்தி நல்ல பலன் கண்டார். இன்றைக்கும் இம்மருந்தைக்கொண்டு பலவிதமான டியூபர்குலோஸிஸ் சம்பந்தப்பட்ட நோய்களை சொஸ்தம் செய்துகொண்டிருக்கிறார்கள் நம் ஹோமியோபதி வைத்தியர்கள்.

ஆகவே அதற்குப் பிறகு பல வருஷ காலமாக ஐரோப்பா முதலிய நாடுகளில் உபயோகப்படுத்தப்பட்டும் பலனில்லாமல் இருக்கும் இந்த B. C. G. வாக்ஸினை நம் இந்தியர் தலையில் கட்டி அநியாயமாக ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். ஸ்ட்ரெப்டோமைஸின், பி. ஸி. ஜீ. வாக்ஸின், பாரா அமினோ சாலிஸிலிக் ஆஸிட் இன்னும் என்னென்ன விதமான மருந்துகளோ தெரியாது, வரப்போகிறது

புஸ்வாணத்தை கிளப்பிவிட்டு விட்டு வியாதியை அதிகரிக்கச் செய்துவிட்டு ஜனங்களின் மூளையைக் குழப்பிவிட்டுவிட்டு செல்லப்போகின்றன.

இதற்கெல்லாம் காரணம் ஆங்கில வைத்தியமான அலோபதிக் வைத்தியத்திலேயே மூழ்கிக் கிடக்கும் டாக்டர்களால் கவர்ன்மெண்ட் நடத்தப்படுவதால்தான், ஐயோ! 'அம்மை வைப்பதற்கும்' இம்மாதிரி பி.சி.ஜி. வாக்சின் முதலிய உபயோக மற்ற வைத்திய செலவு செய்வதற்கும் செலவழிக்கும் பணத்தை ஹோமியோபதியில் தேர்ந்த டாக்டர்களை தயார் செய்வதில் செலவழித்தால் எவ்வளவு மேன்மையாயிருக்கும்! இதற்கும் காலம் சீக்கிரம் வரும்.

நிற்க ஒரு உதாரணம்: ஒரு பிரபல டாக்டர் டயரியிலிருந்து சொல்வோம்.

50 வயதுள்ள ஒரு ஸ்திரீ அடிவயிற்றில் தாங்க முடியாத வலியுடன், சாப்பிட்டதெல்லாம் வாந்தியெடுத்துக்கொண்டு வந்தாள். இரண்டு பெரிய சர்ஜன்கள் வயிற்றில் புற்றுநோயென்றும் ஆபிரேஷன் செய்வது அபாயமென்றும் சொல்லிவிட்டார்கள்.

இருந்தாலும் வீட்டிற்கு அனுப்புவதற்கு முந்தி டாக்டர் மறு முறை பரிசோதித்து பார்க்க எண்ணினர். அவளால் படுத்துக்கொண்டு முனக முடிந்தது. சாப்பிடவே முடியவில்லை.

அவளுக்கு கீழ்கண்ட மாதிரி சில கேள்விகள் போடப்பட்டன.

(1) உங்கள் குடும்பத்தில் யாருக்காவது டி. பி. இருந்ததுண்டா? ஆமாம் அவள் சகோதரனும், சகோதரியும் டி. பி. யினால் இறந்தார்கள்.

(2) இரண்டாம் தடவை அம்மை வைக்கப்பட்டிருக்கிறதா? ஆம் 5 வருஷத்திற்கு முன். அன்றையிலிருந்து உடம்பு சரியாக இல்லை.

(3) வயிற்றில் ஏதாவது பலத்த அடிபட்டதுண்டா? ஆம், 17, 18 வயதாயிருக்கும்போது பலத்த அடி கீழே விழுந்ததினால் பட்டதுண்டு.

முதன்முதலில் டி. பி. குடும்பத்தில் இருந்ததென்பதற்காக 'பாசில்லினம் 30' ஒரு டோஸ் கொடுக்கப்பட்டது.

3 நாள் கழித்து அவளால் ஒருமைல் நன்றாக நடக்கமுடிந்தது. சாப்பிட முடிந்தது. வாந்தியில்லை.

இரண்டாவது:— அம்மை வைத்ததிற்கு 'தூஜா' தாய்திராவகத்தில் இரண்டு மூன்று வேளை கொடுக்கப்பட்டது.

ஒரு வாரம் கழித்து, அவளுக்கு வெட்டை ஊற்ற ஆரம்பித்துவிட்டது. வரவர வயிற்றிலிருந்த கட்டி கரைய ஆரம்பித்துவிட்டது.

மூன்றாவது:— அடிபட்டதிற்காக 'பெல்லிஸ் பெரன்னிஸ்' என்ற மருந்து கொடுக்கப்பட்டது. ஒரு வாரத்திற்குப் பிறகு நன்றாக சௌக்கியமாகி எல்லா வேலையும் செய்யத் தொடங்கியிருந்தாள்.

எப்படி? இதுதான் ஹோமியோபதி. மூன்றாவது மருந்தைக் கொடுத்த மூன்று நாள் கழித்து

வயிற்றிலிருந்த கட்டி குழந்தை வெளிப்படுவது போல் வெளிவந்துவிட்டது. எப்படி ஆபரேஷன்!

டியூபர்குலினம், தூஜா இவை இரண்டும் கொடுத்து கிரானிக் தத்துவங்களை சௌகரியப்படுத்தாமல் 'பெல்லிஸ் பெரன்னிஸ்' மாத்திரம் கொடுத்திருந்தால் இம்மாதிரி நடந்திருக்காது.

இது நடந்து, அந்த டாக்டர் அறிய 15 வருஷம் சௌகரியமாக இருந்தாள்.

இம்மாதிரி கேசுகளில்தான் வியாதியின் பெயர் (மேற்சொன்ன கேஸில் கர்ப்பப்பை கட்டி) அதிகமாக உபயோகப்படுவதில்லை. கிரானிக் காரணங்களைத் தகர்த்தெறிந்து விட்டுத்தான் வியாதியை சீக்கிரம் சொஸ்தம் செய்யமுடியும்.

மற்றொரு முக்கியமான விஷயம்:—வியாதியின் காரணம் முக்கியம். அதாவது அடி, பயம், அதிர்ச்சி முதலியன.

அடிபட்டால் 'ஆர்னிகா' திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியால் என்றால் 'காபியா' இம்மாதிரி.

வியாதியின் பெயர்கள்.

இதைப்பற்றி பலர் பலவிதமான அபிப்பிராயம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

டைபாயிட், நிமோனியா ஆஸ்த்மா, காலரா முதலிய பெயர்கள் மிக மிக அவசியமே. சில நாள்பட்ட கிரானிக் வியாதிகளில் அவைகளைக் கொண்டு மாத்திரம் வைத்தியம் செய்யமுடியாது என்பதற்காகத்தான் பெயரைப்பற்றி சிலபேர் கவலைப்படவேண்டாம் என்று சொல்லுகிறார்கள்.

காலரா, நிமோனியா முதலிய கடுமையான வியாதிகளில் பேர் என்ன என்று தெரிந்துகொண்டுதான் சிகிச்சை செய்யவேண்டும். அதாவது காலரா வென்றால் என்னென்ன மருந்துகள் உபயோகப்படும் என்று சட்டென்று தெரிந்துகொள்ளலாம். இரண்டாவது வியாதி எப்படிப்பட்டது, கடுமையானதா? ஆபத்தானதா என்னென்ன சிகிச்சை விதிகளைக் கவனிக்கவேண்டும். சுகாதாரம் எப்படி எப்படி அனுஷ்டிக்கவேண்டும், ஆகாரம், பத்தியம் எப்படியிருக்கவேண்டும் என்பதெல்லாம் சொல்ல முடியும்.

நிமோனியா, பிரான்கைடிஸ், ப்ளூரஸி, டி. பி. இன்னும் சில வியாதிகளில் எல்லாம் ஒரு மாதிரியாக சளி, கபம், சுரம் முதலியன ஏற்பட்டுவிடும். இவைகளுக்கெல்லாம் வித்தியாசம் தெரியாத (அனுபவம், படிப்பு இல்லாத) வர்களுக்கு என்ன சிகிச்சை செய்யவேண்டும், எப்படி மருந்து கொடுக்கவேண்டும், எந்தக் குறிகள் அத்யாவசியமானவை, இதெல்லாம் கண்டுபிடிப்பது சிரமம்.

டி. பியை நிமோனியா என்று நினைத்துக்கொண்டு ஒரு வாரத்தில் சௌகரியப்படுத்திவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு ஜலதோஷத்திற்கு மருந்தைக் கொடுத்தால்—இப்படித்தான் சில 'ஹோமியோ நிபுணர்கள்' செய்துவிட்டு ஹோமியோபதியின் கௌரவத்தையும், தத்துவத்தையும் கெடுத்து குட்டிச்சுவராக்குகிறார்கள்.

சுரம் என்றால் அது என்ன சுரம், அம்மையா, டைபாயிடா, மலேரியாவா, என்று கண்டுபிடித்து அவசியம் சொல்லவேண்டும்.

மலேரியாவாயிருந்தால் ஒன்றுவிட்டு ஒரு நாள் அல்லது தினம் அல்லது இப்படி வரும், சுரம்வரும் நாளன்றைக்கு கஞ்சிதான் சாப்பிடவேண்டும். வியாதியை முற்றவிட்டால் கல்லீரல் (SPLEEN) வீங்கி கட்டி ஏற்பட்டுவிடும். ரத்தம் குறைந்து சோகை ஏற்பட்டுவிடும் என்றெல்லாம் தெரியப் படுத்தவேண்டும் பிறகு அலோபதிக், ஆயுர்வேதிக் முதலிய வைத்தியர்கள் மாதிரி கண்மூடித்தனமாக கொயினு முதலிய மருந்தைக் கொடுத்து வியாதியை அதிகப்படுத்தாமல் நாம் முன்னர் சொல்லியபடி எந்தவிதமான மலேரியா என்று தெரிந்துகொண்டு அற்குத்தகுந்த மருந்தைக் கொடுக்கவேண்டும்.

டைபாயிட் சுரம்தான் என்று தெரிந்து கொண்டு அதற்கு எந்தவிதமான மருந்து கொடுக்க வேண்டும் என்று தெரிந்து கொடுக்கவேண்டும். பிறகு அவர் சுரம் கடுமையாயிருக்கும்பொழுது நீர்க்க பார்லித் தண்ணீர், முறித்த பால் (Whey) முதலியன சாப்பிடச் சொல்லவேண்டும். 21 நாள் அடிக்கும் சுரமானதால் நம் வைத்திய முறைப்பிர காரம் 8—10 நாளுக்குள் சௌகரியம் செய்துவிட லாம் என்று சொல்லி சிகிச்சை செய்யவேண்டும். டி. பிக்கும் ஆரம்பத்தில் டைபாயிட் மாதிரியே சுரம் அடிக்கலாம். ஆகவே 20—25 நாளுக்குள் சுரம் குறையாமல் மேற்கொண்டு அடித்துக்கொண்டே இருக்குமானுல் உடனே இரத்தத்தை எடுத்துப் பரி சோதிக்க வேண்டும். கோழை வந்தால் பரிசோ திக்க வேண்டும். ஆகவே பெயர் தெரியாமல் முட் டாள்தனமாக எதையும் செய்யக்கூடாது.

ஏனென்றல் பெயருக்குத் தகுந்தபடிதான் மருந்துகளின் குணங்களும் மாறுகின்றன.

உதாரணமாக லைகோபோடியம் என்ற மருந்தையெடுத்துக்கொள்ளுவோம்.

லைகோபோடியத்தில் ஒரு முக்கியமான அறி குறி.

"மூக்கின் இருபுறங்களும் படபடவென்று அடித்துக்கொள்ளும்''. சரி இந்தக்குறி எந்த வியா தியில் இருந்தாலும் லைகோபோடியம் மருந்து அல்ல. ஏனென்றல் இதே குறி சில வியாதிகளில் மட்டும் முக்கியமானதாயிருக்கும், மற்றும் சில வியாதிகளில் முக்கியமில்லாததாயிருக்கும்.

உதாரணமாக சுவாசக்குழாய் வியாதிகளான நிமோனியா, டி. பி, ஜலதோஷம் முதலான வைகளில் சளி அடைத்திருப்பதால் மூச்சுவிட சிர மம் இருக்கும். இது சகஜமான குறி. மூச்சுவிட சிரமம் ஏற்பட்டால் மூக்கின் இரு புறங்களும் துடித் தல் சகஜம். ஆகவே இம்மாதிரி வியாதிகளில் இந்தக்குறி இருந்தபோதிலும் பிரத்யேகமான விசேஷமான குறி ஆகாததால் லைகோபோடியம் கொடுக்கக்கூடாது.

ஆனுல் இதே குறி உதாரணமாக வேறு ஏதா வது உறுப்பின் வியாதியில் கண்டால் உடனே மிக முக்கியமான குறி ஆகும். ஆகவே ஹிருதய வியா திகளில், மூத்திரக்காய் வியாதிகள் இவை மாதிரி வியாதிகளில் இந்த மூக்குக் குறி இருந்தால் பிரத் யேக குறி ஆகிவிடும். லைகோபோடியம் அப்போது கொடுக்கப்பட்டால் அந்த வியாதி சௌகரியமாகும்.

ஆகவே நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியது இதுதான். வியாதி எந்த பாகத்தைச் சேர்ந்தது, என்னென்ன குறிகள் அவ்வியாதிக்கு ஏற்படும்,

எதெது சக்ஜம், ஆகவே ஒரு குறிப்பிட்ட வியாதியில் என்ன பிரத்யேகமான குறிகள் இருக்கின்றன; இவையெல்லாம் தெரிந்துகொண்டு பிரத்யேக குறிகளை ஒத்த மருந்தைக் கண்டுபிடித்து சிகிச்சை செய்தாலொழிய வியாதி தீராது.

நிற்க தொத்து வியாதியான காலரா, அம்மை, பிளேக் டைபாயிட் இவைகள் ஒரு காலத்தில் ஊர் பூராவும் பரவி வருமானல் (இவைகளுக்கு ஆங்கிலத்தில் (EPIDEMICS) அப்பொழுது நமக்கு இன்னும் சுலபமாக ஆகிவிடுகிறது மருந்து கொடுப்பது. இம் மாதிரி அனேகருக்கு ஒரே வியாதி பரவுமானல் அனேகமாக எல்லோருக்கும் ஒரே மருந்தே பயன் படும்.

ஹானிமான் ஆஸ்டிரியா தேசத்தில் பரவிக் கொண்டிருந்த 'டைபஸ்' என்ற சுரத்தை இரண்டே மருந்தைக்கொண்டு நூற்றுக்கணக்கானவர்களை சௌகரியப்படுத்தினர். ஆகவேதான் அவர் வைத்தியமும் ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி என்று முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அவன் கொடுத்த மருந்து 'ரஸ்டாக்ஸ்' 'பிரியோனியாவும்தான்.'

'மறுபடியும் 'மறுபடியும் சொல்லுகிறேம். பொதுவான குறிகள் எல்லாம் பிரயோசனப் படாது. அதாவது வயிற்றுவலி, தலைவலி என்றால் உபயோகப்படமாட்டாது.

வலியைப்பற்றின விசேஷங்கள்தான் முக்கியம். அதாவது 'எங்கே' 'எப்பொழுது' 'எப்படி' இந்த மூன்று கேள்விகளும் முக்கியமானது. எந்த இடத்தில் வலி இருக்கிறது, அல்லது எந்த இடத்தில் வலி ஏற்படுவதுபோலிருக்கிறது, எந்த 'நேரத்தில்,

பகலிலா, இரவிலா, எத்தனை மணிக்கு என்பது
அடுத்தபடி முக்கியம். அதற்குப் பிறகு எந்த சம்
யத்தில், எந்த சந்தர்ப்பத்தில் வலி அதிகமாகிறது,
குறைகிறது அல்லது இல்லாமலிருக்கிறது. இதுட
னில்லாமல் அந்த வலியுடன் இன்னும் என்
னென்ன மாதிரி குறிகளோ, உணர்ச்சிகளோ
தோன்றுகின்றன. இவையெல்லாம் மிக மிக முக்
கியம். ஒரு வலியைப்பற்றி இந்த விஷயங்களெல்
லாம் நீங்கள் தெரிந்துகொண்டுவிட்டால் அந்த
வியாதியின் பிரத்யேகத்துவத்தை அறிந்தாய்
விட்டது. அதேமாதிரி குறியுள்ள மருந்தைக்
கொடுக்க வியாதி பூர்ண குணமாகிவிடும்.

உங்களுக்கு ஒரு சமாச்சாரம் சொல்லவேண்டி
யது முக்கியம்.

எந்த மருந்து கொடுத்தாலும் அந்த மருந்தை
ஏன் கொடுத்தீர்கள் என்று தெரிந்து கொள்ளுங்
கள். மறுபடியும் நோயாளியைப் பார்க்கும்பொழுது
நீங்கள் கொடுத்த மருந்து என்ன செய்திருக்கிறது
என்று தெரிந்துகொள்ளுங்கள். கொடுத்த மருந்து
சரியா, தப்பா என்று தெரிந்துகொள்ளுங்கள்.
பொதுவாக 'தேவலை' 'கொஞ்சம் சௌகரியம்'
என்பதெல்லாம் உதவாது. இதெல்லாம் மற்ற
வைத்தியங்களுக்குச் சரி. பிரத்யேகமான குறிகள்
சமனடைகின்றனவா என்பதுதான் முக்கியம்.

மருந்து கண்டுபிடித்த பிறகு எப்படி எவ்வளவு
காம் கொடுப்பது என்பது முக்கியமான பிரச்னை.
எந்த போடன்சி கொடுப்பது எவ்வளவு தரம், எப்
போது நிறுத்துவது இது பல வைத்தியர்களைத்
திண்டாடச்செய்யும் பிரச்னை. ஆனால் மிகமிக முக்
கியமானது. நாம் கீழே சில முக்கியமான காரணங்
கள், உதாரணங்கள் முதலியன தக்க காரணத்

துடன் விளக்குவோம். மற்றபடி அவரவர்கள் தங்கள் பிராக்டீஸில் கேசுக்குத்தக்கபடி ஆராய்ந்து கொடுக்கவேண்டும். ஆகவே பிராக்டிஸ் ஏற்பட்டு அனுபவம் ஏற்படுவதற்கு முந்தி தத்துவங்களையும் அடிப்படையான கொள்கைகளையும் தெரிந்து கொள்ளவேண்டியது நியாயம்.

முதன்முதல் முன் பக்கங்களில் சொன்ன மாதிரி மருந்தைக் கண்டுபிடிப்பதுதான் முக்கியம்.

மருந்தைக் கண்டுபிடித்த பிறகு போடன்சி கண்டுபிடிப்பது அவ்வளவு சிரமம் இல்லை. போடன்சியைப்பற்றி பின் விரிவாக எழுதியிருக்கிறோம்.

எவ்வளவுக்கெவ்வளவு வியாதியின் பிரத்யேக குணங்கள் மருந்தின் பிரத்யேக குணங்களை ஒத்திருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு மருந்தை உயர்ந்த போடன்சியில் கொடுக்கவேண்டும். இதற்கு அர்த்தம் வியாதிக்குத் தக்கபடி மருந்து சரியாக பிடிபடாவிட்டால் எந்த மருந்தையாவது குறைந்த போடன்சியில் கொடுத்துவிடலாம் என்பதல்ல. மருந்து நிச்சயம் செய்வது முதல் பட்சம். இரண்டாவது போடன்சி. வியாதி மருந்தின் ஒற்றுமைக்குத் தக்கபடி ஹைபோடன்சியில் கொடுப்பது. எவ்வளவுக்கெவ்வளவு ஹை போடன்சியோ அவ்வளவுக்கவ்வளவு நன்றாக ஆழ்ந்து, நீடித்து வேலை செய்யும். இந்த உண்மை நாள்பட்ட கிரானிக் வியாதிகளில் மட்டுமே. எவ்வளவு ஹை போடன்சியாயிருந்தாலும் அக்யூட் வியாதிகளான டைபாயிட், காலரா முதலியவற்றில் ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் நாலு தடவையாவது கொடுக்க வேண்டும்.

நாள்பட்ட கேசுகளுக்கு குணம் தெரியும் வரையில் மருந்தை தினம் கொடுத்துக்கொண்டு வர வேண்டும். சில சமயம் சில கேசுகளில் மருந்து கொடுத்த சில நாட்களுக்கெல்லாம் வியாதி அதிகமாகலாம். அதற்காகப் பயப்படவேண்டாம். மருந்தை சில நாட்களுக்கு நிறுத்திக்கொண்டு பிறகு கொடுக்கலாம்.

சில கேசுகளில் ஹைபோடன்சி மருந்தை ஒன்று அல்லது இரண்டு டோஸ் கொடுத்துவிட்டு அது நீடித்து வேலை செய்யும் வரைக்கும் வேறு மருந்து கொடுக்காமலிருப்பது நல்லது. இம்மாதிரி 2, 3 வாரங்கள் வரைக்கும் பார்த்துக்கொண்டு பிறகு வேண்டுமென்றால் வேறு டோஸ் கொடுக்கலாம்.

எப்போதும் எல்லா மருந்துகளும் சாப்பாட்டிற்கு முந்தி வெறும் வயிற்றில்தான் கொடுக்க வேண்டும்.

சில சமயம் இரண்டு மருந்துகளை மாற்றிக் கொடுக்கவேண்டியிருக்கும். ஆனால் இப்பழக்கத்தை அறவே விட்டுவிடுவது நல்லது.

எப்போதும் மருந்துகளை எந்த காரணத்தைக் கொண்டும் தூக்கத்தில் கொடுக்கக்கூடாது. ஏனென்றால் தூக்கம்தான் நோயாளிக்கு அவசியம். ரொம்ப அவசியம் கொடுக்கத்தான் வேண்டுமென்றால் தூக்கத்தைக் கலைக்காமல் கொடுக்க வேண்டும்.

முதல் பாடத்திலேயே நாம் தத்துவத்தைப்பற்றி சிறிது குறிப்பிட்டோம். அதை இப்பொழுது நன்றாக தெரிந்துகொள்ளுவோம். சுமார் 2500 வருஷங்

களுக்கு முந்தியிலிருந்தே ஹோமியோபதியின் தத்துவம் சிறிது சிறிதாக கண்டுபிடிக்கப்பட்டது என்று சொல்லலாம். மகாபாரதத்தில் வியாச பகவான் இந்த தத்துவத்தைப்பற்றி எழுதியிருக்கிறார். ஆங்கில வைத்தியரான (Hippocrates) ஹீப்பாக்ரடிஸ் காலத்திலும் இதைப்பற்றி சிறிது ஆராய்ச்சி இருந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக ஹானிமான் காலம் வரைக்கும் விரிவாகவும் தெளிவாகவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

ஜெர்மனி தேசத்தில் ஓர் ஏழை வர்ணம் பூசுபவனுக்கு ஸாக்ஸனியிலுள்ள (Saxony) மீசன் (Messien) என்ற ஊரில் 1755-ம் வருஷம் ஏப்ரல்மீ 11-ம்தேதி ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு இளம் பருவத்திலேயே திறமையும் சிறந்த அறிவும் கூர்ந்து ஆராயும் தன்மையும் ஏற்பட்டிருந்தன. குழந்தைப் பருவத்திலேயே எந்த நுட்பமான விஷயத்தையும் சந்தேகமறத் தெரிந்துகொள்ளக்கூடிய திறன் இருந்தது.

அவன் 20 வயதிற்குள்ளாகவே ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், இத்தாலி, லத்தீன், கிரீக், ஈப்ரு, அரபி முதலிய பல பாஷைகளில் பூர்ண பாண்டித்யம் பெற்றுவிட்டான். 12 வயதிற்குள்ளாகவே கிரீக் பாஷை சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயராக இருந்தான். இரண்டு தடவை அவன் ஜெர்மனியிலுள்ள ஹெர்மான் ஸ்டாட் (HermanStadt) டிரெஸ்டான் (Dresden) என்ற ஊர்களிலுள்ள பெரிய புத்தகசாலைகளில் அதிகாரம் வகித்தான். அவனுடைய புத்தியும் நேரத்தை வீணாக்காமல் இரண்டு சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக்கொண்டது. அவனுடைய அறிவும் ஞாபக சக்தியும் அதற்கு ஏற்றாற்போல விசாலமாக இருந்

தன. ஒரு தடவை பிரசங்கப் போட்டியில் அநேக
பாஷைகளிலுள்ள வைத்தியப் புத்தகங்களிலிருந்து
தன் அபிப்பிராயத்திற்கு இணங்க மேற்கோள்களை
எடுத்துக் காண்பித்தான் என்பது பிரசித்தம்.
அவன் ஆர்வத்திற்கிணங்க வாழ்க்கையில் வைத்தி
யத் தொழிலை மேற்கொண்டான்.

ரஸாயன சாஸ்திரத்திலும் நல்லதேர்ச்சி இருந்
தது. அவனுடைய ஆராய்ச்சிகள் சில, தற்போது
கையாளப்படுகின்றன. அவன் சதா காலமும் தன்
அறிவை விரிவுபடுத்துவதிலேயே முயன்றுகொண்
டிருந்தான். ஒரு நிமிஷநேரமும் அவன் வீணாக்கி
னதேயில்லை. ஒரு சிறு விஷயம் தெரியவேண்டு
மென்றாலும் சிரமத்தையும் தூரத்தையும் பொருட்
படுத்தினதே யில்லை. சங்கீதம், வானசாஸ்திரம்,
தத்துவ சாஸ்திரம், இயற்கை சாஸ்திரம் முதலிய
பலவற்றிலும் சிறந்த அறிவைப் பெற்றிருந்ததினால்
எல்லோருடைய நன்மதிப்புக்கும் பாத்திரனாகயிருந்
தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஒரு புதிய வைத்
தியக் கொள்கையைப் பரப்பிய நாள்முதல் அவனு
டைய 'அறியாமை' என்று மற்றவர்கள் வருத்தப்
பட்டார்கள். ஒரு வருஷத்திற்குள் அயோக்கியன்
என்றும் மடையன் என்றும் 'வெகுமதி' பெற்றுக்
கொண்டான்.

உலகத்துக்கு நன்மைசெய்த அநேகருக்கு
கிடைத்த பலன்தான் அவனுக்கும் கிடைத்தது.
இடம்விட்டு இடம் துரத்தப்பட்டான். தன் குடும்பத்
தினரின் கஷ்டங்களுக்குக் காரணம் தானேமே என
மனம் நொந்தான். மக்களின் அறியாமைக்காக
வருந்தினான். எவ்வளவு இருந்தாலும், தன் கொள்
கையை நிலைநிறுத்துவதற்குத் தளரா மனத்துடன்
நின்றான். பொறுமையும், ஏளனத்தையும் அவன்
பொருட்படுத்தவில்லை.

இதனால்தான் தொழிலையும் விட்டுவிட்டு, அன்ஹால்ட் கீத் (Duke of Anhalt Coethen) னுடைய டியூக்கின் தோட்டத்தின் ஒரு சிறு பகுதியில் அவன் வெகுநாள் தங்கியிருக்கவேண்டி நேர்ந்தது. 1835-ம் வருஷம் அன்பர்கள் சிலருடன் பாரிஸ் நகருக்குச் சென்றான். அவ்விடத்தில் வைத்தியத் தொழில் ஆரம்பித்துக் கீர்த்தியுடனும் செல்வத்துடனும் வாழ்ந்தான். 1843-ம் வருஷம் ஜூலை மாதம் 2-ம் தேதி அவனுடைய 89-வது வயதில் மரணமடைந்தான்.

அவன் கொள்கையை சற்று ஆராய்வோம். அக் காலத்தில் அல்லோபதி (Allopathy.) என்று சொல்லப்படும் ஆங்கிலவைத்தியமுறைதான் வழங்கி வந்தது. அதில் சரியான பலனேற்படவில்லை. இப்போதாவது ஹோமியோபதி முறையைக் காப்பியடித்து கொஞ்சம் நவீனமாகிக்கொண்டு வருகிறது. ஹானிமான் காலத்திலோ எதற்கெடுத்தாலும் ரத்தக்குழாயிலிருந்து ரத்தத்தை வெளியே எடுத்தல்; 'அட்டை'விட்டு ரத்தத்தை உறிஞ்சி எடுத்தல் முதலியன போன்ற அநாகரீகமான, அறிவில்லாத வழிகள் கையாளப்பட்டுவந்தன. இதெல்லாம் அவனுக்குப் பிடிக்கவில்லை. அதற்கேற்றாப்போல அவனுடைய குழந்தைக்கும் பல டாக்டர்கள்சேர்ந்து மேற்படி அல்லோபதி முறையில் வைத்தியம்செய்தும் பிரயோஜனப்படவில்லை.

ஒரு நாள் ஒரு வைத்தியப் புத்தகத்தில் கொய்னாவைப்பற்றி படித்துக்கொண்டிருந்தான். அதன் ஆசிரியர் அபிப்பிராயம் அவனுக்குப் பிடிக்கவில்லை. தானே அதை பரிசோதிக்க எண்ணி ஒரு திரான் கொய்னாப் பட்டையை உட்கொண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் குளிர் நடுக்கத்துடன்

சுரம் வந்துவிட்டது. இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அடங்கிவிட்டது. இது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால் கொய்னாப் பட்டை அக்காலத்திலும் குளிர் சுரத்திற்குச் சிறந்த மருந்தாக உபயோகப்பட்டு வந்தது. அதன் சந்தேகம் தெளிவுபட, வியாதியில்லாத இன்னும் பலருக்குக் கொடுத்துப் பார்த்ததிலும் அதேவிதமாக குளிர் சுரம் கண்டது. கொய்னாவைக் குறைத்தும் கூட்டியும் கொடுத்துப்பார்த்தான். கொய்னா குறைந்த அளவில் அதே சுரத்தைச் சொஸ்தப்படுத்துவதையும் கண்டான். அதிலிருந்து பல மருந்துகளைக் கொண்டு பல பரிசோதனைகள் நடத்தி ஓர் உண்மையைக் கண்டுபிடித்தான்.

"எந்த மருந்தும் அதிக அளவில் வியாதியில்லாதவர்களுக்குக் கொடுத்தால் வியாதியை உண்டு பண்ணுகிறது. அதே மருந்தை, அதைப்போலொத்த வியாதிகளுக்குக் குறைந்த அளவில் கொடுத்தால், நிவர்த்தியாகிவிடும்." இம்மாதிரி முறையில் அவன் 116 மருந்துகளின் குணங்களை ஆராய்ந்து அறிந்து அநேக நோயாளிகளைச் சௌக்கியப்படுத்தினான். இந்த முறைதான் **நேர் மருந்து முறை**யென்றும் **ஹோமியோபதி முறை** என்றும் வழங்கலாயிற்று.

இதுதான் அடிப்படையான முறை. மற்ற முறைகளெல்லாம் ஒன்றையொன்று தழுவினவையே. அவைகளுக்கென்று ஒரு விதமான திட்டமான சட்டம் ஏதும் கிடையாது. அனுபவமும் உத்தேசமும்தான் மற்ற வைத்திய முறைகளின் கொள்கை. ஏதோ மற்ற முறைகளைத் தூஷிப்பதாக நினைத்துக்கொள்ளக்கூடாது. உண்மையைச் சொன்னால் எல்லோருக்கும் கசப்பாகத்தானிருக்கும். பாவம்! இந்த உண்மையைச் சொல்லப்

போய்த்தான் ஹானிமான் உதைபட்டு, நாட்டை விட்டுத் துரத்தப்பட்டு, பட்டினி போடப்பட்டு வருத்தப்பட்டான். ஆனால் நற்காலமாக தற்காலத்தில் அவ்வளவு மதியீனம் இல்லை.

சட்டமியற்றியாய் விட்டது. மருந்து என்றால் என்ன? எப்படிக்கொடுக்கவேண்டும்? எந்த அளவில்? ரொம்ப விரிவாகச் சொல்லுவதற்கு இந்த புத்தகத்தில் இடமில்லை. சுருக்கமாகச் சொல்லுவோம்.

சாதாரண கண் சூரிய வெளிச்சத்தைக்கூட சில விநாடிகள் பார்க்க முடியும். அதேகண் வலியேற்பட்டுவிட்டதானால் விளக்கு வெளிச்சத்தைக் கூட பார்க்கமுடியாது. உண்மை என்னவென்றால் எந்த பாகமும் வியாதியுற்றதானால் உணர்ச்சி அதிகமாகிவிடுகிறது. பொறுக்கும் சக்தி குறைந்துவிடுகிறது. ஆகவே உத்தேசமாக 30 கிரையின் கொய்னா ஒரு வியாதியில்லாத மனிதனுக்கு கொடுத்து சுரம் ஏற்பட்டதானால் வியாதியுள்ள மனிதனுக்கு அதே முப்பது கிரெயின் கொய்னாவை கொடுத்தோமானால் என்ன ஆகும்? வியாதி அதிகரித்து அவன் அவஸ்தை அதிகமாகிவிடும், அல்லது கடுமை தாங்காமல் மரணமும் சம்பவிக்கலாம். ஆகவே முதல் பாயிண்ட், அளவை ரொம்பக் குறைக்கவேண்டும். எவ்வளவு குறைப்பது என்பதுதான் பிரச்சினை? ஹானிமான் கொய்னாவை ஒரு கிரெயின் கொடுத்தான். $\frac{1}{2}$ கிரெயின், $\frac{1}{10}$ கிரெயின் கொடுத்தான். அப்போதும் அந்த அளவு அதிகமாகத்தானிருந்தது. ஆகவே அளவைக் குறைக்கும் வழி ஒன்று ஏற்பாடு செய்தான். அதற்குப் பெயர்தான் போடன்சி.

எல்லா வஸ்துக்களும் பல அணுக்களால் ஆனவை. இது பௌதிக சாஸ்திரம் அறிந்தவர்கள்

அறிவார்கள். கார்க் ஆனாலும், தங்கம் ஆனாலும், மனிதனானாலும் பலபல கோடிக்கணக்கான அணுக்களால் ஆனவர்கள். எப்படி ஒரு வீடு பல செங்கற்களால் ஆனதோ அதேபோல். ஆனால் ஒவ்வொரு அணுவும் ஒரு பரமாணு, (Proton) பல மின்னணுக்கள் (Electrons) கொண்டவை. ஒவ்வொரு பரமாணுவையும் மின்னணுக்கள் எண்ணமுடியாத வேகத்தில் சுற்றிச்சுழன்றுகொண்டிருக்கின்றன. ஆகவே சுற்றச் சுற்ற அவைகளிடமிருந்து மின்சார ரூபமான சக்தி இயற்கையாகவே அலை அலையாக வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது. உலகம் முழுவதும், ஏன் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சகலமும் சுழன்றுகொண்டே தன்னிடமிருந்து சக்தியை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கின்றன. எப்படி சூரியன் சதாகாலமும் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு தன்னிடமிருந்து ஒளி ரூபமான, உஷ்ண ரூபமான சக்தியையும் வீசிக்கொண்டே இருக்கிறதோ அதே மாதிரி.

ஆகவே எந்த வஸ்துவானாலும் அது தன்னுள் அபாரமான சக்தியை அடக்கிவைத்துக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை உலகிற்கு அளித்தவர் ஹானிமான். இந்த உண்மையைக்கொண்டுதான் தற்போதைய அணுகுண்டு உற்பத்தியாயிற்று. ஆகவே ஹானிமான் மேதை உலகத்தோர் எல்லோரைக்காட்டிலும் இருநூற்றாண்டுகள் முன்னின்றது.

இந்த சக்தியை எப்படி வெளிப்படுத்தலாம் என்று ஆராயப் புகுந்தான் ஹானிமான்.

ஒரு ரப்பர் துண்டை எடுத்துக்கொள்ளுங்கள். அதை பலமாக இழுங்கள். என்ன ஆகிறது? இரண்டு மூன்று பங்கு நீளுகிறது. அத்துடன் அதன் விறைப்பும் அதிகமாகிறது,

இப்படி விறைப்பு அதிகமாவதற்குக் காரணம் என்ன? சற்று சிந்தியுங்கள். இழுபடாமலிருந்த ஸ்திதிக்கும், இப்பொழுதும் என்ன வித்தியாசம் ஏற்பட்டது.

ரப்பர் துண்டு (உதாரணமாக) 100 அணுக்கள் கொண்டது என்று வைத்துக்கொள்வோம். இழுத்த போதும், அதே 100 அணுக்கள் தான் உள்ளன. அணு நம்பர் மாறக்காரணமில்லை. ஆனால் என்ன மாற்றம் என்றால் அணுவிற்கும் அணுவிற்கும் இடையே உள்ள இடைவெளி அதிகமாகிவிடுகிறது. இடைவெளி அதிகமாவதினால் அணு இன்னொரு அணுவை ஆகர்ஷிக்கும் சக்தி அதிகப்படுகிறது. அண்டத்தில் எப்படி ஒவ்வொரு நக்ஷத்திரமும், ஒவ்வொரு கோளமும், தங்களைத்தானே ஆகர்ஷித்துக்கொண்டு இலங்குகின்றனவோ, எப்படி சூரிய மண்டலத்தில் ஒவ்வொரு கிரகமும் தங்களை ஆகர்ஷித்துக்கொண்டு சூரியனால் ஆகர்ஷிக்கப்பட்டு சுற்றிக்கொண்டே இருக்கின்றனவோ அதேபோல ஒவ்வொரு அணுவிலும் மின்னணுக்களும், பரமாணுக்களும், ஒரு அணு மற்றொரு அணுவையும் ஆகர்ஷித்துக் கொண்டே இருக்கின்றன. ஆகவே ரப்பர் துண்டை இழுத்தபோது அணுவை மற்றொரு அணு ஆகர்ஷிக்கும் சக்தியானது எவ்வளவுக்கெவ்வளவு அணுக்களின் இடைவெளி அதிகப்படுத்தப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகிறது.

ஆகவே முதல் பாயிண்ட்:— எந்த வஸ்துவின் சக்தியை அணுவின் இடைவெளியை அதிகப்படுத்தினோமானால் இஷ்டப்பட்ட அளவிற்கதிகமாக்கலாம். ஒரு சந்தேகம். அணுவின் சக்திக்கு அளவு கிடையாதோ என்று நீங்கள் சம்சயப்படலாம். சக்திக்கு அளவே கிடையாது. வற்ற வற்றக் குன்றுதுதான்

சக்தி. ஒரு விளக்கிலிருந்து ஆயிரக்கணக்கான விளக்குகளைப் பிரகாசிக்கச் செய்தோமானாலும் முதல் விளக்கின் ஒளி குன்றாதது போலத்தான்.

இரண்டாவது:— இரு சிக்கிமுக்கிக் கற்களோ, அல்லது இரு இரும்புத்துண்டுகளையோ எடுத்துக் கொள்ளுங்கள். அவைகளை ஒன்றோடொன்று மோதுங்கள். தீப்பொறி பறப்பதைக் காணலாம். தீப்பொறி உண்டாவதற்குக் காரணம் உராய்தல் தான் (Friction). தீப்பொறி எங்கிருந்து வந்தது. அது என்ன? இரு சிறு கற்களை வைத்துக்கொண்டு ஒரு வைக்கோல் போர், ஏன் ஒரு ஊரையுமே கொளுத்திவிடலாம். இது என்ன அதிசயம்?

தீப்பொறி என்னவென்றால் எந்த சாமானை மோதுவதற்கு உபயோகப்படுத்தினோமோ அந்தச் சாமானின் ஒரு சிறு தாள் உஷ்ணப்பட்டு சிவந்துவிட்டது. இரும்பு என்றால் ஒரு இரும்புத் துணுக்கு அதிக சூடு ஏறி தீயாகிவிட்டது. இந்தச் சூடு இரும்பாயிருந்தால் சுமார் 600–700° c அளவிற்கு சூடேற வேண்டும். ஒரு துணுக்கு இரும்பாயிருந்தாலும் சரி, ஒரு டன் இரும்பாயிருந்தாலும் சரி சூட்டினால் சிவப்பதற்கு ஒரே டிகிரி உஷ்ணம்தான் வேண்டும். அப்போது ஜில்லென்றிருக்கும் இரும்புத் துண்டங்களிலிருந்து தீப்பொறிக்கு சூடு எங்கேயிருந்து வந்தது? வெளி ஆகாயத்திலிருந்தா அல்லது நம் கைகளிலிருந்தா? இரண்டிலிருந்தும் வர நியாயமில்லை. ஆகவே இரும்புத்துண்டங்களிலிருந்துதான் தீப்பொறிக்கு சூடேறியிருக்கவேண்டும். சூடு ஏறுவதற்குக் காரணம் உராய்தல் (Friction) தான். இரண்டு துண்டங்களையும் உராய உராய தீப்பொறி வந்துகொண்டேயிருக்கும்.

ஆகவே இரண்டாவது பாயிண்ட்:—

எந்த சாமானிலிருந்தும் உராய்தலினால் உள்ளடங்கியிருக்கும் சக்தியை வெளிப்படுத்தலாம். அதாவது அணுவோடு அணு உராய்வதால் அணு சக்தி வெளிப்படுகிறது.

இந்த இரண்டு தத்துவங்களைகொண்டுதான் ஹோமியோபதி முறைக்கே பிரத்யேகமான போடன்சி என்னும் வீரியப்படுத்துதல் என்ற முறையே ஹானிமான் கண்டுபிடித்தார். இன்று வரைக்கும்கூட இந்த சமாசாரம் அலோபதியோ மற்ற வைத்தியர்களுக்கோ தெரியவே தெரியாது. அவுன்ஸ் அவுன்ஸாகவும், சேர் கணக்காகவும் மருந்துகளை பூதம் மாதிரி விழுங்கத்தான் தெரியும்.

சரி அப்படியானால் எப்படி போடன்சி ஏற்படுகிறது? இந்த இரண்டு தத்துவங்களையும் எப்படி பிராக்டிகலாக உபயோகப்படுத்துகிறது.

ஒவ்வொரு மருந்தையும் நம் முறையில் ஆல்கஹாலில் கரைத்துவைப்பதுதான் வழக்கம்.

ஒரு பச்சிலையை எடுத்துக்கொள்ளுவோம். அதிலிருந்து ஆல்கஹாலில் மருந்தைத் தயார் செய்வார்கள். தயார் பண்ணின திராவகத்திற்கு மதர் டிஞ்சர் என்றும் தமிழில் தாய்த்திராவகம் என்றும் பெயர். இதிலிருந்து ஒரு பங்கு எடுத்து 99-பங்கு ஆல்கஹால் சேர்த்துக் குலுக்குவார்கள். குலுக்குவதற்கு கணக்கு உண்டு. இப்பொழுது முதல் போடன்சி ஆயிற்று. இதிலிருந்து ஒரு பங்கு 99-பங்கு ஆல்கஹாலுடன் கலந்து குலுக்குவார்கள். இது இரண்டாது போடன்சி ஆயிற்று இப்படியே.

ஆல்கஹாலில் ஒரு சொட்டு தாய்த்திராவகத்தை விட்டுக்கரைத்தவுடன் ஆல்கஹால் முழுவதும் மருந்தாகிவிடுகிறது. அப்பொழுது ஒரு சொட்டு மருந்திலிருக்கும் அணுக்கள் 100 சொட்டாக கலந்துவிடுகிறது. ஒரு சொட்டிற்குள் அடங்கியிருந்த அணுக்களே இப்பொழுது 100 சொட்டுக்குள் அடங்கியிருக்கின்றன. ஆகவே அணுக்களின் இடைவெளி அதிகமாக்கப்பட்டது. இது முதல் தத்துவம்.

பிறகு குலுக்கினோம் குலுக்குவதினால் அணுக்கள் ஒன்றோடொன்று உராய்கின்றன. அப்பொழுதும் அணுசக்தி வெளிப்படுகிறது. ஆகவே தாய்த் திராவகத்தை ஆல்கஹாலில் கரைத்துப் போடன்சி செய்வதினால் அணுசக்தி அனேக மடங்கு பெருகுகிறது. ஆகா என்னே! ஹானிமானின் அபூர்வ அறிவு.

தங்கம், முதலான ஆல்கஹாலில் கரையாத வஸ்துக்களாயிருந்தால் அவற்றை போடன்சி படுத்துவற்கு சுகர் ஆப் மில்க் (Sugur of Milk) என்ற பால் சக்கரையை உபயோகப்படுத்தினோம். ஏனென்றால் இதில் மருந்து வைக்கப்பட்டிருந்தாலும் மருந்தின் சக்தி குறையாது.

ஒரு பங்கு தங்கத்தை 99 பங்கு மில்க் சுகருடன் கலந்து நன்றாக அரைக்கிறோம். அரைக்க அரைக்க தங்க அணுக்கள் சுகர் ஆப் மில்க் அணுக்களுடன் உராய்ந்து தன் சக்தியைப் பெருக்குகின்றன. இதே மாதிரி 3 தடவை போடன்சிபடுத்தப்பட்டபின் தங்கமும் ஆல்கஹாலில் கரைந்துவிடும். ஆக எந்த வஸ்துவும் 3 வீரியத்திற்குப்பின் ஆல்கஹாலில் கரையும் தன்மையடையும். இதுவும் ஹானிமான் கண்டுபிடித்த ஆச்சரியமான உண்மை.

Potency (வீரியம்) ஹோமியோபதி மருந்துகள் மற்ற மருந்துகளைப்போலல்லாமல் புதிய முறையில் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மருந்தையும் எவ்வளக்கெவ்வளவு குறைந்த அளவில் கொடுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்றாக வேலை செய்யும். சாதாரணமாக எல்லா தாவர மருந்துகளும் திராவகமாக தயார் செய்யப்படுகிறது. இதற்கு தாய்த்திராவகம் (Mother Tincture) என்று பெயர். இதை வீரியப்படுத்தி உபயோகப்படுத்துவதுதான் வழக்கம். இத்துடன் 99 பங்கு ஆல்கஹால் சேர்த்து குலுக்கி வீரியப்படுத்துவார்கள். இது முதல் வீரியம் (1st Potency). 9 பங்கு ஆல்கஹால் சேர்த்து வீரியப்படுத்தும் வழக்கம் உண்டு. இதற்கு (IX Potency) என்று குறிப்பிடுவர். முதல் போடன்சியிலிருந்து ஒரு பங்கு எடுத்து 99 பங்கு ஆல்கஹால் சேர்த்து வீரியப்படுத்தினால் (2nd Potency) ஆகும். இதே மாதிரி ஒவ்வொரு மருந்துக்குப் பக்கத்தில் வீரியத்தின் நம்பர் குறிக்கப்பட்டிருக்கும். மருந்து உபயோகப்படுத்தும்போது இன்ன போடன்சி என்று குறிப்பது மிக அவசியம். போடன்சி அதிகம் ஆக ஆக அணுக்களின் சக்தி அதிகரிக்கிறது. எவ்வளவு போடன்சி அதிகமோ அவ்வளவு சக்தி அதற்கதிகம். பொதுவாக 6, 12, 30, 200, 500, 1000, 10000, 100000, வீரியத்திலும், இதற்குமேலும் மருந்துகளை உபயோகப்படுத்துவது வழக்கம்.

சரி வியாதி என்றால் எப்படி உண்டாகிறது.

மனிதனிடத்தில் ஆசாபாசங்கள் உண்டு. அவற்றில் ஏதாவது மாறுபாடு ஏற்படுமானால் அதுதான் **வியாதி**. அவனுடைய மனதில் ஆசாபாசங்களின் மாறுதல் நன்றாகத் தெரிகிறது. உதாரணங்கள் மூலமாகச் சொல்லுவோம்:—

பொதுவாக வியாதி மூளை, வயிறு, அவயவங்கள் இவைகளின் வழியாகத்தான் நிரூபிக்கப்படுகின்றன.

அதாவது: ஒரு ஸ்திரீ திடீரென்று தன் குழந்தைகளிடம், பதியிடம் வெறுப்படைகிறாள் என்று வைத்துக்கொள்வோம். நேற்று வரைக்கும் அவர்களிடம் அன்பார்ந்தவளாயிருந்தவள் இன்றைக்கு வெறுப்படைகிறாள். இது அவள் வியாதி மூளையின் வழியாக நிதர்சனமாகிறது.

சுண்ணாம்பு, மண், கரி, உப்பு முதலான வஸ்துக்களை தின்னவேண்டும் என்று சில ஈரல்குலைக்கட்டி குழந்தைகளுக்கும், மசக்கையுடைய ஸ்திரீகளுக்கும் இன்னும் சிலருக்கும் ஏற்படும். இது 'வியாதியின்' வயிற்றின் மூலமாய் ஏற்படும் பேதங்கள்.

சில வியாதியஸ்தரின் உள்ளங்கால்கள் மாத்திரம், உச்சித்தலைமாத்திரம் எரிச்சல் இருக்கும். இம்மாதிரி ஏற்படுவது 'வியாதி'யின் அவயவங்கள் மூலம் தென்படும் பேதங்கள்.

ஆகவே மனிதனின் வியாதி ஆரம்பமானதே திடீரென்று பயம், அதிர்ச்சி, சோகம் முதலானவற்றினால் உண்டாகும் பல வியாதிகள். இவைகளும் மூளையின் வழியாக ஏற்படும் வியாதி பேதங்களே.

மனிதர்களில் ஒரேவியாதி (பெயர்) பல ரூபமாக ஏன் தென்படுகிறதென்று ஹானிமான் சிந்தித்தான். ஒரே வீட்டில் இருந்துகொண்டு ஒரே ஆகாரத்தை உண்டுவரும் பலருக்கு பலவிதமான வியாதிகள் உண்டாகின்றன. ஏன்? ஒருவருக்கு மலேரியா சுரம் 3-மணிக்கு வருகிறது. மற்றொருவருக்கு இரண்டு நாளைக்கு ஒருதரம் வருகிறது மற்றுமொருவருக்கு வேறு விதமாக வருகிறது. ஒருவருக்கு ஜலதோஷம் பிடித்தால் தொண்டை பாதிக்கப்படுகிறது. மற்றுமொருவருக்கு குடல், வயிறு இம்மாதிரி பல விதங்கள். இவைகளெல்லாம் ஏன்?

இவைகளெல்லாம் அந்தந்த மனிதனின் ஜீவாத்மாவின் அல்லது மனதின் வேறுபாட்டைப் பொறுத்ததுதான். ஆகவே ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட, பிரத்யேகமான குறிகளைக்கொண்டே மருந்து பொறுக்கப்படவேண்டும் என்று ஹானிமான் நிச்சயித்தான்.

மனமே வியாதிகளுக்கு காரணமென்றால் மருந்தும் மனத்தைத்தாக்கி வேலைசெய்ய வேண்டுமல்லவா? ஆகவே போடன்சியை அதிகப்படுத்தி மனதின் அணுப்பிரமாணத்திற்கு கிட்டத்தட்ட இப்போது நாம் கொடுக்கிறோம். எவ்வளவுக்கெவ்வளவு மனதின் வியாதி நிலைமை மருந்தின் குணத்தை ஒத்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஹை போடன்சியில் கொடுக்கவேண்டும். அப்போதுதான் உடனே வேலைசெய்யும்.

ஆனால் ஜாக்கிரதை! ஹோமியோபதி மருந்துகள் சிறு உருண்டைகள், சர்க்கரையில் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. சும்மாக் கொடுக்கலாம். ஒன்றும் செய்யாது என்று நினைப்பது மிகவும் அறிவீனமான எண்ணம். எந்த மருந்தும் எவ்வளவுக்கெவ்வளவு கடுமையானதோ அவ்வளவுக்கவ்வளவு நன்றாக வேலை செய்யும். ஹோமியோபதி மருந்துகள் அதிலும் ஹைபோடன்சி மருந்துகள் வெகு கூர்மையான உளியை போன்றவை. நன்றாக, ஆழமாக, வலியில்லாமல் அதாவது தெரியாமல் வெட்டும். நல்ல தேர்ச்சி பெற்றவராயிருந்தாலொழிய ஹோமியோபதி மருந்துகளைக் கையாளக் கூடாது.

வியாதியின் குணங்களையும் மருந்துகளின் குணங்களையும் நன்றாக புரியும்படி ஒத்திட்டுப் பார்த்து, அவையிரண்டும் சரியாயிருக்கின்றனவா என்று நன்றாக ஆராய்ந்து கொடுக்கவேண்டும்.

குமட்டலுடன் வாந்தியிருக்கும் வியாதியில் ஐபிகாக்' என்ற மருந்து கொடுக்கப்படவேண்டு

மென்றால் குமட்டலில்லாத வாந்தியுடன்கூடிய மருந்தான 'ஆண்டிம்டார்ட்' என்ற மருந்தை ஒருநாளும் கொடுக்கவேகூடாது. அது ஆபத்து வைத்தியமும் அல்ல.

ஹோமியோபதி வைத்தியம் ஓர் சட்டம். அசைக்கமுடியாத உண்மை. செப்பனிட்ட பாதை. ஒழுங்காகவும், அமைதியுடனும், சௌகரியமாகவும் அனுசரிக்கக்கூடிய ஓர் உயர்ந்த தத்துவம், இதில் அதைக்கொடுத்து, இதைக்கொடுத்து பரீக்ஷை பார்க்கவேண்டிய அவசியமில்லை. ஆகவே ஜாக்கிரதை! ஜாக்கிரதை!!

மேற்சொன்னது சாதாரண வியாதிகளுக்குத்தான். ரண சிகிச்சை வியாதிகள் தனி. அவைகளுக்கு ரண சிகிச்சையும், மேற்சொன்னபடி மருந்தும் இரண்டும் செய்யவேண்டும். அடிபடுதல், வெட்டுப்படுதல், கை, கால் முறிதல், முதலானவைகள் மனதினால் ஏற்படும் வியாதிகளல்ல. ஆனால் இவைகளிலும் மனது பாதிக்கப்படும். ஆகவே உள்ளுக்கும் மருந்து கொடுக்கவேண்டும்.

கிருமி வியாதிக்குக் காரணமா? இது மற்ற வைத்தியர்களால் மிகவும் பரிசீலனை செய்யப்பட்ட விஷயம். ஓர் உதாரணம் எடுத்துக்கொள்ளுவோம். அழுகின பண்டம் ஏதாவது வைத்திருந்தோமானால் அதில் உடனே கிருமிகள் வந்துவிடுகின்றன. ஈரத்தில் நனைந்து அழுகின ஒரு மரத்துண்டத்தில் பூசாணம் பூத்துவிடுகிறது. ஆனால் அதே பூசாணம் நல்ல பச்சை மரத்தை அண்டுவதில்லை. ஏன்? இயற்கை நியதி ஒன்றுதான். எந்த வஸ்து இயற்கையாய் வாழ்வதற்கு தகுதியற்றதாய் ஆகிவிடுகிறதோ அதை இயற்கை சக்தி அழித்துவிடுகிறது. கிருமிகளெல்லாம் இயற்கையின் வேலையாட்கள். உலகம் முழுவதிலும் பரவியிருக்கும் பூசாணத்தின் விதைகள் அழுகின வஸ்துவில் மாத்திரம்தான் முளைக்கும்.

அதேபோல் நம் சரீரத்தில் வியாதி ஏற்பட்டுவிடின் பிறகுதான் அவ்வியாதிக்கிருமிகள் பரவுகின்றன. ஆகவே வியாதிக்கிருமிகள் வியாதிக்குக் காரணமல்ல. வியாதிக்குப்பின் ஏற்படுபவை.

மற்ற வைத்தியர்கள் இந்த மாசற்ற உண்மையைத் தெரிந்துகொள்ளாமல் கிருமியைக் கொல்லுகின்றோம் என்று டம்பம் அடித்துக்கொண்டு பேத்துகிறார்கள். அநாவசியமாக மனிதனைப் பரிக்ஷைசெய்து வியாதியை வளர்த்துகிறார்கள்

குடலில் பூச்சி வளர்ந்துவிடுகின்றனவென்று வைத்துக்கொள்வோம். மற்ற வியாதியஸ்தர்கள் என்ன செய்வார்களென்றால் பூச்சியைக் கொல்லுவதற்கு பூச்சி கொல்லி மருந்தை உள்ளுக்கு கொடுப்பார்கள். ஆனால் ஒரு ஸெட் இறந்த பிறகு மறுபடியும் மறுபடியும் பூச்சிகள் உண்டாகிவிடுகிறது. ஆனால் நாம் என்ன செய்கிறோம். குடலை இயற்கையான ஆரோக்கிய நிலைக்கு கொண்டுவருகிறோம். அப்போது என்ன ஆகிறது. மேலும் மேலும் பூச்சி ஏற்பட இடமில்லாமல் போய்விடுகிறது. பூச்சி வியாதி அறவே ஒழிந்துவிடுகிறது.

இவ்வுண்மைகளை ஹானிமான் ஒருவனே கண்டுபிடித்தான்! ஹோமியோபதி ஒன்றே இவைகளை நன்றாக அறிந்து உபயோகப்படுத்துகிறது. ஹோமியோபதி முறை ஒன்றே அசல் விஞ்ஞான முறை. ஹோமியோபதி ஒன்றே வியாதி முழுவதையும் திரும்பிவராமல் சொஸ்தப்படுத்தும்; பூர்ண ஆரோக்கியத்தை காப்பாற்றும்; மக்களின் நம்பிக்கை ஊட்டும் ஊன்றுகோல்; இயற்கை அன்னையின் அன்புருவம்; அறிஞர்களின் ஆயுதம்.

இம்முறை மிருகம், பக்ஷி முதலானவற்றிற்கும் முழுப்பயன் தரக்கூடியது. சிசுக்களுக்கு வைத்தியம் செய்வது மாதிரியேதான் மிருகம் முதலியவற்றின் சிகிச்சை.

வியாதிகளின் குறிகள்.

முழுக்க வியாதியின் குறிகளை அறியவேண்டுமென்றால் தேகாரோக்கியமுள்ள சாதாரண உடம்பின் கூறுகளையும், கூறுகளைப்பற்றிய விவரங்களையும் அவைகள் வியாதியுற்றால் என்னென்ன மாதிரி மாறுபாடு அடைகின்றன. அவைகளின் தசை முதலியவற்றில் என்னென்ன மாறுதலேற்படுகின்றதென்றும், அவைகளின் மாறுதலினால் எம்மாதிரியான வெளிக்குறிகள் உண்டாகின்றதென்றும் தெரிந்துகொள்ளவேண்டியதவசியம். இது சாதாரணமாக புத்தகங்களைப்படித்து அறிந்து கொள்ள முடியாது. ஆனாலும் நம் புத்தகத்தின் அத்தியாயங்களை உன்னிப்பாகக் கவனித்துப் படித்தால் முக்கியமான அம்சங்களும் வியாதியின் கடுமை முதலானவையும் தெளிவாகப் புரியும். அப்பொழுதுதானே வியாதியின் குணத்தைக் கண்டுபிடித்து மருந்து கொடுத்து சிகிச்சை செய்யலாம்.

இதற்கு சாதகமாக நாடி, சரீர உஷ்ணம் முதலானவற்றைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டியதவசியம். அதற்கு பின்கண்ட அத்தியாயங்கள் மிக உபயோகமானவை.

நாடி.

இதன் உபயோகம் மிகவும் முக்கியமானது. இதைப் பொதுவாக மணிக்கட்டின் கீழ் கட்டைவிரல் பக்கம் மணிக்கட்டிலிருந்து சுமார் ஒரு அங்குலம் தள்ளி கவனிக்கவேண்டும். ஏனென்றால் இவ்விடத்தில்தான் நல்ல ரத்தக்குழாய் (ஆர்டரி) தோலிற்குச் சமீபத்திலிருக்கிறது.

நாடி என்பது ஹிருதயத்தின் அமுக்கும் சக்தியையும், ரத்தம் சுத்த ரத்தக்குழாய்களின் மூலமாய் செல்லும்போது ரத்தக்குழாய்களின் சுவர்களின் சுருங்கி விரியும் சக்தியையும் பொறுத்திருக்கிறது. அயோர்டா என்னும் பெரிய ரத்தக்குழாய் மூலம் ரத்தத்தை ஹிருதயத்தின் இடது வெண்டிரிகிஸ் அமுக்கிச் செலுத்தும் சக்தியையும் பெரும்பாலும் பொறுத்திருக்கிறது. ஆகவே நாடியை சரீரத்தின் எந்த பாகத்திலும் தோலிற்குச் சமீபத்திலிருக்கும் ரத்தக் குழாயிலிருந்து பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். ரத்தக் குழாய்களில் கோளாறு ஏற்பட்டிருந்தாலும், ஹிருதய வியாதிகளிருந்தாலும் நாடியில் நன்றாகத் தெரியும். நாடி பார்ப்பது ஜாக்கிரதையாக பார்க்கவேண்டும். அழுத்தாமலும் ஹிருதயத்திற்கு படபடப்பு உண்டாகாமலும் மிருதுவாகவும் பார்க்கவேண்டும். நாடி பார்க்கும்போது நாடியை அமுக்கக்கூடிய கட்டுகள் ஒன்றும் இருக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். நாடியை பரீக்ஷை செய்ய மூன்று விரல்களை மிருதுவாக வைத்து லேசாக அமுக்கிப்பார்க்கவேண்டும். நம் நாட்டு சாஸ்திரங்களில் இந்த ஒரே ரத்தக் குழாய் துடிப்பை அதன் சக்தியைக்கொண்டு பித்த, வாத, கப நாடி தோஷங்களென்று சொல்லுகிறார்கள். அதாவது விரல்களை நன்றாக அமுக்கிப் பார்த்தாலும் நாடித்துடிப்பு மணிக்கட்டின்பக்கம்வரைக்கும் தெரிந்ததானால் பித்த தோஷமென்றும், இரண்டாவது விரல்வரைக்கும் தெரிந்ததானால் வாததோஷங்களென்றும் ஒரு விரல் தூரம் வரைக்கும்தான் துடிப்பிருக்கிறதென்றால் கப சம்பந்தம் என்றும் வழங்குகிறார்கள். இதை சொல்வது சுலபமாயிருந்தாலும் நன்றாக பரீக்ஷை செய்து பழக்கமுடையவர்களுக்குத்தான் சட்டென்று வியாதி தோஷம் சொல்ல முடியும்.

கடியாரத்தின் உதவியால் அதன் வேகம், அறியலாம். இது சுரங்களில் மற்றும் சில வியாதிகளில் முக்கியமான உபகுறியாகும். மற்றும் நாடியின் மிருதுத்தன்மை, தளர்ந்த நாடி, பலமுள்ள நாடி, பலவீனமானது, கம்பி போலிழைவது, பாம்பு மாதிரி நெளிந்து துடிப்பது, விட்டுவிட்டு அடிப்பது, நடுநடுவே ஓரிரண்டு துடிப்புகள் இல்லாமலிருப்பது, நிதானம் தவறி ஒழுங்கில்லாமலிருப்பது, விரல்களை அமுக்கினால் நாடியின் பலஹீனத்தினால் துடிப்பது தெரியாமலிருப்பது; ரொம்ப விரல்களை அழுத்தினாலும் நாடி தெளிவாகத் துடிப்பது இம்மாதிரியான நாடியின் மாறுபாடுடைய குணங்களையும் ஒவ்வொரு வியாதியின் விசேஷமான நாடி பேதங்களையும் அறியவேண்டியது அவசியம். ஆனால் அதற்கு அனுபவம்தான் முக்கியம்.

ஆரோக்கியமான நாடி:—இது ஒழுங்காகவும், ரொம்ப மிருதுவாகவும், ரொம்ப பலவீனமில்லாமலும், விரல்களின் அடியில் லேசாக எழும்பி அடிப்பதும் சகஜம். வயதிற்குத் தக்கபடி, சிறு குழந்தைகளுக்கும், ஸ்திரீகளுக்கும் துரிதமாகவும், வயது சென்றவர்களுக்கு கடினமாகவும் இருக்கும்.

சாதாரணமாக இதன் வேகம் நிமிஷத்திற்கு :-

பிறக்கும் சிசுவிற்கு—140.

சிறு குழந்தைகளுக்கு—120—130

குழந்தைகளுக்கு—100

சிறுவர்களுக்கு—90

வயதுவந்தவர்களுக்கு—75

வயது சென்றவர்களுக்கு 65—70

ரொம்பக் கிழத்தன்மையுடையவர்களுக்கு—75—80

இம்மாதிரியாக இது வயதுக் கிரமமாக மாறுபடும்.

ஸ்திரீகளுக்கு ஆண்களைவிட 8—10 நாடி துரிதமாகவும் அதுவும் இவ்வித்தியாசம் 8 வயது ஆனபிற்பாடுதான் ஏற்படும்.

தேக பரிசிரமத்தினாலும், அதிர்ச்சியினாலும் நாடி துரிதப்படும். காலையில் எழுந்ததும் வேகமாகவிருக்கும். ஆகாரம் சாப்பிட்டதும் துரிதமாகும். உட்கார்ந்திருப்பதைவிட நிற்கும்பொழுது அதிகமாகவும், படுத்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் உட்கார்ந்திருக்கும்பொழுது சற்று துரிதமாகவும், தூக்கம், அயர்வு, ஆகாரமின்மை, குளிர் இவைகளினால் சற்று மெதுவாகவும் இருக்கும். இவையெல்லாம் சாதாரணமானவை.

சிற்சில வியாதிகளில் அததற்குத் தக்கபடி மாறுபடுவது நாடியினியல்பு.

துரித நாடி:— அழுத்தமாகவும், வேகமாகவும், இருக்குமானால், சுரங்கள், சிறியதாகவும், ஆனால் வேகமாயுமிருந்தால் ரொம்ப தேக பலவீனத்தைக் குறிக்கும்; இது சகஜமாக டைபாயிட் முதலிய வியாதிகளில் தென்படும்.

உதரும் நாடி:— துரிதமாக ஓர் அழுத்தமான துடிப்பு, பிறகு சட்டென்று நின்றுவிட்டு மறுபடி துடிக்கும். இது ஹிருதயத்தின் வியாதிக்கறிகுறியாம். ஒழுங்கீனமாகவும், விட்டுவிட்டு அடித்தாலும் ஹிருதய வியாதி பெரும்பாலும்.

சிலசமயம் மூளை வியாதிகளிலும், அபாப்ளக்ஸியிலும், நுரையீரலில் தடை ஏற்பட்டாலும் இம்மாதிரி நாடி விட்டுவிட்டுத் துடிப்பதுண்டு.

சிற்சில சமயம் அஜீரணத்தினால்கூட இந்த நாடி உண்டாவதுண்டு. பொதுவாக 'கவுட்' வியாதியுடைய ஹிருதய வியாதியஸ்தர்களுக்கு சகஜம்.

அக்யூட் வியாதிகளின் ஆரம்பத்தில் நாடி முழு வேகத்துடன் துடிக்கும். ரத்தக் குறைவாயிருந்தால் நாடி பலவீனமாயிருக்கும்.

நாடி விரல்களை அழுத்தினாலும்கூட துடித்ததானால் அதற்கு கடின நாடி என்று பெயர். இதுவே சிறியதாகவும் ஆனால் கடினமாகவும் இருந்தால் இது பலவீன நாடி ஆகும். இம்மாதிரி நாடி பொதுவாக ரத்தக் கொதிப்புள்ளவர்களுக்கும், ரத்தக் குழாய் வியாதியுடையவர்களுக்கும் ஏற்படுவது சகஜம்.

சரீர உஷ்ணம்.

வியாதியை நன்றாக அறிவதற்கு முக்கிய சாதனம் தெர்மா மீட்டர் என்ற உஷ்ணமானியே. சில சுரங்களிலும் சில வியாதிகளிலும் வியாதியின் குறிகள் நன்றாக வெளிப்பட்டு தெரிவதற்கு முந்தியே இது சரீரத்தின் உஷ்ணத்தைக்காண்பித்து வியாதி வரப்போவதைக் குறிக்கிறது. ஆகவே வைத்தியருக்கு ரொம்ப உபயோகமானது.

சாதாரணமாக மனிதனின் உஷ்ணம் 98.4°F (டிகிரி பாரன்ஹீட்) இதுவே 0.2 மேலும் கீழும் இருக்கலாம். இது 99°F மேற்பட்டே நீடித்திருந்தால் ஏதோ வியாதியின் அறிகுறி என்று தீர்மானம் செய்யலாம் அல்லது 97 3° டிகிரிக்கு குறைவாகவேயிருந்தாலும் வியாதிதான். இந்த இரண்டு உஷ்ணத்தின் அளவிற்கு மத்தியிலிருந்தாலும் அதாவது 97.3லிருந்து 99°F வரைக்கும் சிற்சில சமயங்கள் இருந்தால் தீர்மானமான வியாதி ஒன்றுமில்லை. ஆகவே உஷ்ணமானியின் உபயோகம் கணக்கிலடங்காது.

உஷ்ணத்தை அதிகரிக்கும் சுரங்களுக்கும் மற்ற வியாதிகளுக்கும் வித்தியாசத்தை காண்பிப்பது உஷ்ணமானிதான். உதாரணமாக சங்கா தோஷம் சுரம் மாதிரியே இருக்கும். ஆகவே இதற்கும் சுரத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கவேண்டுமானால் தெர்மாமீட்டரின் உதவி அவசியம்.

கடும் சுரங்களில் டைபாயிட் சுரம் (இதில் சுரம் படிப்படியாக ஏறும்.) மற்ற சுரங்கள் (இவைகளில் சுரம் படிப்படியாக ஏருது.) இவையெல்லாம் கண்டுபிடிக்கவேண்டுமென்ருல் தெர்மாமீட்டர் அவசியம். க்ஷயரோகம், ஆஸ்த்மா முதலிய வியாதிகளின் வித்தியாசத்தை கண்டறிய தெர்மாமீட்டர் உதவும். வியாதியின் கடுமையை அறிய தெர்மாமீடர் மிகமிக முக்கியம்.

இதே மாதிரி வாயு சுரத்தில் 104 டிகிரி இருந்தால் ஹிருதயம் தாக்கப்படக்கூடிய அளவிற்கு கடுமையானதாக சுரம் வந்துவிட்டதென்று அறியவும். சுரம் ஏற ஏற கடுமை அதிகம்.

மலேரியா சுரத்திலும், மணல்வாரி அம்மை முதலிய சுரங்களிலும் உஷ்ணமானியின் அவசியம் கூறவேண்டியது மிகையாகாது.

சுரம் வர வரக் குறைந்துவர வியாதி குறைவதென்பது நிச்சயம்.

இன்னும் எவ்வளவோ சொல்லலாம். இதெல்லாம் பிராக்டிஸ் செய்யச் செய்ய நன்ருகப் புரிந்துகொள்ளலாம்.

சாதாரணமாக தெர்மாமீட்டர் வைத்துப் பார்ப்பது நாக்கிற்கு அடியில்தான். சில சமயம் அக்குளில் வைத்துப் பார்க்கலாம். அப்பொழுது அரை டிகிரி கூட்டிக்கொள்ளலாம்.

சில சமயம் ஆசனவாயிலும் வைத்துப் பார்ப்பதுண்டு.

சுவாசம்.

நுரையீரல் இரண்டிலும் கெட்ட ரத்தம் சுத்தம் செய்யப்பட்டு நல்ல ரத்தமாகிறது. இதற்கு நாம் பிராண வாயுவை உள்ளிழுத்து வெளியே கரிமல வாயுவை விடுகிருேம். ரத்தத்திலிருக்கும் சிவப்பு மடிகங்கள் பிராணவாயுவை ஆகர்ஷித்துக்கொண்டு சரீரத்திலிருந்து சுமந்து வந்த கரிமல வாயுவை வெளிவிட்டுவிடுகிறது. இதற்கு மூச்சு விடுதல் என்று பெயர். மூச்சு விடுவதற்கு சாதனங்கள் விலா எலும்புகளும் விலாத் தசைகளும் டயபிரம் என்ற நுரையீரலுக்கடிப்பக்கத்திலிருக்கும் ஜவ்வுச் சதையும்தான். வயிற்றின் தசைகளும் உபகரணமாகும். மூச்சு உள்ளிழுக்கப்படும்போது நுரையீரல்கள் விரிந்து மறுபடியும் காற்றை வெளிவிடும்போது சுருங்கி சுவாசிக்கின்றன. உள்ளிழுப்பதற்கும் வெளிவிடுவதற்கும் தசைகள் உதவி செய்கின்றன. சாதாரண மனிதன் ஒரு நிமிஷத்திற்கு 24 தடவை மூச்சுவிடுவான்.

க்ஷயம், நுரையீரல் வியாதிகள், தொண்டை அடைப்பான் முதலிய வியாதிகள், டான்சில்ஸ், நாக்கு வீக்கம், ஆஸ்த்மா முதலிய வியாதிகளில் மூச்சுத் திணறல் இருக்கும். சில ஹிருதய வியாதிகள், சில மூளை வியாதிகள், முதலியவற்றில் இது ஏற்படும்.

நாக்கு.

இது சில வியாதிகளில் முக்கியமான அறிகுறியைக் காண்பிக்கிறது.

வரண்ட நாக்கு:- கடும் சுரங்களிலிருக்கும் வியாதிகளில் இது இருக்கும். சதை அழுகல் இருந்தால், ஸெப்டிக் வியாதிகளில் முதலியவற்றில்.

ஈர நைப்பு:— இது நல்லதே. அதுவும் மேற்சொன்னபடி வறண்ட நாக்கிற்குப் பிறகு ஈரநைப்பு ஏற்பட்டால் மிக நல்லது.

சிவந்த நாக்கு:— அம்மை மாதிரியான சொர்ப்பங் காணும் சுரங்களில். அஜீரண, பித்தக் கோளாறுகளில், மப்பு, மந்தமுடைய சுரங்களில் முதலியவற்றில் காணும்.

மாசு படர்ந்த நாக்கு:-வெண்மை அஜீரணத்தைக் குறிக்கும். மஞ்சள் பித்த உபத்திரவங்கள், ஈரல் வியாதிகள், மஞ்சட்காமாலை, கருஞ்சிவப்பு வாயு வியாதிகள், கருப்பு கடும் விஷ சுரங்கள், டைபாயிட் முதலிய வியாதிகள் இருக்கும்.

நாக்கு வெடிப்பதுமுண்டு. இது ரத்தக்கோளாறுகளில், சோகை, வெட்டை முதலியவற்றில் சகஜம்.

மூளை வியாதிகள், குடல் முதலிய பாகங்களில் கடுங்கோளாறுகள் இவைகளில் நாக்கு பூத்திருக்கும்.

இம்மாதிரியான மாசு வரவரப் படிந்து நுனியிலிருந்தும், பக்கவாட்டிலிருந்தும் மாசு குறைந்து வந்தால் வரவர வியாதி குணமடைகிறது என்று அர்த்தம். இதற்கு மாறாக, நாக்கு வரவரக் கருத்து மாசு அதிகமாகி, புண்கள் ஏற்பட்டு, மேல் மாசு நீங்கினால் அடியில் கருத்த அல்லது அதை உரித்தது போன்ற நிறம் தென்பட்டால் இது அபாயமே.

(Liii)

வலி.

எந்த பாகத்தில் எப்படி, எங்கெந்த மாதிரி, எந்த சமயத்தில் என்று தெரிந்துகொண்டால் வலி வியாதியைக் கண்டுபிடிக்க முக்கிய சாதனம். இதில் அனேக விதம் உண்டு. ஹிருதய துடிப்புடன் சேர்ந்து துடிக்கும் வலிகள், நரம்பு வியாதிகளில் ஒரு வழியாகத் தொடர்ந்து வலிக்கும் வலிகள், இதுவே திடீரென்று கூர்ந்துவிட்டு திடீரென்று நின்றுவிடும். ஒற்றைத் தலைவலி, சியாடிகா, அக்கி முதலிய வியாதிகளில் இது சகஜம்.

குத்தும் வலி, கிழிக்கும் வலி, எரிச்சலுடன் கூடின வலி, சிரங்கு ஆரம்பத்திலும், சீழ் கட்டிக்கொள்ளும் போது தெரிக்கும் வலி முதலியன சகஜமாம்.

சாதாரணமாக வலி வியாதி உற்ற பாகத்தில் ஏற்படுவது சகஜமில்லை. உதாரணமாக கல்லீரலில் வலி என்றால் இது வலது தோள்பட்டையில் காணும். இடுப்பு மூட்டில் வலி என்றால் முழங்காலில் ஏற்படும். மூத்திரப்பையில் கல் என்றால் ஆண் குறியின் நுனியில் காணும்; ஹிருதய வலி என்றால் இடது கையில் வலி, வயிற்றுப்புண் முதலியவற்றில் வலி என்றால் முதுகுப்புறம் இடுப்புப் பக்கம் வலி, இம்மாதிரி நோயுற்ற பாகத்திலிருந்து தூரத்தில் காண்பது சகஜம். சில சமயம் அப்பெண்டிசைடிஸ் குன்மம் முதலியவற்றில் வலி எப்படி வந்து எந்த இடத்தில் முடிவடைகிறது என்று தெரிந்து கொண்டால் முக்கால்வாசி அந்த முடிவடையுமிடமே வலியுற்ற பாகமாயிருக்கும். ஆகவே இம்மாதிரி வலியுள்ள வியாதிகளில் நரம்பு ஸ்தானங்களை கவனித்து சரிவர சிகிச்சை செய்யவேண்டும். ஒவ்வொரு விதமான வலிக்கும் பற்பல மருந்துகளுண்டு. அவைகளை நமது 'கி நோட்ஸில்' கண்டறியும்.

தோல்.

ஆரோக்கியமுள்ள சரீரத்தின் தோல் தொடுவதற்கு வரண்டும், கைப்புமில்லாமல் மிருதுவாகவும், வழுவழுப்பாகவும் இருக்கும்.

சுரங்களில் தோல் வறண்டு, உஷ்ணம் அதிகரித்து, எரிச்சலுடன்கூடியிருக்கும். இதில் வியர்வை ஏற்பட்டுவிட்டால் சாதகமே. ஆனால் அதிகவியர்வை ஏற்பட்டு உஷ்ணம் வரவரக் குறைந்துவிட்டால் (காலரா முதலிய வியாதிகளில்) ஆபத்தானதே.

இரவில் வியர்வை, தலைப்பக்கம் உள்ளங்கால் முதலியவைகளில் வியர்வை சற்றே சிரமமேற்பட்டாலும் அதிக வியர்வை இவை அதிக நரம்புத் தளர்ச்சியை குறிக்கிறது. பெரும்பாலும் இது க்ஷயம் முதலிய வியாதிகளில்தான் சகஜம்.

ஹிருதய வியாதிகளில் சருமம் சற்று நீலம் கலந்தும், பித்தக்கோளாறுகளில் மஞ்சளாகவும், நரம்பு, ஈரல் வியாதிகளில் கன்னங்களில் சிகப்பும், ரத்தச் சோகை முதலியவற்றில் பளபளப்புடன் வெளுத்தும், அல்லது சிறு பசும் மஞ்சளாகவும், நீர் சுரப்பு வியாதிகளில் வழுவழுவென்று மின்னும் தோலும் சாதாரணமான குறிகளாம்.

சிறுநீர்.

மூத்திரக்காய், மூத்திரப்பை இவை இரண்டும், சிறுநீர் உண்டாக்கும் அவயவங்கள்.

ரத்தத்திலிருந்து அசுத்தத்தைப் பிரித்து எடுத்து வெளிப்படுத்துவது இவ்வவயவங்கள்.

இதன் பரிசோதனை முதலியவற்றை விவரமாக 125-ம் அத்தியாயத்தில் பார்க்கவும்.

ஒற்றடம்.

வீக்கம், சிரங்கு முதலியவற்றிற்கும், வலிதாங்க முடியாமலிருந்தாலும் ஒற்றடம் அல்லது பற்று அவசியம். வலியைக் குறைத்து கொஞ்சம் சௌகரியப் படுத்தும்.

யாளிவிதைப் பற்று:—அரைத்து கொதித்த ஜலத்தில் கிண்டவேண்டும். சிரங்குகளைப் பழுக்கவைப்பதற்கும், சிரங்குகளின் வலியைக் குறைப்பதற்காகவும் உபயோகப்படுத்தப்படுகிறது.

அரிசி மாவுப் பற்று:- இதுவும் விளக்கெண்ணெயை விட்டுக்கிண்டி பற்றாக உபயோகப்படுத்தவேண்டும். இது யாளிவிதை மாதிரி உபயோகப்படுவது.

கரி பற்று:- நல்ல அடுப்புக்கரியைத் தூள்பண்ணி ஈஸ்ட் பவுடருடன் கலந்து அழுகிக்கொண்டிருக்கும் புண்கள், துர்நாற்றமுடைய புண்கள் இவைகளுக்கு மேலுக்குப்போட நாற்றம் குறைந்து புண் சீக்கிரமாக ஆறும்.

இவைகளைத்தவிர ஆண்டிப்ளஜிஸ்டின் களிமண் பற்று, முதலியனவும் உபயோகப்படும்.

நிமோனியா, ப்ளுரஸி, வாயு, இடுப்புப் பிடிப்பு; பிரான்கைடிஸ், சிரங்குகள், கட்டிகள் முதலியனவற்றிற்கு உபயோகப்படுத்தவேண்டும்.

பொதுவாக இவைகளை பொருக்கும் சூட்டில் போடவேண்டும்.

சூடு அதிக நாழிகை இருக்கவேண்டுமானால் பற்று போட்டுவிட்டு மேலே ஆயில் சில்க் அல்லது பஞ்சுப்பத்தைப் போட்டுமூடவேண்டும்.

வெந்நீரினால் சூடான ஒற்றடம் கொடுப்பதுண்டு. அதில் டிஞ்சர் காலண்டுலா, பைடலோகா, அகோ

ஊட் முதலியன போட்டு ஒற்றடம் கொடுப்பதுண்டு. இது வீக்கங்கள், வலிகள், நரம்பு வலிகள் முதலியவற்றிற்கு உபயோகப்படுத்தப்படுபவை.

எனிமா.

பெருங்குடலிற்குள் ஜலத்தையோ அல்லது மருந்து கலந்த தண்ணீரையோ, செலுத்துவது. இது பல காரணங்களாக செய்யப்படுவதுண்டு.

(1) மலத்தை வெளிப்படுத்துவதற்கு:—

இதற்கு சோப்பு கலந்த வெந்நீர் அல்லது வெறும் வெந்நீர் அல்லது சிறிது உப்பு கலந்த வெந்நீர், டிஞ்சர் காலண்டுலா கலந்தது முதலியவற்றை உபயோகப்படுத்தவேண்டும். இந்த வெந்நீர், உடம்பு உஷ்ணத்தினளவே இருக்கவேண்டும். இதன் உபயோகத்தால் நாட்பட்ட மலபந்தம் நீங்கும். உடனே மலம் வெளிப்படும். சரியானபடி வேலை செய்யாத குடல் சரியாய் மலத்தை இளக்கும்.

சீக்காளியை படுக்கவைத்து வயதுவந்தவர்களுக்கு மெதுவாக 20—40 அவுன்ஸ் வரையில் உட்செலுத்தலாம். 4—5 வயது குழந்தைகளுக்கு 2 அவுன்ஸ், சிறுவர்களுக்கு 10 அவுன்ஸ் வரையிலும் உபயோகப்படுத்தலாம். எனிமா கொடுத்த பிறகு 10–15 நிமிஷ நேரம்வரை அப்படியே படுத்திருக்கச் செய்து பிறகு மலம் கழிக்கலாம்; ஆனல் பழக்கமில்லாதவர்களால் இவ்வளவு நேரம் உள்ளடக்கி வைத்திருக்க முடியாது.

இது சில சமயம் மூத்திரக்காய், கர்ப்பப்பை, மூத்திரப்பை முதலானவற்றிலுள்ள வலியை சமனப்படுத்த உதவும்.

(2) போக்கை கட்டுப்படுத்த:—

டைபாயிட் சுரத்தில், போக்கு, ரத்த சீத பேதி, க்ஷயரோகம், நாட்பட்ட பேதி முதலியவைகளில் சில சமயம் எனிமா உபயோகப்படுத்துவதுண்டு. நோயாளியின் உடம்பு ஏதம்மையும் கவனித்துக் கொள்ளவேண்டும்.

இதற்கு உகந்தது வடித்த கஞ்சிதான். இதை இரண்டு அவுன்ஸ் எனிமாவாக செலுத்தலாம். ஏனென்றால் அதிகமாகக் கொடுத்தால் எல்லாம் வெளியே வந்துவிடும்.

(3) ஆகாரம்:- சில சமயம் வாந்தி அதிகமாயிருக்கும் வியாதிகளிலும், குன்மப் புண், புற்று முதலிய கடும் வியாதிகளிலும், வாய் வழியாக சாப்பிட்டு சரியானபடி ஜீரணிக்க முடியாத நிலைமையில் பால், வடித்த கஞ்சி, சூப் முதலியன எனிமாவாக உட்செலுத்தலாம். ஆனல் இவைகளைக் கொடுப்பதற்கு முந்தி குடல் சுத்தம் செய்யப்படவேண்டும். பிறகு இரண்டு அவுன்ஸ் வரைக்கும் இரண்டு மணி நேரத்திற்கொருதரம் கொடுக்கவும்.

இதுவே போதுமான அளவிற்கு ஆகாரமாகிவிடும் என்று எண்ணவேண்டாம். அவசரத்திற்கு உபயோகப்படும்.

(4) பூச்சி:— 20 அவுன்ஸ் ஜலத்தில் 10 சொட்டு இடிகோலோன் அல்லது டர்பென்டைன் கலந்து நீண்ட மூக்கின் வழியாக எனிமா செய்துவிடலாம். இது குடல் பூச்சிகளைக்கொண்டு நாக்குப்பூச்சி முதலியவைகளைக் கொன்றுவிடும்.

THE BIOLOGICAL LABORATORIES.

மிகவும் நவீன முறையில் தேர்ச்சிபெற்ற விஞ்ஞானிகளைக்கொண்டு சகலவிதமான ஹோமியோ இன்ஜெக்ஷன்கள், ஹோமியோபதி, பயோ கெமிஸ்டிரி மருந்துகள், எல்லாவிதமான அல்லோபதிக் இன்ஜெக்ஷன்கள், பல டானிக்குகள், வைடமின் B, C, D இன்ஜெக்ஷன்கள் முதலியன தயார் செய்பவர்கள்.

ஹோமியோபதி மருந்துகள் ஸ்பிரிட்டின் உதவியில்லாமலேயே இன்ஜெக்ஷனுக்கு தயார் செய்யப்படுகின்றன. ஆகவே நம்மிடத்தில் தயாராகும் ஹோமியோ இன்ஜெக்ஷன்கள் போடென்சி கெட்டுப்போகாமல் நன்றாக வேலை செய்யக்கூடியனவாயிருக்கின்றன.

திருவாரூர்.

ஹோமியோ சிகிச்சை. ::

:: Homeopathic Therapeutics.

(1) சுரம்.

சரிவர யோசித்துப் பார்த்தால் அடிபட்ட காயம், முதலானவைகளைத் தவிர மற்றெல்லாவற்றிற்கும் காரணம் அவசியம் உண்டு. ஆகவே அவைகள் இந்த அவயவம் அந்த அவயவ வியாதி என்று சொல்லக்கூடாது. எந்தப் பாகமாயிருந்தாலும் உடம்பு முழுவதும் தாக்கப்படாமல் அவயவம்மட்டும் வியாதியடைவதில்லை. ஆகவே ஒரு விதத்தில் எல்லாவியாதியும் பொதுவான சரீர வியாதிகளே. இருந்தாலும் சௌகரியத்தை உத்தேசித்து. எந்த அவயவங்கள் பெரும்படியாக தாக்கப்பட்டிருக்கிறதோ அதைப் பொருத்து தனித்தனி தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

அநேக வியாதிகள் உஷ்ணம் அதிகரித்து வியர்வை, நீர் முதலானவை குறைந்து இருப்பவைகள் சுரங்களென சொல்லப்படுபவை. பெரும்பாலான சுரங்களுக்குக் காரணம் தெரிந்திருப்பதால் அவைகளைப் பரவாமல் தடுப்பதற்கு தற்போது சுகாதார அதிகாரிகள் மிக்க உதவி புரிந்திருக்கிறார்கள்.

நிற்க எல்லா சுரங்களுக்கும் வியாதி வெளிப்பட்டுத் தெரிவதற்கு சில தினங்களுக்கு முந்தியே வியாதியின் விஷம் சரீரத்தில் பரவி விடுகிறது. அச்சமயத்தில் வியாதியஸ்தர் சாதாரணமாகத்தானிருப்பார்.

சுரங்களில் விஷத்தன்மையினால் தசைகள் தாக்கப்படுவது மட்டுமன்றி உஷ்ண நிலையை சரிவர வைத்துக்கொள்ளும் தன்மையும் கெட்டுவிடுகிறது. சரீரத்தில் உஷ்ணம் அதிகமாக ஏற்பட்டு அதற்குத் தகுந்த உஷ்ணக் குறைவு ஏற்படுவதில்லை. இந்த உஷ்ண அதிகரிப்பு உட்கொள்ளும் ஆகாரத்தினால் மட்டும் ஏற்படுவதில்லை. ஏனென்றால் சுரங்களில் ஆகாரம் குறைந்துவிடுகிறது. ஆகையால் சுரத்திற்குக் காரணம் தசைகள் கெட்டுப் போவதினாலேயே. தசையின் கழிவுப் பதார்த்தங்கள் ரத்தத்துடன் கலந்துநின்று சரியானபடி வெளிப்படுத்தப் படுவதில்லை. ஆகவே இந்த நிலைமை மூளையையும், முள்ளந்தண்டையும் பாதித்து அநேகஉபகுறிகளை உண்டாக்குகின்றன. நரம்பு ஸ்தானம் தாக்கப்படுவதினால் தலைவலி, ஜன்னி, அல்லது ஒரே உணர்ச்சியின்மை, நினைவிழத்தல், மரணம் முதலியன முக்கியமாய் உண்டாகின்றன. வியர்வையைத் தவிர மற்றெல்லாம் குறைந்துவிடுகின்றன. தோல் வரண்டு இருக்கலாம், அல்லது வியர்வை கொட்டலாம், பின் சொன்னபடி வியர்வை அதிகமாகி சூடு தணிந்திருந்தாலும் சுரம் கடுமையாகவே யிருக்கலாம். சிறுநீர் குறைந்து, கலர் அதிகமாகி, உப்புச்சத்து (Albuminous) கூடியுமிருக்கலாம். காலரா, டைபாயிட் முதலியவைகளைத் தவிர மற்றெல்லா சுரத்திலும் மலச்சிக்கலென்பது உறுதி. உமிழ்நீர் குறைவுபட்டு, நாக்கும், வாயும் வரண்டிருக்கும். தொண்டையும் வரட்சியினால் உலர்ந்திருக்கும். மூச்சுவிடுதல் அதிகரித்து

ஹிருதயத் துடிப்பு அதிகரித்து நாடித் துடிப்பும் பலமுள்ளதாகவும், துரிதமாகவும் இருக்கும்.

அதிக உஷ்ணம் உண்டாகுதலாலும், உஷ்ணம் குறைந்துவிடுதலாலும் அடிக்கடி சுர ஆரம்பத்தில் நடுக்கல், வலிப்புகள் முதலியன ஏற்படுகிறது. மேல் தோலின் சூட்டைக்கொண்டு உள்சுரத்தை அனுமானிப்பதும் தவறு.

சுரங்களைப் பொதுவாக மூன்றுவிதமாகப் பிரிக்கலாம்:—

(1) விடாமல் அடிக்கும் சுரங்கள்.
(2) விட்டுவிட்டு அடிக்கும் சுரங்கள்.
(3) காலையிலும் மாலையிலும் வித்தியாசம் அதிகமுள்ள சுரங்கள் (Remittent fever)

(2) பெரிய அம்மை Small-pox.

இது ஒரு ஒட்டுவாரொட்டி வியாதி. ஆரம்பத்தில் மூன்று நாள் சுரம் அடித்து கொப்பளம் கொள்ள ஆரம்பிக்கும். சில சமயம் இடுப்பில் வலியும், தலை வலியும் குழந்தைகளாயிருந்தால் இசுவும் இருக்கலாம். படிப்படியாக கொப்பளங்கள் விருத்தியாகி மூன்று நாள் கழித்து குறைந்து காய ஆரம்பிக்கும். 18, 20 நாட்களுக்குப் பிறகு வடு விட்டுவிடும். நம் மருந்து கொடுத்து வந்தால் வடு ஏற்படாது. இதில் கொப்பளங்கள் ஒன்று சேர்ந்து வியாதி கடுமையாயிருக்கலாம், அல்லது பனையேறி என்று சொல்லப்படும் கடுமையான விதமாக இருந்தால் கொப்பளங்களிலிருந்து ரத்தம் கசியும். இது அபாயமானது. சரியானபடி மருந்து கொடுக்காவிட்டால் கண் புண்ணாகி பொட்டையாகிவிடலாம்.

நிமோனியா ஏற்பட்டு அபாயம் ஏற்படலாம். கிட்னி என்னும் மூத்திரக்காய்கள் வீங்கி, உடம்பு வீங்கி அபாயம் ஏற்படலாம். நிரந்தர தலை வழுக்கை, காதுகளில் சீழ் வடிந்து செவிடு ஆகிவிடலாம்.

பெரும்பாலான சுரங்களில் மாதிரி முதன் முதலில் குளிர், உஷ்ணம், தலைவலி, சிலசமயம் ஜன்னி; வெண்மை படர்ந்த நாக்கு, முகம் கருஞ்சிவப்பு; பலமுள்ள, துரிதமான நாடித்துடிப்பு; உடம்பு முழுவதும் அடித்துப்போட்ட மாதிரி வலி, அதிகமாக இடுப்பிலும், முதுகிலும், வயிற்றில் தொடமுடியாதபடி வலி, வாந்தி. இந்த வாந்தியும், இடுப்புவலியும் முக்கியமான குறிகள். இந்தக் குறிகளெல்லாம் அதிகமாகவும் விடாமலும் இருந்தால், வியாதி ரொம்பக் கடுமையென்று அறிந்துகொள்ளவும். 3-வது அல்லது 4-வது நாளில், கொப்புளம் சிறு சிறு சிகப்புப் பொட்டுகள் மாதிரி அல்லது சிறிய, கடினமான பரு மாதிரி இருக்கும். முதன் முதலில் முகம், கழுத்து, மணிக்கட்டுகள், பிறகு உடல், கடைசியில் கால்கள். உள்வாயிலும், தொண்டையிலும் ஏற்பட்டு தொண்டை கரகரப்பு, உமிழ்நீர் அதிகமாதல், இருமல், வலி தொண்டைக் கம்மல் முதலியனவுண்டாகும். முதன் முதலில் கொப்புளங்களில் தண்ணீர்போலிருந்த திரவம் மஞ்சளாக மாறிவிடும். நடுவில் குழிந்து, சுற்றிலும் சிவப்பு வரி படர்ந்திருக்கும். மஞ்சளாக மாறும் சமயத்தில் கண்ணிமைகள், முகம் முதலியன வீங்கிவிடும். ஒருவிதமான, மனதிற்கு அசுசியான நாற்றம் வீசும். இந்த நாற்றத்தைக்கொண்டே அம்மையென்று சொல்லிவிடலாம். கொப்புளம் கண்டவுடனே சுரம் படியும்.

"அம்மை வைத்துக்கொள்ளுதல்"

(Vaccination) ரொம்பவும் அறிவீனமான

செய்கையில் ஒன்று. இதற்குப் பதிலாக "வேரியோலினம்" என்ற மருந்தை 200 போடன்சியில் மூன்று நாள் காலையில் சாப்பிட அம்மை வராமல் தடுக்கும்.

(Vaccination) 'அம்மை' வைப்பதே தற்போது ஏற்பட்டிருக்கும் அநேக வியாதிகளுக்கு காரணம் 'டான்ஸில்ஸ்' என்ற தொண்டைச் சதை வீக்கம், சில நரம்பு வியாதிகள், பாரிச வாயு, டி.பி. என்னும் க்ஷயம், வாயு வியாதிகள் முதலியன அதிகமாகிவிட்டன. கவர்ன்மெண்ட் ஆட்சி ஹோமியோபதி டாக்டர்கள் கையில் வந்தோ அல்லது ஹோமியோபதி ஆதிக்கம் பெற்றோ இந்த முட்டாள்தனமான 'அம்மை வைப்பதை' தடுத்தால்தான் உலகத்திலிருந்து அநேக வியாதிகள் மறையும்.

முக்கியமான மருந்துகள்:-

அகோனைட்: நடுக்கல், வரண்டதோல், துரிதமான நாடி, வாந்தி, இடுப்பில் வலி, பயம்.

விராட் விரைட்: அதிக வாந்தி, ரொம்ப துரிதமான நாடி.

பாப்டீஷியா: உடம்பில் அதிக வலி, முகம் கரும்சிகப்பு.

பெல்லடோனா: அதிகத் தலைவலி, ஜன்னி, வெளிச்சம் பார்க்க முடியாது.

ஆண்டிம்டார்ட்: இது சிறந்த ஒளஷதம். இது ஒன்றே குணப்படுத்திவிடும். அசதி, குமட்டல்.

மெர்குரி ஸால்: தொண்டைப் புண், எச்சில் அதிகம்; துர்நாற்றமான மூச்சு; கொப்புளங்கள் பழுத்ததும்.

காம்பர்: கொப்புளங்கள் திடீரென்று மறைந்தாலும், திடீரென்று கடுமையானலும், மூச்சுவிடச் சிரமம், தோல் சில்லிட்டுவிடுதல், இப்படியிருந்தால் அரை டம்ளர் ஜலத்தில் 10 சொட்டு கரைத்து 15 நிமிஷத்திற்கு ஒருதரம் ஒரு ஸ்பூன் கொடுக்க குணம் உண்டாகும்.

லாகேஸிஸ்: டைபாயிட் ஸ்திதி எற்பட்டு, விஷத்தன்மை அதிகமாகி, கொப்புளங்கள் நீலம் பூத்தால்.

ஸல்பர்: கொப்புளங்கள் பச்சை, ஊதாவாக மாறினலும்; அதிக அரிப்பு; இதேமாதிரி **கார்போவெஜி, ஆஸிட் நைட், ஆர்ஸனிக்** முதலியன கொடுக்கவேண்டிவரும்.

க்ரோடாலஸ்: பனையேறியில் கொப்புளங்கள் கருநிறமாகமாறி கடுமை ரொம்ப அதிகமானல்.

வாரியோலினம் 200: தினம் இதை ஒரு தடவையாவது மற்ற மருந்துகளுடன் கொடுக்கவேண்டும்.

வாக்சினினம், ஸார்ரசினியா, மாலேண்டிரியம், முதலியன தடுப்பதற்கும்கொடுக்கவேண்டும். **பயோ ஆர்லின், ஸல்பதயோசால்** இன்ஜெக்ஷன் தினம் ஒரு தடவை.

அம்மை முழுவதும் தோல் உஷ்ணமாகி, வலியுடன்கூடி, அரிப்புமிருந்தால், தோல்முழுவதும் வெந்நீரால் கழுவி, வாசனை கலந்த கார்பாலிக் லோஷனுல் துடைக்கலாம். நோயாளியை சுத்தமாக வைத்தலும், அடிக்கடி இளம் வெந்நீரால் கழுவுதலும் ரொம்ப முக்கியம். கொப்புளங்கள் வெடித்தால் ஸ்டார்ச் மாவைத் தூவிவைக்கவேண்டும். சாதாரணமாகவே கொப்புளங்களை கடலை எண்ணை, அல்லது கிளசரினுல் தடவி வரவேண்டும். அல்லது மாவு கலந்த எண்ணை உபயோகப்படுத்தலாம்.

ஆகாரம்: எல்லா சுரத்திற்கும்போலவே, காபி, டீ, பால், முட்டை, சூப், திராக்ஷை, ஆரஞ்ச், வெந்நீர் அல்லது சோடா, பார்லி கஞ்சி முதலியன.

பொதுவாக அம்மை முதலிய ஒட்டுவாரொட்டி வியாதிகளில் மற்றவர்களுக்கு தொத்தாமலிருக்க ஜாக்கிரதை செய்யவேண்டும். எல்லோருக்கும் **வாரியோலினம்** கொடுப்பதுடன் நோயாளிகளின் துணிமணிகளை அப்புறப்படுத்தி கொளுத்திவிடுவது நல்லது. அல்லது நன்ருகக் கொதிக்கவிடவேண்டும். நோயாளியைத் தனியாக நல்ல காற்ரோட்டமுள்ள அறையில் படுக்கவைத்து கந்தகத்தை அடிக்கடி எரியவிடவேண்டும். சுத்தமாக லைஸால் முதலிய லோஷன்களினுல் அலம்ப வேண்டும்.

(3) நீர்க்குளுவான் Chicken-pox.

ரொம்ப ஒட்டுவாரொட்டி. வழக்கமாக 14 நாள் சின்ன ரோஸ் புள்ளிகளாக ஆரம்பித்து 24 மணி நேரத்தில் பெரிய கொப்பளமாகிவிடும். ஒவ்வொரு தரமும் பல கொப்பளங்கள் கிளம்பி 5, 6 நாளில் காய்ந்துவிடும். மறுபடியும் இன்னெரு கூட்டம் இப்படி. பெரியம்மை கொப்பளம்மாதிரி நடுவில் பள்ளம் இருக்காது. முதல்நாள் கொப்பளம் கண்டுவிடும். அரிப்பு நிறைய இருக்கும்.

ஆண்டிம் டார்ட்: கொப்புளம் கண்டவுடன், அரிப்பு.

மெர்குரி: சுரம் விட்டுவிட்டபிறகு, சீழ்கண்டால்.

ரஸ்டாக்ஸ்: அரிப்பு, அசதி.

கேலிசூர்: கொப்புளங்கள் சீழ்காணுமுன்.

நேட்ரம் மூர்: தண்ணீர் மாதிரி கொப்புளம்.

ஸல்பநபோசால்: இன்ஜெக்ஷன் தினம் ஒருதடவை. அரிப்பு ரொம்ப அதிகமிருந்தால் 4 அவுன்ஸ் சுத்தமான கடலை எண்ணெயில் 1 அவுன்ஸ் ஞடத்தைக் கரைத்து பிரஷ்ஷினுல் தடவவும்.

(4) சின்னம்மை—Measles.

குழந்தைகளுக்கு பெரும்பாலும் வரக்கூடியது. பெரியவர்களுக்கு வந்தால், வியாதி கடுமையாக விருக்கும். ரொம்ப ஒட்டுவாரொட்டி. பெருவாரியாகத் தாக்கும் இயல்புடையது. துணிகள் வழியாகக்கூடப் பரவும்.

சாதாரண ஜலதோஷம்மாதிரி தும்மல், சிவந்து வீங்கின கண்கள், மூக்கிலிருந்தும் கண்களிலிருந்தும் தண்ணீர், வரட்டு இருமல், அசதி, சுரம், சில சமயம் வாந்தி, போக்கு, 4 நாள் வரைக்கும் இவை அதிகமாகி நொப்பம் கிளம்பும். முதலில் முகம், கழுத்து, மார்பு, பிறகு உடல் முழுவதும் மணல்வாரியாக ரோஸ் புள்ளிகள் நிறையக்காணும். 1 வாரம் கழித்து உமிமாதிரி தோலிலிருந்து உதிர்ந்துவிடும். வாயின் உட்புறத்தில் தோல்பக்கம் காணுவதற்கு முந்தியே காணும். இது முக்கிய அறிகுறி. சில சமயம் சுரம் படிந்தபிறகு போக்கு காணும். இது அதிகமாக இல்லாவிட்டால் நல்லதே. கடுமையான சுரம் 103 டிகிரி இருக்கும்.

நிமோனியா, ப்ரான்கைடிஸ், செவிடு, டி. பி. கக்குவான் முதலியன பின் ஏற்படுவது சகஜம். ஆகவே ஜாக்கிரதையாக இதற்கு வைத்தியம் செய்யவேண்டும்.

வராமல் தடுக்க மார்பில்லினம் தினம் ஒரு தடவை, பல்ஸோடில்லா இன்ஜெக்ஷன் இரண்டு தடவை.

ஆரம்பத்தில் அகோனைட்.

பல்ஸாடில்லா:- சாயங்காலம் அல்லது இரவில் இருமல் அதிகம்—போக்கு—தாகமின்மை.

ஜெல்சமியம்:- வலிப்பு, சுரம் மந்தகதியுடன்.

பெல்லடோனு:- தொண்டை கரகரப்பு, முகம் வீங்கி தலைவலி. வரட்டிருமல்.

ரஸ்டாக்ஸ்:- அமைதியின்மை, வாயு வலிகள் உடல் முழுவதும்.

பிரியோனியா:- அகோனைட்டிற்குப்பிறகு இதைக் கொடுக்கலாம். அல்லது ரஸ்டாக்ஸுடன் மாற்றலாம்.

மெர்குரி:- சுரத்திற்குப் பிறகு ஜலதோஷமிருந்தால். ரத்த சீதபேதி, கழுத்துப்புறம் கிளாண்டு வீக்கம்—வாய் முழுவதும் புண்.

திடீரென்று நொப்பம் மறைந்தால்—காம்பர், குப்ரம், சின்கம், ஸல்பர்.

ஸல்பர்:- வியாதியின் கடுமை குறைந்த பிறகு தினம் ஒரு தடவையாக ஒரு வாரம் கொடுக்கவும்.

மார்பில்லினம்:- இதை வியாதி பூராவும் தினம் ஒருதடவை அவசியம் கொடுக்கவேண்டும்.

பேர்ம்பர்ஸ் }
கேலிமூர் } :- இந்த இரண்டையும் கலந்து கொடுத்துவர சௌகரியம்.

பயோ ஆம்னின், ஸல்பதயோசால் இன்ஜெக்ஷன் சிறந்தவை.

எல்லாவற்றிற்கும் மேலாக டியூபர்குலினம் வியாதி பூர்ண குணமான பிறகு; ஸல்பர் கொடுத்த பிறகு 10 M போடன்சியில் மூன்று டோஸாவது கொடுக்கவெண்டியதவசியம்.

ஜலதோஷம் அதிகமாயிருந்தால், டிஞ்சர் யூபரேஷியாவைக் கரைத்து (½ டீஸ்பூன் 4 அவுன்ஸ் தண்ணீரில்) கண்களை அலம்பவேண்டும். தொண்டையிலும் விட்டுக் கொப்பளிக்கலாம்.

டிஞ்சர் ஓபியம் தினம் மற்ற மருந்துகளுடன் கொடுத்து வருவது மிக நல்லது.

உடலை நன்றாக அலம்பி உடன் துடைப்பது அவசியமானது.

5. ஸ்கார்லட் சுரம்—Scarlatina.

வாந்தி, முதுகுப்புறம், கால்கள் இவைகளில் வலி, தொண்டை கரகரப்பு, நல்ல சுரம், தலைவலி குழந்தைகளில் வலிப்பு சகஜம். தொண்டை கரகரத்து, கழுத்து அசைக்க முடியாமல் கிளாண்டுகள் வீங்கும்.

இரண்டாவது நாள் மார்புறத்தில் ரோஸ் கொப்புளம் கண்டு, முகம், உடல், கால்கள் முழுவதும் பரவும். வாயைச் சுற்றி கொப்புளம்

காணாது. இது முக்கியமான அறிகுறி. சுரம் அதிகப்பட தொண்டைக் குறிகள் அதிகமாகி, டான்சில்ஸ் பெருத்து, மஞ்சள் புள்ளிகள் காணும். அல்லது சுரம் படிப்படியாகக் குறைந்து வியாதி மறையும்.

நாக்கு நல்ல வெள்ளை படிந்து காணும், சிவந்து தோல் உரித்தமாதிரி இருக்கும். மேல் தோல் நல்ல சிவப்பாக நொப்பம் காணும். அதனாலேயே இந்த சுரத்திற்கு Scarlet (சிவப்பு) சுரம் என்று பெயர் 6-வது நாளே உமி மாதிரி உரிந்து, 9-வது நாள் பலஹீனமான நோயாளியை விட்டு நகர்ந்துவிடும்.

விதங்கள்:-

1. **சாதாரணமானது:-** சின்னாட்களில் நொப்பம் மறைந்து ஒரு வாரத்துக்குள் சுரம் சௌகரியமாகி விடும்.

2. **ஸெப்டிக் விதம்:-** தொண்டைப்புறம் துர்நாற்றம் கண்டு, தசைகள் கெட்டு, ரத்தக்குழாய் கூட தாக்கப்படும். அனேக வாரம் நீடிக்கும்.

3. **கடுமையானது:-** ஆரம்பத்திலேயே 105–106 டிகிரி சுரத்துடன் கடுமையாக, நொப்பம் ரொம்ப அதிகமாகக் கண்டும், தொண்டை கரகரப்பு இருக்காது. ஜன்னி பேத்தலாகி, மரணம் ஒரேவாரத்தில்.

4. **ரத்தமயமானது:-** சிறுநீரில் ரத்தம், மூக்கிலிருந்து ரத்தம் முதலியன. இது அபூர்வம்.

மூட்டு வாயுகள், ஹிருதய வீக்கம், நிமோனியா, காது சீழ், செவிடு, முக பாரிசவாயு, மெனிங்கைடிஸ்

சுரம், மூத்திரக்காய் வீக்கம் முதலியன பின்வரும் கோளாறுகள்.

வராமல் தடுக்க ஸ்கார்லடினம் 200 எல்லோரும் தினம் இரண்டு வேளை சாப்பிடவும்.

பெல்லடோனா:- சரியான மருந்து. கண் பாப்பா விரிந்து, தலைவலி, ஜன்னி, தொண்டை வீக்கம்.

மெர்குரி:- வாய் புண், எச்சல் நீர் அதிகம்.

ஏபிஸ்:- தொண்டை சுரீர் என்ற வலியுடன் அதிக வீக்கம்.

எகினேஷியா:- ஸெப்டிக்கேஸ் — கிளாண்டுகள் சீழ் பிடித்தல்.

ஆரம் டிரைபில்லம்:- தொண்டைப்புண், மூக்கிலிருந்து புண்ணாக்கும் நீர் பெருக்கு.

லைலட் ராஸ்டிஸ்:- புண்ணான ஸெப்டிக்கேஸ். தொண்டையை அலம்புவதற்கும் இதை உபயோகிக்க.

அயிலான்தஸ்:- நாசியிலிருந்து துர்க்கந்தமான திரவம், கடைவாய் வெடிப்பு.

அம்மோனி-கார்ப்:- டான்சில்ஸ் வீங்கி, துர்நாற்ற எரிச்சலுடன் வலி, தலை கனம், மயக்கம், தட்டி எழுப்பமுடியாத நினைவின்மை.

குப்ரம், ஆர்ஸனிக், லாசெனிஸ், க்ரோடாலஸ் முதலியன ரொம்பக்கடுமையான கேசுகளுக்கு. அம்மைக்குச் சொன்னமாதிரியே ஆகாரம் முதலியன. பெல்லடோனா இன்ஜெக்ஷன்.

6. ஜெர்மன் மீசில்ஸ் (Rubella)

ஜலதோஷம் இல்லாத மணல்வாரிமாதிரி. வைத்தியமும் அதேமாதிரி. திடீரென்று ஆரம்பித்து 2, 3 நாளில் குணமாகிவிடும்.

7. டைபஸ் சுரம்—Typhus Fever.

கடுமையான தலைவலி, குமட்டல், வாந்தி, கடுமையான சுரம், உடல் நடுக்கம், உடல் முழுவதும் வலி, பாப்பா சுருங்கி, நாக்கு வெண்மை படர்ந்து, ரொம்ப பலஹீனம். தோலிலிருந்து எலி நாற்றம். 5-வது நாள் கொப்பம் காணும்—கண்கள் கனத்தும், முகம் சிவந்தும், முனகிக்கொண்டு, ஒன்றும் செய்யமுடியாமல், நாக்கு நீட்டினால்கூட நடுக்கம். வாய் வரண்டு பல், உதடு முதலியவற்றில் ஊற்றை படர்ந்து, பார்த்தவுடனே தெரியும். 15 நாட்களுக்குள் குறைந்துவிடும். கண்கள் சிவந்து கூசும். தான் இரண்டு மூன்று மனிதர்கள்மாதிரியும், ஜெயிலில் அடைத்திருப்பதுபோலவும், எதிரிகளால் தாக்கப்படுவதுபோலவும் நினைத்து படுக்கையிலிருந்து எழுந்து ஓட எத்தனிப்பார்.

நாடி 120, 130-க்கு துரிதமாகவும் இருக்கும். நாடி 10 நாட்களுக்குப் பிறகு படிப்படியாக பலமாகவும், துரிதக் குறைவாகவும் ஏற்பட்டால் நல்லது. கடுமையான கேசுகளில் துரிதம் அதிகமாகி, பலஹீனமாகி மரணம் சம்பவிக்கும்.

இதில் காணும் கொப்பம், நீலச் சிவப்பாக, அமுக்கினால் மறையும், வயிற்றில்கண்டு மார்ப்பக்கம் பரவும். வியாதி முடியும்வரை இருக்கும் இது நரம்பு

ஸ்தானத்தின் வழியாகத் தாக்கி மூளையை வேலை செய்யவொட்டாது.

நெருக்கமான இடத்தில் வாசம், போதுமான காற்று இல்லாமை, அசுத்தம் இவை காரணங்கள். ஆகவே ஏழைகளை அதிகமாகப் பாதிக்கிறது.

ரஸ்டாக்ஸ்:- கருஞ்சிவப்பு நாக்கு—தாகம், மூக்கிலிருந்து ரத்தப்பெருக்கு-நாற்றமுடைய நீர்-தானறியாமலே ஜன்னி மயக்கம்.

ஜெல்சமியம்:- திடீரென டைபாய்ட் நிலைமை. அதிக அசதி; மயக்கம்.

பாப்டீஷியா:- டைபாய்ட் மாதிரி உடம்பு வலி.

ஹையாசயாமஸ்:- தலையில் கனத்த வலி, மந்தமான முகம், வரண்ட பள பளப்பான நாக்கு, ஊற்றை, காதுகளில் சத்தம், கண் பார்வை கோணல், இரட்டையாக பார்த்தல், ஓடிப்போக வேண்டும்போல ஜன்னி.

ஓபியம்:- கரட்டுச் சத்தத்துடன் சுவாசம், ஒரே மயக்கம், முகம் கருஞ்சிகப்பு.

அகாரிகஸ்:- அமைதியின்மை, நடுக்கம், உடம்பு ஆட்டம்.

பாஸ்பரஸ்:- நிமோனியா.

பெர்ருரி:- சுரல் வீக்கம், கிளாண்டு வீக்கம்.

ஆர்ஸனிக்:- ஒரே பலஹீனம், முகம் குழி

பாய்ந்திருக்கும், வரண்டு வெடித்த நாக்கு, ஒரே தாகம், தானறியாமல் போக்கு.

ஆஸிட் மூரியாடிக்:- தசைகள் சொன்னபடி கேட்காது, தோல் அதிகமாக உலர்ந்து வெடித்திருக்கும் முனகலுடன்கூடிய ஜன்னி, தொண்டை ரணத்திலிருந்து நாற்றம்.

ஆஸிட் நைட்ரிக்:- அடிக்கடி நடு நடுவே கொடுக்கவும்.

ஸோரினம்:- பலஹீனம் அதிகமாயிருந்தால் நடு நடுவே.

டைபோஸின் இன்ஜெக்ஷன் தினம் ஒரு தடவை க்ளுகோஸ் இன்ஜெக்ஷன் தினம் 10 c.c.

டைபாயிட் சுரத்திற்கு செய்யும் உதவியே இதற்கும் செய்யவேண்டும். டைபாயிட் சுரத்தைப் பார்க்கவும்.

8. டைபாய்ட் (பித்த வாத) TYPHOID.

(Enteric Fever)

இது ஒரு விடாமல் அடிக்கும் சுரம். மார்பில் சில ரோஸ் கலர் புள்ளிகளுடன் கூடின, ரோம்ப பலஹீனமும், வயிற்றில் வலியும், குடலில் புண்ணும் பெரும்பாலும் மஞ்சள் நிறமான போக்குடனும் இருக்கும். டைபஸ் சுரத்திற்கும் இதற்கும் அனேக குறிகள் ஒத்திருந்தாலும்; வித்தியாசங்களும் உண்டு. இந்த சுரங்களின் காரணங்கள் வித்தியாசப்படும். டைபாயிட் டைபஸ் சுரத்தினளவு ஒட்டுவாரொட்டி

யல்ல. இதற்குக் காரணம் ஒருவிதமான கிருமி (Eberth's Bacillus.) இந்தக் கிருமி சாக்கடைத் தண்ணீரின் வழியாகத்தான் நம் குடிதண்ணீரில் பரவி டைபாயிடை உண்டாக்குகிறது. ஆகவே இவ் வியாதி வராமல் தடுக்க நாம் குடிக்கும் பால், தண்ணீர் முதலியவற்றை கொதிக்கவைத்துச் சாப்பிட வேண்டும். சுத்தமான குடிதண்ணீரும், தாராளமான சாக்கடை போக்கு வரவும் மிகவும் அவசியம். சாதாரணமாக இலையுதிர் காலம்தான் இந்தவியாதி பரவுவதற்கு ஏற்றகாலம். 40 வயதிற்கு மேற்பட்டவர்களை இது அதிகமாக பாதிப்பது கிடையாது.

குறிகள்:- இவைகளை மூன்றுவாரக் குறிகளாக பிரிக்கலாம்.

விஷம் ரொம்ப கடுமையாக இராவிட்டால் வியாதி வெளிப்படுவதற்கு 10—21 நாள்வரை பிடிக்கும். திடீரெனவும், படிப்படியாகவும் வியாதி வெளிப்படும். நோயாளி அசதியுற்று, குளிர்ந்து கொண்டும், அடுப்படியைவிட்டு நகர இஷ்டமில்லாமலுமிருப்பார். முதுகுபுறம் வலியும், கால்களில் நடுக்கமும், பசி மந்தித்தும், சில சமயம் குமட்டலுமிருக்கும். நாக்கு வெண்மை படர்ந்தும், வாய் துர்நாற்றம் வீசும், நாடித்துடிப்பு அதிகரித்தும், தூக்கங் கெட்டும் பேதியும் காணும். இவைகள் வர வர அதிகமாகி, அதிகத் தலைவலி, அதிக சுரம், தசைகள் அதிக பலஹீனம் ஏற்படும். இது தான் சுர ஆரம்பம்.

முதல் வாரம்:- தினம் தினம் படிப்படியாக சுரம் ஏறும். நாடி நிமிஷத்திற்கு 90 அல்லது அதிகம், உடம்பில் அதிக உஷ்ணம், புத்தி மாறுட்டம், தன் தலையைப்பற்றியே குறைகள் சொல்லுவார், இரா

வேளைகளில் ஜன்னி—பேத்தல், வயிறு உப்பிசம் தட்டிப்பார்த்தால் தொனி கேட்கும; கொஞ்சம் அமுக்கினால் வலி, அதுவும் வயிற்றின் அடிப்பாகத்தில் வலதுபுறத்தில், விரல்களால் அமுக்கினால் களகளவென்று சத்தம் அல்லது உணர்ச்சி. இந்த வாரத்தில் சிலசமயம் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு, செவிடு ஏற்படலாம். 6-வது நாள் மார்புபுறம் ரோஸ் புள்ளி தென்படலாம்;

2-வது வாரம்:- பலஹீனமும், இளைப்பும் அதிகமாகிவிடும. சிறுநீர் குறைந்தும், யூரியா என்ற உப்புச் சத்து அதிகரித்துமிருக்கும். அடிக்கடி பேதியும், ஒரு நாளைக்கு ஐந்தாறு தடவை தண்ணீராகவும், வெளுர் மஞ்சள் நிறமாயும், துர்க்கந்தமும்; பித்தநீர் கலப்பும், இல்லாமலுமிருக்கும், 25 சதவிகிதம் கேசுகளில் மலபந்தம் இருக்கும். இந்த வாரத்தில் ரத்தப் பரிசோதனை மூலம் (Widals Test) டைபாயிட் என்று அறிந்து கொள்ளலாம்.

3-வது வாரம்:- ரொம்ப பலஹீனம்-கால்களைப் பரப்பி அசையக்கூட முடியாமல் படுக்கையில் கீழ்ப்புறம் நகருவார். கன்னங்களில் ரோஸ் கலர் ஏற்படும். வாய், உதடெல்லாம் ஊற்றை, நாக்கு உலர்ந்த தோல் மாதிரியும் அல்லது சிவந்து பளபளவென்றும் இருக்கும்; சிறுநீர் பெரும்படியாகப் பிரியாது. தானகவே மலம் பிரியும்; படுக்கையையும், ஆகாயத்தையும் கை விரல்களால் பிய்ப்பர், கண்களுக்கு முன்னால் கருப்புப்புள்ளிகள் பறப்பதைப் போன்றிருப்பதை பிடிக்கயத்தனிப்பர்; செவிடாகி தன்னை சுற்றியிருப்பவர்களை அறியமாட்டார்.

பெருவாரியான கேசுகளில் மூன்றுவது வாரத்தில் மரணம் சம்பவிக்கலாம்.

சுரம்:- தர்மாமீட்டரின் உதவி இச்சுரத்தில் மிக மிக முக்கியம். பாக்கி சுரங்கள் மாதிரி திடீரென அதிகரிக்காமல் படிப்படியாக ஏறும். இவ்வளவு கடுமையான வியாதி வருகிறதென்பதற்கு அறிகுறியாக இந்த சுரத்தைத்தவிர வேறொன்றுமில்லை. 24 மணி நேரத்திற்குள் 103-5° 104° F. வந்துவிட்டால் முக்கால்வாசி டைபாயிட் இல்லை என்றே சொல்லலாம். 24மணி நேரத்தில் 104° வந்துவிட்டால் வேறேதாவதொரு சுரம்தான். ஆரம்பத்தில் டைபாயிட் என்று கண்டுபிடிப்பது சற்று சிரமமே. ஏனென்றால் 6-வது நாளுக்குப் பிறகுதான் ரோஸ் புள்ளிகள் தென்படும். குழந்தைகளாயிருந்தால் அதுவும் தென்படாது. வியாதி குணப்படுமா என்பதற்கு சுரம் முக்கியமானது. காலையில் குறைவாகவும், மாலையில் அதிகமாகவும் இருக்கும். இரண்டாவது வாரத்தில் இந்த இரண்டு நிலையில் வித்தியாசம் அதிகமாக இருக்க நல்லது. காலையில் ரொம்பக் குறைந்தும் மாலையில் ரொம்ப அதிகமாயிருந்தாலும் நல்லதே. ஆனால், இரண்டாவது வாரத்தில் சுரம் ஒரேயளவாக அதிகமாக இருந்துகொண்டேயிருந்தால் வியாதி கடுமையாகவும், அதிக நாளும் நீடிக்கும். இந்த மாதிரி கேசுகளில் காலையில் சுரம் சட்டென்று குறைவதுதான் நல்ல அறிகுறி- காலையில் சேர்ந்தார்ப்போல் இரண்டு, மூன்று தினங்கள் குறைந்தே காணுமானால் சாயங்காலம் எவ்வளவு அதிக சுரமிருந்தாலும் கவலையில்லை.

அபாயம்:- (1) சிறுகுடலில் சிறு ரத்தக்குழாய் அல்லது பெரிய இரத்தக்குழாய் புண்ணாகி விட்டதானால் ரத்தப்பெருக்கு ஏற்படும். ரொம்ப அதிகமாக இருந்தால் மிக அபாயம். இது சக்தியைக் குறைத்துவிடும். சில சமயம் திடீரென்று நோயாளி சக்தி

யிழந்து, மயக்கமடைந்து இறந்துவிடுவர். வயிற்றை அறுத்துப் பார்த்தால் குடல்கள் தோய்ந்த ரத்தத்தினால் பெருத்திருக்கும்.

(2) அதிக பேதியாவதினால் பலஹீனம்.

(3) குடல் பொத்துப் போகலாம். 2-வது 3-வது வாரத்தில் அல்லது பிற்பாடு திடீரென அடிவயிற்றில் தொடமுடியாத வலி, வீக்கம், குமட்டல், வாந்தி, முகம் மாறிப்போய், ஓரிரண்டு நாளில் மரணம்.

(4) நுரையீரல்களில் வீக்கம் கண்டு, தொண்டைச்சளி, ப்ளூரஸி அல்லது நிமோனியா ஏற்படலாம். அல்லது சில சமயம் க்ஷயம்.

(5) சுரம் திருப்பிக்கொள்ளுதல்:- சுரம் முதல் தரம் படிந்த பிறகு அதிகமாக நடமாடாமலும், கண்டபடி ஆகாரம் உட்கொள்ளாமலுமிருந்தால் திரும்பாது. வியாதிக் கிருமிகள் பித்தப்பையில் அல்லது பித்தக் குழாய்களில் தங்கிவிடும். பிறகு குடல் வழியாக மலத்துடன் கழிந்து குடி தண்ணீரில் கலந்து மற்றவர்களுக்கு வியாதியை உண்டாக்கலாம்.

(6) இதெல்லாம் ஒன்றுமில்லாமலே திடீரென வியாதியஸ்தர் மரணமடையலாம்; இந்த வியாதி ஒரு நிர்ணயமான வழியில் செல்லுவதில்லை. நம் பிராக்டிசில் எவ்வளவு விதம் உண்டோ அவ்வளவும் கண்டிருக்கிறோம். பல ரூபங்கள், பல அபாயங்களுடன் கூடினவை, வரும் முறையில் பல விதங்கள், குணம் ஏற்படும்போது பலவிதங்கள் இவையெல்லாம் கவனித்தோமானால் டைபாயிட்

சுரங்களை சரியானபடி முழுவதும் சௌகரியம் செய்வதென்பது முழு வைத்திய அனுபவமாகும்.

வராமல் தடுக்க டிஞ்சர் டைபாயிடினம் இன்ஜெக்ஷன் எல்லோரும் இரண்டு தடவை செய்து கொள்வது அவசியம்.

வியாதியின் கடுமை குறைந்த பிற்பாடு பற்பல குறிகள் காணலாம். இருமல், அஜீரணம், தலைவலி, செவிடு முதலியன. இவைகளுக்கு அந்தந்த வியாதிகளில் சொன்னபடி மருந்து கொடுக்க வேண்டும்.

பொதுவாக நுரைக்கோளாறுகள்:- பெல்லடோனா, ரஸ்டாக்ஸ், சின்கம், ஓபியம், ஹையாசயாமஸ்.

மார்பு கோளாறுகள்:- பாஸ்பரஸ், பிரியோ, அயோட், லைகோ.

அஜீர்ணம்:- நக்ஸ்வா, கார்-வெ, இக்னே, மெர்குரி.

செவிடு:- சைனா, ஆஸிட் பாஸ், ஸல்பர்.

கடைசியில் உடம்பு தேறுவதற்கு ஸல்பர், ஸோரினம் முதலியன அடிக்கடி கொடுக்கவும்.

தைராயிடினம் 200:- இந்த வியாதி முழுக்க தினம் ஒரு வேளையாவது கொடுக்கவும்.

ஸோரினம் 1000:- இதையும் தினம் கொடுக்கலாம்,

பாப்டிஸியா:- நாக்கு வெண்மை, மஞ்சள், அமைதியின்மை, கசப்பு, பேதி.

பைரோஜின்:- அதிகக்கடுமையான சுரம், உடம்பு ரண வலி.

எக்கினேஸியா:- ஈறு ரத்தம் கசியும், நாக்கு சிவந்து மாமிசம் மாதிரி, போக்கு துர்நாற்றம்.

ஆர்ஸனிக்:- அதிக பேதி, ரொம்ப பலவீனம், தாகம், நாடி ரொம்ப பலவீனம், மன அமைதியின்மை அருமையான மருந்து.

பிரியோனியா:- மலச்சிக்கல், அசைந்தால் அதிகமாகும் வலி, தாக வரட்சை.

ரஸ்டாக்ஸ்:- வாயு வலிகள். அசைய குறையும். பிரியோனியாவுடன் மாற்றலாம்.

பெல்லடோனா:- மூளை தாக்கப்பட்டு, ஜன்னி.

ஹையாசயாமஸ்:- தானறியாத பேச்சு, கைவிரல்கள் தலைகாணியைப் பிய்த்தல் முதலியன,

ஓபியம்:- ஒரே போதையில் இருப்பதுபோல் அசைவின்றி கண் அரை மூடியிருக்கும்.

மெர்குரி:- பச்சை அல்லது மஞ்சளான பேதி, அதிக வியர்வை-நாக்கு அதிக வெண்மை.

ஆஸிட் மூரியாடிக்:- கால் நழுவுதல், தன்னிலையற்ற பேதி, அதிக சிறு நீர், ஒரே மயக்கம், ரொம்பக் கடுமையான நிலை.

ஆஸிட் நைட்ரிக்:- மேற்சொன்ன மருந்துடன் ரத்தப்போக்கிருந்தால்.

ஆஸிட் பாஸ்:- கட்டைபோல் அசைவற்று' அதிக வியர்வை, அதிக பலவீனம்.

பாஸ்பரஸ்:- நிமோனியாவுடன்.

ஹாமமலிஸ்:- குடலிலிருந்து கருத்த ரத்தப் போக்கு.

ஐபிகாக்-- ரத்தப் பெருக்கு, நல்ல சிவப்பு, குமட்டலுடன் வாந்தி.

டெரிபிந்த்:- வயிற்று உப்பிசம், நீர் பிரியாமல் ரத்தப்போக்கு.

லாசஸிஸ்:- இரவில் எலும்பிற்குள் வலி.

கார்போவெஜி:- துர்க்கந்தமான போக்கு, சில் விட்ட கால் கை, சட்டென்று பலவீனம்,

ஓபிமம்:- நிமோனியாவுடன் அல்லது துர்க்கந்தமான போக்குடன் கூடின டைபாயிட். சிறந்த மருந்து.

காலிமூர்:- வெண்மையான நாக்கு, உடம்பு முழுவதும் வலி, பெர்ரம்பாஸுடன் சேர்த்தே கொடுக்கலாம்.

காலிபாஸ்:- ரொம்ப பலவீனம், மயக்கம், ஜன்னி.

காலி ஸல்ப்:- மாலையில் ரொம்பக்கடுமையான சுரம்.

இன்ஜெக்ஷன:- "டைபோஸின்" "பைரோஜன்" தினம் 1 தடவை.

நல்ல சுத்தமான காற்றோட்டமுள்ள அறை
களில் இருக்கவேண்டும். நோயாளியை அதிகமாக
யாரும் சிரமப்படுத்தக்கூடாது. நல்ல ஓய்வு, மன
திற்கும் இருக்கவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு
நோயாளிக்கு தொந்திரவு கொடுக்கிறோமோ அது
ரொம்பக் கெடுதல்.

உடல், துணிகள், படுக்கை முதலியன அடிக்கடி
மாற்றப்பட்டு, சுத்தம் செய்யப்படவேண்டும்.
நோயாளியின் எச்சல், நீர், மலம முதலியன உட
னுக்குடன் அகற்றப்படவேண்டும். குழியைத்
தோண்டி மண்ணில் புதைத்து விடுவது நல்லது.

நோயாளியின் வாயை அடிக்கடி சுத்தமான
நைஸான ஈரத்துணியால் துடைக்கவேண்டும். கடு
மையான சுரத்தின்போது பற்களும், உதடுகளும்
அடிக்கடி துடைக்கப்படவேண்டும், தண்ணீரில்
வேண்டுமானால் வாசனை கலந்த கார்பாலிக் ஆஸிட்
கலந்து கொள்ளலாம். உடலை ஒரு நாளைக்கு ஒரு
தரமாவது இளம் வெந்நீரில் துணியை நனைத்து,
பிழிந்து துடைக்கவேண்டும். உடன் ஒரு உலர்ந்த
சவுக்கம் கொண்டு ஈரத்தைத் துடைத்துவிடவேண்
டும். உடல் முழுவதும் ஒரேயடியாகத் துடைக்கா
விட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாகத் துடைக்க
லாம், இம்மாதிரி துடைப்பதால் உடம்பின் உஷ்
ணம் தணிந்து, பரிசுத்தத்தைக் கொடுத்து, அசுசி
யான உணர்ச்சிகளையும் குறைக்கிறது. தண்ணீர்
இச்சமயத்தில் நல்ல டானிக் மாதிரியும் வேலை
செய்து, சக்தியிழந்த ரத்தக் குழாய்களை உணர்
வூட்டுகிறது. அடிக்கடி துடைப்பதினால் படுக்கைப்
புண் ஏற்படுவதில்லை. படுக்கைப் புண் ஏற்பட்டு
விட்டால் அவைகளை நன்றாக காலண்டுலா லோஷ

னால் அலம்பிவிட்டு ஹைபரிகம் எண்ணெய் போட்டு டிரஸ் செய்து ஆர்னிகா அல்லது காலண்டுலா ப்ளாஸ்திரி போட்டுவைக்கவும்.

தண்ணீரினால் துடைப்பதுடன்கூட அடிவயிற்றில் ஈரத்துணியை 4 மடிப்பாக மடித்து குளிர்ந்த தண்ணீரில் நனைத்து அதிகத்தண்ணீர் இல்லாமல் பிழிந்துவிட்டு போட்டுவிடவும். இந்த ஈரம் காயாமல் இருக்க ஒரு கம்பளியினால் போர்க்கவும். இரண்டு மூன்று தடவை தினம் இப்படிச் செய்ய வயிற்றில் உண்டாகும் ரணம் குணமடையும்.

சில சமயம் குளிர்ந்த தண்ணீரில் நோயாளியை நனைத்துத் துடைப்பதும் நல்லது.

சுர ஆரம்பத்தில் பார்லித்தண்ணீர்மட்டும்தான் கொடுக்கலாம். கெட்டியான பதார்த்தமே உதவாது. அடிக்கடி குளிரவைத்த வெந்நீர் கொடுத்து வரலாம். ஆகாரமும் புஷ்டியாக இருக்க வேண்டுமே. இல்லாவிட்டால் இரண்டு மூன்று வாரமாக சுரத்துடனிருப்பவர்களுக்கு சக்தி குறைந்துவிடுமே. நோயாளிகளுக்கும் உலர்ந்து வரண்ட தொண்டை, நாக்கு முதலானவைகளால் ஆகாரம் விழுங்குவது பிடிக்காது; ருசிக்காது. அடிக்கடி கொஞ்சம் எலுமிச்சம்பழச்சார் ஜலத்துடன் கலந்து அல்லது ஆரஞ்சுப் பழச்சாறு, டொமாடோ பழச்சாறு எது பிடிக்கிறதோ அதனால் ஆகாரம் சாப்பிடுவதற்கு சற்று முந்தி வாயை நனைத்துக்கொள்ளலாம். பூர்ணமான குணமாகும் வரையில் அரைக்கஞ்சியாகவும், கெட்டியாக இல்லாமலும் ஆகாரம் கொடுக்கப்படவேண்டும். அதிக அளவில்லாமல், கொஞ்சம் கொஞ்சமாகக் கணக்காகக் கொடுக்கவேண்டும்.

பசும்பால், ஐஸ் போட்ட பால், ஆரோரூட் கஞ்சி, பாலுடன், புழுங்கரிசி, பார்லி அரிசிக்கஞ்சி, முட்டை பசும்பாலுடன் கலந்து, கோகோ, மாமிச சூப், சோடா கலந்த பால், க்ளுகோஸ், (க்ளுகோஸ் இன்ஜெக்ஷனுகவும்) கருவக்கோந்து தண்ணீர் முதலியான முக்கிய ஆகாரங்கள். சுரம் 102-க்கு மேற்படாமலிருந்தால் அரை கெட்டியான கஞ்சி, கொடுக்கலாம். உணவு கேசுக்குத் தக்கபடி பார்த்துக் கொடுக்கவேண்டும்.

சுர நோயாளிகளை இரவும் பகலும் கவனித்து வரவேண்டும். அவர்களின் நிலை, ஜாக்கிரதையாக கவனிக்கப்படவேண்டியதவசியம். சில சமயங்களில் ஜன்னியினால் படுக்கையிலிருந்து கிளம்பி சில சமயங்களில் ஜன்னல்களையும் தாண்டி அனாவசியமான ஆபத்திற்குள்ளாவதுண்டு. கூட எப்போதும் நர்ஸ் அல்லது வேறு யாராவது இருக்க வேண்டியதவசியம்.

சுரம் விட்டபிறகு ஆகாரம் கொடுக்கப்பட வேண்டியது கவனிக்கக்கூடிய விஷயம். நாக்கு நன்ருக ஆகும்வரையிலும் வயிறு நிறைய உண்ணக் கூடாது. டைபாயிட் சுரத்தில் இந்த விதி மிக முக்கியம். 99 டிகிரி இரண்டு நாளைக்குச் சேர்ந்தார் போலிருந்தாலொழிய கெட்டியான ஆகாரம் கொடுக்கக்கூடாது.

சீதோஷ்ண நிலையை மாற்றுவதால் சிலருக்கு நன்மை உண்டு. கடுமையான சுரத்தினால் பீடிக்கப்பட்டிருந்தவர்களுக்கு நல்ல வாசஸ்தலத்தைப் பொறுக்குவது அவருக்கு இளமையை ஊட்டுவது

போல. இதனுல் ரொம்ப அனுகூலமும் நன்மையு முண்டு. கடுமையான டைபாயிட் சுரத்திற்குப் பிறகு ஒருவனும் 3—4 மாதம் வரையில் ஓய்வு எடுத்துக் கொள்ளாமலிருக்கக்கூடாது.

9. பஞ்ச சுரம்—Relapsing Fever.

நம் நாட்டில் கிடையாது. ரொம்ப ஏழைகளிடத்திலும், ரொம்ப அசக்தியானவர்களிடத்திலும் வரக்கூடியது. பெரியம்மை மாதிரி ஒட்டுவாரொட்டி. ஆனல் அதிகமாகக் கொல்லாது.

உடம்பு நடுக்கம், கடுமையான தலைவலியுடன் ஆரம்பிக்கும். தசைகளிலும், மூட்டுகளிலும் வலி, தூக்கமின்மை, 110–140 நாடித்துடிப்பு, வெண்மை படர்ந்த நாக்கு, தாகம், சில சமயம் வாந்தி, மஞ்சட்காமாலை, சுரம் 102–107°. 7 நாள் கழித்து, திடீரென்று படியும். நல்ல வியர்வை கொட்டும். சில சமயம் மணல்வாரி மாதிரி புள்ளிகள் ஏற்படலாம். பேதி, குடலிலிருந்து ரத்தப்பெருக்கு முதலியன.

4, 5 நாள் சௌகரியமாகயிருந்து 14, 15 நாள் கழித்து மறுபடியும் திருப்பிக்கொள்ளலாம். சௌகரியமான கேசுகளில் 2–5 நாட்களில் வியர்வை ஏற்படும். கடுமையான கேசுகளில் தாங்க முடியாத வாந்தி, நல்ல தாகம், துரிதமான நாடித் துடிப்பு, மஞ்சட்காமாலை, ஜன்னி, மரணம் சம்பவிக்கும். ஸ்கார்லடினு சுரத்திற்குப் பிறகு ஏற்படுவதுபோல வாயு வீக்கம், மூத்திரக்காய் வீக்கம், நிமோனியா, கர்ப்பச்சிதைவு முதலியன ஏற்படலாம்.

அகோனைட்:- ஆரம்பத்தில் நடுக்கல் சுரம், பிரியோனியா—குமட்டல், வாந்தி, அசைவதால் அதிகமாகும் வலிகள்.

ஆர்ஸனிக்:- தாகம், அமைதியின்மை, பயம்.

யூபடோரியம்:- அதிக வாயுவலி,-எலும்பு வலி.

ரஸ்டாக்ஸ்:- அடிக்கடி நகர்ந்துகொண்டே அமைதியற்றிருப்பவர்களுக்கு.

பாப்டீஷியா:- டைபாயிட் மாதிரி. அகோனைட் பிரயோஜனப்படாவிடில் இது வியர்வை உண்டாக்கும். அஜீரணம்.

சில சமயம் ஜெல்சமியம், சைனு, நக்ஸ்வாமி முதலியன வேண்டியிருக்கும்.

ஸல்பநபோரசால் 6x:- அல்லது டைபோஸின் இன்ஜக்ஷன் தினம் கொடுக்கவும்.

10. சாதாரண சுரம்—FEBRICULA.

அநேக வியாதிகளில் சுரம் ஏற்படுவது சகஜம். டி. பி. சீழ் பிடித்தல் முதலிய சமயங்களில் சுரம் அடிப்பது அறிகுறியானது. சில கிருமிகளால் உண்டாக்கப்படும் டைபாயிட், டைபஸ் முதலிய சுரங்களும் உண்டு.

சில சமயம் ஏதோ சில காரணத்தால் சுரம் மட்டும் ஏற்பட்டு வெறெந்த குறிகளுமில்லாமல்

போய்விட்டால் அது சாதாரண சுரம் என்று சொல்லப்படும்.

ஆரம்பத்தில் குளிர், எரிச்சல், தோல் வரண்டு வாய், உதடு, நாக்கு உலர்ந்து—நாக்கு சிவந்து, தாகம், அதிக நிறமுள்ள சிறுநீருடன் கூடியிருக்கும். இடுப்புப்பக்கம் வலி, தலைவலி, பசியின்மை, வேகமான பேச்சு, ஜன்னி முதலியனவும் உண்டு. இரவில் இவையெல்லாம் அதிகப்படும். அதிக வியர்வை. மூக்கிலிருந்து ரத்தம் வடிதல், பேதி, அக்கி மாதிரி கொப்புளங்கள் பொதுவாக சுரம் குறைய எற்படலாம்.

இது ஒரு மூன்று நாள் அல்லது குறைவாகவும் நீடிக்கும். இதுவே வேறு டைபாயிட், நிமோனியா, முதலான கடுமையான சுரங்களின் ஆரம்பமாயிருக்கலாம்.

திடீரென்று சீதோஷ்ண ஸ்திதி மாறுவதாலும் ஈரமான வீடுகளில் வசிப்பதாலும், ஆகாரக்குறைவினாலும், அல்லது அதிகக்குடி, அடி, அமிதமான ஆகாரம், மனச்சலிப்பு முதலியனவும் காரணமாகலாம். ஆகவே பல காரணங்கள் உண்டு.

அகோனைட்:- உஷ்ணமான தோல், தும்மல், குளிர், உடம்பில் எரிச்சல், ½ மணியிலிருந்து 2 மணிக்கு ஒருதரமாக ஒரு டோஸ் கொடுத்துவர 5, 6 டோஸுக்குள் சௌகரியமாகிவிடும்.

பேர்ரம்பாஸ்:- கடுமையான சுரம், அதனால் அகோனைட் அவ்வளவு பயம் முதலியன இல்லை.

காம்பர்:- திடீரென குளிர், நடுக்கம், அசதி, சில்லிப்பு. டிஞ்சரை அரை டம்ளர் தண்ணீரில் 10 சொட்டுக்கரைத்து 15 நிமிஷத்திற்கொருதரம் 6 தரம் சாப்பிட நிவாரணம்.

ஸல்பர்:- 24 மணி நேரத்திற்குள் மேற்சொன்ன மருந்துகள் குணப்படுத்தாவிட்டால் வேறு ஏதோ கடுமையான சுரம் ஆரம்பிக்கலாம். உடனே இதை 4 டோஸ் கொடுக்க சாதகம்.

பெல்லடோனு:- கடுமையான தலைவலி, முகம் சிவப்பு, மனக்குழப்பம், கண்கள் கோவைப்பழம் போல், பொட்டு நரம்புகள் துடிப்பு, தூக்கமின்மை, இரவில் பினத்தல்.

பிரியோனியா:- கனத்த தலைவலி, அசைந்தால் எல்லாம் அதிகமாகும். தலை வெடித்துவிடும்போலிருக்கும். இருமல், மூச்சுவிட சிரமம், மஞ்சள் நாக்கு, குமட்டல், மலச்சிச்கல், கால் கைகளில் சுரீர் என்ற வலி, கோபம், ஆத்திரம்.

ஆர்ஸனிக்:- நீடிக்கும் சுரம், ரொம்ப பலவீனம் டயப்பிரகாரம் வரும் குணம், பலவீனமான நோயாளிகள்.

எக்கினேஷியா:- டைபாயிட் மாதிரி கடுமையில்லாத சுரம்.

ஜெல்சமியம்:- வேர்வையில்லாத சுரம்.

3 நாட்களுக்கு மேற்பட்டால் பெரும்பாலும் டைபாயிடாக இருக்கும்.

பூராவும் பயோ ஆம்னின் இன்ஜெக்ஷன் தினம் ஒரு தடவையாவது. கஞ்சி ஆகாரம்.

11) தாளம்மை—MUMPS.

பெரிவாரியாகத் தாக்கும் இயல்புடையது. ஒட்டுவாரொட்டி வியாதி. எச்சல் கோளங்கள் இருகாதின் கீழ்ப்பக்கத்திலும் இருப்பவை வீங்கி விடுகின்றன. பெரியவர்களைவிட சிறியவர்களை அதிகமாகப்பாதிக்கும், இது இரண்டு 3 வாரம் வரைக்கும் தொத்தக்கூடியது.

ஒரு காதின் பக்கம் வலி ஆரம்பித்து கழுத்து, மோவாய் வலியும், விறைப்பும் இருக்கும். 101—104 டிகிரி வரைக்கும் சுரமிருக்கும். இது 3-வது 4-வது நாள் குறைந்துவிடும். காதின் பக்கத்திலிருந்து மோவாயின் அடிப்புறத்துக்கோளங்களும் வீங்க லாம்: வாயை அசைக்க முடியாமல் வலியுண்டு. ஒரு பக்கமிருந்து இரண்டு பக்கமும் வீக்கம் காண லாம். 8-10 நாட்களில் வீக்கம் குறைந்து சௌகரிய மேற்பட்டுவிடும். கோளங்கள் சீழ் பிடிக்காது.

காம்ப்ளிகேஷன்:- மூன்றில் ஒரு பாகம் ஆண்க ளுக்கு விரை வீக்கம் ஏற்படுவதுண்டு. சீக்கிரம் இதுவும் குணமாகிவிடும், அல்லது விரை சுருங்கியே விடலாம். (2) பெண்களுக்கு ஸ்தன வீக்கமும், யோனி வீக்கமும் ஏற்படலாம். (3) ஒரு வாரக் கடைசியில் பான்கிரியாடிக் கிளாண்டு வீக்கம் காண லாம், (4) மெனிங்கைடிஸ் சுரம் ரொம்ப அசா தாரணமான காம்ளிகேஷன். (5) முகத்தில் பாரிச வாயு ஏற்படலாம். (6) ஹிருதய வீக்கம்.

ரொம்ப கடுமையான கேசுகளுக்குப் பிறகு, தீராத செவிடு, முடக்கு வாயு ஏற்படுவதுண்டு. காலரா, இன்னும் சில சுரங்களில் அயோடின், ரசம் முதலான மருந்துகளைக் கொடுப்பதினாலும் இது உண்டாவதுண்டு.

சூடான ஒற்றடம் கொடுப்பது நல்லது; ஒற்ற டத்திற்குப் பிறகு கம்பளி அல்லது பட்டினால் மூடி வைத்துக் கொள்ளவும். பூர்ண ஓய்வு, அவசியம். கஞ்சி ஆகாரம்.

அகோனைட்:- ஆரம்பத்தில் 4 டோஸ் போதும்,
பேலியர்:- நாக்கு வெண்மை படர்ந்து உடம்பில் அசாத்திய வலி—தொண்டையில் விழுங்க முடியாத வலி.

மெர்குரி:- சுரம் குறைந்ததும்.

பல்ஸாடில்லா:- விரை வீக்கம் எற்பட்டால்.

மெர்குரி அயோட்:- வாயசைவு கஷ்டம் 8 டோஸ் போதும்.

பைடலோகா, பெல்லடோனா, ஜாபராண்டி, முதலியவையுமுதவும்.

வராமல் தடுக்க பரோடிடினம் 200 போடன் சியில் எல்லோருக்கும் இரண்டு மூன்று வேளை கொடுக்கவும்.

மெர்குரி அயோட்:- இன்ஜெக்ஷன் தினம் ஒரு முறை.

12) டெங்கு—DUNGUE.

உஷ்ணப்பிரதேசத்தில் ஏற்படும் மூட்டு வலிகளுடன்கூடின ஜுரம் இந்தியா, வெஸ்ட் இன்டிஸ் கிழக்குப் பிரதேசங்கள், அமெரிக்கா, ஆஸ்திரேலியா. ஈஜிப்ட் முதலிய பிரதேசங்களில் சகஜம். துரிதமாகப் பரவும் இயல்புடையது ஆனால் ஆட்கொல்லியல்ல.

ஏதாவதொரு மூட்டில் கடுமையான வலி ஆரம்பித்து, எல்லா மூட்டுகளுக்கும் பரவி தசைகளிலும் இடம் மாறித்தாக்கும். தோலில் சிவப்புப் புள்ளிகள் மணல்வாரி மாதிரி அல்லது கொப்புளங்களாகவும் காணும். 2 நாளில் சுரம் குறைந்து 4—5 நாள்களில் பூர்ண குணமேற்படுகிறது. ரத்தமும் பல பாகங்களிலிருந்தும் வடியும். ஆகவே இதை மஞ்சள் சுரமோவென்று சில சமயம் சந்தேகப்படுவதுண்டு.

இன்ப்ளுயன்ஸா மாதிரியே சிகிச்சை செய்ய வேண்டும். ஆகவே முக்கியமான மருந்துகள்:

அகோனைட், கேலிமூர், கேலிஸல்ப், பாப்டீஷியா, ஜெல்சமியம், ரஸ் டாக்ஸ், யூபடோரியம்-பெர்ப், எக்கிலேஷியா, சிமிசிப்யூகா முதலியன.

பெயின்கில், இன்ப்ளுயன்சினம் இன்ஜெக்ஷன்கள் அவசியம் தினம் இரண்டுமுறை கொடுக்கவும்.

13- வாயு சுரம் (Acute Rheumatism)

ஒருவித Micrococcus Rheumaticus என்ற கிருமியினால் தாக்கப்பட்டு பல மூட்டுகளில் வீக்கத்துடன், சுரத்துடனும், ரத்தம் சோகையுடனு மேற்படும்.

இலை தளிர் காலத்திலும், சீதளமான காலத்திலும், அதிகமாக பாதிக்கும். சிறு வயதில் தாக்குவது பெரும்படி பெண்களைவிட ஆண்களே அதிகமாக தாக்கப்படுகிறார்கள். பரம்பரையாக தொத்துவது மிக சகஜம், குளிரினால் தாக்கப்படுதல். ஆரம்பத்தில் கெடுதல். ஒரு தரம் வந்தால் மறுபடி மறுபடி வருவது சாத்தியம்.

உடம்பு வலி, அசதி, பொதுவாக உடம்பில் விறைப்பு முழங்கால், மணிக்கட்டு முதலிய ஏதாவதொன்றில் ஆரம்பித்துப் பரவும். தாக்கப்பட்ட மூட்டுகள் சிவந்தும், உஷ்ணமாகவும், வீங்கியும், அதிக வலியுடனும்கூடி பிறகு குறையும், சட்டென்று ஒரு மூட்டில் தணிந்து மற்றொன்றைப் பற்றிக்கொள்ளும். நாடி துரிதமாகவும், அழுத்தமாகவுமிருக்கும். சுரம் 101–103° டிகிரி வரைக்கும். மூட்டு வீக்கம் குறைய சுரமும் படியும். சமயங்களில் 107 வரைக்கும்கூட வீசும்.

புளிப்பு நாற்றத்துடன், பிசுபிசுப்பான வியர்வை இருக்கும். வியாதி முற்ற முற்ற ரத்தக் குறைவு நன்றாகத் தெரியும். நாக்கு பெருத்து, தடித்த படருடன் கூடிருக்கும். மூத்திரம் குறைந்து உப்புச்சத்து (Urates) அதிகமாக இருக்கும். கலர் அதிகமாக இருக்கும்.

ஹிருதயம் அதிகமாக பாதிக்கப்படுவது சகஜமாகையால் தினம் தினம் ஹிருதயத்தைப் பரிசோதனை செய்யவேண்டும். சிறுவர்களின் மூட்டு நோய் அதிகத்தொந்திரவு இல்லாமல் ஹிருதயமே தாக்கப்பட்டு கெடுதல் சம்பவிக்கலாம். தலைவலி, ஜன்னி,

பினாத்தல் இல்லாமலிருப்பது மற்ற சுரங்களிலிருந்து இதை வேறுபடுத்துகிறது. அதிகத் தாகம், பசி அபாரம், ஜீரணக்கோளாறு சாதாரணம். இதன் கடுமை அதிகமானதினால் ரொம்ப கொட்டாப்புளியாக இருந்த மனிதன் மல்லாக்கப் படுத்து கொண்டு அசைவின்றியும், நெற்றியிலிருந்து வழியும் வியர்வைத் துடைப்பதற்குக்கூட கையை உபயோகிக்க முடியாதவனாயும், சாப்பாட்டிற்கும், ஒவ்வொரு காரியத்திற்கும் மற்றவர் தயவை நாடியிருப்பது ரொம்ப ரொம்பப் பரிதாபகரமான விஷயம். தூக்கம் வந்தாலோ சிறிது நேரம். உடனே வலி வந்துவிடும். அந்தோ பரிதாபம்.

ஹிருதயத்தின் மைட்ரல்வால்வ் தாக்கப்படுவது பெரும்பாலும் சகஜமான காம்ப்ளிகேஷன். ப்ளூரஸி, சில தோல் வியாதிகள், டான்சில்ஸ், மெனிங்கைடிஸ் இவைகளும் ஏற்படலாம்.

ஹிருதயம் தாக்கப்பட்டால் நோயாளியின் முகம் வெளிறி, மூச்சுத்திணரல் அதிகமாகி, ஹிருதயம் இருக்கும் ஸ்தானத்தில் வலியேற்பட்டு, மார்க்கூட்டெலும்புகளின் அடிப்பக்கத்தில் வலியுண்டாகி, படபடப்பும், ஹிருதயத்துடிப்பு நிதானம் இல்லாமலுமிருக்கும். ஸ்டெதாஸ்கோப்பு வைத்துப்பார்த்தால், பேப்பரை தேய்ப்பதுபோல் உராயும் சப்தம் கேட்கும். இது சீக்கிரமே மறைந்துவிடும். உள்ளே அதிக நீர் சுரந்துவிடுமானால் மூச்சுக்கஷ்டம் அதிகமாகி, ஹிருதம் தடுமாறி, சப்தம்குன்றி தென்படும். இதன் அபாயம் மிகவும் அதிகமானதால் ரொம்ப ஜாக்கிரதையாக கவனித்துவரவேண்டும்.

அகோனைட்:- முதல்நாள் 6 வேளை.

மெர்குரி:- இரவில் அதிகமாகும் மூட்டு வலி, அதிக வியர்வை-எண்ணை மாதிரி பிசுபிசுப்பு.

ஸல்பர்:- அகோனைட்டிற்குப் பிறகு இரவில் அதிகமாகும் வலிக்கும், சூட்டினால் அதிகமாகும் வலிக்கும் நல்லது.

பிரியோனியா:- கடுமையான வலி, குத்தும் வலி, எலும்பைவிட அதிகமாக தசையையே பாதிக்கும். கொஞ்சம் அசைந்தாலும் அதிகமாகும். ஏராளமான வியர்வை, ஆங்காரம், நுரையீரல் அல்லது ப்ளூரஸி காம்ளிகேஷன்.

ரஸ்டாக்ஸ்:- அதிக அமைதியில்லாமை—அசையாமலிருந்தால் வலி அதிகம். பிரியோனியாவுடன் மாற்றலாம்.

கால்-கார்ப்:- தலையில் வியர்வை, விடியற்காலம் 3 மணிக்கு வியர்வை, அசைந்தால் அதிக வலி, ஜலத்தில் குளித்ததினால் அல்லது வேலை செய்ததினால்.

சிமிசிப்யூகா:- முதுகுப்புறம், கழுத்தின் பின்புறம், பின் தலை, இவைகளைத்தாக்கும். கண்களில் வலி,

ஸ்டெல்லாரியா:- அப்படியுமிப்படியும் மாறும் வலி, உடம்பில். புண்போன்ற வலி, அசைந்தால் அதிகமாகும். ஈரல் பாகத்தில் வலி.

இதை ஆலிவ் எண்ணையுடன் கலந்து மேலுக்கும் தடவலாம்.

ஸோடா ஸாலிஸிலஸ்:- பிசுபிசுப்பான வியர்வை, ஆஸிட் அதிகமான சிறுநீர், தாங்க முடியாத மூட்டு வலி.

பெல்லடோனா:- ராத்தூக்கமின்மை — வலி சுரீர் என்று வந்து திடீரென்று விட்டுவிடும்.

டல்காமரா:- அதிகத் தொந்திரவில்லாத-குளிர் காலத்தில் நனைவதினால் ஏற்படுவது.

பல்ஸாடில்லா:- அஜீரத்தினால் ஏற்படும் வலி-நாள்பட்டது-உஷ்ணமான அறையில் இரவில் வலி அதிகம். நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் வலி குறையும்.

கால்மியா:- சுரமில்லாத, ஆனால் கடுமையான வலி மேலிருந்து கீழிறங்கும்.

லீடம்:- கீழிருந்து மேலேறும். தொட்டால் சில்லென்றிருக்கும்- படுக்கை சூட்டினால் அதிகமாகும்.

கால்சிகம்:- அபாரமான வலி—நீர்க்கட்டு.

காலிமூர்:- அசைந்தால் அதிகமாகும் வலி.

காலிஸல்ப்:- ஓடி ஓடி ஏற்படும் வலி. சாயங் காலங்களில் சுரம் கடுமை.

நேட்ஸல்ப்:: ஈரம், நைப்பு, முதலியவற்றாலும், வெட்டையினாலும் ஏற்படும் வாயு.

பார்மிசின் ஸ்பெஷல் இன்ஜெக்ஷன் - ஆஸிட் பார்மிக் இன்ஜெக்ஷன், மெர்குரி அமோட், பயோ

ஆம்னின், மில்கோடின், பெயின்கில், லியூக்யூர், முதலிய பலவிதமானவைகளும் உபயோகிக்க வேண்டும்.

சுரத்தின்போது பால், கஞ்சி, ஆகாரம். மூட்டுகளை பெல்லடோனா ஆயின்மெண்ட், ரஸ்டாக்ஸ் ஆயின்மெண்ட், அயோடின் ஆயின்மெண்ட், முதலியன தடவி ஒற்றடம் கொடுக்கலாம். மூட்டுகளை ஈரமான துணியைப்போட்டு மூடி வைத்திருக்கலாம். ரொம்ப சுரம் அதிகமாயிருந்தால், இது உதவாது.

நோயாளியை கம்பளிப்படுக்கையில் போர்த்து வைத்திருப்பது நல்லது. வீங்கின மூட்டுகளை பான்டேஜ் போட்டு ஓய்வு கொடுப்பது அவசியம்.

வாயு வியாதியில் அனேக விதங்களுண்டு. வெட்டையினால், கிரந்தி நீரினால் ஏற்படுவதுண்டு. அவைகளுக்குத் தனித்தனியே வைத்தியம் செய்ய வேண்டும்.

வெட்டையினால் ஏற்பட்டவைகளுக்கு:-

கானோகில், அர்ஜிமோனின், அகிருபான் இன்ஜெக்ஷன்.

மெடாரினம்:- இதை அடிக்கடி மற்ற மருந்துகளுடன் கொடுக்கவேண்டும்.

சரஸபரில்லா:- நீர் பிரியும்போது உட்கார்ந்து கழிக்க முடியாது. முழங்கால் பிடிப்பு.

துஜா:- இதை கொஞ்ச நாளைக்கு அவசியம் கொடுக்கவேண்டும்.

ஸல்பர்:- நடுவே இரண்டு மூன்று டோஸ்.

கிரந்தி நீரினால்:-

காலி அயோட்—இரவில் எலும்பிற்குள் வலி, வீரம், பூரம் முதலிய நாட்டு மருந்துகள் சாப்பிட்ட பின் இது உபயோகமுள்ளது.

ஸ்டில்லின்ஜியா:- மண்டை எலும்பில் வலி, ரொம்ப மனச்சோர்வு.

மெசீரியம்:- இரவில் பெரிய எலும்புகளில் தாங்கமுடியாத குடைச்சல் வலி.

ஸிபுடிகம்:-1000 — சூரியாஸ்தமனத்திலிருந்து சூரியோதயம் வரைக்கும் ஏற்படும் வலி - தினம் ஒரு வேளை.

ஆரம்மெட்:- தற்கொலை பண்ணிக்கொள்ளக் கூடிய அளவிற்கு சோர்வு, இரவில் அதிக வலி,

காலிபைக்ரோம்:- ஓடிவரும் வலி, எலும்பு வீக்கம்.

பைடலோகா:- எலும்பைச்சுற்றியிருக்கும் தோல் வீக்கம், எலும்பினுள் வலி.

14) தசை வாய்வு—Muscular Rheumatism.

தசைகளில் வாயு வலி, கழுத்து தசைகள் விறைத்தல் இடுப்பு பிடிப்பு, கால் நரம்பு வாயு, (Sciatica) வீக்கம், சிவப்பு முதலியன ஒன்றும் கூடியிருக்காது.

(1) கழுத்து விறைப்பு—Stiff Neck. கழுத்தை கொஞ்சம் அசைத்தாலும் வலி,
அகோனைட், டல்காமரா, பெல்லடோனா, கால்கார்ப் முதலியன முக்கியமானவை. அகிருபான் இன்ஜெக்ஷன்.

(2) இடுப்புப் பிடிப்பு—Lumbago—ரஸ்டாக்ஸ், ஆர்னிகா, சிமிசிப்யூகா, பைடலோகா, ஆண்டிம் டார்ட், பிரியோனியா, பெர்பெரிஸ், ரோடோடென் ஈஸ்குலஸ், ஸல்பர், மெர்குரி. வலி அதிகமிருந்தால் கற்பூரத்தைலம் தடவி, ஒற்றடம் கொடுக்கவும்.

அகிருபான், பார்மிசின், மில்கோடின், ஊசிகள்.

(3) சியாடிகா (Sciatica)

கால் நரம்பின் மூடுசதை வாயுவினால் தாக்கப்படுவது. நல்ல வலி, குத்தும் வலி, புட்டத்திலிருந்து குதியங்கால் வரைக்கும் இழுத்துப் பிடித்தாற்போல் வலி, நோயாளி ஜாக்கிரதையாக நடக்கவேண்டியிருக்கும். சில சமயம் அசையக்கூட முடியாது. பார்த்தால் எங்கும் வீக்கமோ, சூடோ ஒன்றுமிருக்காது.

அகோனைட், கோலோசிந்த், ஆர்ஸனிக், அம்மோனியம் மூர் (மெள்ள நடந்துகொண்டிருந்தால் சாதகம், கால் நரம்பு ரொம்ப குட்டைபோல் தோற்றம்) நாபாலியம் (வலிப்பு மரமரப்புடன் கூடிய தாங்க முடியாத வலி) ரஸ்டாக்ஸ் (ஜலத்தில் நனைவதால்) சிமிசிப்யூகா, பைடலோகா (நாள்பட்டது.) டயஸ்கோரியா (தெரிக்கும் வலி, வலது கால், நடக்கும் போதும் அல்லது உட்காரும்போது) ஐரிஸ் (இடது இடுப்பு முறிக்கப்பட்டாற்போல்), டெரிபிந்த்(பாரிச வாயுவினால் தாக்கப்பட்டதுபோல் இருக்கும் வலி) காப்சிகம் (இருமும்போதுதெறிக்கும் வலி), கேலிகார்ப் (காலையில் 3 மணிக்கு தெறிக்கும் வலி,) லைகோபோடியம் (மாலை 4—8 வரையில் அதிகமாகும்), மாக்பாஸ் (மின்னல்மாதிரி பளிச்சென்றுவரும், வலி வலதுகால், சூடான ஒற்றடம் கொடுத்தால்சாதகம்), ஜெல்சமியம் (அசையாமலிருந்தால் வலி அதிகம், நடக்க ஆரம்பிக்கும்போது வலி, எரிச்சலுடன் இரவில் அதிகமாகும், தூக்கம் கெடும்), ரூடா (அடிபட்டமாதிரி, தொட்டால் அதிகமாகும்) நேட்ஸல்ப் (உட்கார்ந்துவிட்டு எழுந்திருக்கும்போது வலி) முதலியன:- அஸிருபான் இன்ஜெக்ஷன் தினம்.

உள்ளுக்குக் கொடுக்கும் மருந்தையே மேலுக்கும் லினிமெண்டாக அல்லது கிளசரினுடன் அல்லது ஆலிவ் எண்ணெயுடன் கலந்து உபயோகிக்கவும். சூடான ஒற்றடம் நல்லது.

ஆகாரம் நல்ல புஷ்டியுள்ளதாகவும், நன்றாகவும் சாப்பிடவேண்டியது.

பீடிக்கப்பட்ட பாகத்திற்கு ஓய்வு மிகவும் அவசியம். தசைகளுக்கு ஓய்வு கொடுப்பது மருந்து

கொடுப்பதைவிட முக்கியமானது. ஓய்வும் ஆகாரமுமே சில சமயம் பெரும்பாலும் சௌகரியப்படுத்தி விடும்.

(15) நாள்பட்ட வாய்வு—Chronic Rheumatism.

பிடிப்பு, வீக்கம், ரூபமாறுதல் இவைகளுடன் கூடின நாள்பட்ட வலிகள்.

இது அனேகமாக வாயு சுரத்திற்குப் பிறகு நீடிக்கும் வலியாயிருக்கலாம்; அல்லது தனியாக ஏற்பட்டிருக்கலாம். இது பெரும்பாலும் பொறுமையை சோதனை செய்யக்கூடியதே. அடிக்கடி திரும்பியும், இரவில் அதிகத் தொந்திரவுகொடுத்துக் கொண்டும், சட்டென்று குணமாகாமலுமிருக்கக் கூடியது. சில கேசுகளுக்கு ஒன்றிரண்டு வருஷம் கூட வைத்தியம் பார்க்கவேண்டியிருப்பதுண்டு. பாதிக்கப்பட்ட அவயவங்கள் அசைக்கப்படுவதற்கு சிரமப்பட்டு முடம் ஏற்பட்டுவிடும். முழங்கால் பூட்டு சாதாரணமாக பாதிக்கப்படும்; தசைகளும் சில சமயம் மெலிந்துவிடுவதுண்டு; அல்லது தீராதபடி முடங்கிவிடுவதுமுண்டு; மூட்டுகளில் எலும்பு முட்டுத் தட்டிக்கொள்வதுமுண்டு. சுரம் பெரும்பாலுமிராது. வியர்வை, வீக்கம் இவையுமிராது.

அஜீரணக்கோளாறுகள் முக்கால்வாசி இத்துடன் இருந்துகொண்டேயிருக்கும். இதையும் சௌகரியப்படுத்தினாலொழிய பூரண குணம் எதிர்பார்ப்பது தப்பே. ஆகையால் தகுந்த மருந்துகளை "அஜீரணம்" அத்தியாயத்திலிருந்து பொறுக்கிக்கொடுத்து ஜீரணக்கருவியை பலப்படுத்திக்கொள்ளவும்.

மூட்டுகள் பிடிப்பு அதிகமாகும்படி விடக் கூடாது. எச்சரிக்கையாக அவைகளை உபயோகத்

தில் வைத்திருக்கவேண்டும். நோயாளி தானுக நகர முடியாவிட்டாலோ, அதை ஏதாவது எண்ணெயைக் கொண்டு தடவி உபயோகம் கொடுக்கவேண்டும். பொதுவாக டிஞ்சர் காப்சிகம் கிளசரின் முதலியவற்றைக் கலந்து ஒவ்வொரு தடவையும் 15 நிமிஷமாவது தினம் 3 வேளை தடவித் தேய்க்க வேண்டும். இதே மாதிரி வாயு சுரத்திலும் கண்டிப்பாகச் செய்யவேண்டும்.

நாள்பட்ட (கிரானிக்) வாயுவில் நோயாளியின் உடலுக்குத் தக்கபடி சிகிச்சை செய்வது மிக மிக அவசியம். அதாவது கிரந்தி நீர் சம்பந்தமிருந்தால் 'ஸிபிலினம்' க்ஷயம் சம்பந்தமிருந்தால் 'பாசில்லினம்' அதேமாதிரி 'ஸோரினம்' 'கார்சினேசின்' முதலியன கொடுக்கவேண்டும். 'மெடரினம், அவசியம் எல்லாவித வாயுவிற்கும் நடுநடுவே 10 M போடன்சியில் ஒரு வாரத்திற்கொரு முறையாவது கொடுக்கவேண்டும்.

ரஸ்டாக்ஸ்:- தசைகள், தசைநார்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருந்தால், நடக்க ஆரம்பிக்கும் போது வலி அதிகமானுலும்.

பிரியோனியா:- பித்த தேகிகளுக்கு, அசைந்தால் அதிகமாகும்.

ஸல்பர்:- தோல் வியாதிகள், பித்த எரிச்சல், காலையில் 11 மணிக்கு வயிற்றில் ஒரு சங்கடம்.

கால்-கார்ப்:- "பொத்தப் பூசனிக்காய்" சதா வியர்வை, நடந்தால் அதிகமாகும்.

அகோனைட்:- தோள்பட்டை, வாயு, சுரம்.

அயோடம்:- பிடிப்பினுல் அசைக்க முடியாத மூட்டு வலி-தடித்துப்போன மூட்டு.

கேலி-அயோட்:- நடப்பதினுல் தாங்கமுடியாத வலி-வீங்கி, பிடித்த மூட்டுகள், எழுந்திருக்கயத்தனித்தால் இடுப்புப்பக்கம் கடுமையான வலி, கிளாண்டுகள் நாள்பட்ட வீக்கம், கிரந்தி, இரவில் அதிகம்.

ரோடோடென்:- படுக்கையில் அதிகமாக, புயல், காற்றடி நாட்களில் அதிகம்.

டல்காமரா:- ஈரத்தரைகளினுல் ஏற்பட்டால், குளிர் நாட்களில்.

பல்ஸாடில்லா:- முழங்கால், உள்ளங்கால், கணுக்கால் வலி, உடம்பில் பல இடங்களில் ஓடும் வலி- மாதவிடாய்க் கோளாறுள்ள பெண்கள்-

ஆர்னிகா:- அடிபட்டதினுல்.

காஸ்டிகம்:- தசைநார், சுருங்கிவிட்டதினுல் கால், கை முடக்கம், டி. பி. சம்பந்தமுள்ளவர்.

கேலிபைக்ரோம்:- மூட்டுகளைச் சுற்றி கிழிக்கும் வலி.

லீடம்:- பாதிக்கப்பட்ட இடங்கள் சில்லென்றிருக்கும். சிறிய மூட்டுகளில் வலி.

மெர்குரி:- மெத்தென்ற வீக்கம், எலும்புக்குள் வலி-இரவில் ஜாஸ்தி, வியர்வையினுல் சாதகமில்லை. ஆனுல் அதிக வியர்வை.

பைடலோகா:- அவயவம் வீணுய்ப்போனுலும், எலும்புக்குள் வலி.

கால்சிகம், காலோட்ராபீஸ், ஏபிஸ், ஸிலிசியா, நேட்ரம் ஸல்ப், மாங்கானம், கால்பாஸ், ஸ்டில்லிஞ்சியா முதலியன உபயோகமுள்ளவை.

(16) கவுட்—Acute Gout.

சில மூட்டுகள் சிவந்து வீங்கியும், அதிக சுரத்துடனும், அடிக்கடி ஏற்படுவது. பொதுவாக கால் பெருவிரல்தான் வீங்க ஆரம்பிப்பது வழக்கம். இது பெரும்பாலும் பரம்பரையாக வருவது. ஒவ்வொரு தடவையும் இது ஏற்படும்போது ஜீரணக் கருவியும் சரியாக வேலை செய்யாது.

அதிகக்குடி, அதிக தேக பரிசிரமம், இவைகளினால் அஜீரணம், ஏற்பட்டு, இராச்சாப்பாட்டிற்கு ஒரு இரண்டு மணி நேரம் கழித்து ஜீரணம் ஆகும் சமயம், இந்த கவுட் வியாதி ஆரம்பிக்கும். படுக்கைக்குப் போகும்போது சாதாரணமாகப் போனவர் காலையில் எழுந்திருக்கும்போது கால்பெருவிரல் மூட்டு வீங்கியும், சிவந்தும், தாங்கமுடியாத வலியுடன் எழுந்திருப்பர். வீக்கம் நல்ல சூட்டுடன், படுக்கைத்துணிமேல் படமுடியாதபடி அவ்வளவு வலியுடனும் கூடியிருக்கும். படுக்கையறையில் ஒரு கால் பந்து தரையில் விழுந்து எழும்பும்போது ஏற்படும் காற்றின் அசைவு பட்டால் கூட கால் வலிக்கும். கால் விரலில் பாயும் ரத்தக் குழாய்கள் வீங்கி, கால் முழுவதும் உப்பியிருக்கும், வலியின் ஆரம்பத்தில் சில்லென்று நடுக்கமும், வலி ஏற ஏற நடுக்கம் குறையும். தன் காலை இடம் விட்டு இடம் மாற்றிக்கொண்டும் ஒரு புறத்திலிருந்து மற்றொருபுறம் மாற்றிக்கொண்டும் வலியில் சாதகமிருக்காது. கடைசியில் காலை படுக்கைவாட்

டில் நீட்டிக்கொண்டிருந்தால் பகலில் சற்று சாந்தமாகவும், சாயங்காலத்திலிருந்து இரவு முழுவதும் அதிகப்பட்டும் இருக்கும். காலையில் சற்று வியர்வையுமிருக்கும். சில சமயங்களில் திடீரென்று வலி தானாகவே மறைந்துவிடும். மறுபடியும் திரும்பிவிடும், இம்மாதிரி அடிக்கடி பல நாட்களுக்குத் திரும்பத்திரும்ப வந்துகொண்டேயிருக்கும். சரியானபடி வைத்தியம் செய்தால் இரண்டு மூன்று வருஷத்திற்குத் திரும்பாது. சில வருஷங்கள் சென்றபின் அடிக்கடி திரும்பிவரும். இவ்வியாதிக்கு இடைவெளியின் காலம் வரவரக்குறையும். ஆதலால் சதா துன்பமிருந்துகொண்டேயிருக்கும். கால், கைவிரல்களின் மூட்டுகள் வேறு சாக்குக்கட்டி மாதிரி வெள்ளை வஸ்துவினால் நிறைக்கப்பட்டு தன் உருவத்தை இழந்துவிடும். மூட்டுகளும் வீக்கம் கண்டு கெட்டியாகிவிடும். இந்த வஸ்து ஸோடியம் யூரேட் எனப்படும். கால் பெருவிரல்கள் சேர்ந்தாற்போலும் தாக்கப்படலாம்; பிறகு உள்ளங்கால், கணுக்கால், குதிகால் முழங்கால் இவைகளெல்லாம்கூட தாக்கப்படலாம்.

கவுட்.	வாயு.
(1) ஆரம்பத்தில், சின்ன மூட்டுகள் தாக்கப்பட்டு, கால் கட்டைவிரல் அதிகமாக தாக்கப்படும்,	(1) பெரும் மூட்டுகள் அதிகமாக தாக்கப்பட்டு, சேர்ந்தார்ப்போல் அனேகம் மூட்டுகளும் பாதிக்கப்படும்.
(2) சிறுவர்களுக்கு பெரும்பாலும் கிடையாது, 35–50. வயதிற்கு பிறகுதான் சகஜம்.	(2) சிறுவர்களுக்கு அதிகம் 20–30 வயதிலும், முந்தியும் பெரும்பான்மை.

கவுட்.	வாயு.
(3) ஆண்களில் பெண்களைக் காட்டிலும் அதிகம். பெண்களாயிருந்தால் மாதவிடாய் நின்ற பிறகு அதிக சகஜம்.	(3) ஆண், பெண், இருவர்களையும் சமமாகத் தாக்கும்.
(4) பரம்பரையாக வருவதுதான் சகஜம்.	(4) பரம்பரையாக வருவது குறைச்சல்.
(5) சோம்பேறி, அதிக போகம், அதிகக் குடி, அதிக ஆடம்பர வாழ்க்கையுடையவர்களுக்கு சகஜம்.	(5) ஏழைகளின் வியாதி, கடினமான வேலை செய்பவர்கள், துணிமணி போதுமான அளவு இல்லாதவர்களையே தாக்கும்.
(6) வெளிக்காது, விரல்களின் நுனி, பாக்கி இடங்களில் 'சாக்குக்கட்டிகள்' ஏற்படும்.	(6) 'சாக்குக்கட்டிகள்' கிடையவே கிடையாது.

இவைதான் சாதாரண வாயுவிற்கும் கவுட்டிற்கும் உள்ள பேதங்கள்.

வயிற்றில் பொருமல், மார் எரிச்சல், வயிற்றில் புளிப்பு, மலச்சிக்கல், அஜீரணம் இவைதான் ஆரம்பம். கல்லீரலும் கெட்டுவிடலாம். சிலருக்கு படபடப்பு, மூச்சுவிட சிரமம் முதலியனவும் இருக்

கும். தசைகளில் வெட்டி இழுக்கும் வலிகள். இவையெல்லாம் ரத்தம் கெட்டுவிட்டதால் ஏற்படுவது.

பரம்பரையாக வருவதும், பணக்காரர்களிடையே அதிகமாக பரவுவதும் சகஜமானதால், நல்ல கட்டுமஸ்தான சரீர வாகிகள் சாராயம், மால்ட் டானிக்குகள், அதிக மாமிசம், தேகாப்பியாசமின்மை இவைகளுடன் இருந்தால் நிச்சயமாக கவுட் வரும். சாராயம், மால்ட் இவை இரண்டும் டிஸ்டில்செய்யப்பட்ட ஸ்பிரிட்டைவிட கொடியவை. பீர், போர்ட்வைன், ஷெர்ரி, இவையெல்லாம், விஸ்கி முதலியவற்றைவிட கெட்டவை. ஏழைகளுக்கு வந்தாலும் இந்த ஏழைகள் பழைய காலத்தில் பணக்கார வீட்டுச் சிப்பந்திகளாக இருந்து ஒரு வேலையுமில்லாமல் சோம்பேறிகளாக தின்று காலத்தைக் கழித்திருப்பார்கள். ஆகவே மிதமான ஆகாரம், மிதமான பானம், தேகாப்பியாசம், உழைப்பான பழக்கங்கள் இவையிருந்தால் இவ் வியாதி வராமல் தடுக்கலாம்.

காரீயம் ஒரு கெட்ட வஸ்து. இதனால் அனேகருக்கு இவ்வியாதி வருகிறது. காரீயத்தை உபயோகிக்கும் வர்ணம் பூசுபவர்கள், கொத்துவேலைக்காரர்கள், ஈயத்தில் வேலை செய்பவர்களுக்கு சகஜம். கவுட் சரீரத்தில் நாள்பட இருக்க, மூத்திரக்காய்கள் வீங்கி, நல்ல ரத்தக்குழாய்களின் சுவர்கள் தடித்து, வீங்கி, ரத்தக்கொதிப்பு ஏற்பட்டு கெடுதல் சம்பவிக்கும்.

பெல்லடோனா.- ஆரம்பத்தில்.

அர்டிகாயூரன்ஸ்:- இந்த டிஞ்சரை பத்து சொட்டு ஒரு டம்ளர் தண்ணீரில் கரைத்து இரண்டு மணிக்கு ஒரு தரம் சாப்பிட நல்ல மருந்து.

கால்சிகம்:- ஸ்டிராங்க் டிஞ்சரில் 20 சொட்டு, $\frac{1}{2}$ டம்ளர் ஜலத்தில் கரைத்து, மணிக்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் சாப்பிட முதல்தரமான ஔஷதம். இதே டிஞ்சரை மேலுக்கும் போடலாம். குமட்டல், அசிரத்தை, அசைந்தால் அதிக வலி, இரவில் அதிக வலி முதலியன இதன் குணம்.

பல்ஸாடில்லா:- இடம்விட்டு இடம் பறக்கும் வலி.

ஸாபினா:- கர்ப்பப்பை கோளாறுடன்கூடியிருந்தால்.

லீடம்:- டிஞ்சரை நாள்பட்ட கேசுகளுக்கு உபயோகப்படுத்தவும். வீங்கின மூட்டு சில்லென்று இருக்கும்.

நடு நடுவே பிரியோனியா, கேலிஅயோட், அபோசைனம், ஸல்பர் முதலியன கொடுக்கலாம்.

மேலுக்கு அகோனைட் லோஷன். அர்டிகா லோஷன், கால்சிகம் டிஞ்சர், ஆஸிட் அசிடிக் (ஆஸிட் அஸிடிக் Sp. gr. 1. 056—1 டிராம் ஸ்பிரிட்-வினி 6 டிராம், டிஸ்டில்ட் வாட்டர் 6 அவுன்ஸ்) இவைகளை அடிக்கடி போட்டுவரலாம்.

கால்சிகம்:- இன்ஜெக்ஷன் அடிக்கடி ஆரோரூட் கஞ்சி, ஜவ்வரிசி, அரிசிக் கஞ்சி ரொட்டி, பால் முதலியன ஆகாரம்.

தினம் நன்றாக குளிக்கவைத்து தாக்கப்பட்ட பாகங்களை நன்றாகத் தேய்க்கவேண்டும். சாராயம் வைன் முதலியவற்றையும், மாமிசத்தையும், அறவே நீக்கிவிட்டு, நல்ல புஷ்டியுள்ள காய்கறிகளைச் சாப்பிடச் சொல்லவேண்டும். தேகாப்பியாசம் கண்டிப்பாய்ச் செய்யவேண்டும்.

(17) கிரானிக் கவுட்.

நாட்பட்டுவிடாமல் உபாதிப்படுத்தும் வியாதி. மூட்டுகளில் பிடிப்பு, வீக்கம், ஸோடியம் யூரேட் உப்பு மூட்டுகளில் தங்குதல்.

கிரானிக் ரூமாடிஸம் என்ற வாயு வியாதிக்கும் இதற்கும் வித்தியாசம் ஸோடியம் யூரேட் உப்பு இருப்பதில்தான். ஆரம்பத்தில் இது திரவ ரூபமாக மூட்டுகளில் தங்க ஆரம்பித்து, வர வர கெட்டியாகி கல் மாதிரி ஆகிவிடும். இதுதான் கவுட்டிற்கு முக்கியமான குறி.

சுத்தமான தண்ணீரை குளிர்ந்ததோ, சூடானதோ கம்பளித்துணியில் நனைத்து வியாதியுடைய மூட்டுகளைச்சுற்றி இரவு முழுவதும் வைத்திருக்க யூரேட் வர வரக்குறைந்து, கரைந்துவிடும்.

டீ அறவே கூடாது, சாராய வகைகள் உதவாது.

மருந்து:- கால்சிகம், ஸல்பர்.

பல்ஸ்:- வலி இடம்விட்டு இடம் மாறும்; அஜீரணம்.

ஆண்டிம்-க்ரூட்:- வெண்மை படர்ந்த நாக்கு, குமட்டல், சாப்பிட்டவுடன் வலி அதிகம்.

நக்ஸ்வாமி:- நாழி கழித்து சாப்பிடுவதனால், மலபந்தம், மூலம் முதலியன கூட இருக்கும்.

இன்ஜ்:- கால்சிகம் 10 M. ஆண்டிம்க்ரூட்.

(18) ஆர்த்ரைடிஸ்—Osteo-Arthritis.

எலும்புகள் வீங்கிப் பெருத்தோ அல்லது பருமன் குறைந்தோ இருக்கும் குறியுடன்கூடின மூட்டுகளின் வாயு சாதாரண வாயு, கவுட் இவற்றினின்றும் இது வேறுபாடானது. இது ஸ்திரீகளைத்தான் அதிகம் பாதிக்கும். 30–40 வயதிற்குப் பிறகுதான் அதிகம். ஏதாவது சீழ் கோத்துக் கொண்டு நாள்பட இருந்துகொண்டிருந்ததினால் உண்டாக்கப்படலாம். வெள்ளை, வெட்டை, ஈரல் சீழ் (Pyorrhoea) முதலியன சகஜமாக இவ்வியாதியை உண்டாக்கக் காரணமாகலாம். அதிக வேலை, அதிகக் கவலை, ஈரம், போதுமான ஆகாரமின்மை, முதலியன இவ்வியாதியை அதிகரிக்கும்.

குறிகள்:- திடீரென சுரத்துடன் அனேக மூட்டுகளைப் பாதிக்கும். சில சமயம் ஹிருதயமும் தாக்கப்படுவதுண்டு. குழந்தைகளில் மண்ணீரல் (Spleen) வீக்கம், நிணநீர்க்கோளங்கள் வீங்குவதுமுண்டு. இதை வாயு சுரத்திலிருந்து பிரிப்பது கடினம். ஆனால் இரண்டிற்கும் வைத்திய சிகிச்சை ஒன்றே. பின்னால் மூட்டுகளின் ஸ்திதியைக் கவனித்தால் புரிந்துவிடும்.

கிரானிக் சீக்காயிருந்தால் இரு கால் மூட்டு, இரு கை மூட்டு அப்படி தாக்கப்படும். நடந்தால் வலியும், சிறு வீக்கமும் தெரியும். பொதுவாக கை மூட்டுகள் முதலிலும், பிறகு மற்ற மூட்டுகளும் தாக்கப்படும். வரவர மூட்டின் உருவம் மாறும். வியாதி வளருவது கணக்கில்லாமல் இருக்கும். தசைகள் சுருங்கி, மூட்டுகளைச்சுற்றிலும் எலும்பு வளர்ச்சியும் ஏற்படும். மூட்டு பூட்டுபோட்ட மாதிரி அசையாது. நாள்பட்டால் மூட்டுகள் பிடித்தமாகவும், உபயோகமில்லாமலுமாகிவிடும். முதுகெலும்பின் மூட்டுகள் தாக்கப்பட்டால், நோயாளி பாவம் ஒன்றுக்கும் உதவமாட்டான்.

சிகிச்சை:- ரொம்ப பிடிவாதமான சீக்குகளில் இதுவுமொன்று. மூட்டு உருவம் கெட்டுவிட்டால் குறிகள் சமனப்படுத்தப்படுவதுதான் முடியும். பழைய மாதிரி கால் சாதாரணமாக ஆகாது. வாயு அத்தியாயத்தில் சொன்ன மாதிரி, மூட்டுகளுக்கு எண்ணை தேய்த்து மாலிஷ் செய்தல், முதலியன செய்யவேண்டும். ஏதாவது சீழ் எங்காவது பிடித்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

நோயாளியின் பிரத்யேக உடற்குறிகளைக் கொண்டுதான் வைத்தியம் செய்யவேண்டும்.

அகோனைட்:- கடுமையான சுரத்துடன், ஆரம்பத்தில்.

பிரையோனியா:- அசைந்தால் வலி அதிகம்,

பல்ஸ்:- அஜீரணத்துடன்—வலி அங்குமிங்கும் ஓடும்.

ரஸ்டாக்ஸ்:- அசையாமலிருந்தால் வலி அதிகம், பொதுவாக அசைய அசைய வலி குறையும்.

ரோடோடென்:- நாட்பட்ட மூட்டு வீக்கம்.

மெர்குரி:- இரவில் வலி அதிகம், வியர்வை,

காலோபில்லம்:- பெண்களுக்கு பல சிறிய மூட்டுகளில் வலி, வெள்ளைப்பெருக்கு.

ஸிலிசியா:- தண்ணீர்போன்ற சீழ்.

ஸல்பர்:- நடுநடுவே.

ஆரம்மெட்:- எலும்பிலிருந்து சீழ், கிரந்தி நீர்.

இன்ஜெக்:- பார்மிசின்; தினம் ஒரு தடவை; கானேகில் வாரத்திற்கிருமுறை.

(19) மதுமேகம். (Diabetes)

அதிக தடவை சிறுநீர் பிரிதல். பித்தத்திலும். சிறுநீரிலும் சர்க்கரை இருத்தல். வரவர உடம்பு இளைப்பு முதலியனவுடன்கூடினது. சிற்சில சமயங்களில் சிறுநீரில் சர்க்கரை இருந்துவிட்டு மறைந்துவிடும். இது மதுமேகமல்ல.

சாதாரணமாக 40 வயதிற்கு மேற்பட்டு ஆரம்பிக்கும். ஆனல் பாக்கி வயதிலும் வரலாம். குழந்தைப் பருவத்தில் ஏற்பட்டால் உயிர்ச்சேதம் கண்டிப்பு. பெண்களைவிட ஆண்களை அதிகம் பாதிக்கும், ஏழைகளைவிட பணக்காரர்களையும் பாதிக்கும். பரம்பரையாக வருவதும் சகஜம். நரம்புத்தளர்ச்சியுடையவர்கள், மனக்கவலை, மனச்சோர்வு, முதலியவர்களுக்கு இது பெரும்பான்மையாகத் தோன்றும். உடம்பும் பருக்கும். கவுட் வியாதியும் இருந்திருந்தால் இது வரலாம்.

இதில் இரண்டு விதம் உண்டு. அக்யூட் கிரானிக். அக்யூட் விதம் சிறுவர்களைத் தாக்கி வெகு துரிதமாகக் கொன்றுவிடும். கொன்ற பிறகு பார்த்தால் அவர்களின் பான்கிரியாஸ், கெட்டுப் போயிருக்கும்.

கிரானிக் விதத்தில் அசதி, உடம்பெல்லாம் அரிப்பு, முதலியன ஆரம்பம். சிறுநீரைப் பரிசோதித்துப் பார்க்காவிடில் வெகுநாள் வரைக்கும் இவ்வியாதி இருப்பதே தெரியாமலிருந்துவிடும்.

தண்ணீர்போல சிறுநீர் அதிகமாகவும், அடிக்டியும், அதிகத்தாக வரட்சி, அதிகப்பசி, வரவரசைகளின் பலஹீனம், வரண்ட தோல், உடம்பு ளைத்தல், மலச்சிக்கல், சில சமயம் மூச்சு க்ளோராபாரம் மாதிரி தித்திப்பு வாசனையுடன்கூடிருக்கும். பல் சொத்தை விழுவது சகஜம், ஆண்ள் ஆண் தன்மையிழப்பர். முற்றின சிக்கில்ாடி வெகு பலஹீனமாயும், மூச்சுத்திணறலும் டிக்கடி ஏற்படும். மூச்சு ஒரு தினுசான ஆப்பிள்சனை மாதிரி தித்திப்பாகவும் இருக்கும். இதுரத்தில் அசிடோன் என்ற விஷம் உண்டாவல்தான். திடீரென மயக்கம் ஏற்பட்டு பெரும் யமலோகப்ராப்திதான். ஆனல் இதற்கு ப, நிமோனியா, க்ஷயம், அல்லது வேறும் கோளாறுகளினல் தாக்கப்பட்டு முடிடவர். இவர்களின் சரீர உஷ்ணம் எப்போதும் றைவாகவே இருக்கும் அதாவது 97° Fக்கு மேற்டாமலும் சில சமயம் 95° F வரைக்கும்கூட இருக்தும். இவ்வியாதி பத்து வருஷம் முந்தி வரைக்கும் தீராத நோயென்று கருதப்ப டு வந்தது. ஆனல் இப்பொழுது நம் நாட்டு மருந்துகளில்சில வெகு அற்புதமாக செய்கின்றன.

கோளாறுகள்

(1) தோல் வியாதிகள்:- சிரங்கு, பிளவைகள், பெண்களுக்கு கரப்பான் கடி, யோனி அரிப்பு, முதலியன.

(2) கண் ரோகங்கள்:- காடராக்ட், கண் நரம்பு பலஹீனம்.

(3) நரம்புக் கோளாறுகள்:- முழங்கால் அதிர்ச்சி

இருக்கவே இருக்காது. (இது முற்றின கேசுகளி
தான்.)

சில சமயம் கால்களில் மரமரப்பு, நரம்பு இழு புகள் முதலியனவும் இருக்கலாம். சிற்றின்பத்தி இச்சைக்குறைவு. நரம்புகளின் மாறுதல் கீழ் கண்ட கோளாறுகளையும் உண்டாக்கலாம்.

(4) **அழுகல்:** கால்களில் குழிப்புண் ஏற்பா ஆறாது போய்விடும். நகங்கள் மக்கி நொறுங்கு

(5) **மூத்திரக்காய் கெடும்:** மூத்திரத்தில் உப் சத்து. மூத்திரக்காய் சிறுத்து அதன் விளை

(6) **நுரையீரலில்:** க்ஷயக்குறிகள் அதிக சகஜ

திடீரென டயபிடிஸ் கோமா (ஒரே மயக்கம் ஏற்படும். அல்லது மயக்கத்திற்கு முந்தி தலைவலி அமைதியின்மை, ப 'ஹீனமான ஆனால் துரிதமான நாடித்துடிப்பு. சிறுநீரின் அளவும், சக்கரையின் அளவும் பெரும்பாலும் குறைந்து, வயிற்றில் கடுமையான வலியுங்காணலாம். மயக்க மருந்துகளும், அதிக தேகப்பரிசிரமும் பாதிக்கும். சரீர உஷ்ணம் குறைந்து, மயக்கம் ஏற்படும். மூச்சு விடுவது தீர்க்கமாகவும், பெருமூச்சுடனும் கலந்திருக்கும். நீரிலும் மூச்சிலும் ஆப்பிள் வாசனை தென்படும். சிறுநீரில் அசிடோன் என்ற விஷச்சத்து இருக்கும். அசிடோ அசிடிக் ஆஸிட்டும் இருக்கலாம். பெரும்பாலும் மயக்கம் அதிகரித்து மரணம் சம்பவிக்கும்.

பேதியாவதற்கு மருந்து ஏதாவது கொடுத்தால் அதிக பேதியாகி கெடுதல் ஏற்படலாம்.

Renal Glycosuria (Diabetes Innocens):- அனேகர்களில் வேறு வியாதியில்லாமல் சாப்பிட்ட பிறகு, சிறுநீரில் சர்க்கரை காணப்படலாம். ஆனால் ரத்தத்தில் சக்கரை இருக்காது. எவ்வளவு நாளிருந்தும் மதுமேகக் குறிகள் ஒன்றும் தென்படாது. இம்மாதிரி கர்ப்ப கால ஆரம்பத்தில் சில மாதங்கள் இருக்கலாம் அல்லது பிளாரிட்சின் என்ற மருந்து சாப்பிட்டபிறகுமிருக்கலாம். இதற்குக் காரணம் மூத்திரக்காய்களே. இம்மாதிரி சாதுவான கேசுகளை இரத்தச் சக்கரை பரிசோதனை செய்தபிறகே கடுமையான வைத்தியமும், பத்திய பாகமும் ஏற்படுத்தலாம்.

அடிக்கடி சிறுநீரைப் பரிசோதனை செய்தும், சந்தேகமுள்ள கேசுகளில் இரத்தத்தைப் பரிசோதனை செய்தும் இவ்வியாதியைக் கண்டுபிடிக்கவேண்டும். தைராயிட், பிட்யூடரி முதலிய கிளாண்டு வியாதிகளில், மூளையில் ஏற்படும் சில கட்டி வியாதிகளில் தைராயிட் மருந்தை அதிகமாக உட்கொள்ளுவதிலும், சாராயம் அதிகமாக உட்கொள்ளுவதிலும், திடீரென மன அதிர்ச்சி ஏற்படுவதினாலும் சிறுநீரில் தித்திப்பு காணலாம். ஆனால் இவைகள் மதுமேகமல்ல. ஆகவே ஜாக்கிரதை.

காரணம்:- ஆகாரத்தில் சத்துக்கள் சீரணமாவதிலேற்படும் கோளாறுகளின் வியாதியே இது. சரீரத் தசையை வளர்ப்பதற்கு வேண்டிய சர்க்கரைச் சத்து சீரணிக்கப்படாமலேயே ரத்தத்தில் கலந்து மறுபடியும் இரத்தத்திலிருந்து மாறுபடாமலேயே மூத்திரத்தில் வந்து சேருகிறது. இது நாம் உட்கொள்ளும் சக்கரையினால் மட்டுமல்ல, ஸ்டார்ச் சத்துள்ள அரிசி முதலிய பதார்த்தங்கள் சரியானபடி சீரணிக்கப்படாததாலேயே. ஆனால் இந்த சீரணக் கோளாரே சரீரவாகைப் பொறுத்தது. ஆகவே

ஒவ்வொரு கேசையும் தனித்தனியாகக் கவனித்து சிகிச்சை செய்யவேண்டும்.

Diabetes Insipidus } :- இவ்வியாதியில் சிறு
டயபிடிஸ் இன்ஸிபிடஸ் } நீர் ஏராளமாகப் பிரியும். அது சுத்தமாகவும் தெளிவாகவுமிருக்கும். கன எடைமாத்திரம் குறைந்திருக்கும். (Sp.Gr1.003-1.007) சக்கரைச் சத்தோ, உப்புச் சத்தோ இருக்காது. தாகம், வரண்ட தோல், உடம்பு, மனது பலஹீனம் அதிகமாயிருக்கும்.

மதுமேகப் பரீக்ஷை:- மதுமேகத்தில் சிறுநீர் வெளுத்த வைக்கோல் கலருடன் வைக்கோல் அல்லது பாலைப்போல் சிறு வாசனையுடனும். அதிககனமாகவும் (Sp. Gr. 1.025–1. 050), அதிக அளவிலும் பிரியும். பரீக்ஷை செய்யும் முறைகளில் அனேகம் உண்டு. கீழே சொல்லப்பட்டவை முக்கியமானவை.

Fehling's Test (பீலிங்ஸ் பரீக்ஷை):—

பீலிங்ஸ் திரவம் நம். 1 – 1 c. c.
,, ,, நம். 2 – 1 c. c.
டிஸ்டில்ட் வாட்டர் – 2 c. c.

மேற்சொன்னதைக் கலந்து ஒரு சோதனைக் குழாயில் விட்டுக் காய்ச்சவும். எந்த நீரைப் பரிசோதிக்கவேண்டுமோ அந்த நீரை 4 c. c. அளவு மேற்சொன்னதுடன் கலக்கவும். மறுபடியும் காய்ச்சவும். சிறிது நேரத்திற்கெல்லாம் நீரில் சர்க்கரை இருக்குமாயின், சிறுநீர் மஞ்சள், பிறகு கருஞ்சிவப்பாக மாறி படியும். சக்கரையில்லாவிட்டால் ஒன்றும் கலர் மாறாது.

Benedict's Test:- (பெனிடிக்ட்ஸ் ஸொல்யூஷன்):- சிறுநீர் ஒரு c. c. அளவு எடுத்துக்கொண்டு அதே அளவு இந்த ஸொல்யூஷனை சேர்த்து காய்ச்சவும். சக்கரை இருந்தால் மஞ்சள் அல்லது கருஞ்சிவப்பாக மாறும்.

Haine's Test:- (ஹெயின் பரீக்ஷை) அரை அவுன்ஸ் டிஸ்டில்ட் வாட்டரில் (நீராவியை குளிரவைத்த சுத்தமான தண்ணீர்) 30 கிரெயின் மயில் துத்தத்தைக் கரைத்து அரை அவுன்ஸ் கிளசரின் கலக்கவும், பிறகு 5 அவுன்ஸ் பொட்டாஷ் திரவம் கலக்கவும். இதிலிருந்து ஒரு டிராம் அளவு சோதனைக் குழாயில் காய்ச்சி. 8–10 சொட்டு சிறுநீரை மெதுவாகச் சேர்க்கவும். உடனே மஞ்சளாக மாறும்.

சிகிச்சை:-

Diabetes Insipidus:-

ஸில்லா:- இராப்பகல் அதிகம் பிரிந்துகொண்டிருந்தால்.

ஆஸிட் பாஸ்:- இரவில் அதிகம், அதிக அசதி.

முரக்ஸ்:- ஆஸிட் பாஸுக்குப் பிறகு,

யூரேனியம்:- சிறந்த மருந்து.

Diabetes Mellitus (மதுமேகம்):-

ஆஸிட் பாஸ்:- அடிக்கடி நீர் பிரிதல், உடம்பு இளைப்பு; அசதி, இடுப்புப் பக்கம் வலி. நரம்புத் தளர்ச்சி. தினம் 4 வேளை 1 x போடன்சியில் கொடுக்கவும்.

யூரேனியம்:- அஜீரணம், குன்மம்.

அர்ஜ் மெட்:- கால் வீக்கம்.

சைஜிஜியம்:: இடுப்பிலிருந்து மேல் பக்கம் அரிப்பு.

ஜிம்னெமா:- ரொம்ப சிறந்த மருந்து. கண்ணை மூடிக்கொண்டு கொடுக்கலாம்.

சிபலாண்ட்ரா:- உடம்பில் சதா எரிச்சல், வாயு வலிகள்.

கடைசியில் சொல்லப்பட்ட மூன்று மருந்துகளும் மிக சிலாக்கியமானவை.

டயபின் என்ற இன்ஜெக்ஷன் மிக உயர்ந்தது, நடு நடுவே பயோ ப்ளக்ஸ் முதலிய இன்ஜெக்ஷன் உபயோகப்படுத்தவேண்டும்,

ஆகாரம்:- சக்கரைச் சத்து சரியானபடி சீரணமாகாததினால் ஏற்படும் வியாதி. ஆதலால் இந்த நோயாளி சக்கரை சத்து அதிகமுள்ள பதார்த்தங்களை நீக்கவேண்டும். அதிக சத்துள்ள பதார்த்தங்களை சாப்பிடவேண்டும்.

முட்டை, பால், மீன், கொழுப்புள்ள மாமிசம், கோகோ, கீரை வகைகள், வெண்ணெய் முதலானவைகளை உட்கொள்ளவேண்டும். இவைகளில் ஏதாவது அஜீரணம் உண்டாக்கினால் அதை மட்டுப்படுத்தவேண்டும். மலச்சிக்கல் உண்டாகாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். வெள்ளை மாவு ரொட்டியைவிட கருப்பு ரொட்டி சிலாக்கியம். வாதாம் பருப்பில் செய்யப்பட்ட பிஸ்கோத்து உட்கொள்ளலாம். அல்லது வாதாம் பருப்பை பாலில் அரைத்து தினம் உட்கொள்ளலாம்.

இவர்களுக்கு ஏற்படும் அதிக தாகத்திற்கு நிறைய தண்ணீர் கொடுப்பதவசியம். எவ்வளவுக் கெவ்வளவு தண்ணீர் குடிக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு சரீரத்திலிருந்து சர்க்கரைச்சத்து வெளிப்பட்டுவிடும். அசதி குறையும். சுத்த பசும் பால் அடிக்கடி சாப்பிடுவது மிகவும் நல்லது.

அரிசி, உருளைக்கிழங்கு, பழங்கள் முதலியன உதவாது. கோதுமை, பச்சைக் காய்கறிகள், கொட்டைகள் முதலியன மிதமாய் உபயோகப் படுத்தவேண்டும்.

அடிக்கடி வாரம் ஒரு முறை அல்லது பக்ஷத்தில் ஒரு முறையாவது பட்டினி கிடக்கவேண்டும். டீ, காபி, சூப் முதலியனமட்டும் சாப்பிடலாம்.

இம்மாதிரி செய்து வந்தால் நம் முறையில் பூர்ணமாகவே சொஸ்தம் செய்துவிடலாம்.

கடைசியில் சொன்ன மூன்று மருந்துகளையும் 1x முதல் 6x வரையில் டிஞ்சராகவே தினம் 4 வேளை—5 சொட்டு ஜலத்தில் கலந்து சாப்பிட வேண்டும். 2–3 மாதம் சாப்பிட பூர்ண குணம் காணும்.

லாக் டிப்ளோரேடம் ஒரு சிறந்த ஔஷதம. இது வெண்ணெய் எடுத்த பசும்பால். இதையே நோயாளிக்கு தினம் 6–8 பாட்டில் வெண்ணை எடுத்த பசும்பாலை மட்டிலும் உணவாகக் கொடுத்து வந்தால் பூர்ண குணமேற்படும். இந்த உணவு சாப்பிடும்போது வேறெந்த பதார்த்தமும் உட்கொள்ள கூடாது. 6 வாரமாவது இம்மாதிரி உட்கொண்ட பிறகு கொஞ்சம் கொஞ்சமாக சூப் முதலிய மாமிச

பதார்த்தங்கள்; பிஸ்கட்டுகள், ரொட்டி, முதலியன வரிசைக்கிரமமாக சேர்த்துக்கொள்ளலாம்.

(20) Rickets.—ரிக்கெட்ஸ்.

சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் ஒரு ஆகாரக் கோளாறு. அன்னம் சரியானபடி ரத்தத்துடன் கலக்காததால் எலும்புகள் உருமாறி, உடம்பு இளைத்து, வளர்ச்சி குறைந்து, உருவத்தில் பல மாறுதல்களுடன் இருக்கும்.

நல்ல நெருக்கடியான நகரங்களில் ஏழைகளைத் தாக்கும்; பற்றாத ஆகாரம், போதாத சூரிய வெளிச்சம், சுகாதாரமில்லாத இடம், போதாக் குறைக்கு தேகாப்பியாசம் இல்லாமை. இதற்கு முக்கிய காரணம் போதாத ஆகாரமில்லை; ஆனால் சரியான ஆகாரமில்லாதுதான். ஆகாரத்தில் கொழுப்புச் சத்துக்குறைவுதான் வைடமின் Aயும்; வைடமின் Xம்தான் குறைந்துவிடுகிறது. குழந்தைகளுக்கு புட்டியில் அடைத்த ஆகாரத்தையே கொடுப்பதாலும், அல்லது அதிக நாள் நீடித்து தாய்ப்பாலே சாப்பிடுவதாலும், அல்லது வியாதியுடைய தாயினால் பாலூட்டப்படுவதாலும் இவ்வியாதி ஏற்படுகிறது. இது பரம்பரையாக வருவதில்லை.

பெரும் எலும்புகளும், மார்க்கூட்டு எலும்புகளும். மண்டை எலும்பும் அதிகமாக தாக்கப்படுகின்றன.

(1) சரியானபடி சுண்ணாம்புச் சத்து (Calcium) ஜீரணிக்கப்படாததால், அளவு குறைந்துவிடுகிறது.

(2) கார்டிலேஜ்கள் தடிக்கின்றன. கோணல்

மாகி, மிருதுவாக ஆகின்றன. எலும்பின் வளர்ச்சி தடைப்பட்டு ஸ்பாஞ்போல் ஆகிவிடுகிறது. எலும்பை மூடும் தோல் தடிக்கிறது; எலும்பு மிருதுவாக ஆகிவிடுகிறது.

(3) மண்டையில் தட்டையான எலும்புகள் தடிக்கின்றன; உச்சிக்குழிகள் மூடாமலே வெகு நாட்கள் நீடிக்கின்றன. மூளை வளருவதால் ஆக்சிபிடல் எலும்பு மெலிந்து விரலால் அமுக்கினால் பார்ச்மெண்ட் மாதிரி அமுங்கும். நெற்றி அகண்டு மேல் மண்டை தட்டையாயிருக்கும். எலும்புகள் கூடினால் கூடின இடம் நன்றாக வெளிப்பட்டுத்தெரியும்.

(4) மண்ணீரல் (Spleen) பெருத்து, கல்லீரலும் கூட (Liver) பெருக்கும். நிணநீர் கோளங்கள் பெருக்கும். சால் மாதிரி இருக்கும்.

(5) தசைகள் சிறியனவாயும், துவண்டும் இருக்கும்.

ரத்தச் சோகையுமிருக்கலாம்.

குறிகள்:- திடீரென்று பல் முளைக்கும் சமயம் குழந்தை நடப்பதற்கு முந்தியே தாக்கும். அஜீரணம் முன்னாடியே ஏற்படும்.

முதன் முதலில் உடம்பில் ஒரு வலி; குழந்தையை அசைத்து நகர்த்தினால் கத்தும்; சுரம் சிறிது (100°—101-5°F) வரைக்கும்; இரவில் தூக்கமின்மை; போர்வையை உதறித்தள்ளிவிடும். குளிர் காலத்திலும்கூட; இரவில் தலைப்பக்கம் ஏராளமான வியர்வை; மனோவளர்ச்சியும் தடைப்பட்டிருக்கும்; சில சமயம் உடம்பு ஊதியிருக்கும்; தோல் வெளுத்து, குடல் சரியானபடி வேலை செய்யாது. மலம் நாற்றம் வீசும். பசியோ அபாரம்;

ஏற்கனவே நடக்க ஆரம்பித்த குழந்தையானால் நடை தடைப்பட்டு அப்படியே அசந்து உட்கார்ந்து விடும்.

சீக்கிரத்தில் எலும்பின் நுனி பெருக்கும்; கார்டிலேஜுடன் கூடும் இடத்தில் மார்க்கூட்டெலும்புகள் தடிக்கும்; ஆனால் அதிகப்படியாக மணிக்கட்டுகள், கணுக்கால் முதலிய மூட்டுகள் பாதிக்கப்படுவன; எலும்புகள் மிருதுவாகி, பெருத்தே இருக்கும்.

கோழிக்கூட்டு மார்பு சகஜம். இடுப்பெலும்புகள் கோணலாகிவிட்டால் பெண்களுக்கு பின்னால் பிள்ளை பெறுவது கஷ்டமாகிவிடும். முதுகெலும்பும் முன் வளைந்து அல்லது சாய்ந்துவிடலாம். மண்டை பெருத்து, நெற்றி அகண்டு, உயர்ந்து, முன்னேக்கி. வயிறு சூனன் வயிறு ஆகி, கால்களும் வளைந்து விடலாம்.

நுரையீரல் வியாதிகள், வலிப்புகள், தொண்டை வாதம், எலும்பு வளைந்து முறிதல் முதலியன சகஜமான கோளாறுகள்.

கர்ப்ப காலத்தில் தாயார் ஒழுங்கானபடி புஷ்டியான ஆகாரம் சாப்பிட்டு வந்தால் இவ்வியாதி வராமல் தடுக்கலாம்; அடிக்கடி ஏற்படும் கர்ப்பம், கர்ப்பமாயிருக்கும்போது தாய்ப்பாலூட்டுதல் முதலியன காரணங்கள்.

சிகிச்சைக்கு முக்கியமானது புஷ்டியான, சீரணமாகக்கூடிய ஆகாரம் நல்ல பசும்பால், பார்லி தண்ணீர். மாமிச சூப்பு, மோர், வெண்ணெ முதலியன. சரியானபடி சீரணமாகிறதாவென்று கவனித்து ஆகாரம் கொடுக்கவேண்டும்; ஸ்டார்ச் சம்

பந்தமான ஆகாரத்தையே குறைக்கவேண்டும். கொஞ்சம் வயதான குழந்தைகளாயிருந்தால் முட்டை சேர்க்கலாம். பச்சைக் காய்கறிகள், முதலியன சேர்க்கவும்.

நல்ல காற்றோட்டம்; சூரிய வெளிச்சம்; சுத்தமான சுற்றுப்புறம் முதலியன உதவும். கால்கள் கோணலாயிருந்தால் சிம்புகள் கட்டிவிட்டு நடக்கச் செய்யவேண்டும். தினம் குளிப்பாட்டி, ஸ்வீட் ஆயில் அல்லது ஷார்க் ஆயில் போட்டு மாலிஷ் செய்யவேண்டும்.

ஆரம்பத்தில் சிகிச்சையை கவனித்து செய்ய வேண்டும்.

கால்பாஸ்:- இது ஒரு முக்கியமான மருந்து. சரீரம் பெருத்து, மிருதுவான தசைகள்.

கால்-கார்ப்— கொழுத்த குழந்தைகள். ஊளச் சதை; தலைப்பக்கம் ஒரே வியர்வை; புளிச்ச நாற்றமுள்ள வியர்வை; அடிக்கடி இரவில் கிரீச்சென்று சத்தம் போடுதல்.

சிலிசியா-: ஒல்லியாக, காலிலும் தலையிலும் வியர்வை.

ஆர்ஸனிக்:- மெல்லிய குழந்தைகள் அகோரப் பசி.

காலோட்ராபிஸ்:- ரொம்ப மெலிந்த குழந்தைகள் இதை 3x போடன்சியில் தினம் ஒரு முறை.

பாசில்லினம்:- குடும்பத்தில் ஏதாவது ஆஸ்த்மா க்ஷயம் இருந்திருந்தால் பாக்கி எல்லா மருந்துடனும் வாரத்திற்கு ஒரு தடவை 10 M போடன்சியில் கொடுக்கவும்.

தூஜா:- அம்மை அடிக்கடி வைத்திருந்தால்.

பாஸ்பரஸ்:- பார்ப்பதற்கு அழகாகவும், ஒல்லியாகவும் இருக்கும்.

ஸல்பர்:- கரப்பான், முதலியன இருந்தால்.

ஆஸிட். பாஸ்:- பேதி, எலும்புக்குள் வலி, அசதி.

கால்பாஸ், இன்ஜெக்ஷன் வாரம் இரு முறை கொடுக்கவும்.

(21) பெரி-பெரி—Beri-Beri.

மஹோதரம், உணர்ச்சி நரம்புகள் அசைவு நரம்புகள் இவைகளின் வாதம், நரம்பு வலிகள் முதலியவைகளோடுகூடின ஒரு பரவும் நோய்.

இது பெரும்பாலும் ஆகாரத்தில் வைடமின் குறைவால் ஏற்படும் வியாதி. பெரும்பாலும் தீட்டின அரிசி தின்பவருக்கே ஏற்படக்கூடியது. சில சமயம் தீட்டின உமியுடைய சத்தை கொடுத்தாலே இவ்வியாதி சௌர்யமாகிறது உண்டு. ஆனாலும் கப்பலில் செல்வோருக்கும்கூட வருவதுண்டு.

இந்த வைட்டமின் கொதிக்கும் சூட்டுக்குமேல் சுடவைத்தால் கெட்டுப்போய்விடுகிறது.

ஆகவே புட்டிகளில் அடைத்த ஆகாரங்கள் சாப்பிடுவதனுல் இந்த வைடமின் கிடைப்பதில்லை. ஜப்பான், மலேயா தீவு, பர்மா, பிரேஸில் முதலிய இடங்களிலும் ஏற்படுகிறது. அதிக நெருக்கடி அதிக உஷ்ணம், அதிக நைப்பு முதலியவைகள் காரணங்களாகும். 15—25 வயதுடைய ஆண்களுக்கு இது சகஜம். பெண்களுக்கும் வருவதுண்டு.

குறிகள்:- கால்களில் வலி, பலஹீனம் ஆரம்பத்தில் ஜலதோஷம், உணர்ச்சிகள் சரியாயிருக்காது. படபடப்பு, மூச்சு திணறல் இவைகள் அடிக்கடி வந்து போகலாம்.

இரண்டு முக்கிய விதங்கள் உண்டு.

(1) வாதத்துடன்கூடியது — பலஹீனம், கால்களில் வலி, உடம்பு இளைப்பு, முழங்கால் குலுக்குக் குறைவு, சுவாதீனம் அற்றுப்போகும். உணர்ச்சியும் குறையும்; முழு மரமரப்பு ஏற்படலாம். ஹிருதயமும் சற்றே வீங்கலாம்.

(2) உடம்பு வீக்கத்துடன்கூடியது:- இளைப்பு அதிகம் இருக்காது. சுவாதீனமும் இருக்கும். வலியும் குறைவு. உடம்பு முழுவதும் ஊதிவிடும். மார்பு, வயிறு எல்லாம் வீங்கிவிடும். ஹிருதயப் படபடப்பு, நீரில் உப்பு சத்து இருக்காது.

ரொம்ப கடுமையாகவும் சில கேஸ்கள் ஹிருதயம் அதிகமாக தாக்கப்பட்டு ஒரே நாளில் மரணம் ஏற்படலாம்.

இதில் சாவு நோயின் தன்மையைப் பொறுத்தது.

சிகிச்சை:- தீட்டாத அரிசி முக்கிய ஆகாரமாக வேண்டும். ரெஸ்டு, வைடமின் B. கொடுக்கவேண்டும். தீட்டப்பட்டால் அரிசியின் பாஸ்பரஸ் சத்து குறைவதால் பாஸ்பரஸ் சத்துள்ள டானிக்குகள் கொடுக்கவேண்டும். ஹிருதயத்தையும் ஜாக்கிரதையாக பாதுகாக்கவேண்டும்.

நரம்புகளை சொஸ்தம் பண்ணுவது முக்கியமானதால் கீழ்கண்டவை கொடுக்கவேண்டும்.

1. ஆர்சனிக்:- மரமரப்பு, வலி, இரத்த சோகை, உடம்பு வீக்கம். இது முக்கியமான மருந்து.

2. ஆர்ஸ் அயோட்:- ஹிருதயம் அதிகமாக தாக்கப்பட்டால் ஆர்சனிக்குக்கு பதிலாக.

3. பாஸ்பரஸ்:- பார்ஸ வாயு, கை கால் சிம்புதல், வாயு தொந்திரவு.

4. ஜெல்ஷமியம்:- கால்கள் மாத்திரம் சிம்பினால்.

5. லாசெஸிஸ்:- ஹிருதயம் தாக்கப்பட்டிருந்தால்.

6. ஸெபியா:- உடம்பு முழுவதும் வீக்கம், வியர்வையுடன் ஜுரம்.

இஞ்ச்:. பயோப்ளக்ஸ், தினம் 1 அல்லது 2 நாளைக்கு ஒருதரம் கொடுக்கவேண்டும்..

(22) SCURVY—ஸ்கர்வி

இதுவும் ஒரு ஆகார சம்பந்தமான கோளாறு. ஈரல்கள் வீங்கி பஞ்சுமாதிரி ஆகி இரத்தம் கசியும். ரத்த சோகை ஏற்படும், தோல் சில இடங்களில் வெளுக்கும். அந்த இடங்கள் தொடுவதற்கு சாதாரண சதையைவிட கல்லு மாதிரி இருக்கும்.

அசுத்தமான சுற்றுப்புறம்-போதாத ஆகாரம் முதலியவைகளே காரணம். வைடமின் குறைச்சலினாலேயே இவைகள் அதிகரிக்கும். வைடமின் .C இதற்கு முக்கியம்.

குறிகள்:- மெல்ல மெல்ல அதிகரிக்கும். உடம்பு சற்று வெளுக்கும். உடம்பு பலஹீனப்பட்டு மூச்சு

சிரமம், உடம்பிலும், மனதிலும் அசதி, உடம்பு முழுவதும் வலி. ஈரல்கள் மிருதுவாகி வீங்கி, கொஞ்சம் அமுக்கினாலும் ரத்தம் வெளிப்படும். உடம்பில் அநேக இடங்களில் மயிர்க்காம்புகளைச் சுற்றி, கை, கால்களில் திடீரென ரத்தம் கசிந்து நின்றதுபோலிருக்கும். மூக்கிலிருந்தும் ரத்தம் பெருகலாம். வியாதி முற்ற முற்ற பற்களும் உதிரலாம். ஹிருதயம் நிதானமில்லாமல் துடிக்கும். சில கேஸ்களில் ஒருவிதமான அந்திக்காமாலை ஏற்படலாம். ஆனால் இது கண் வியாதியல்ல. கண்ணின் ரெடினா என்னும் பாகத்தின் பலஹீனமே.

சிகிச்சை:—

1. சுற்றுப்புறங்கள் மிக சுத்தமாக வைக்கப்படவேண்டும்.

2. ஆகாரம் நல்ல சத்துள்ளதாகவும், நல்ல சூப், பால், வெண்ணை, பச்சைக் காய்கறிகள் முதலியன. உருளைக்கிழங்கு சிறந்தது. தினம் இரண்டு அல்லது மூன்று எலுமிச்சம் பழம் அல்லது ஆரஞ்சு சாப்பிடவேண்டும். நல்ல பழங்களும் சாப்பிடவேண்டும். பொதுவாக புளிப்பு சாமான் அவசியம் தேவை.

(23) Pur Pura.—பர்பூரா.

தோலுக்கு அடியில் ரத்தம் கசிந்து புள்ளிகள் மாதிரி தென்படும்; அமுக்கினால் மறையாது. சைஸ் ஸாம் சிறியதாக இருக்கும். இது மியூகஸ் சதையிலிருந்து ரத்தம் கசிவது உண்டு. இது கொஞ்சம் கடுமை.

இது ஒரு வியாதி அல்ல. ஆனால் ஒரு குறியே. வாயு வியாதிகள், சூலப்பிடிப்புகள், இவைகளில்

இக்குறி ஏற்படலாம். அசதி, மயக்கம், வயிற்றில் பிசையும் வலி இவைகள் புள்ளிகள் தெரிவதற்கு சில வாரங்கள் முந்தியே ஏற்படும். பசி சரியாய் இல்லாமல், நாக்கும் மஞ்சளாகி, முகம்உப்பி, வெளுத்து கண் இமைகளுக்கு அடியிலும் ஒப்புசம் தென்படும். முதலில் கால்களில் புள்ளிகள் தெரிந்து பிறகு துடை, கைகள் முதலியவைகளில் காணும். ரொம்ப பலஹீனமும் மனத்தளர்ச்சியும் இருக்கும். முதலில் புள்ளிகள் நல்லசிகப்பாகவும் பிறகு கருஞ் சிகப்பாகவும் மறையும் சமயத்தில் மஞ்சளாகவும் மாறி மறையும். இவைகள் சிராய்த்த இடம் மாதிரி தென்படும்.

நாடி பலஹீனமாகவும் வயிறு, மார்பு, இடுப்பு முதலியவைகளில் வலியும் இருக்கும். மலச்சிக்கல், படபடப்பு, அடிக்கடி மயக்கம் இவைகள் கடுமையான குறிகள். சில சமயம் இந்த ரத்தக் கசிவு, ஈரல் அல்லது குடல், மூளை, நுரைஈரல் இவைகளில் ஏற்பட்டால் ஆபத்துதான்.

சிகிச்சை:- ஆர்னிகா, சிராய்த்தமாதிரி வலி, பாஸ்பரஸ் ரத்தக் கசிவு, அகோனைட் ஜுரம், வாயுவலிகள் முதலியன. பெர்க்சூடு அல்லது குளிர் இவைகளினால் பாதிக்கப்படும். வலிகள் இரவுகளில் அதிகமாகும். வாய்நாற்றம்.

ரஸ்வென்:- உடம்பில் வலியினால் படுக்கையில் அமைதியின்மை.

ஆஸிட் சல்ப்:- உடம்பு அதிக பலஹீனம்.

லாச்செசிஸ், க்ரோடாலெஸ், ஆஸிட்பாஸ், ஹாமமெலிஸ் முதலியன ரத்தம் கெடும் கேசுகளுக்கு.

இஞ்ச்:- ஸ்கார்பின், கால்பாஸ், முதலியன.

(24) Pellagra பெல்லக்ரா.

இதுவும் வைடமன் சத்து, அமீனோ ஆஸிட் குறைவினால் ஏற்படுவது. ஜீரணக்கோளாறுகள் பார்சவாயு, சித்தபேதம் முதலியன ஏற்பட்டுவிடலாம். தாரித்திரியம்தான் முக்கியமான காரணம். பலஹீனம், முள்ளந்தண்டில் வலி, ஜீர்ணக்கம்மி, தூக்கமின்மை முதலியன. ஒவ்வொரு தளிர்காலத்திலும் மூடப்படாத பாகங்களில் ரொம்ப அரிப்புடன் கூடிய தோல் வியாதி. தோல் வறண்டு, கறுப்பாகி, தடிக்கும். தோலுக்கு அடியில் சீழும் கட்டலாம், இரண்டு வாரம் கழித்து தோல் உரித்துவிடலாம். கொஞ்ச காலத்திற்கு பிறகு தலைவலி, முதுகு வலி, வலிப்புகள், பைத்தியம். உடம்பு அதிக இளைப்பு, பக்ஷவாதம் கடைசியில் மரணம்.

சிகிச்சை:— ஆர்ஸ், சல்ப், ரூம், ரஸ்டாக்ஸ், மெர்குறி, லாதிரெஸ், செபியா, அர்ஜினைட், லாச்செசிஸ், முதலியன.

(25) காலரா—CHOLERA.

ரொம்ப அதிகமாக விவரிக்கவேண்டியிராத ஒரு வியாதி. பெரும்பாலும் பெருவாரியாகத் தாக்கும் இயல்புடையது. அதிக வாந்தி, பேதி, வயிற்றில் வலி, கால்களில் கண்டை ஏறுதல், நீர் பிரியாமலிருத்தல், ஒரே சோகம் முதலிய குறிகளையுடைத்தாயிருக்கும்.

கங்கை நதியின் முகத்துவாரம்தான் இதற்கு இருப்பிடமென்று சொல்லுவார்கள். ஆனால் உலகம் முழுவதும் தோன்றும் வியாதி இது.

ஹோமியோபதியின் முக்கியமான புகழ் இவ் வியாதியை சௌகரியம் செய்வதினால்தான் ஏற்பட்

டது. ஹோமியோபதியின் கொடி இன்று தலை தூக்கிப்பறப்பதின் காரணம் காலராதான்.

இது தொத்துவது மலம், கிருமிகலந்த தண்ணீர் காய்கறிகள் முதலானவைகளே. மார்கழி மாதம் இதற்கு உகந்தது காமா மாதிரி உருவமுள்ள காலராக்கிருமிதான் இதற்குக் காரணம். ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு சுலபமாகப் பரவும்.

ஆரம்பத்தில் பேதி ஏற்படும், தலைவலி, தலை சுற்றல், குமட்டல், இது 1–3 நாள்வரை நீடிக்கும்; பிறகு கடும்பேதியும் கால்களில் கெண்டையும் ஏற்படும். மலம் முதலில் கெட்டியாகவும், பின்பு அரிசிக்கஞ்சிமாதிரியாகிவிடும். இது ஆல்கலியாக இருக்கும். இதில் ஆல்புமன், மியூசின், உப்பு முதலியன இருக்கும். அடியில் தங்கும் பாகத்தில் ஏராளமான கிருமிகள் காணப்படும். சில சமயம் ரத்தம்கூட இருக்கலாம். ஓயாத வாந்தி, வயிற்றில் எரிச்சல், உடம்பு முழுவதும் சில்லிட்டு, மூச்சு, நாக்கு சில்லிட்டு, உடல் முழுவதும் சில்லென்ற வியர்வை, அடங்காத தாகம், நாடி துரிதமாயும், பலவீனமாயும், அமைதியின்மை, சிறுநீர் பிரியாமலும், ஆல்புமன் சத்து நிறைந்தும், உடல் நீலம் பூத்தும், முகம் பார்க்க குழிவிழுந்து விகாரமாயும், மரணம் சம்பவிக்கும்.

அகோனைட்:- ஆரம்பத்தில் 1x அல்லது மதர் டிஞ்சராக அடிக்கடி கொடுக்கவும். சிறந்த மருந்து.

காம்பர்:- பேதி, சில்லுப்பு-வயிற்றில் வலி-ஆரம்பத்தில் இரண்டு மூன்று டோசுகளில் சௌகரியப்படுத்திவிடும்.

ஆர்சனிக்:- நீர்பிரியாமல், ரொம்ப களைப்பு, தாக வரட்சி.

விராட்ரம்:- அதிக வாந்தியும், பேதியும்-கெண்டை.

ஜூரிஸ்:- அதிக வாந்தி, பேதி.

குப்ரம்:- வயிற்றிலிருந்து ஆரம்பிக்கும் வலி, நீர்பிரியாமல்.

பெல்லடோனு:- டெரிபிந்த், காந்தரிஸ், நீர் பிரியாமலிருந்தால் கொடுக்கலாம்.

ஐபிகாக்:- ஓயாத குமட்டலுடன் வாந்தி.

கார்போவெஜி:- உடம்பு முழுவதும் நீலம் பூத்து, உடல் சில்லிட்டு, கடைசி நேரம்.

இன்ஜெ:- ஸலைன் இன்ஜெக்ஷன் அதிகப் பேதியாயிருந்தால் கொடுக்கலாம்.

ரிவைவோ, ஆர்சனிக், வெராட்ரம், முதலியன சிறந்தவை. தினம் 4 வேளையாவது கொடுக்கவும்.

நோயாளியை அசையாமல் படுக்கவைத்து, ஆரம்பத்திலிருந்தே உற்சாகப்படுத்திவரவேண்டும்.

சில்லுப்பிற்கு வெந்நீர் உடைய பாட்டில் களையோ, தவிட்டை வறுத்தோ ஒத்தடம் ஓயாமல் கொடுக்கவேண்டும். ஐஸ், நிறையக்கொடுக்கலாம்; ஆகாரம் கெட்டியாக கொடுக்கக்கூடாது; சூடான பாலை எனிமா மாதிரி அடிக்கடி கொடுக்கலாம்; பார்லி தண்ணீர், புனர்பாக தண்ணீர் முதலியன அடிக்கடி கொடுக்கவேண்டும். மருந்துகளை 15–30 நிமிஷத்திற்கொருதரம் கொடுத்துவரவேண்டும்.

ஊரில் காலரா இருந்ததென்றால் யாவரும் டிஞ்சர் காம்பரை தினம் ஒரு தடவையாவது சாப்பிடவேண்டும்.

நோயாளியை தனிப்படுத்தி, மலம், ஜலம் முதலியவற்றைப் புதைத்துவிடவேண்டும். நோயாளியைச் சுற்றிலும், வீட்டைச்சுற்றிலும் பிளீச்சிங் பவுடர்,

பெனையில் முதலியவைகளை தெளிக்கவேண்டும். சாக்கடை, தண்ணீர் தேக்கங்கள் முதலியவற்றை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

(26) டிப்தீரியா—DIPTHERIA.

கடுமையான தொண்டைக்குறிகளுடைய ஒட்டு வாரொட்டி வியாதி. டிப்தீரியாப்பூச்சியினால் உண்டாவது. மோவாய்கட்டையின் அடிப்பக்கத்து கிளாண்டுகள் வீங்கி, கழுத்து விறைப்பாய் இருக்கும். உள் தொண்டையின் இருபக்கத்திலும் வெள்ளைப்பொட்டுகள் தென்படும்; இந்தப்புள்ளிகள் ஒன்றுசேரும்; தோல்மாதிரி கலருடன், தொண்டை முழுவதும் ஒரு தோல் படர்ந்துவிடும். இதை உரித்துவிடலாம். ஆனல் மறுபடியும் படரும்; ரத்தச்சோகையும், பலஹீனமும் உடனே ஏற்பட்டு விடும்; 103° F சுரம் ஏறியிருக்கும். சில சமயம் நார்மலுக்கு கீழேயிருக்கலாம். மயக்கம் ஏற்பட்டு, வியாதி முற்ற முற்ற, விழுங்கவும், மூச்சுவிடவும் சிரமம் அதிகரிக்கும்; சில நாளைக்குள் மரணம் உண்டாகும்.

மூச்சில் துர்நாற்றம்; ரொம்பத்துரிதமான அல்லது தளர்ந்த நாடி, ஓயாத வாந்தி, ஜன்னி, மூக்கிலிருந்து ரத்தம் வடிதல், மூச்சுத்திணறல், நீர் பிரியாமலிருத்தல், அதிக சுரம் இவைகள் கொடூரமான குறிகளாகும். சந்தேகமிருந்தால் தொண்டையிலிருந்து பஞ்சினல் துடைத்து பூதக்கண்ணாடியின் வழியாகப்பார்க்க இவ்வியாதியின் கிருமிகள் தென்படும். சாதாரணமாக இவ்வியாதியை கண்டுபிடிப்பது சிரமமன்று.

வியாதி சௌகரியமான பின்பும், காம்பிளிகேஷன் ஏற்படலாம்; தொண்டையில் கடுமையான

புண்; ஹிருதயம் பலவீனப்படுதல்; ரத்தக்குழாய்கள் அடைபடுதல்; நிமோனியா; மூத்திரக்காய் வீங்குதல்; காதில் சீழ்; ஸெப்டிக் வியாதி முதலியன.

வாதம் பீடிக்கலாம்; விழுங்க சிரமம்; மூக்கின் வழியாக ஆகாரம் வெளிப்பட்டுவிடுதல்; விழி ஓரக்கண்ணாகிவிடுதல்; முதலியன.

பெல்ல:- முதல் இரண்டு நாட்களுக்குள் சௌகரியப்படுத்தும்.

டிப்தெரினம்:- அடிக்கடி.

மெர். ஸைனேட்:— துர்நாற்றம்; ரொம்ப களைப்பு; சரியான மருந்து.

எக்கினேஷியா:- பத்து சொட்டு வீதம் அடிக்கடி.

ஆஸிட் மூர்:- தொண்டை வெண்கருப்பு படர்ந்த தோல்; துர்நாற்றம் 3x போடன்சி. இதை கொப்பளிக்கவும்; உபயோகிக்கவும்.

ஏபிஸ்:- தொண்டை நீர்நிறைந்ததுபோல் வீக்கத்துடன்.

அயிலாந்தஸ்:- விழுங்கும்போது தாளாத வலி, கழுத்து வீங்கி, புண் அதிகம்.

கேலி-பெர்மாங்:- கழுத்துபுற கிளாண்டுகள் அதிகம் வீங்கி; விழுங்கமுடியாமல், மூக்கிலிருந்து தண்ணீர்போல் நீர் சுரந்துகொண்டு-சிறந்த மருந்து.

பாப்டீஷியா, லாசெசிஸ், ஆர்ஸனிக் அம்மோனியம் கார்ப், முதலியன உபயோகப்படும்.

இன்டு:- மெர்-சைனைட்.

கொப்பளிக்க:- ஆஸிட் மூர், பொட்டாசியம், பெர்மாங்; கிளசரின், அஸிடிக் ஆஸிட், எக்கினேசியா, பைடலோகா, ஆஸிட் கார்பாலிக் இவைகளை நன்றாக ஜலத்தில்கரைத்து உபயோகிக்க. அடிக்கடி பாலுடன் கலந்த முட்டை, பார்லி, அரிசிக்கஞ்சி, முதலியன கொடுக்கவேண்டும். குழந்தைகளுக்கு குடல் வழியாக ஆகாரம் செலுத்தவேண்டும்.

(27) கக்குவான்—Hooping Cough.

பெரும்பாலும் குழந்தைப்பருவத்தில் தாக்கும் இருமல் வியாதி. ஓயாத இருமலும், கடைசியில் 'ஹூப்' என்ற சத்தத்துடன் இருமி வாந்தியுடனும் கூடின இருமல்.

ஆரம்பத்தில் சிறு ஜலதோஷத்துடன் 7—10 நாள்கழித்து இருமல் அதிகமாகும். ஒவ்வொரு தடவையும் இருமல் 10–15 நிமிஷம் ஓயாமலிருமி, கடைசியில் ஹூப் என்ற சத்தத்துடன் ஓயும். மூச்சுவிட மிகவும் சிரமப்பட்டு மூச்சுஉள்ளிழுக்கும்போது ஏற்படும் இந்தச் சத்தம். இருமும்போது முகம் சிவந்து வீங்கி, கண் பிதுங்கி, கண்ணீர்வழியும்; உடனே மூச்சுநின்றுவிடும்போலத் தோன்றும். கோழையாக வாந்தியெடுத்தபின்னர் குழந்தை சாதாரணமாகத் தென்படும். கோழை கம்பிபோலிருக்கும். இதுதான் சாதாரண இருமலுக்கும் இதற்கும் வித்தியாசம். ரொம்ப ரொம்ப ஒட்டுவாரொட்டி. கிருமி சீக்கிரமாய் தொத்தும்.

காம்பிளிகேஷன்:— பெரிய அம்மை, சின்ன அம்மை, நிமோனியா, ஹிருதய வீக்கம் முதலியன சகஜம். வலிப்பு, இசிவு வருவது சாதாரணம்.

சாதாரணமாக இது 1½—3 மாதம், சிலசமயம் அதிகமாகவும் நீடிக்கும். நம் வைத்தியமுறையில் 10–15 நாளில் சொஸ்தமே செய்துவிடலாம்.

அகோனைட்:— ஆரம்பத்தில்.

பெல்லடோனா:— இரவில் அதிகம், தொண்டை ரணம் மாதிரி வலித்தல்; முகம் நல்ல சிகப்பு, நல்ல மருந்து.

டிராசிரா:- பலத்த கரகரப்புள்ள இருமல், ஒன்றிரண்டு டோஸே போதும்.

ஐபிகாக்:- அஜீரணம், வாந்தி, குமட்டல், தும்மல்.

குப்ரம்:- வலிப்பு, இசிவு,

காப்சிகம்:- இருமலுக்குப்பின் அழுதல்.

சீனா:- வயிற்றில் நாக்குப்பூச்சியுடன், மூக்கில் அரிப்பு, பசி சரியாயில்லாமை.

ஆம்ப்ரா:- நாக்கில் சதா எச்சில் ஊறல், தடித்த கோழை.

விராட்ரம்:- பலவீனம், சில்லென்ற வியர்வை, கண் பிதுங்கி, முகம் நீலமாகி, இருமலின்போது சிறுநீரும், மலமும் வெளிப்பட்டுவிடும்.

ரூஸ்டிசியா:- இரத்தம் கலந்த கோழை. சிறந்த மருந்து.

கோராலியம்:- கம்பிபோன்ற கோழை, துப்பாக்கிக் குண்டுமாதிரி சத்தம்.

ஆண்ட் டார்ட்:- கோபத்தினால் அதிகமாகும், தொண்டையில் அதிகச்சளி.

ஸல்பர், கார்போவெஜ், பாஸ்பரஸ் நாப்தாலினம் முதலியன உதவும்.

இன்ஜ்:- ஹாமபின், டிராசிரா

அஜீரணப்படுத்தாத ஆகாரம் முக்கியம்.

28. ரண ஜன்னி—TETANUS.

முள்ளந்தண்டின் அசைவு ஸ்தானங்கள் கிருமி விஷத்தினால் தாக்கப்படுவதினால், தசைகள் இறுகி, விடுபட்டு, இறுகி ஏற்படும் வலிப்பு.

ரணத்தின் வழியாக மண்ணில் வளரும் கிருமி உட்செல்லுவதால் ஏற்படுவது.

வாயிறுகும், முகம் கோணலாகி, வாய் இழுத்துக்கொள்ளும். தசைகளில் வலி, இசிவு ஏற்பட்டுவிடும். மூச்சு சத்தத்துடன், விசிப்பதுபோலிருக்கும், உடம்பு வில்போல வளைந்து முன்பக்கம், அல்லது பின்பக்கம் வளையும் அல்லது கட்டைபோல் விறைக்கும். மரணம் பெரும்பாலும்.

ஆஸிட் ஹைட்ரோசயனிக்:- மதர் டிஞ்சர் இரண்டு சொட்டு அடிக்கடி.

ஹைபரிகம்:- நரம்புகளில் காயம், குத்து முதலியன ஏற்பட்டால்.

ஸ்டிரிக்னின்:- $\frac{1}{200}$ கிரெயின் அளவில் இன்ஜெக்ஷனாக தினம் 4 தடவை. அல்லது உள்ளுக்கு.

சிகூடா:- தலை ஒரு பக்கமாக சாய்ந்துவிடும். இசிவு வலிப்புகள்.

இன்ஜ்:- 'டிடானே' அடிக்கடி கொடுக்கவும்.

(23) பைத்திய நாய்க்கடி—RABIES.

பைத்தியம்பிடித்த நாய், பூனை,, நரி எது கடித்தாலும் ஏற்படும்.

கடித்தவுடன் புண்ணை உறிஞ்சவேண்டும். உறிஞ்சும்போது புண்ணின் நாலாபக்கத்தையும் அழுத்தி வாய்ப்பக்கம் செலுத்தவும். பிறகு மூடிவிடவும். ரொம்ப புண்ணாகக்கூடாது. பக்கத்துத் தோலை, எண்ணையால் தடவிவிடவும்.

குறிகள்:- பைத்திய மிருகத்தின் எச்சல் நீரிலிருக்கும் விஷமே காரணம். கடித்த கொஞ்சநாள் ஒன்றுமே தெரியாது. பிறகு புண்ணைச்சுற்றி அரிப்பு கிளம்பும். புண் சிவந்து வீங்கும். மயக்கம், குளிர், ஏதோ உடம்பு அசௌகரியமாகத் தோன்றும். தொண்டை, மார்பு இவைகளின் தசைகளில் இசிவு காணும். விழுங்குவதுகூட வலிப்பு உண்டாக்கும். ஆகவே தண்ணீரை குடிப்பதற்குக்கூட பயம். உடம்பில் காற்றுப்பட்டால்கூட வலிப்புகள். மனதில் பயம், தண்ணீர்த்தாகம், எச்சல் நீர் கெட்டியாக இருக்கும். வலிப்புகள் வரவர அதிகரித்து கடைசியில் மரணம்.

லிஸ்ஸின்:- தினம் 4 வேளை.
பெல்ல:- இரவும் பகலும் 6 மாதகாலம்.
ஸ்டிராமோனியம்:- ஜலத்தைக்கண்டாலே பயம்.
லாசெசிஸ்:- தொண்டையை தொடமுடியாது.
காந்தரிஸ்:- கோரமான வலிப்புகள்,

அகால் டிஞ்சர், பேகஸ் டிஞ்சர், ஸ்குடல் லோரியா, முதலியன.

இன்ஜு:- லிஸ்ஸின் ஸ்டிரோமோனியம் மருந்துகளையும், இன்ஜெக்ஷன்களையும் வலிப்பு ஏற்பட்ட பின் அடிக்கடி கொடுக்கவேண்டும்.

(30) இன்ப்ளூயன்ஸா—INFLUENZA.

ஜலதோஷம் மாதிரி ஆரம்பித்து தலைவலி; ஜுரம், உடம்புவலி, அதிக பலவீனத்துடன் கடின சுரம்.

ஒட்டுவாரொட்டி; இது அனேக விதமாகத் தென்படும். உடம்பெல்லாம் அதிகவலி, ஜலதோஷம், பசியந்தித்து, தொண்டை வீங்கி, மனதிலும் அசதி, உடம்பிலும் பலவீனம், எலும்பிலெல்லாம் வலி, முதுகுவலி, தலைவலி.

மருந்து.

பாப்டீஷியா:- தலைகனம், முகம் கருஞ்சிவப்பு, உடம்புவலி, சிறந்த மருந்து.

ஆர்ஸனிக்:- வராமல் நடுக்கவும், வந்த பிறகும், தாகம், பயம், உடம்பு தள்ளாமை.

யூபடோரியம்:- எலும்பிற்குள் நல்லவலி. முதுகில் குளிர்.

கிளானுயின்:- நல்ல தலைவலி, தெரிக்கும்.

பெல்ல:- வரட்டிருமல், தலைவலி, வலதுபக்கத்து முகம், தலை நரம்புவலிகள்.

பிரியோனியா:- அசைந்தால் அதிகம்.

ஸாங்கு:- ஜலதோஷம், இருமல், வலது தோள் பட்டை, மார்புவலி.

சிமிசிபியூகா:- கண்களில்வலி, தலை, பிடரி, முதுகு, தசைகளில்வலி, இரவில் தூக்கமின்மை.

ரஸ்டாக்ஸ்:- பைடலோகா, ஜெல்சமியம், நேட் ஸல்ப், முதலியன அவசியமான மருந்துகள்.

இன்ஜ்:- இன்ப்ளூயன்சினம், டைபோஸின்.

(31) எரிசிபிலஸ்—ERYSIPELAS.

ஸ்டெரப்டோகாக்கஸ் பயோஜினிஸ் கிருமியினால் ஏற்படும் தோல் வீக்கம், ரணம்.

நடுக்கல், தலைவலி, குமட்டல், வாந்தி, மலச் சிக்கல், அதிக சுரம், தோல் சிவந்து, வீங்கி; புண்ணைச் சுற்றிலும் ஆரம்பிக்கும் குத்துவலி, சிவப்பு மெள்ள பரவி, நிற்கும். தோல் சீழ் பிடிக்கலாம். 102°—104°F டிகிரி சுரம். ஜன்னி கண்டு கெடுதலாகலாம். முகம் தொண்டை, எந்த இடத்திலும் ஏற்படும். 2–3 வாரங்களில் சௌகரியமாகிவிடும்.

பெல்ல:- வழவழப்பான, சிவந்த தோல்.

ரஸ்டாக்ஸ்:- வீக்கம் தண்ணீர் நிரம்பின மாதிரி, அமைதியின்மை.

ஏபிஸ்:- அதிக வீக்கம்.

காந்தரிஸ்:- எரிச்சல், கொப்பளங்கள்.

ஆர்னிகா:- அடிபட்டதினால்.

எக்கினேசியா:- சீழ் பிடிப்பதற்கு முந்தி.

விராட்ரம்விரைட்:- மூளை தாக்கப்பட்டு நோய்ப் பட்ட பாகம் சீழ்பிடிக்க ஆரம்பித்தால்.

ஆர்சனிக்:- அழுகல் காணலாம்; பழைய புண் போக புதிது கிளம்பக்கிளம்ப; ரொம்ப அசதி.

க்ரோடாலஸ், லாசெஸிஸ், முதலியனவும் உப யோகமாகும்.

மேலுக்கு ரஸ் டிஞ்சர், ஆர்னிகா டிஞ்சர், எக்கினேஷியா டிஞ்சர், விராட். வி. டிஞ்சர், முத லியன தடவவும். பிறகு சின்க் அல்லது ஸ்டார்ச் பவுடர் தூவவும்.

ஆகாரம் சுரம்மாதிரி.

இன்ஜெ:- பயோ ஆம்னின், ஆர்சனிக்.

(32) ப்ளேக்—PLAGUE.

ரத்தத்திலும் தசைகளிலும் ஒருவிதக் கிருமி இருப்பதனுல் (Bacillus Pestis) நிமோனியா, கிளாண்டு கட்டிகள் முதலியவைகளோடுகூடின ஒரு தொத்து வியாதி.

கடும் சுரம், வாந்தி, தலைவலி, கண்களில் நீர், உடம்புவலி, நடைதளர்ந்து இத்துடன் ஆரம்பிக் கும். காது மந்தமாகிவிடும்; பேச்சு தடிக்கும்; புரியாமலிருக்கும்; நாக்கு வீங்கி, வரண்டிருக்கும். ஜன்னி ஏற்பட்டு, டைபாயிட்மாதிரி ஆகி சின்னளில் முடிவு ஏற்படலாம்.

முக்கால்வாசி கேசுகளில் 2–5 நாட்களுக்குள் பூபோ என்ற கிளாண்டு கட்டிகளேற்படும். துடைச் சந்து, அக்குள் அல்லது சில சமயம் தாடைக்கடியி லும் வீக்கம் கட்டலாம்.

சௌகரியமாகக்கூடிய கேசுகளில் 6—10 நாட் களில் சுரம் படிந்துவிடும். கட்டி மாத்திரம் பழுத்து உடைந்து ஆறிவரும்.

'நிமோனிக் பிளேக்' என்ற விதத்தில் பூபோக் கட்டிகள் இருக்காது. கடுஞ்சுரம், கடுமையான அசதி, இருமல், ரத்தங்கலந்த கோழைச்சளி-நிமோ னியா ஏற்பட்டு மரணம் சகஜம்.

ரொம்பக்கடுமையான விதங்களும் ரொம்ப சாதுவான கேசுகளும் உண்டு.

சிகிச்சை:- கிருமியைக் கண்டுபிடித்ததும் நோயாளியை தனிப்படுத்தவேண்டும். நோயாளி யின் மலஜலங்களை புதைத்து அவரின் வஸ்திரங்களை கிருமிநாசினிகளால் சுத்தம் செய்யவேண்டும். இறந்தவர்களை எரித்துவிடவேண்டும்.

பூபோக்களில் மெர்குரி க்ளோரைட் இன்ஜெக் ஷன் செலுத்தவும்; பழுத்தால் ஆபிரேஷன் செய்து சுத்தப்படுத்தவேண்டும்.

பெஸ்டினம்:- அடிக்கடி கொடுக்க.

பெல்ல:- ஆரம்பத்தில், ஜன்னி.

லாசெஸிஸ்:- மஞ்சள் கண், உடம்பெல்லாம் வலி.

நாஜூர்:- இன்ஜெக்ஷனைக் கொடுப்பதுதான் நல்லது.

நிமோனியாவுடன் கூடின கேசுகளில் பாப்டீஷியா; ஆர்சனிகம் முதலியன.

நாஜூர்:- இன்ஜெக்ஷன்.

33. ரத்த சீதபேதி—Dysentery.

சீதம், ரத்தம் கலந்த மலம், வயிற்றுக்கடுப்பு முதலியவைகளோடு கூடின குடல் வியாதி.

இரண்டு விதம் உண்டு.

பாஸில்லரி விதம்:- அடிக்கடி மலம் பிரியவேண்டும், வலி, ஆசனத்தில் கல் கட்டினதுபோல் கனம். மலம் வெகு குறைவு, வியாதி முற்றினால் ரத்தங் கலந்த சளிமாதிரி இருக்கும் — மலம் இருக்காது. முக்க முக்க மலம் போனமாதிரி இருக்காது, கடுமையான கேசுகளில் 100 தடவைகூட ஒரு நாளைக்கு போகவேண்டியிருக்கும். சுரம், வரண்ட நாக்கு, தாகம் முதலியனவும் இருக்கும். குடலில் புண் ஏற்பட்டுவிட்டால் நாற்றமுடைய சதைகள் வெளி வரும்–குடல் பிய்க்கப்பட்டு சதை வெளிப்படும். ரத்தம், சீழ் வெளிப்படும்.

நாள்பட்ட கேசுகளில் மலம் சீதம் ரத்தம் கலந்து இருக்கும். கொதித்த ஜவ்வரிசிமாதிரி அல்லது தவளை முட்டைகள் மாதிரி காணப்படும்.

அமீபிக் விதம்:- மேற்சொன்னமாதிரியே இருக்கும். பூதக்கண்ணாடி பரிசோதனையால்தான் கண்டு பிடிக்கலாம்.

ஆகவே இரண்டிற்கும் சிகிச்சை ஒரு மாதிரி தான்.

அகோனைட்:- ஆரம்பத்தில்

மெர்கார்
கோலோசிந்த் }:- இவை இரண்டையும் பெரும் பாலும் மாற்றி மாற்றி கொடுக்க குணமுண்டாகும்.

நக்ஸ்வாமி:-மலத்திற்குப் பிறகு கடுப்பு குறைதல்.

ஐபிகாக்:- குமட்டல், வயிற்றுவலி முதலியன— பிரியோனியாவுடன் மாற்றிக்கொடுக்க நல்லது.

பிரியோனியா:- அசைவினால் அதிகரிக்கும் வலி, அதிகத் தாக வரட்சி.

ரஸ்டாக்ஸ்:- தானாகவே பிரியும் மலம்–இரவில் அதிகம்.

ஸல்பர்:- பிடிபடாத கேசுகள், அசதி, மூலக் கடுப்பு.

அலோஸ்:- ஆசனம் வெளித்தள்ளுதல், தொப்புளைச் சுற்றி வலி, அழுக்கினால் அதிகரிக்கும், மலம் பிரியும்போது மயக்கம், தாளாத கடுப்பு, அடிக்கடி வெட்டும் வலி.

பெல்ல, நைட் ஆஸிட், கால்காரியா. முதலியன கொடுக்கவேண்டியதுமுண்டு.

இன்ஜ்:- மெர்–கார், பெயின்கில் முதலியன. பூர்ண ஓய்வு கொடுக்கவேண்டும்; வயிற்றுவலிக்கு சூடான ஒத்தடம் கொடுக்கவும்; குடல் அதிகமாகப்

புண்ணைகாவிட்டால் கருவக்கோந்து தண்ணீர், யாளிவிதைத்தண்ணீர்; முதலியன குடல் வழியாக செலுத்தலாம்.

சுரம்போலவே ஆகாரம் முதலியன எல்லாம் குளிர்ந்ததாக இருக்கவேண்டும்.

34) இளம்பிள்ளை வாதம்.—Acute Poliomyelitis.

4 வயதிற்குள் ஏற்படுவது. கால்களில் வலி, சுரம், வாந்தி, வலிப்புகள், முதலியன ஆரம்பிக்கும். சிலசமயம் இவையொன்றுமில்லாமலேயே குழந்தை காலையில் எழுந்தவுடன் வாதத்துடனிருக்கும். கால் கைகள், எல்லாவற்றையும், அல்லது சிலவற்றை மாத்திரம் தாக்கும். தசைகள் க்ஷீணித்து சுவாதீன மற்றுவிடும்.

இதன் சிகிச்சை 138-ம் பாடம் பாரிசவாயுவிற் சொல்லியபடியேதான்.

(35) மால்டாசுரம்—MALTA FEVER.

ஒரு கிருமியினால் விட்டுவிட்டு கணக்கில்லாமல் அடிக்கும் சுரம், ஸ்ப்ளீன் (மண்ணீரல்) வீக்கத்துடன்கூடினது. ஒருவாரம் தலைவலி, தூக்கமின்மை. பசியின்மை, சிலசமயம் வாந்தி. மலபந்தம், கொட்டும் வியர்வை, ஈரல் வீங்கிவிடும். இது எல்லாம் குறைய வியர்வைமாத்திரம் விடாது. மலச்சிக்கலும் இருக்கும்; சுரம் கடுமையாக இருக்கும். மூட்டுகள் வீங்கிவிடும். இம்மாதிரி அடிக்கடி வருஷக்கணக்கில் சீக்கு இருக்கும்.

ஆட்டுப்பால் வழியாக இவ்வியாதி பரவுவதால் அதை காய்ச்சி, வடிகட்டி சாப்பிடுவது அவசியம்.

பாப்டீஷியா, ஆர்ஸனிக் அயோட், காலோட் ராபிஸ் முதலியன.

டைபோசின் இன்ஜெக்ஷன்.

(36.) மூளை சுரம்—Meningitis.

மூளையைச் சுற்றியிருக்கும் தோலையும், மூளைப் பெட்டியின் தோலையும் பீடிக்கும் சுரம்.

அடி, காது வியாதிகள் முதலியன காரணமாகலாம். இதில் டி. பி சம்பந்தப்பட்டது ஒன்று (Tubercular Meningitis), பெருவாரியாகத் தாக்கும், இயல்புடையது. (Epidemic Cerebro-Spinal Meningitis) இன்னும் முள்ளந்தண்டு தாக்கப்படுவது, மூளையே வீங்குவது முதலான விதங்கள் உண்டு. எல்லாவற்றிற்கும் சிகிச்சை ஒருமாதிரிதான்.

இவை ரொம்பக் கடுமையான வியாதிகள்.

சுரம் தாக்குவதற்கு முந்தின குறிகள்.

திடீரென்று வலிப்புகள், கடும்தலைவலி, வாந்தி. திடீரென கத்துதல், குழந்தைகளுக்கு அம்மை, கக்குவான் முதலியவற்றிற்குப் பிறகு ஏற்படலாம். மலச்சிக்கல், நாடி துரிதமாகி, பிறகு மெதுவாகி, தசைகள் துடித்து, கண் பாப்பா சுருங்கி – 102–103 டிகிரியுடன் கூடியிருக்கும்.

பிறகு கடும் ஜன்னி, வயிறு உள்சுருங்கி, மலபந்தம் கடுமையாகி, கழுத்து விறைத்து தலை பின் பக்கம் சாய்ந்துவிடும். கண்கள் ஓரக்கண்ணாகி பாப்பா விரியும். பிறகு ஒரே நினைவின்மை, வலிப்புகள், சரீர உஷ்ணம் குறையும். சாவிற்கு

மூந்தி சுரம் கடுமையாகி செத்தபிறகும் கொஞ்ச நேரம் சுரமிருக்கும். எல்லாவிதத்திலும் இம்மாதிரி குறிகள் சாதாரணம். எதற்கும் வித்தியாசம் தெரிய முள்ளந்தண்டுநீரைக் குத்திஎடுத்து பரிசோதித்துப் பார்க்கவேண்டும்.

ஜெல்சமியம்:- ஆரம்பத்தில்.

பெல்ல:- கடும் ஜன்னி.

ஹைபரசயாமஸ்:- வலிப்புகள் கடுமை.

ஹெல்லபோரஸ்:- தலையிலும் கழுத்திலும் கடும் வலி, திடீரென்று கூச்சல், ஒரு காலும் ஒரு கையும் வலிப்பு.

சிகூடா:- கடுமையான இழுப்பும் வலிப்பும்.

ஹைபரிகம்:- ஒரு பக்ஷமாக வலிப்பு, முள்ளந் தண்டில் அல்லது மூளையில் அடிபட்டதினால்

ஏபிஸ், பாசில்லினம், சின்க்; ஆஸிட் ஆக்சாலிக் (கால்கள் விறைத்து வாதம்) மெனிங் கோகாக்கின் முதலியன உதவும்.

பிழைப்பது அபூர்வமான வியாதி.

எல்லா மருந்துகளையும் முள்ளந்தண்டின் வழியாக செலுத்துவதுதான் உகந்த முறை. அல்லது நரம்புவழியாகச் செலுத்தலாம்.

(37) காலா-அசார்—KALA-AZAR.

சுரம், சோகை, இளைப்பு, மண்ணீரல் வீக்கம் முதலியவைகளோடுகூடிய நாள்பட்ட சுரம். ஐரோப்பியர்களை அதிகமாக பாதிப்பதில்லை. இந்தியா, சைனா, அரேபியா, ஆப்ரிக்கா, சிலோன் இவ்விடங்களிலதிகம்.

கல்லீரலும் சில சமயம் வீங்கும். மண்ணீரல் (Spleen) வீக்கம் அவசியம். தசைகள்கூட இளைக்கும். நாள்பட்ட சுரம் ஈரல் சுரந்து ரத்தம் கசியும். ரத்த சோகை.

ஆண்டிம்க்ரூட்:- சிறந்தது.

கலாயிடல் ஆன்டிமனி ஆக்சைட் கிளசரினில் கலந்து இன்டிராமஸ்குலார் இன்ஜெக்ஷன் செய்வது நல்லது.

ஆர்சனிக், சைனா, பாஸ்பரஸ் முதலியன உதவும்.

(38) YELLOW FEVER—மஞ்சள் சுரம்.

உஷ்ணப்பிரதேசத்து சுரம். ஒருவிதக்கிருமியினால் உண்டாக்கப்படுவது.

ஒருவித கொசுவினால் (Stegomyia) கடிக்கப்பட்டு கிருமிகள் உட்செல்லுகின்றன. உடம்புவலி, தலைவலியுடன் 104 டிகிரி சுரம் அடிக்கும். முகம் வீங்கி சிவந்து, மஞ்சள் கலந்திருக்கும். நாக்கு கூர்மையாகி, நுனி சிவந்திருக்கும். நீரில் உப்புச்சத்து இருக்கும். நாடி துரிதமாகவும். சுரத்திற்குத் தக்கபடியிராமல் குறைந்திருக்கும்; சுரம் அதிகமாயிருக்கும்போதும் வரவர நாடி மெதுவாகிக் கொண்டேவரும். 4—5 நாளில் படியும்; இல்லாவிட்டால் 5-வது நாளில்.

கருப்பு வாந்தி,—ரத்தம் முறிந்து கருப்பாக காப்பிப்பொடிமாதிரி வாந்தியாகும்.

2. மூக்கிலிருந்து ரத்தம், குடலிலிருந்து ரத்தம், பெரும்பாடு, முதலியன.

3. ரொம்ப அல்புமன் நிறைந்த சிறுநீர். அளவு மிகக்குறைவு. 24 மணி நேரம்வரை தங்கியிருந்தால் மரணம் நிச்சயம்.

4. மஞ்சட்காமாலை, மண்ணீரல் வீங்காது (Spleen)

சிகிச்சை:- கொசுவை ஒழிக்கவேண்டும்; இது ரொம்பக்கடுமையான வியாதி. தேறுவது சிரமம்.

காம்பர்:- குளிர் நடுக்கல் சுரம்.

அகோனைட்:- வாந்தி, மஞ்சட்காமாலை.

பிரியோ:- அசைவதினால் வலி அதிகம்.

பெல்ல:- ஜன்னி, தலைவலி.

பிறகு காட்பியம்—கரும் வாந்தி, வயிற்றில் வலி, எரிச்சல், குமட்டல், உதட்டில்பட்டாலும் வாந்தி.

ஆர்சனிக்:- டைபாயிட் நிலைமை.

க்ரோடாலஸ்:- மஞ்சள் காமாலை, எல்லாம் மஞ்சள், ரத்தக்கசிவு.

மெர்குரி:- ஆர்சனிக்குடன் மாற்றிக்கொடுக்கவும்.

எல்லா சுரத்திற்கும்போல ஆகாரம் முதலின.

க்ரோடாலஸ்:- இன்ஜெக்ஷன் ஒரு நாளைக்கு 4 தடவையாவது.

(39) SLEEPING SICKNESS.—நித்திரை வியாதி.

Glossina என்ற ஈயினால் கொட்டப்பட்டு அதின் வழியாக ஒருவித கிருமி சென்று இந்த நாட்பட்ட சுரம், தூக்கத்தை உண்டாக்குகிறது.

கணக்கு சரியில்லாத சுரம், இளைப்பு, பலவீனம், நிணநீர்க்கோளங்களின் வீக்கம், தலைவலி, நடக்க சிரமம், பேச்சு உளருதல், கைகள் நடுக்கம், மயக்கம், தூக்கம், ஒரே தூக்கம் இதன் நடுவே வேறு கோளாறினால் மரணம். மரணம் பெரும்பாலும் சகஜம்.

ஆர்சனிக்:- நக்ஸ்மாஸ்சடா, ஆண்டிம்டார்ட், முதலியன உபயோகப்படலாம்.

(40) மலேரியா—MALARIA.

Ague Intermittent Fever.

விட்டுவிட்டு வரும், முறை சுரம். ஆரம்பத்தில் குளிர் நடுக்கல், பிறகு வியர்வை இம்மூன்றும் கூடினது.

தினம்வரும் விதம், இரண்டு நாளைக்கு ஒரு தரம், மூன்று நாளைக்கு ஒருதரம் விடாமலே அடித்துக் கொண்டும் சுரத்தில் வித்தியாசம் நிரம்ப உடையது. வெகுசீக்கிரம் கொல்லக்கூடிய கடுமையானது; ஸ்பிளீன் வீங்கி, ரத்தச்சோகையுடன்கூடின நாள்பட்டவிதம் இவைகளெல்லாம் விதங்கள்.

பலவிதங்களிலும் மலேரியாப்பூச்சி வேறுபடுகிறது. ஒவ்வொரு விதத்திற்கும் ஒவ்வொருவிதமான கிருமி. இக்கிருமிகள் ரத்தத்தின் சிகப்பு வடிகைகளைச் சாப்பிட்டுக்கொண்டு பிறகு ரத்த ஓட்டத்தில் கலந்துவிடுகின்றன. மனித சரீரத்தில் புகுவதற்குமுன் கொசுக்களின் வயிற்றில் வளருகின்றன. கொசு மனிதன் இரத்தத்தை உறிஞ்சுவதால் தாக்கப்படுகிறது. பிறகு இதே கிருமிகளை கொசு மனிதனுடம்பில் செலுத்துகிறது.

குறிகள்:- திடீரென்றும் வரலாம் அல்லது மெள்ள மெள்ளவும் அதிகரிக்கலாம். முதல் ஸ்டேஜ் உடம்பு அசதி, பலவீனம், குளிர், **நடுக்கல்** இவைகளுடன் ஆரம்பிக்கும். முள்ளந்தண்டில் குளிர்ந்த தண்ணீர் கொட்டுவதுபோன்ற உணர்ச்சி, பிறகு ஒரே நடுக்கல். முகம் வெளுத்து, உடம்பு சிலிர்த்துவிடும். நாடி துரிதமாகி, மூச்சு வேகப்பட்டு, நாக்கு வெளுப்புதட்டி, சிறுநீர் குறைந்தும் காணும். கொஞ்சநேரம் கழித்து, ½ மணியிலிருந்து 4 மணிக்குள், இரண்டாவது ஸ்டேஜான **சுரம்** ஸ்டேஜ் வந்துவிடும். உடம்பு முழுவதும் உஷ்ணப்பட்டு, தாகவரட்சை; வாந்தி, நாடி துரிதமாகி, துடிக்கும் தலைவலி, அமைதியின்மை; மூத்திரம் சிவந்துமிருக்கும். பிறகு 2, 3, அல்லது 6 மணி நேரம் அல்லது 12 மணி நேரம் கழித்து மூன்றாவது ஸ்டேஜான **வியர்வை** ஏற்படுகிறது. நோயாளிக்கும் சற்று ஆச்வாசமேற்படுகிறது; தாகம் குறைந்து, நாடி வேகம் தளர்ந்து, பசியும் திரும்புகிறது. வியர்வை முகம், நெற்றியிலிருந்து ஆரம்பித்து உடம்பு பூராவும் கொட்டும்.

சாதாரணமாக 6 மணி நேரம்தான் ஒரு முறை அடிக்கும்.

அடிக்கடி இம்மாதிரி சுரம் ஏற்படுவதினால் ஈரல் கெட்டு; குடல் சக்தியிழந்து மூத்திரக்காய்களும் தாக்கப்படுவதுண்டு. உடம்பு வெளுத்து, கை கால்கள் சிம்பி, வயிறு பெருத்து மலச்சிக்கலும் ஏற்படும், மண்ணீரல் (Spleen) மட்டிலும் அதிகமாக பாதிக்கப்படுவதுண்டு. சிலசமயம் அனேக பவுண்டுகள் பெருத்துவிடும். வெளிப்பக்கத்திலும் பெருத்திருப்பது தெரியும்.

சில சமயம் சுரம் விடாமலே குறைந்தும் அதிகரித்தும் அடிப்பதுண்டு. மஞ்சட்காமாலைகூட ஏற்படலாம். மூளை தாக்கப்படும் மலேரியாவாயிருந்தால், மயக்கம், பிரக்ஞையிழந்து ஜன்னியில் பேத்துவர். 12—24 மணிவரை இந்தமாதிரியிருந்து மரணமடைவர்; அல்லது நினைவு ஏற்பட்டு இரண்டாந்தரம் தாக்கப்பட்டு மரணமடையலாம்.

கொசுக்கள் மலேரியாவை உண்டாக்குவதால் அவைகளை தொலைப்பது அவசியமான காரியம்.

பெரும்பாலும் இவ்வியாதி சீதோஷ்ணஸ்திதி மாறுதலாலே ஏற்படுவது.

ஜுரம் வராமல் தடுக்க சைனு—சல்ப் 1x என்ற மருந்தை 5 கிரெயின் அளவு காலையிலும் மாலையிலும் சாப்பிடவேண்டும். இல்லாவிட்டால் ஆர்ஸ 3x சாப்பிடவேண்டும்.

இந்த சுரத்திற்குமட்டும் சுரம் நின்றுவிட்ட பிறகு மருந்து கொடுப்பதுதான் நல்லது. சுரத்தின் போது எக்காரணத்தைக்கொண்டும் நேட்ரம்மூர் கொடுக்கக்கூடாது.

சைனு:- முறையாக வருவது மூன்று ஸ்டேஜும் நன்றாகத்தெரியும்; கொட்டும் வியர்வை.

சைனு—சல்ப்:- கடியாரம் மாதிரி டயத்திற்கு வரும் சுரம். முள்ளந்தண்டு முழுவதும் வலி.

ஐபிகாக்:- குமட்டல், வாந்தி, மூச்சுத்திணறல்.

ஜெல்சமியம்:- தினம் வரும் சுரம், குளிர் முதுகுப் புறம் ஏறி இறங்குவதுமாதிரி.

ஆர்சனிக்:- ஏதாவது ஒரு ஸ்டேஜ் குறைச்சல்.

செட்ரான்:-ஒரே குளிர் நடுக்கல், சுரம், வியர்வை இருக்காது—கடியாரம் மாதிரி மத்தியானம் 3-மணிக்கு வலிப்புகள்.

ஸல்பர்:- டிஞ்சராக கொடுக்கவும். இதன் குறிகள் உடம்பெல்லாம் எரிச்சல்.

யூபடோ:- எலும்பிற்குள்ளெல்லாம் தாங்கமுடியாத வலி, ஜலம் சாப்பிடச் சாப்பிட வாந்தி.

பிரியோனியா:- அசைந்தால் அதிகரிக்கும் தலைவலி முதலியன—வாந்தியுடன் சுரம்.

ரஸ்டாக்ஸ்:- ஜலத்தில் நனைந்ததினால் உதடுகளில் முத்துப்போன்ற சிறு அரிப்புடன் கூடிய கொப்பளம்.

நேட்ம்யூர்:- 11 மணி காலையில் கடும் தலைவலியுடன் வரும் சுரம்.

நேட் ஸல்ப்:- ஈரத்திலிருப்பதால் ஏற்படும் சுரம். சிறந்த மருந்து.

நாள்பட்ட சுரங்களுக்கும், உடம்பு பலஹீனத்திற்கும் சைனு, நேட்ரம்மூர், ஆர்சனிக் முதலியன உதவும்,

பயோ ஆம்னின், மெபாக்ரீன் 6 முதலிய இன்ஜெக்ஷன்கள்.

பயோ பாஸ்பேட்ஸ் டானிக்குகள்.

(41.) ஆந்திராக்ஸ்—ANTHRAX.

இது மாடு, ஆடுகளுக்கு ஏற்பட்டு கசாப்புக் கடைகாரன் வழியாக தோலில் சம்பந்தப்பட்டு வருகிறது.

முகம், கை, கழுத்து முதலிய பாகங்களில் ஏற்படலாம். முதலில் ஒரு சிவந்த பரு மாதிரி ஏற்பட்டு சுற்றிலும் சிறு சிறு கொப்பளங்கள் ஏற்பட்டு, நடுவில் கருத்து சீழ் கோர்த்துக்கொண்டு பரவும். சுரம் கடுமையாகி, உடம்பு முழுவதும் ரத்தத்தில் விஷம் கலந்துவிடும்.

ஆபிரேஷன் செய்து கெட்ட பாகத்தை நீக்க வேண்டும்.

ஆந்திராசினம்:- ஒரே தாங்கமுடியாத எரிச்சல், துர்நாற்றம்.

லாசெசிஸ்:- கருநீலம் பூத்து இருக்கும் பாகம்.

பாப்டீஷியா:- உடம்பெல்லாம் அடித்துப்போட்ட மாதிரி வலி.

ஆந்திராசின்:- இன்ஜெக்ஷன்,

(42.) கிளாண்டர்ஸ்—GLANDERS.

குதிரைகளுக்கு ஏற்படும் வியாதி: மூக்கிலும், சில சமயம் தோலிற்கடியிலும் சிறு சிறு கட்டிகள்

மாதிரி ஏற்படும். இது மனிதனுக்கும் தொத்துவ துண்டு. இது பெரும்பாலும் குதிரைக்காரன் குதிரைகளோடுப் பழகும் ஆட்களுக்குத்தான் வரும்.

குறிகள்:- தாக்கப்பட்ட இடம் பொதுவாக கை, கால் வீங்கி, சிவந்து, நிண நீர்க்குழாய்களும் தாக்கப்பட்டு, சிவந்து தெரியும். நல்ல சுரம் ஏற்படும். ஒரு கொப்பளம் தாக்கப்பட்ட இடத்தில் கிளம்பும். முகம், மூக்கு தாக்கப்படலாம். தசைகளிலும், தோலிற்கடியிலும் சிரங்குகள் கிளம்பலாம். மூட்டுகள் சீழ் கோத்துக்கொள்ளும்; இரண்டு மூன்று வாரங்களுக்குள் சீழ் ரத்தத்துடன் கலந்து விஷ சுரம் கண்டு இறப்பர்.

நாள்பட்ட கேசுகளில் புண்மாத்திரம் கொதறி துர்க்கந்தமான சீழ் வடிந்துகொண்டிருக்கும். மூக்கும் புண்ணாகும். வருஷக் கணக்கில் இருந்து கொண்டு அக்யூட் விதமாக மாறி கொல்லும்.

ஹிப்போஜீனம்:- அடிக்கடி கொடுக்கவும்.

கேலிபைக்ரோம்:- நீண்ட கம்பிபோன்று மூக்கிலிருந்து வழியும்.

ஆரம்:- மிகவும் மன அசதி.

ஆர்சனிக்:- பயம், அமைதியின்மை.

லாசெசிஸ்:- டைபாயிட் மாதிரி.

காலோட்ராபிஸ்:- வாய், தோல் புண்ணாகிவிடும், வாயில் உமிழ்நீர் ஊறல்.

டைபோஸின் இன்ஜெக்ஷன்.

(43.) க்ஷயம்—T. B.

டியூபர்குலஸ் கிருமியினால் ஏற்படும் வியாதி. இதன் பெயர் தாக்கப்பட்ட பாகங்களில் சிறு சிறு உருண்டை கட்டிகள்மாதிரி தெரிவதால் ஏற்பட்டது.

வர வர அதிகரிக்கும் இவ்வியாதியைப்பற்றி நம் ஸ்பெஷல் 'டி. பி.' 'க்ஷயம்' என்ற புத்தகத்தை வாங்கிப் படிக்கவும்.

பாஸில்லினம், கால்கார்ப், காலோட்ராபிஸ், ஆர்சனிக், பாஸ்பரஸ், கேலி-கார்ப், லைகோபோடியம், அயோடம், ஆண்டி அயோடம், ஹெபர், ஸல்பர் டிராசிரா, ஸ்டானம், ஸ்பான்ஜியா, அகாலிபா, ஐபிகாக், பாப்டீஷியா, நைட்ரிக் ஆசிட், முதலியன முக்கியமான மருந்துகள்.

டி. பி, இன்ஜெக்ஷன் சிறந்தது.

(44.) குஷ்டம்—LEPROSY.

ஒரு நாள்பட்ட, தீராதென்று கருதப்படும் வியாதி. ஒருவிதக் கிருமியினால் ஏற்படுவது. உடம்பு முழுவதும் தோலில் சிறு சிறு தடிப்புகள், உருளைக் கட்டிகள், அல்லது நரம்பு கெட்டுவிடும். இந்த விதங்கள் ஆரம்பத்தில் மாறுபட்டு இருந்தபோதிலும் நாள்பட எல்லாம் கலந்துவிடும்.

குறி:- முதன்முதலில், உடம்பில் சிவந்து தடிப்பு ஏற்படும். தொட்டால் வலிக்கும். கலர் மாறி உருளைக் கட்டிகள் உண்டாகும். புண்ணாகி, வடு ஏற்படும். சில சமயம் ஆழ்ந்த புண்கள் ஏற்பட்டு, விரல்கள் குறையலாம். சில கேசுகளில் தடிப்பு

மாத்திரம் இருந்து ஸ்மரணை இல்லாமல் மரமரப்பு இருக்கும். உணர்ச்சியே இருக்காது. தோல் வெளுத்துவிடும். கண்ணிமை, மயிர்கள், புருவ மயிர்கள் உதிர்ந்துவிடலாம். நாசி தொண்டைச் சதைகள் கண் புண்ணாகி, நிமோனியா அல்லது தொண்டை வீக்கம் ஏற்பட்டு, மரணம் சம்பவிக்கும்.

பாசில்லினம், வாக்சினினம், மாலாண்டிரினம், தைராயிடின், ஹைட்ரோகானடல் டிஞ்சர், ஹீரா, பைரார, ஹோயாங்கன், காலோட்ராபீஸ், முதலிய மருந்துகளை அடிக்கடி கொடுத்துவரவேண்டும்.

அனகார்டியம், ஆரம், கிராபைடிஸ், ஆர்சனிக், ஆண்டிம்க்ருட், மெர்-அயோட், முதலியனவும் உபயோகமுள்ளவை

நீரடிமுத்து எண்ணை (சால்மூகரா ஆயில்) இன்ஜெக்ஷன் கொடுக்கவேண்டும்.

ஆரோஸால். லெப்ரடோன் இன்ஜெக்ஷன்கள் சிறந்தவை.

(45) சிபிலிஸ்—SYPHILIS.

ஸ்பைரோகீடா பாலிடா என்ற கிருமினால் ஏற்படும் வியாதி.

பெரும்பாலும் இது துர்நடத்தையினால் ஏற்படுவதே, இவ்வியாதியுடையவரோடு சிற்றின்ப சம்பந்தம் ஏற்பட்டால் இது தொத்தும்.

20–28 நாளைக்குப்பிறகு பெரும்பாலும் யோனி அல்லது லிங்கத்திலே ஒரு புண் ஏற்படும். குழி

விழுந்து ஓரங்களெல்லாம் உயர்ந்து, அடி கெட்டியாக இருந்து 2 மாதங்களில் சௌகரியமாகிவிடும். சிற்சில சமயங்களில் துடைப்பக்கத்து நிணநீர் கோளங்கள் வீங்கி நெறிகட்டிக்கொள்ளலாம்.

6 வாரம் அல்லது 3 மாதம் கழித்து சிறிது சுரம், ரத்தச்சோகை, தொண்டை கரகரப்பு 2 வருஷம் வரைக்கும் நீடிக்கலாம். தோல் வியாதிகள் கண் ஐரிஸ் தசை வியாதி, மூட்டுகளில் வாயு வலி முதலியனவும் ஏற்படலாம்.

இப்பவும் சரியானபடி சிகிச்சை செய்யப்படாவிடில் அநேக வியாதிகள் தோன்றலாம். உருளைக் கட்டிகள், ஈரல், விரை, மூளை இவைகளில் ஏற்பட்டுவிடலாம். இதுவே அதிகரித்து உடல்வற்றி மரணம் சம்பவிக்கும்.

சிலசமயம் தாய்க்கு ஏற்பட்டிருக்கும் இவ்வியாதி பிறக்கும் சிசுக்கும் தாக்குவதுண்டு. தோலில் கிரந்தி ஏற்பட்டுவிடும். அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கும். குழந்தை வயதானவன் மாதிரி களையிழந்து காணும்.

இவ்வியாதி வியாதியுடையவரின் எச்சல், உதடு, சிகரெட்டு, பீடி முதலியவையிலிருந்தும்கூட மற்றவருக்குத் தொத்தலாம்.

நரம்பு ஸ்தானங்களும் தாக்கப்பட்டு வாதமும் ஏற்படலாம்.

கிரானிக் கேசில் நரம்பு தாக்கப்பட்டே தீரும். லோகோமோடர் அடாக்சியா என்ற நரம்பு வியாதியும், பொது வாதமும் தொடரும்.

பேச்சு தட்டுத்தடுமாறியும், திக்கியும், ஆரம்பித்து முகத்தின் தசைகளும் நாக்கும் நடுக்கல், வலிப்பு முதலியவைகளுடனிருக்கும். எழுதுவதுகூட நடுங்கும். தசையின் சக்தி வரவரக்குறைந்து, பைத்தியமும் ஆகிவிடலாம்.

லோகோமோடர் அடாக்ஸி:-

ஓரக்கண், பாப்பா சுருங்கி வெளிச்சத்திற்கு விரியாது, சுருங்காது. மார்பிலும், வயிற்றிலும் வலிகளும் உடம்பிலும் வலியும் ஏற்படும். கம்பளியின்மேல் நடப்பது போலவும், ஊசி குத்துவது போலும் பல இடங்களில் ஏற்படும். வயிற்றுவலியும், வாந்தியும், சிறுநீர் தொந்திரவும் இருக்கும். தசைகள் சரியானபடி இணங்காமையால் நடப்பது சிரமப்படும். இதற்கு வைத்தியம் பொதுவாக பாரிச வாயுவிற்கு சொன்னபடியே.

ஆகாரத்தில் சாராயம், சுருட்டு முதலியன உதவாது.

லியூடிகம்:- அடிக்கடி.

ஆஸிட் நைட்:- ஏற்கனவே வீரம், பூரம் சாப்பிட்டிருந்தால், பாலுண்ணிகள், மேலுக்கும் போடலாம்.

நைட் ஆஸிட்:- 1x—·2 டிராம், டிஸ்டில்ட் வாட்டர் —8 அவுன்ஸ்.

மெர்குரி:- நாக்கில் எச்சல்நீர் அதிகம், இரவில் குடைச்சல் வலி.

மெர்-கார்:- புண் அதிகக் குழியாக.

தூஜா:- வெட்டை சம்பந்தத்துடன்.

ஸெபியா, கேலி-அயோட், மெஜீரியம், பைட-லோகா, காலோட்ராபிஸ், ஸ்டில்லின்ஜியா, மெர்-அயோட், ஆரம், ஆஸிட் பாஸ், லைகோபோடியம், ஆர்சனிக் முதலியன.

வீடிஸ் இன்ஜெக்ஷன்,

ஆரோசால் இன்ஜெக்ஷன்.

(46.) YAWS—யாஸ்.

ஒருவிதமான தோல் வியாதியுடன்கூடிய வியாதி.

சிபிலிஸ் வியாதிக் கிருமியை ஒத்ததாகயிருக்கும் ஒரு கிருமியினால் உண்டாவது. இது மிகவும் தொத்தக்கூடியது. ஸிபிலிஸ் மாதிரியே இருக்கும். புண், பிளவுபட்டிருக்கும் தோல் வழியாகத்தான் தொத்தும்.

உடம்பில் அசதி, சுரத்தினுடன் ஆரம்பித்து, தோலில் அரிப்புடன் கூடிய சின்னஞ்சிறு கொப்புளங்கள் புறப்படும். சீக்கிரமே பெருத்து நுனியில் சீழ் பிடிக்கும். மேலே சீழ் காய்ந்து பொருக்கு தட்டும். சில ரவுண்டாக தோலின்மேல் தென்படும். சிலது புண்ணாகி, சில வாரங்கள் கழித்து பொருக்கு விழுந்து ஆறிவிடும். இவைகளில் வலியே இருக்காது. இவ்வியாதி வருஷக்கணக்கில் நீடிக்கலாம். ஸிபிலிசுக்குச் செய்யும் 'வாசர்மேன்' டெஸ்ட் இதிலும் தென்படும்.

இதற்கு வைத்தியம் ஸிபிலிஸ் மாதிரியேதான்.

வீடிஸ். இன்ஜெக்ஷன்கள்.

(47.) கரளைக் கட்டிகள்—TUMORS.

பொதுவாக ஒருவிதமான காரணமுமில்லாமல் ஒருவித உபயோகமுமில்லாமல் ஏதாவது ஒரு இடத்தில் வீக்கம் காணுவதுதான் கரளைக்கட்டி. எல்லாவற்றிற்கும் வீக்கமிருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. உதாரணமாக ஸ்தனம் கான்சரால் தாக்கப்பட்டால் சாதாரண ஸ்தனத்தைவிட சுருங்கிவிடும்.

இதில் அநேக விதமிருந்தாலும் பொதுவாக இரண்டு பெரிய விதங்களாகப் பிரிக்கலாம். (1) சாதுவானது. (2) ஆபத்தானது.

சாதாரண கட்டி எவ்வளவு பெரியதாய் போயிருந்தாலும் தன்னைச் சுற்றியிருக்கும் தசைகளையோ பாகங்களையோ தாக்குவதில்லை. இக்கட்டிகளைச் சுற்றிலும் ஒரு பைமாதிரி இருப்பதுண்டு. இவைகள் பலவைகளாகச் சேர்ந்திருப்பதுதான் பழக்கம். இதை ஆபிரேஷன் செய்து நறுக்கிவிடுவதுதான் நல்ல சிகிச்சை.

ஆனால் ஆபத்தான கட்டிகளை (உதாரணம்—கான்சர், ஸார்கோமா, முதலியவை) நன்றாக நோண்டி எடுத்துவிட்டு உள்ளுக்கு தீவிரமான சிகிச்சை செய்யவேண்டும். இந்த ஆபத்தான கட்டிகளும் கூட வலியே இல்லாமல் வெகுகாலம் பெருத்துவரும். ரொம்ப ஆபத்தான முறையில் பரவின பிறகே நமக்கு இதன் இயற்கை புலனுவதுண்டு. ஆகவே வலியில்லாத கட்டிகளென்றாலே உடனே நன்றாகப் பரீக்ஷித்து மருந்து கொடுக்கவேண்டும்.

இவைகளில் உடம்பு வர வர இளைத்து பலவீனப்படும்.

10624

தார், பாரபின் இவைகளில் வேலை செய்பவர்களுக்கும், கரிஸ்டவ்களில் ஈடுபடுபவர்களுக்கும், எக்ஸ்ரே அதிகம் உபயோகப்படுத்துபவர்களுக்கும் கான்சர் அதிகமாக வருகிறதென்று தெரிகிறது. இது அனேக விதமுண்டு. சாதாரண கரளைக் கட்டியே கான்சராக மாறுவது வழக்கம்.

பரம்பரையாக ஏற்படுவதுதான் நியதி என்று சொல்வதற்கில்லை. ஆனல் வருவது சகஜம்.

முதுகெலும்புள்ள சகல பிராணிகளுக்கும் கான்சர் (புற்று) வருவது சாதாரணம். உலகம் முழுவதும் இது வியாபித்திருக்கிறது. சில ஜில்லாக்களில் அதிகம் பரவியிருப்பதற்குக் காரணம் அவர்களின் பழக்க வழக்கங்களேயாம் அதாவது அதிகமாக வெற்றிலை, புகையிலை போட்டுக்கொண்டு சதா வாயில் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு வாயில் புற்று ஏற்படுவது சகஜம்.

இதிலும் க்ஷயம் மாதிரியே ரொம்ப ஆரம்பத்திலேயே ஆரம்பித்தால்தான் சிகிச்சை செய்து சௌகரியப்படுத்த முடியும். ஆபிரேஷன் செய்வது பெரும்பாலும் அவசியமே.

இதற்கு ரொம்ப முக்கியமான மருந்துகளை மாத்திரம் கீழே தருகிறோம். நீடித்து வேலை செய்யக்கூடிய மருந்துகளையே கொடுக்கவேண்டும். சௌகரியம் பண்ணமுடியாத நிலைமையிலிருந்தாலும், நம் மருந்துகள் வியாதியின் துன்பத்தைக் குறைக்கும்.

ஹைட்ராஸ்டிஸ்:- மஞ்சளான உடம்பு, அசதி, பசியின்மை, மலச்சிக்கல், கர்ப்பப்பை, கிளாண்டுகள் தாக்கப்படும்.

LL:4:6
N149

பைடோலாகா:- கல்போன்ற கட்டிகள், ஸ்தனம் புற்று.

ஆர்சனிக்:- ரொம்பச் சிறந்த மருந்து; பல வீரியங்களில் நாள்பட கொடுத்துவர—ரொம்ப வலி, எரிச்சல், பலவீனமுள்ள கேசுகள் சௌகரியப்படும்.

கேலி ஆர்சனிக்:- இதைக் குறைந்த போடன்சியில் கொடுப்பது உத்தமம். ஆர்சனிக்கைவிட உபயோகமுள்ளது.

கோனியம்:- அடிபட்டதினால் ஏற்பட்ட ஸ்தனத்தின் புற்று.

கார்போ அனிமாலிஸ்:- திறந்த வாயுடைய புற்று. ரொம்ப பலவீனப்படுத்தும் வியர்வை.

கான்சுரோசில்:- இதை அடிக்கடி நடு நடுவே கொடுத்துவரவேண்டும்.

துஜா:- சாதாரண கேசுகளுக்கு – சாதாரண கரளைக்கட்டிகள். மேலுக்கும் துஜா டிஞ்சரைத் தடவலாம்.

ஆரம்:- எலும்புகள் தாக்கப்பட்டு இருந்தால்.

அகோனைட் டிஞ்சர்:- அபின்சத்து மார்பின் முதலிய இன்ஜெக்ஷன் கொடுத்தும் குறையாத வலியுடைய கேசுகளுக்கு வலியைக் குறைக்க இதை உபயோகப்படுத்துவது நல்லது. அரைச்சொட்டு டோசாக ஆரம்பித்து இரண்டு மூன்று சொட்டுகள் வரை கொடுக்கலாம்.

லேபிஸ் ஆல்பஸ்:- கர்ப்பப்பை புற்றிற்கு சிறந்தது.

ஏபிஸ்:- குத்தும் வலி, எரிச்சலுடன் கொட்டும் வலி.

நேட்ரம் ஸிலிகா
கேலி ஸிலிகா
சோடியம் காகோடிலேட் } :- இவைகளை சாப்பாட்டிற்குப் பிறகு.

1x போடன்சியில் சாப்பிட்டுவர. வர வர கட்டிகள் கரையும்.

கான்டுரங்கோ:- உதட்டு ஓரங்களில் வெடிப்புகள்.

பெல்லிஸ்:- அடிபட்டதினால் ஏற்பட்டது. பருக்கள்.

ஆஸ்டிரியஸ் ருபென்ஸ்:- மார்பில் சிறு கல் போன்ற கட்டிகள்.

பொதுவாக எல்லா மருந்துகளையும் இன்ஜெக்ஷனாக கொடுப்பதே இவ்வியாதிக்குச் சிறந்தது.

நன்றாக புண்ணாக ஆன பிறகு உள்ளுக்கு பூபோ (Bufo) பாப்டீஷியா, முதலியனவும் மேலுக்கு பாப்டீஷியா, ரூடா, போரிக் ஆசிட், ஹாமமலிஸ் ஹைட்ராஸ்டிஸ், கார்பாலிக் ஆசிட், ஆர்னிதோகாலம், ஸ்கரோபுலேரியா, லொபீலியா, ஸாங்குனேரியா முதலியவைகளைப் போட்டுக் கழுவவேண்டும்.

ரொம்பவலியும் எரிச்சலும் அதிகமாகயிருந்தால், யூபர்பியம் டிஞ்சர் உபயோகப்படுத்தவேண்டும். எப்படியிருந்தாலும் இவ்வியாதி வருஷக் கணக்கில் வைத்தியம் செய்யவேண்டியதே.

(48) யானைக்கால்—Filariasis Elephantiasis.

இது உஷ்ணப்பிரதேசங்களில் உண்டாகும் வியாதி.

நிணநீர்க்கோளங்கள், குழாய்கள், இவைகளெல்லாம் பைலேரி கிருமிகளினால் அடைபட்டுவிடும். அல்லது கிருமியில்லாமலேயே அடிக்கடி வீக்கம், சுரம், முதலியன ஏற்பட்டு அதனாலும் நிணநீர்க்குழாய்கள் அடைபடலாம். எப்படியிருந்தாலும் இதனால் கால், கை, ஸ்தனம், இவைகளில் தோலிற்கடியிலிருக்கும் சதை பெருக்கும். தசைகள் நரம்புகள், ரத்தக்குழாய்கள் எல்லாம் பெருக்கும். சிலசமயம் எலும்பும் பெருக்கும். ஆண்களுக்கு அண்டம் வீங்கும். ரொம்பப்பெரிய சைஸ் அடையும்.

ஆண் அண்டம், ஸ்திரீயின் ஸ்தனம், கால், கை இவைகளை வெட்டி எடுத்துவிடுவது வழக்கம். ஆரம்பத்தில் வந்தவுடனேயே சிகிச்சை செய்தால் சௌகரியம் பண்ணலாம்.

காலோட்ராபிஸ், ஹைட்ரோகாடைல், அனகார்டியம் இவைகளை 1x போடன்சியில் தினம் 3 வேளையாவது கொடுக்கவும். பாசில்லினம், கேலிமூர், முதலியன கொடுக்கவேண்டும்.

பைலேரின் இன்ஜெக்ஷன் அடிக்கடிகொடுக்க வேண்டும்.

(49) கொக்கிப்புழு—HOOKWORM.

குடலில் வளரும் ஓர்வித புழுவினால் உண்டாகும் வியாதி. சாதாரணமாக இப்புழுவின் முட்டை வாயின் வழியாக வயிற்றினுள் செல்லுகிறது. உஷ்ணப்பிரதேசத்தில் அதிகமாக இருக்கிறது.

பூச்சிகள் அதிகமாக சரீரத்தினுள் இருந்தால் தான் வியாதி மும்முரமாகத்தெரியும். குடலின் சுவர்

களை அட்டைபோல் ஒட்டிக்கொண்டு ரத்தத்தை உறிஞ்சி வாழ்கிறது.

அடிக்கடி சுரம் ஏற்படுகிறது; ரத்தம் குறைவதினால் ரத்தச்சோகை ஏற்படுகிறது. படபடப்பு, கால் கைகளில் வீக்கம், ஹிருதய பலஹீனம், ஈரல் வீக்கம், வயிறுகூட வீங்குவதுண்டு. ரத்தத்தைப் பரிசோதித்தால், ஒருவித வெள்ளை வடிகமான இயோசினோபில் அதிகப்பட்டிருக்கும். எல்லா பூச்சி வியாதிகளுக்கும் இது அதிகமாயிருந்தாலும் கூட இவ்வியாதியில் மாத்திரம் நிரம்ப அதிகமாயிருக்கும் மலத்தைப்பரிசோதித்தால் இது தெரிய வரும்.

பொதுவாக முதலில் பூச்சிகளைக் கொல்ல வேண்டியதவசியம். அதற்கு தைமால் என்ற உப்பை 5 கிரெயின் அளவு 2 மணிக்கொருதரம் 4 தடவை கொடுக்கவும். பிறகு ஒரு விளக்கெண்ணை பேதிக்கு கொடுக்கவும். பிலிக்ஸ்மாஸ் டிஞ்சர்கூட கொடுக்கலாம். ஒரு திராம் கொடுத்துவிட்டுப்பிறகு விளக்கெண்ணை கொடுக்கலாம்.

உடம்பைத்தேற்றவேண்டும். அதற்கு பயோ பாஸ்பேட்ஸ் மாதிரி டானிக்குகள், சைனா, பெர்ரம், ஆசிட்பாஸ், முதலியன கொடுக்கவும். பூச்சிக்கு சிறந்த மருந்து ஸ்டானம்தான். இதை குறைந்த போடன்சியில் அடிக்கடி கொடுக்கவேண்டும்.

ஸ்பைஜிலியா, டியூக்ரியம், சீனா முதலியனவும் உபயோகமுள்ளவை.

கார்பன்டெட்ராக்ளோரைட் என்ற மருந்து சிறந்தது. இது கொடிய விஷமாதலால் வருஷத்திற்கு மூன்று சொட்டுவீதம் வயதைக் கணக்குப்

பண்ணி கொடுக்கவேண்டும். முழு ஆளுக்கு 50–60 சொட்டுக்கு மேற்படாமல் கொடுக்கலாம். இது சாப்பிடுவதற்கு முந்தினநாள் வெறும் கஞ்சி ஆகாரம் சாப்பிடவேண்டும். பிறகு இந்த மருந்தைக் கொடுக்கவேண்டும். அதற்குப்பிறகு அரை மணி நேரம் கழித்து எப்சம்ஸால்ட் என்ற பேதி உப்பை பேதிக்கு ஒரு அவுன்ஸ் அளவு சாப்பிடவேண்டும்.

சீரு இன்ஜெக்ஷன், பிறகு ரெஜுவின் அடிக்கடி கொடுக்கவேண்டும்.

(50) கிளிப்புழு—GUINEAWORM.

இது பைலேரியாப்பூச்சிமாதிரி ஒருவிதமான பூச்சி.

ஆண் பெண் இரண்டும் சேர்ந்தார்ப்போல் வாயின் வழியாக உட்செல்லுகிறது. பெண் கர்ப்பம் தரித்ததும் ஆண் இறந்துவிடுகிறது. பெண் குடலின் சுவற்றை குடைந்து அங்கேயே கொஞ்ச நாள் தங்கிவிடுகிறது. பிறகு தோலிற்கடியில் புகுந்து கணுக்கால் பக்கம் வரும். தோலைக்குடைந்து, ஒரு சிறிய புண்ணை உண்டாக்கி, முட்டைகளைப்போடுகிறது. பிறகு திடீரென்று மனிதனை விட்டுவிடுகிறது.

பிற்காலங்களில் பூச்சியைக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படுவதில்லை. அதை வெளியே எடுத்து அல்லது அறுத்தெடுத்துக்கொல்லவேண்டும். தானாகவே வெளியே வரும்பொழுது மெள்ள ஒரு குச்சியில் சுற்றி சுருட்டி மெதுவாக ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக சுருட்டி எடுக்கவேண்டும்.

ட்யூக்ரியம், அஸபிடா, முதலியன சிறந்த மருந்துகள்.

பாக்கிப்பூச்சிகளும் இதேமாதிரி வகையில்தான் சிகிச்சை செய்யப்படவேண்டும். கீரிப்பூச்சி, பட்டை டேப்மாதிரி நாக்குப்பூச்சிகள், இவைகளெல்லாம் மேற்சொன்னபடியேதான் சிகிச்சை செய்யப்பட வேண்டும்.

உடம்பையும் டானிக் முதலியன கொடுத்து தேற்றவேண்டும்.

(51) கிராணிக்கழிச்சல்—SPRUE.

உஷ்ணப்பிரதேசத்தில் ஏற்படும் ஓர் குடல் வியாதி.

நாக்கு வெந்து, ஈரல் சுரந்து, சிறுசிறு புண்கள் வாயில் உண்டாகும். இத்துடன்கூட அஜீரணம், பேதி போக்கும் இருக்கும். அடிக்கடி திரும்பித்திரும்பி இதுமாதிரி ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். பகலில் அடிக்கடி மலம் பிரியும்; மலம் வெளுத்தும் நுரைத்தும் இருக்கும். மலம் ஆஸிட்டாக இருக்கும்; பித்த நீர் இருக்காது. ஈரல் சுருங்கி வேலைசெய்யாது. வாய், தொண்டைக்குறிகள் தொடரும். நாக்கு நன்ருக பளபளத்து, சிவந்து, உணர்ச்சியதிகமுள்ளதாகயிருக்கும். சூடுதாங்காது; காரம் தாங்காது; ருசியிருக்காது. ரத்தச்சோகை முற்றும், கடைசி காலங்களில் வியர்வையதிகரித்து, மரணம், பல வருஷங்கள் கழித்து ஏற்படும்.

சிகிச்சை:- பால் ஆகாரம் சிறந்தது. மலப் போக்கு குறையக்குறைய கொஞ்சம் கொஞ்சமாக ஸூப், முட்டையின் வெள்ளைக்கரு, கருவக்கோந்து தண்ணீர் முதலியன சேர்த்துக்கொள்ளலாம். படுக்கையில் ஓய்வு எடுத்துக்கொள்ளுவதவசியம்.

மாங்கிபெரஸ் இன்டிகா டிஞ்சர், ஈகில்மார்மலஸ் டிஞ்சர், முதலியன முக்கியமான மருந்துகள்.

சல்பர், போரக்ஸ், பாஸ்பரஸ், ஆர்சனிக் கொடுக்கவேண்டும்.

பயோஆம்னின், வைடமின் B, பயோப்ளக்ஸ், லிவர் எக்ஸ்டிராக்ட், முதலியன அவசியம் கொடுக்கவேண்டும்.

(52) ரத்தசோகை—ANAEMIA.

ரத்தத்தில் சிகப்பு வடிகங்கள் குறைவதினால் ஏற்படும் வியாதி.

உடல் முழுவதும் வெளுத்து, முகம் மெழுகு மாதிரி பளபளத்து, குளுப்பைதட்டி, நாடி கம்பி மாதிரி இளைந்து, நிமிஷத்திற்கு 80 தடவை துடித்துக்கொண்டும், கொஞ்சநேரம் வேலை செய்தாலும் அதிகரிக்கவும் இருக்கும். ரொம்பவும் பலவீனம், சீக்கிரம் சோர்ந்துபோய்விடுவர். அஜீரணம், பசியின்மை ஸ்திரீகளுக்கு மாதவிடாய் சரியாகயிராது. கை கால்களில் சில்லுப்பு, கணுக்கால், கால்களில் வீக்கம், முதலியன அறிகுறிகள்.

காரணம்:- ஆகாரக் குறைவினாலேற்படலாம். நாள்பட்ட மலேரியா, கிரானிக்கழிச்சல், நீடித்த சுரங்கள் இவைகளுக்குப்பிறகு ஏற்படும். க்ஷயத்தில் இது நன்றாகத்தெரியும்.

காரணத்தை அறிந்துகொண்டு வைத்தியம் செய்யவேண்டிய தவசியம். நன்றாக சீரணமாகக் கூடிய பதார்த்தங்கள், பால், முட்டை, டானிக்கு

ஆகாரங்கள், வைடமின்கள், பழங்கள், பிறகு கொஞ்சம் கொஞ்சமாக, மீன், மாமிசம் முதலியன.

சூரியவெளிச்சத்தில் உடற்பயிற்சி அவசியம்.

சைனா—சிறந்த டானிக் (ஸிரப் பெர்ரிபாஸ் கொயினா) ரத்தப் பெருக்கு, பேதி இவைகள் கடுமையாய் இருந்தால் பிறகு இதைக் கொடுக்கலாம்.

பெர்ரம்மூர்: முகம் சிவந்திருக்கும், ஆனால் எழுந்தவுடன் வெளுக்கும். பெர்ரம்பாஸ் 6x, பெர்ரம் பிக்ரிக், முதலியன சிறந்த இரும்பு மருந்துகள்.

நேட்மூர்:- மலச்சிக்கல், படபடப்பு, சரீரம் வெளுத்து.

கால்பாஸ், கால் ஹைபோ பாஸ் } அடிக்கடி சாப்பிடவேண்டியது. நெடுநெடென்று வளர்ந்தவர்கள், டான்சில்ஸ் வளர்ந்தது.

பல்ஸாடில்லா:- அதிகமான இரும்பு டானிக்குகள் சாப்பிட்டு உடம்பை கெடுத்துக்கொண்டவர்களுக்கு.

ப்ளம்பம் அசிடிக்:- கடுமையான வயிற்று வலியுடன்கூடின மலச்சிக்கல்.

கால்-கார்ப், ஆஸிட் பாஸ், நேட் ஸல்ப், ஹெலோனியஸ் டிஞ்சர், ஸிலிசியா முதலியன நல்ல மருந்துகள்.

இந்த வியாதியில் ரொம்பக் கடுமையானவிதம் ஒன்றிருக்கிறது. (Acute, Pernicious) இது சீக்கிரம் சொஸ்தமாக வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து தான்.

கார்சினோசின், கேலி-ஸிலிகா, ஆர்சனிக், தைராயிடின், பாசில்லினம் முதலியவை அடிக்கடி கொடுக்கவேண்டும்.

பயோ ஆம்னின், ரெஜுவின் முதலியன சிறந்த இன்ஜெக்ஷன்கள்.

ரசாயனப்பொருள்களினால் ஏற்படும்வியாதிகள்

(53) சூரிய உஷ்ண ஜன்னி SUN STROKE.

அதிக சூரிய வெப்பத்தினால் அல்லது அதிக சூட்டினால் ஏற்படுவது.

தாகம், தலைவலி, மயக்கம், கண்கள் சிவந்து, நினைவிழப்பர். மரணம் துரிதமாகும். அல்லது, வலிப்புகள், மூச்சுவிடச் சிரமம் முதலியன. சுரம் 107° வரைக்கும் ஏறலாம்.

வலிப்பு இல்லையென்றால், உடனே நோயாளியின் கழுத்திலும் தோள்பட்டையிலும், குளிர்ந்த தண்ணீரைத் தெளிக்கவேண்டும். 102° க்கு சுரம் படியவேண்டும். வலிப்புகளிருந்தால் இளம் வெந்நீரில் நோயாளியைக்கிடத்தி குளிர்ந்த தண்ணீரை அதில் கொஞ்சம் கொஞ்சமாகக் கலக்கவேண்டும்.

காம்பர்:- நாடி ரொம்ப மெது, முகம் வெளுத்து.

அகோனைட்:- பயம், சாவதற்கு அச்சம்.

க்ளனாயின்:- கடும் தலைவலி; திடீரென பிரக்ஞையிழத்தல், இதை முகரவைக்கலாம்.

பெல்ல:- கண்கள் சிவந்து, தலை சுற்றல்; திடீரென கீழேவிழுந்துவிடுவர்.

காக்டஸ்:- தலையில் கனம், சுரம், வாந்தி.

நேட்ர்:- பிற்பாடு, மயக்கம், பலவீனம்.

க்ளனாயின் இன்ஜெக்ஷன்.

(54) கெயிஸன் வியாதி—Caisson Disease.

ஜலத்தில் மூழ்குபவர்கள், சுரங்கத்தில் ஆழத்தில் வேலை செய்பவர்களுக்கு வரும் பாரிச வாயு. அதிக அமுக்கத்தில் வேலை செய்வதால், நைட்ரஜன் வாயு ரத்தத்திலும் தசையிலும் கலக்கிறது. அமுக்கம் திடீரென குறைந்தவுடனே நைட்ரஜன் கொதிக்கிறது—கொதிக்கும் சமயம் தசைகளை அழித்து, ரத்தக்குழாய்களில் காற்றுக் கொப்பளங்கள் உண்டாகின்றன.

கை, தோள்பட்டை, முழங்கால் முதலிய பாகங்களில் வலி, மூச்சுத்திணறல், ரத்தவாந்தி, முதலியன ஏற்படும்.

பாரிச வாயுவிற்குமாதிரியே சிகிச்சை செய்யவேண்டும்.

(55) சாராயக்குடி—ALCOHOLISM.

நாள்பட்டதாகவும் அல்லது ஆரம்பித்ததாகவும் இருக்கலாம். குடிபோதையின் குணங்களை யாவரும் அறிந்ததே. ரொம்ப அதிகமாகக்குடித்துவிட்டால், குடித்தவர் மயங்கி கிடப்பர்.

நாள்பட்ட குடியினால் ஜீரணக்கருவி கெட்டு, வலியுண்டாகிவிடும்; ஈரல், கெட்டுவிடும். ஹிருதய வீக்கம் மூத்திரக்காய் வீக்கம், நரம்புகளில் வலி,

தூக்கம்கெட்டு, மறதியுண்டாகி, பொய் பேசுவது வழக்கமாகிவிடும்.

அதிகக்குடியின் மயக்கத்திற்கு வயிற்றை பம்பினால் கழுவவேண்டும்; வயிற்றின் மேல்புறம் சூடான, குளிர்ந்த இவ்விரண்டு ஒத்தடத்தையும் மாற்றிமாற்றி கொடுக்கவேண்டும். அபோமார்பின் இன்ஜெக்ஷன் கொடுக்கவேண்டும். அம்மோனியாவை முகரச்செய்யவேண்டும்.

ஹையாசின் இன்ஜெக்ஷன் மிகச்சிறந்தது. ஆகாரத்தை ஜாக்கிரதையாக கஞ்சி ஆகாரமாகக் கொடுக்கவேண்டும்.

க்ரானிக் கேசுகளுக்கு, ஸல்பூரிக்ஆஸிட் ஒரு பாகம், ஆல்கஹால் இரண்டு பாகம் கலந்து தினம் இரண்டு மூன்று வேளை 5 சொட்டு கொடுத்துவர தீரும். குடியில் இச்சை இருக்காது.

டானிக்குகள், சைனு முதலிய இன்செக்ஷன்கள் அவசியம்.

(56) அபின், கோகேன் வியாதி. Morphinism. Cocainism.

அபின் பழக்கமாகச்சாப்பிடுபவர்களுக்கு பசியின்மை, வயிற்றுவலி, அமைதியின்மை படபடப்பு, தூக்கமின்மை, திடக்குறைச்சல், பொய் இவையெல்லாம் சகஜம். உடம்பு இளைத்து வரவரக்கெடுதல் ஆகிவிடும்.

கோகேன் சாப்பிடுபவர்களுக்கும் பயித்தியமே பிடித்துவிடும்.

முதன்முதலில் சாப்பிடும் வழக்கத்தை ஒழிக்க வேண்டும்.

உள்ளுக்கு அவெனு டிஞ்சர் தினம் மூன்று வேளை 5 சொட்டு வீதம்.

கேமோமில்லா:- ஆத்திரம், கோபம்.

கானபிஸ் இன்:- பொய்யான மனத்தோற்றங்கள்—கிட்ட இருப்பது தூரத்தில் இருப்பதுபோல.

(57) ஈயப்பாஷாணம்—Lead Poisoning.

கண்களின் நரம்புகள் கெட்டு பார்வைகெடும். சிலசமயம் மூளை நரம்புகளும் தாக்கப்பட்டு மெனிங்கைடிஸ் ஏற்படலாம்.

மூத்திரக்காய் வியாதி.

ரத்தக்குழாய்களின் சுவர்கள் இறுகி, தன் சக்தியை இழக்கும். ஹிருதயம் வீங்கி, பெருத்துவிடும்.

ரத்தசோகை, பசியின்மை, மலச்சிக்கல், பல் வீரல்களின்ஓரங்கள் காரீயம்மாதிரி நீலமாகத் தென்படும். வயிற்றுவலியில் வயிறு இழுக்கப்பட்டு முதுகுடன் ஒட்டிக்கொள்ளும்.

கை விரல்கள் மணிக்கட்டிலிருந்து தொங்கிவிடும். கணுக்காலும், தொங்கலாம். தசைகள் சீக்கிரமாக சிம்பிவிடும்.

அலுமன், ஒபியம் முக்கியமான மருந்துகள். இவைகளையே இன்ஜெக்ஷன்களாக உபயோகப்படுத்தவேண்டும்.

(58) வெள்ளைப் பாஷாணம். ARSENICAL POISONING.

தோலில் கரப்பான் போன்ற வியாதிகள், கைகளில், அண்டத்தில் வலியுடன்கூடிய புண்கள் முதலியன. கால்நரம்புகள் தாக்கப்பட்டு, மரமரப்பு, குறுகுறுப்பு, தசைகளில்வலி, நடப்பதற்கு விந்தும்படியாகவிருக்கும்.

ஆர்சனிக் 10,000 போடன்சியில் அடிக்கடி கொடுக்கவும்.

நக்ஸ்வாமிகா இன்ஜெக்ஷன்.

(59) சாப்பாட்டு விஷம். FOOD POISONING.

அழுகும் பதார்த்தங்களை உட்கொள்ளுவதால் ஏற்படுவது.

காலரா மாதிரியே, வாந்தி, பேதி ஏற்பட்டுவிடும்.

இதில் முக்கியமாக மூன்றுவிதங்களுண்டு. பொடுலிஸம் (Botulism) முதல்விதம். இதில் தலைமயக்கம் கண் பார்வை கெடுதல், பலவீனம், ரத்தப்பை, தொண்டை முதலியன வாதத்தால் பீடிக்கப்படுதல். தொண்டை கம்மிவிடுதல் முதலியன.

மற்ற இரண்டிலும் வாந்திபேதி.

பெல்ல, கார்போவெஜி, பைரோஜன், ஆர்சனிக். லாசெஸிஸ் முதலியன.

பைரோஜன் இன்ஜெக்ஷன்.

அன்னக் குழாயின் வியாதிகள்.

(60) வாய்ப்புண் STOMATITIS.

அதிகஉமிழ்நீர், வாயிலிருந்து துர்நாற்றம், மெல்லுவதில் சிரமம் முதலியவைகளோடிருக்கும் வாய்ப்புண், வீக்கம்.

காரணம்:- கடுமையான சுரங்கள், அஜீரணம், பல் முளைத்தலின்போது வீரம், பூரம் சாப்பிட்டதினால்.

டானிக் ஆஸிட் கிளசரின், போரிக் ஆசிட் கிளசரின், ஸல்பூரஸ் ஆசிட், பொட்டாஸ் பெர்மா— பொட்டாசியம் க்ளோரேட், சில்வர் நைட்ரேட் இவைகளைக்கொண்டு புண்களைக் கழுவி, தொட வேண்டும்.

கேலிக்ளோரேடம்—1x போடன்சியில் அடிக்கடி கொடுக்கவும்—கொப்பளிக்க உபயோகிக்கவும்.

மெர்குரி:- அதிக உமிழ்நீர்.

ஆசிட் நைட்:- பித்த உபரியினால்.

சைனு:- புண்கள் ஆறினபிறகு டானிக்குமாதிரி.

போரக்ஸ் இன்ஜெக்ஷன்.

(61) வாய்நாற்றம்—Offensive Breath.

சாதாரண உடம்பில் வாய் சுகமாக இருக்கும். துர்நாற்றம் அஜீரணத்தினாலேற்படுவதேயாம். கடும் சுரத்திலிருக்கும். க்ஷயம், முதலிய ரோகங்களில் நுரையீரல் அழுகல் கண்டிருந்தால் இந்த துர்நாற்றம் முக்கியமான அறிகுறி. ஈரல் சுரந்து சீழ் கட்டிக்கொண்டாலும் இது சகஜம்.

கார்போவெஜி, ஹெபர்ஸல்ப்.

ஆசிட்நைட், ஸல்பர், ஸிம்பிடம் டிஞ்சர், பாஸ்பரஸ் முதலியன.

வாசனையுள்ள கார்பாலிக் ஆசிட் போட்டுக் கொப்பளிக்கவும்.

கேலிமூர் இன்ஜெக்ஷன்.

(62) CANCRUM ORIS—வாய்க்குழிப்புண்.

சரியான ஆகாரமில்லாத, டியூபர்குலோசிஸ் உடலமைப்புள்ள குழந்தைகளுக்கு 2—6 வயது வரைக்கும் ஈரமைப்புள்ள பிரதேசங்களில் வரக் கூடிய குழிப்புண்கள்.

பல்லீரல் வெளுத்து, பல்லிலிருந்து விலகியும் புண்பட ஆரம்பிக்கும். கன்னங்களும் உதடுகளும் வீங்கி, வீக்கம் காணும். பல்கூட சிலசமயம் விழுந்து விடும். அழுகல் நாற்றம் வீசும். கழுத்து கிளாண்டுகளும் வீங்கும்.

பேப்-கார்:- ரொம்ப துர்நாற்றம்.

ஆர்சனிக்:- மெர்குரி வேலைசெய்யாவிட்டால்.

ஆசிட்.மூர்:- கடும் வியாதிகளோடுகூட ஏற்பட்டிருந்தால்.

புண்களை கிளசரின் ஆசிட் மூரியாடிக்கினல் அலம்பவேண்டும்.

(ஆசிட் ஹைட்ரோக்ளோர்டில் — 5 சொட்டு, கிளசரின்—2½ அவுன்ஸ்.)

(63) பல்முளைத்தல்—TEETHING.

சிறுவயதில் முளைப்பது Milk Teeth — அல்லது பால்பல் என்று பெயர். 8 வயதிற்குமேல் இவைகளெல்லாம் விழுந்த பிற்பாடே நீடித்து நிற்கும் கெட்டியான பற்கள் முளைக்கும்.

இது வியாதி அல்லவென்றாலும், சில சமயம் சிலருக்கு ரொம்ப அபாயகரமானதாகக்கூட முடிகிறது.

ரிக்கெட்ஸ் வியாதியுடையவர்களுக்கு பல் வெகு நாள் முளைக்கவே முளைக்காது. சிலருக்கு பல் கருத்து நொறுங்கி இருக்கும். டி. பி. சிபிலிஸ் முதலிய வியாதியுடையவர்களுக்கு சீக்கிரமாக பல் முளைக்கும்.

குறிகள்:- ஈரல்கள் வீங்கி, எச்சல்நீர் வழியும்; தூக்கத்தில் பயந்து வீரிடும்; சிலசமயம் சுரம்; உடம்பிலெல்லாம் கொப்புளங்கள்; அஜீரணம், மப்பு, பேதி, சிலசமயம் வலிப்புகள்.

அதிகமான ஆகாரத்தினலும், குறைந்த ஆகாரத்தினலும்; வயிற்றுவலி, வலிப்புமுதலியன சகஜம்.

எல்லா வியாதிக்கும் அந்தந்த வியாதியில் சொன்னபடி சிகிச்சை.

சுரம்:- அகோனைட், காமோமில்லா பேதி.

காமோமில்லா:- வயிற்றுவலியுடன், புளிச்ச, மஞ்சளான பேதி.

கோலோசிந்த்:- அதிக வயிற்றுவலி.

போர்டோரில்லம்:- ஆசனவாய் வெளித் தள்ளும். நிறைய அளவில்போக்கு.

ஆர்சனிக், நக்ஸ் முதலியனவும்.

மலச்சிக்கல்:- பிரியோனியா, அலுமின, நக்ஸ் வாமி, ஸல்பர், லைகோபோட்.

தூக்கமின்மை:- காமோ, பெல்ல.

வலிப்பு:- பெல்ல, நக்ஸ்வா, காமோ.

பொதுவாக கால்கேரியா பாஸ், (இதை 6x போடன்சியில் தினம் 3 வேளையாக நீடித்துக் கொடுக்கவேண்டும்.) கால்-கார்ப், ஸல்பர், ஸோரினம் முதலியன கொடுத்து உடம்பைத் தேற்ற வேண்டும்.

நல்ல புஷ்டியான ஆகாரம், மலச்சிக்கலில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பேதிக்கு எதுவும் கொடுக்கக்கூடாது.

(64) பல்வலி—TOOTH ACHE.

சொத்தை; சீதோஷ்ணஸ்திதி மாறுதல், அஜீரணம், கர்ப்பம், முதலானவைகள் காரணமாகலாம்.

சில முக்கியமான மருந்துகளை மாத்திரம் கீழே தருகிறோம். அவைகளை, அவ்வப்போது 'ஹோமியோ கீ நோட்ஸ்' பார்த்து உபயோகிக்கவும். 3 டோசுக்குள் குணம் தெரியாவிடில் மருந்து சரியானதாயிராது.

ஒருபக்கத்தில் வலி:- அகோனை, பெல்ல, காமோ, மெர், பல்ஸா.

இடதுபக்கம்:- அகோ, ஏபிஸ், காஸ்டி, காமோ, நக்ஸ்மாஸ், பாஸ், ஸல்பர், ரஸ், ஸிலிசியா, மாக்பாஸ்.

வலதுபுறம்:- பெல்ல, மாக்பாஸ், பிரியோ காபியா, நேட்மூர், நக்ஸ்வா.

சொத்தைப் பல்:- ஆண்டிம்க்ரூட், பெல், ஆர்னிகா, கால்-கார்ப், காமோ, ஸ்டாபிஸே, மெர்கு, நக்ஸ்வாமி, ஸல்பர், பாஸ்பரஸ், ஹையாச, லாசெசிஸ்.

ஈரல் வலி:- ஆண்டிம்க்ரு, பெல்ல, பிரியோ, கால் கார்ப், மெர், ஹெபர், ஸ்டாபிஸே, ஸல்பர்.

ஈரல் வீக்கம்:- ஈரல் கட்டி முதலானவைகளுக்கு சாதாரண கட்டி சிரங்குகள்போலவே மருந்தும் கொடுத்து பழுத்துவிட்டால் ஆபிரேஷன் செய்து விடவேண்டும்.

வாயுவினால்:- காமோ, மெர், சிமிசி, பிரியோ.

கர்ப்பத்தில்:- ரூமக்ஸ், கிரியோஸோட், பெல்ல, காபியா, ஸெபியா.

ப்ளண்டாகோ டிஞ்சரை ஜலத்தில் (10 சொட்டு 2 அவுன்ஸ்) அடிக்கடி கொப்பளிக்கவும்.

டிஞ்சர் அகோனைட், டிஞ்சு பெல்ல அப்படியே உபயோகப்படுத்தலாம்.

ஆடின பற்களை பிடுங்கிவிடவேண்டும். சொத்தைப் பற்களை பல்வைத்தியரைக்கொண்டு பழுது பார்க்கவேண்டும். பற்களை சுத்தமாக வைத்திருப்பது ரொம்ப முக்கியம். வெற்றிலை, புகையிலை பற்களுக்கு மிகவும் கெடுதல்.

(65) பல்யிரல் சிரங்கு—GUM BOIL.

பல்லின் அடிப்பக்கத்திலிருந்து சீழ் பிடித்துக் கொண்டு கிளம்பும். ஈரல் வழியாகவோ, கன்னத்தின் வழியாகவோ வெளிவரும்.

ஒத்தடம் கொடுத்து பழுத்தவுடன் ஆபிரேஷன் செய்து காலண்டுலாலோஷன் போட்டு சுத்தம் செய்யவேண்டும்.

ஹெபர், மெர்கு, ஸிலிசியா, ஸல்பர் உபயோகமானவை.

பல்வலி, சிரங்கு இவைகளுக்கு பெயின் கில் நல்ல இன்ஜெக்ஷன்.

(66) நாக்கு வீக்கம்—GLOSSITIS.

ஏராளமான உமிழ்நீருடன் வீக்கம், சாப்பிடவும், விழுங்கவும், பேசவும் முடியாது.

அகோ, மெர், அடிக்கடி கொடுக்கவும். சில சமயம், ஹெபர், கேலிஸல்ப், ஆசிட் நைட், கார்போ வெஜி.

மெர்க் இன்ஜெக்ஷன் அடிக்கடி.

(67) தொண்டை கரகரப்பு—SORE THROAT.

வேறு தொண்டை வியாதிகளில்லாமல் வெறும் கரகரப்பு.

மெர்க், பைடா கார்ப், ஆரம்பத்தில் அகோனைட்.

பயோ ஆம்னின் இன்ஜ்.

(68) டான்சில்ஸ்—TONSILS.

டான்சில் என்று சொல்லப்படும் உள்தொண்டையின் இருபக்கத்திலிருக்கும் கிளாண்டுகள் வீங்குவது. சிலசமயம் சீழும் பிடித்துக்கொள்ளும்.

சிரங்கிற்கு இருக்கும் ஆரம்பவலி எல்லாம் இருக்கும். தலைவலி, முதுகு, கால்களில் வலி, சுரம், உள்நாக்கும் வீங்கிவிடுவதுண்டு.

இதற்கு அடிக்கடி ஐஸ்கட்டி போட்டு உறிஞ்சுவதுதான் நல்லது. அல்லது நீராவியைப்பிடிக்கலாம். சீழ்பிடித்துவிட்டால் ஆபிரேஷன் செய்துவிடவேண்டும். உள்நாக்கு அடிக்கடி வீங்கிவந்தாலும் அதையும் நறுக்கி எடுத்துவிடவேண்டும்.

காரிகா பாபயா டிஞ்சரை கொப்பளிக்கவும். உபயோகப்படுத்தவேண்டும்.

(69) க்ரானிக் டான்சில்ஸ்—Chronic Tonsils.

அடிக்கடி வீக்கம் ஏற்படுவதாலும் சரியானபடி சொஸ்தம் செய்யப்படாவிட்டாலும் நீடித்து வீங்கிவிடும். தொண்டை கரகரப்பும், மூச்சு சிரமமும், காது செவிடும், காதில் சீழும், அடிக்கடி ஜலதோஷமும் குணங்களாம். உடம்பு இளைத்து மார்க்கூடு பின்னி, வளர்ச்சியும், மனவளர்ச்சியும் தடைப்படும்.

இதற்கு சிகிச்சை பெரும்பாலும் ரொம்ப வீக்கமிருந்தாலும், காது செவிடு ஏற்பட்டுவிட்டாலும், ஆபிரேஷனே. உள்ளுக்கும் நாள்பட மருந்து கொடுத்துவர சௌகரியமாகும்.

காரிகாபாபயா, பைடலோகா முதலியவைகளை ஜலத்தில் கரைத்து தினம் கொப்பளிக்கச் செய்யவேண்டும்.

பைடா கார்ப்:-நாள்பட்ட டான்சில்ஸ், அடிக்கடி ஜலதோஷம், இன்ஜெக்ஷனை வாரம் இருமுறை.

ஸல்பர்:-நடுநடுவே அவசியம் கொடுக்கவேண்டும்.

மெர்அயோட்:- அடிக்கடி வாயில் புண்.

லைகோபோட்:- வலதுபுறம் அதிக வீக்கம்.

கால்பாஸ்:- மெலிந்த சரீரிகள்.

அயோடம்:- கல்மாதிரி டான்சில்ஸ். அகோரப் பசி.

ஹெபர்:- ஸல்பருக்கு பதிலாக அடிக்கடி கொடுக்கவேண்டும்.

ஸிலிகோ-ப்ளூ-ஸோடியம்:- 3x போடன்சியில் 3 மாதம் சேர்ந்தார்ப்போல் கொடுத்துவரவும்.

பைடலோகா:- வாயு உபத்திரவம் உடையவர்களுக்கு.

(70) VINCENT'S ANGINA--வின்செண்ட் வியாதி.

இது ஒன்று அல்லது இரு டான்சில்களையும் தாக்கும் ஒரு வியாதி. சிறு சுரத்துடன் ஆரம்பிக்கும். டான்சில் ஒருவித வெளுர் கருப்புதோலால் மூடப்பட்டிருக்கும். ஆனல் இது தொண்டை அடைப்பான் (டிப்திரியா) வியாதியின் தோலைவிட மெதுவாகயிருக்கும். கொஞ்சநாளில் இது உரிந்து ஒரு குழியான புண் தென்படும். ஒருவாரத்தில் இது ஆறிவிடும்.

காலண்டுலாலோஷனல் தடவவேண்டியது மட்டும் போதும்.

(71) தொண்டை வீக்கம்—ŒSOPHAGITIS.

இதில் நாலுவிதம். (1) நெருப்பு அல்லது ஆசிட் திராவகங்களினல் ஏற்படுவது. (2) சில சுரங்களில். (3) டி. பி. முதலிய நீடித்த வியாதியின் கடைசியில் (4) குழந்தைகளுக்கு ஜலதோஷத்தினல்.

விழுங்கும்போது வலி, கோழை துப்புதல் இவைகள் காணும் விஷங்களினல் ஏற்பட்டதற்கு முட்டையின் வெள்ளைக்கருபோன்ற கொழகொழப்பான வஸ்துக்களை உட்கொள்ளவேண்டும். நாட்பட்ட வியாதிக்கு அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த சிகிச்சை செய்யவேண்டும்.

(72) STRICTURE—தொண்டை அடைப்பு.

புண் ஆறிப்போய் வடு ஏற்பட்டதனல் அடைப்பு, குறுகல் ஏற்பட்டுவிடும். (2) நரம்பு கெட்டு.

ரொம்ப அதிகமான குறுகலேற்பட்டுவிட்டால், ஆபிரேஷன் செய்யவேண்டியிருக்கும்.

(73) TUMORS—தொண்டைக்கட்டி

45—60 வயதிற்கிடையில் புற்றுநோய் ஏற்படுவது சகஜம்.

விழுங்கச்சிரமம்; சாப்பிட்ட ஆகாரம் வெளிப்பட்டுவிடுதல்; ரத்த வாந்தி முதலியன.

6—12 மாதங்களில் சாவு ஏற்படுவது சகஜம். இவ்வியாதியினலேயே தொண்டை அடைப்பு ஏற்படும்.

இதைப்பற்றி அனுபவமுள்ள வைத்தியரிடத்தில் சிகிச்சை செய்துகொள்ளவேண்டும்.

(74) வயிற்று வீக்கம்—GASTRITIS.

அக்யூட் வியாதியாக ஏற்படுவது, விஷத்திராவகங்கள் சாப்பிடுவதால்தான். இதற்கு கோழி

முட்டை போன்ற கொழுகொழுப்பான வஸ்துக்களைக் கொடுத்து சரிப்படுத்தவேண்டும்.

க்ரானிக் விதம்:- சிறுவலி, சாப்பிட்டவுடன் மூச்சுத்திணறல், சிலசமயம் வாந்தி, நெஞ்சில் எரிச்சல், தாகம், கால் கை எரிச்சல், மலச்சிக்கல், இது சாராயம் குடிப்பவர்களுக்கு சகஜம். ஈரல், மூத்திரக்காய், ஹிருதய வியாதிகளிலும் இது ஏற்படுவதுண்டு.

ஐஸ் அடிக்கடி சாப்பிடுவதாலும், கண்ட நேரத்தில் கண்டபடி சாப்பிடுவதாலும், ஆர்சனிக், முதலிய விஷ வஸ்துக்களாலும் உண்டாக்கப்படும்.

ஆர்ஸனிக்:- எரிச்சல், அடங்காத தாகம்.

ஆண்டிம்க்ரூட்:- வெளுப்பான, மாசுபடர்ந்த நாக்கு, குமட்டல், ஏப்பம் முதலியன.

அர்ஜ்நைட்:- கொஞ்சம் சாப்பிட்டதும் உடனே வயிற்றில் உப்புசம், வயிறுவெடித்துவிடும்போல.

பெர்க்:- அதிக உமிழ்நீர்.

பிரியோ, பாஸ் முதலியனவும் உதவும்.

டீ அதிகமாகச் சாப்பிட்டாலும் இது ஏற்படும். இதற்கு காமோ சிறந்த மருந்து.

தூஜா:- நடுநடுவே அடிக்கடி உபயோகிக்க வேண்டும்.

பாக்கி சிகிச்சை அஜீரணத்தில் சொன்னபடியே செய்யவேண்டும்.

ரெஜுவின், மில்கோடின் முதலிய இன்ஜ்.

(75) வயிற்று ரணம்—GASTRICVLCER.

மேற்சொன்ன வயிற்று வீக்கம் முற்ற முற்ற வயிற்றில் புண் ஏற்பட்டுவிடும்.

பொதுவாக வலி, சிலசமயம் வெகு கடுமையாகவும், எரிச்சலுடனும் மார்பிலும், முதுகிலும் பரவியும் இருக்கும். ஆகாரம் சாப்பிட்டதும் அதிகரிக்கும் அல்லது ஆகாரம் சீரணமாகும் சமயம் அதிகரிக்கும். புண் வயிற்றில் முன்பக்கமிருந்தால் மல்லாக்கப்படுத்தால் சௌகரியமாகும். புண் பின்பக்கம் இருந்தால் குப்புறப்படுத்தால் சௌகரியம்; டியோடினம் என்றபாகத்தில் இருந்தால் சாப்பிட்டவுடன் சமனமாகும். வாந்தி, சாதாரணம் உடம்பு இளைத்து மலச்சிக்கல் ஏற்பட்டு; ரத்தசோகை ஏற்படும். பெண்பிள்ளைகளுக்கு ம.ாதவிடாய் காலம் சரியாக ஏற்படாது.

ஆபத்துகள்:- புண் அதிகமாகி அதனால் வயிற்றில் பொத்தல் ஏற்பட்டு ஆகாரம் குடலிலும், சுற்றுப்புறத்திலும் செல்வதனால் விஷசுரம் ஏற்பட்டு, மரணம். புண்ணிலிருந்து அதிக ரத்தம் கசிந்து அதனால் பலவீனப்பட்டு கெடுதல் சம்பவிக்கலாம். புண் வயிற்றின் எந்த பாகத்திலிருந்தாலும் இக்கோளாறுகள் ஏற்படலாம்.

சுத்தமான பசும்பால் ஆகாரம் 40-45 நாட்கள் சாப்பிட்டுக்கொண்டு மருந்துகளும் உட்கொண்டால் இவ்வியாதியை பூரண குணப்படுத்தலாம். இல்லாவிட்டால், நல்லெண்ணெயில் தயார் செய்யப்பட்ட தோசை, வடை முதலிய பதார்த்தங்களை அறவே நீக்கிவிடவேண்டும். ரொம்பக்கடுமையான கேசுகளில் பூர்ண ஓய்வுகொடுத்து எனிமா வழியாகக்கூட ஆகாரம் செலுத்தலாம்.

புகையிலை, டீ முதலியவற்றை அறவே ஒழிக்க வேண்டும்.

யூரேனியம்:- பைலோரஸ் புண், நீரில் சக்கரைச் சத்து.

அர்ஜ்-நைட்:- முகம் சுருங்கி, வாடினவர்கள், காற்று ஒப்புசம் அதிகம்.

ஆர்சனிக்:- அதிகமாக குளிர்ந்த பானங்கள், சாப்பிட்டதால் ஏற்பட்டது.

கேலி-பைக்:- புண்போன்ற வலி.

ஆர்னிதோகாலம்:- வயதானவர்களுக்கு நிரம்ப காற்று உப்பிசம்.

ஹைட்ராஸ்டிஸ்:- புற்று, மலச்சிக்கல்.

அட்ரபின்:- வயிற்றில் கடுமையான வலி, இன்ஜெக்ஷனாக கொடுத்தால் நல்லது.

கிரியோஸோட்:- கருரத்தமான வாந்தி.

அனகார்:- சாப்பிட்டதும் வலி சமனம்.

நக்ஸ்வாமி:- சாப்பிட்ட 2 மணிநேரம் கழித்து வலி—சாப்பிட்டதும் அதிகம்.

இவைகளைத்தவிர, பல்ஸ், ஸல்ப், கார்போ வெஜி, சைனா, லைகோபோட், முதலியன உபயோகப்படும்.

ஸ்கார்பின், ஸ்லீபோ, அர்ஜ்-நைட், முதலிய இன்ஜ்.

சிலசமயம் வலி அதிகமாயிருந்தால் மார்பியா இன்ஜ். கூட போடவேண்டியிருக்கும். ஆபிரேஷன் செய்யவேண்டியதுமுண்டு.

(76) வயிற்றுப்புற்று—Cancer Stomach.

இதுவும் நாம் முன் சொன்ன புற்றுநோயைப் பற்றி விவரணத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சிகிச்சை எல்லாபுற்றிற்கும் ஒருமாதிரிதான்.

குறிகள்:- ஓயாத வாந்தி, பித்தங்கக்கல், அடிக்கடி வலி, இளைப்பு, சோகை, வயிற்றில் கல்போன்ற உருளைக்கட்டி, முதலியன.

ஆரம்பத்திலேயே ஆப்பிரேஷன் செய்துவிட வேண்டும்.

பொட், ஸிலிகேட், ரேடியம் இன்ஜெக்ஷன் அடிக்கடி தொடர்ந்து கொடுக்கவேண்டும்.

(77) ரத்த வாந்தி—HÆMATEMESIS.

வயிற்றுப்புண், புற்று, விஷங்கள், மஞ்சள் சுரம் முதலிய கடுமையான சுரங்கள், முதலியவற்றில் ரத்தமாய் வாந்தி ஏற்படும். சிலசமயம் இது நுரையீரலிலிருந்து க்ஷயம் முதலிய வியாதிகளிலேற்படுவதுண்டு.

ஆரம்பிக்கும்போது குமட்டல், வயிற்றில் ஒரே வலி, பிரட்டல் நாடி மெதுவாகவும், மூச்சு பெருமூச்சாகவும் மயக்கம் முதலியனவுமிருக்கும்.

நுரையீரலிலிருந்து ரத்தம்.	வயிற்றிலிருந்து ரத்தம்.
1. ஹிருதயம் அல்லது நுரையீரல் வியாதி உண்டு.	1. அஜீரணக்கோளாறு
2. ரத்தம் இருமி வரும்.	2. வாந்தியெடுக்கப்படும்
3. நுரையுடன், நல்ல சிகப்பாகவும், ஆல்கலி குணத்துடன் இருக்கும்.	3. கட்டிகட்டியும், ஆசிட் குணம், கருப்பாகவும் இருக்கும்.
4. கோழையுடன் கலந்து இருக்கும்.	4. ஆகாரத்துடன் கலந்திருக்கும்.
5. மூச்சுத்திணறல் மார்பில் வலி.	5. குமட்டல், அடிவயிற்றில் கனம்.
6. மலத்தில் ரத்தம் காணப்படாது.	6. பெரும்பாலும் மலத்தில் ரத்தம் தெரியும்.

மேற்கொண்டவைகளை வைத்துக்கொண்டு வித்தியாசம் கண்டுபிடிக்கவேண்டும்.

அகோனைட்:- படபடப்பு, பயம், நடுக்கல், துரித நாடி.

ஹாமமலிஸ்:- கருஞ்சிவப்பு ரத்தம்.

ஐபிகாக்:- நல்ல சிவந்த ரத்தம்.

ஆர்னிகா:- அடிபட்டதினால்.

அகாலிபா:- நல்ல சிவந்த ரத்தம்—சிறந்த மருந்து.

பைகஸ்ரிலி:- மத்தியானம் அதிகரிக்கும் சிவந்த ரத்தம்—அருமையான மருந்து.

பயோஸ்டிப்டிக் இன்ஜ்:- நாளைக்கு 4 முறை.

(78) வயிற்று விரிவு—Dilatation of Stomach.

இது வயிற்றின் சுவர்கள் பலஹீனப்பட்டு விடுவதால்-அதிகச்சாப்பாடு, சோகை முதலான வியாதிகள் காரணங்களாகும்.

நெஞ்சில் எரிச்சலுடன்கூடின வலி, வாந்தி எடுக்கக்குறையும்; காற்றுப்புசம், மலச்சிக்கல், உடம்பு களைப்பு, ரொம்ப புளிப்புள்ள வாந்தி.

காரணத்தை சௌகரியப்படுத்தவேண்டும்.

(79) அஜீரணம்—DYSPEPSIA.

இது பலவுருவம் கொண்ட வியாதியாகும் ஆகவே கவனித்து வைத்தியம் செய்யவேண்டும்.

பசியின்மை, மந்தம், உப்புசம், குமட்டல், ஏப்பம், வாய்துர்நாற்றம், நெஞ்செரிச்சல், நெஞ்சுவலி, வயிற்றில் கனம், மலச்சிக்கல், தலைவலி, சோர்வு, படபடப்பு இம்மாதிரி அநேகங்குறிகள்.

பசியின்மையும், நெஞ்செரிச்சலும், இரவில் துர்சொப்பனம் காணுவதால் மார்பை அமுக்குவது போன்றபயம், காற்றுப்புசங்கள்தான் முக்கியமான குறிகள்.

சரியானபடி ஆகாரம் உட்கொள்ளாதது ரொம்ப மஸ்தான பதார்த்தங்களை அளவில்லாமல்

உட்கொள்ளுவது, ரொம்ப துரிதமாகச்சாப்பிடுவது, வெகுநாள் பட்டினி கிடப்பது டீ, காப்பி, தேயிலை, சாராயம், இவையெல்லாம் அமிதமாக உபயோகப்படுத்துவது, போதுமான தேகப்பயிற்சியில்லாதது, சொத்தைப்பல், அடிக்கடி வேலைத் தொந்தரவு, மனக்கவலை, இவை காரணங்களாவன.

ஆகவே மருந்துகள் கொடுப்பதுடன் காரணங்களையும் நீக்கபிரயத்தனப்படவேண்டும்.

நக்ஸ்வாமி: சிறந்த மருந்து, சாப்பிட்டதும் வலி காலையில் தலைவலி, மலச்சிக்கல், சதா டீ, முதலிய பானங்களை அருந்துவர், ஆத்திரம் உடையவர், தேகப்பயிற்சியே இல்லாதவர் இத்துடன் **சல்பர்** மாற்றிக்கொடுக்கலாம்.

பல்ஸ்: கொழுப்பு பதார்த்தங்களை சாப்பிடுவதால் ஏற்படும் அஜீரணம்.

பிரியோ: சாப்பிட்டபிறகு கல்மாதிரி வயிற்றில் உணர்ச்சி, புளித்த ஏப்பம், குத்துவலி, அதிகத் தலைவலி, அசைந்தால் அதிகமாகும்.

லைகோபோட்: மாலையில் அதிகரிக்கும் காற்றுப்புசம்-கொஞ்சம் சாப்பிட்டதும் பசியின்மை.

சைனு: கடும் போக்கு, பேதிக்குப்பிறகு.

ஆண்ட்க்ருட்:- நாக்கு வெண்மை படர்ந்து, ஏப்பங்கள், முகம் முழுவதும் பருக்கள் வயறு கலைத்து.

ஸல்பர்:- 11- மணிக்கு ஒன்றுமில்லாதது போல் உணர்ச்சி, மூலம், சிரங்குகள், மலச்சிக்கல், கிளாண்டு வீக்கங்கள் நடுநடுவே அடிக்கடி கொடுக்கவேண்டியது.

கார்போவெஜி:- ஒரே காற்றுப்புசம், தலைவலி, அசதி, வயதானவர்களுக்கு

கால்-கார்ப்:- புளித்த ஏப்பம், அடிக்கடி ஜல தோஷம், பல்ஸ்க்கு பிறகு சிறந்த மருந்து.

துஜா:- அதிக டீ குடிப்பவர்களுக்கு.

அயோடம், ஹெபர், ஸெபியா, கால்பாஸ், நேட்மூர், பெர்ரம். (சாப்பிட்டதும் ஆகாரம் வாந்தி எடுத்துவிடும்.) பாஸ்பரஸ், இக்னேஷியா, முதலானவை கவனிக்கப்படவேண்டியவை.

வைடமின் B, பயோப்ளக்ஸ், கால்பாஸ், பயோ ஆம்னின் முதலானவை சிறந்த இன்ஜ்..

(80) வயிற்று வலி—GASTRODYNIA.

வயிற்றில் நல்லவலி, ஆகாரம் சாப்பிட்ட பிறகு பொதுவாக அதிகமாதல். இது தனி வியாதியல்ல; ஒரு குறிதான்.

நக்ஸ்வாமி, கோலோசிந்த், டயஸ்கோ, பிஸ்மத், (நெற்றித்தலைவலியுடன்கூடின பிரட்டலுடன் வலி) பெர்ரம், ஐபிகாக், ஆர்சனிக் முதலியன.
பெயின்கில், மில்கோடின் முதலிய இன்ஜ்.

(81) மயக்கம்—VERTIGO.

அஜீரணத்தினுல் அல்லது நரம்புத்தளர்ச்சியினுல் ஏற்படுவது. தொடர்ந்தார்ப்போல் குறையாமலிருந்தால் ஏதாவது கடுமையான ஹிருதய, மூத்திரக்காய் அல்லது, மூளை வியாதியாயிருக்கும்.

ஜெல்ச:- வெறும் மயக்கம்.
பிரியோ:- பித்த உபரி.
பல்ஸ்:- ஜீரணமாகாமையினால்.
நக்ஸ்வாமி:- மலச்சிக்கலுடன்.
பெல்ல:- படுத்து எழுந்தால் தலைவலியுடன்.
காக்குலஸ்:- சுற்றிவருவதுபோல்—பித்த வாந்தி.
நேட்மூர்:- சோகை, கடும் மலபந்தம்.
கேலி-கார்ப்:-நடந்தால், வாசித்தால், திரும்பினால்.

பெர்ரம், ஆசிட்பாஸ், சைனா, சின்க் முதலியவை நரம்புத்தளர்வினால் ஏற்பட்டால்.

இன்ஜ்:- ரிவைவோ, பயோ ஆம்னின்.

(82) பித்தத்தலைவலி—Bilious Head Ache.

இதுவும் அஜீரணத்தினாலேற்படுவதே.
ஐரிஸ்:- ஏராளமான பித்தவாந்தி.
காமோ:- பித்தவாந்தி, கவலை, கோபம்.
நக்ஸ்வாமி:- மலச்சிக்கலுடன்.
பிரியோ:- புளித்தவாந்தி.
ஐபிகாக்:- குமட்டலுடன் வாந்தி.
மெர்க்:- ஏராளமான உமிழ்நீர்.
இன்ஜ்:- பெயின்கில்.

(83) கடல் வாந்தி—SEA SICKNESS.

கடலில் சிலருக்கு கப்பல் ஆடுவதால் ஏற்படுவது பேசாமல் படுத்துக்கொண்டால் குறையும்.

பெட்ரோலியம்:- சிறந்தது.

காக்குலஸ்:- மயக்கம், வாந்தி.
கிரியோஸோட்:- வாய் துர்நாற்றம்.
டாபகம்:- இதுவும் சிறந்தது.
இன்ஜ்:- பெட்ரோலியம் காக்குலஸ்.

(84) வாந்தி—VOMITING.

அஜீரணத்தினால்தான். இது ஒரு குறியே.
ஐபிகாக்:- குமட்டலுடன்.
கிரியோ;- ஓயாத நாள்பட்டது.

ஆர்சனிக்:- வாந்தி, பேதி, தளர்வு, வயிற்றில் எரிச்சல்.

சின்க்:- சாப்பிட்டவுடன் அப்படியே வாந்தி.
ஐரிஸ்:- பித்தநீர் வாந்தி.

இவைகளைத்தவிர அஜீரணத்தில் சொன்ன மருந்துகள்.

இன்ஜ்:- ஐபிகாக், ஆண்ட்டார்ட்.

(85) குடல் வீக்கம்—ENTERITIS.

பெருங்குடல் ஜலதோஷமென்று இதைச் சொல்லலாம். ரொம்பச்சிரமமானது. பேதி அடிக்கடி ஏற்படும்.

ஹைட்ராஸ்டிஸ், ஆர்சனிக், நேட்மூர், முதலிய மருந்துகள்.

இன்ஜ்:- ஸல்பதயோசால் 3x.

(86) பேதி—Diarrhoea.

இதில் பலவிதங்களுண்டு.

குமட்டல், காற்றுப்புசம், குடல்வலி, தாராளமான தண்ணீர்போன்ற மலம், கலர், நாற்றம் இவைகளிலும் பலவிதமுள்ளதாகவும் இருக்கும்.

அஜீரணத்திற்கு சொன்ன சகல காரணங்களும் இதற்குமுண்டு.

காலரா அத்தியாயத்தையும் கவனிக்கவும்.

காம்பர்:- திடீரென—குளிர், நடுக்கலுடன், உடல் சில்லிப்பு, காலரா.

சைனு:- தண்ணீர்போன்று வயிற்று வலியுடன்
ஆர்ஸனிக்:- புளிப்பான வஸ்து, பழங்கள் இவைகளினல்.

கோலோசிந்த்:- கடும் வயிற்றுவலி.
பல்ஸ்:- கொழுத்த ஆகாரம் சாப்பிட்டால்.
நக்ஸ்வாமி:- மலச்சிக்கல்.
அலோஸ்:- மலத்தை அடக்க முடியாது.
ஐபிகாக்:- குமட்டல் வாந்தி.
ரூமக்ஸ்:- } அதிகாலையில்.
நேட்ஸல்ப்:- }

ஸல்ப்:- காலையில் எழுந்து ஓடவேண்டும். மற்ற மருந்துகள் சரியானபடி வேலை செய்யாவிட்டால் நடுநடுவே.

ஆண்ட்-க்ரூட்:- வெண்மையான நாக்கு, தண்ணீர்போல், வயது சென்றவர்களுக்கு.

டல்கா:- ஈரத்தினல் உண்டானது சீதமாய் இரவில்.

ஆசிட் பாஸ்:- நாள்பட்டது, அதிக தளர்ச்சி கொடுப்பது, வலியிருக்காது.

பெர்ரம்:- சோகையுடன்கூடினவர்.
கால்-கார்ப்:- இளைப்பு.
போடோ:- மஞ்சளான, ஏராளமான, சாப்பிட்டவுடனும், குடித்தவுடனும் போக்கு.

மற்ற மருந்துகளும் கவனித்துக் கொடுக்க வேண்டும்.

இன்ஜ்:- அதற்குத் தகுந்தபடி கால்பாஸ் முக்கியமானது.

ஜீரணம் சரியாக ஆகிறதா என்று கவனிக்க வேண்டும்.

கஞ்சி ஆகாரம் கொடுத்து, சற்றுத்தேறினவுடன் கெட்டியான ஆகாரம் கொடுக்கலாம். அஜீரணமாகும் பதார்த்தங்களை கொடுக்கக்கூடாது. அரை கொதித்த முட்டை, பால், பழங்கள், பார்லி தண்ணீர் முதலியன நல்லது.

(87) குடல் வலி—COLIC.

பெருங்குடலில் பிடித்திழுக்கும் வலி.

கோலோசிந்த்:- வயிற்றை முன்புறம் மடித்துக் கொள்ளுவர்.

டயஸ்கோரியா:- பின்புறம் வளைந்துகொள்ளுவர்
காமோ:- தாங்கமுடியாத பிசையும் வலி.
நக்ஸ்வாமி:- ஒப்புசத்துடன் வலி.
லூரிஸ்:- காற்றுப்புசத்துடன் கடுமையான வலி.

ப்ளம்பம்:- ஆட்டுப் புழுக்கைபோன்ற மலம், வயிறு முதுகுடன் ஒட்டிக்கொள்ளும்.

பெல்ல:- சட்டென்று வந்து, சட்டென்று விட்டு விட்டுவரும் வலி.

விராட்ரம்:- கண்டையேறும் வலி.

பிரியோனியா:- அசைந்தால் அதிகரிக்கும்.

இன்ஜு:- பெயின்கில்.

(88) குடல் பூச்சி—WORMS..

49, 50-வது அத்தியாயத்தில் சொன்னபடி சிகிச்சை.

(89) மலச்சிக்கல்—CONSTIPATION.

அஜீரணத்தின் காரணங்களேயே இதற்கும். பேதிக்கே எப்பொழுதும் கொடுக்கக்கூடாது. இது பல வியாதிகளில் இருந்தபோதிலும் அந்தந்த வியாதிக்குள்ள சிகிச்சையே செய்யவேண்டும்.

லாக்டிப்:- வெறும் மலச்சிக்கல்.

நக்ஸ்வாமி:- அடிக்கடி போக உணர்ச்சி, ஆனால் கொஞ்சம்தான் போகும்.

ஸல்ப:- தோல் வியாதியுடையவர், மயக்கம், தலை எரிச்சல், காலையில் வயிற்றில் சங்கடம்.

ஹைட்ராஸ்டிஸ்:- இதை டிஞ்சராக 5 சொட்டு காலையில் தண்ணீரில் கலந்து சாப்பிட நல்லது.

லைகோபோட்:- இரைச்சல், சிரமப்பட்டுப்போகும் மலம். தினம் காலையில் 200 போடன்சியில் இரண்டு சொட்டு.

ஓபியம்:- மலம் பெருங்கட்டிகள்—மற்ற மருந்துகள் வேலைசெய்யாவிட்டால்.

இக்னே:- ஆசனவாய் வெளித்தள்ளுதல், அரிப்பு, புழு.

நேட்மூர்:- வரட்சை, நாக்கில் புண்.

கிராபைடிஸ்:- பெரும் கட்டிகள், வெள்ளை நார் மாதிரி சீதக்கட்டினால் சுற்றப்பட்டு.

ஈஸ்குலஸ்:- குச்சி குத்துவதுபோல் ஆசனவாயில்வலி.

அலுமினா:- குடல் வாதத்தினால் பிடிக்கப்பட்டது மாதிரி வேலை செய்ய மறுக்கும். குழந்தைகளுக்கு சிறந்தது.

பெர்ரு-டல்:-இதை 1x போடன்சியில் 3 கிரெயின் வீதம் 4 டோஸ் 4 மணிக்கொருதரம் கொடுக்க நன்றாக மலம் பிரியும்.

இன்ஜு:- பயோலான்.

(90) அப்பெண்டிசிடிஸ்—APPENDICITIS.

குடல் அனுபந்தத்தின் வீக்கம்—வலி.

வயிற்றின் அடிபாகத்தில் திடீரென்று பிசையும் வலி, தொப்புளைச்சுற்றி, குமட்டல் வலதுபக்கம் அதிகம், சுரம் 101° F. நாடித்துடிப்பு (90—100) இருக்கும். மலச்சிக்கல், ஆனால் வாயு பிரியாது. சாதாரணமாகவிருந்தால் 24—36 மணி நேரத்தில் சரியாகிவிடும். ஆனால் சற்றுக்கடுமையாகயிருந்தால் வலி வரவர அதிகமாகி, வலது வயிற்றின் அடிப் பாகம் விரைத்து மூச்சுடன் அசையாது, தொட முடியாது. வாந்தி நீடிக்கும். நாடி துரிதப்படும். சுரம் நீடிக்கும்.

இப்பொழுதும் எல்லாம் குறைந்துவிடலாம். சிலசமயம் இதுவே சீழ்பிடித்துக்கொள்ளலாம் சீழ் சுற்றியிருக்கும் குடல் பக்கத்து பாகங்களை தாக்கினால் வாந்தி அதிகரித்து, 36 மணி நேரத்தில் ஆவி பிரியும்.

ஒருதரம் வந்துவிட்டால் இரண்டாவது தடவை வருமுன் ஆபிரேஷன் செய்வதுதான் முறை.

ஐரிஸ்டினக்ஸ்:- சரியான மருந்து.

லாசெசிஸ்:- வலதுபுறத்தில் தொடமுடியாத வலி.

கன்பவுடர்:- இதை லாசெசிஸுடன் மாற்றி மாற்றிக் கொடுக்கலாம்.

பெல்ல:- ஜுரம்—தலைவலி.

விராட்வி:- ஜன்னி, நாடி முழுத் துடிப்பு. மேலுக்கு ஒத்தடம் விராட்வி டிஞ்சரைக் கரைத்துப் போடலாம்.

நாள்பட்ட கேசுக்கு லைகோ, ஸல்ப் இரண்டையும் மாற்றி மாற்றிக் கொடுத்துவரலாம்.

(91) ஹெர்னியா—HERNIA.

இது ஒரு ஆபிரேஷன் கேஸ். வயிற்றின் பாகம் வயிற்றின் உள்பக்கத்திலிருந்து வெளியே பிதுங்கிவந்தால் அதற்கு ஹெர்னியா என்று பெயர். சாதாரணமாக குடல்உதரத்தின் சுவற்றின் வழியாக பிதுங்கிவெளிவந்துவிடும். இதில் சகஜமான விதங்களாவன-: (1) குழந்தைகளுக்கு பெரும்பாலும் ஏற்படுகிற தொப்புள் ஹெர்னியா (2) அடித்துடையின் பக்கம் ஏற்படும் 'பெமோரல் ஹெர்னியா' (3) குடல் விரையில் வந்திறங்கும். 'ஸ்க்ரோடல் ஹெர்னியா' முதலியன.

சாதாரணமாக பெல்ட் வாங்கி போட்டுக்கொள்வது சகஜம்.

இதுவே சில வேளைகளில் குடல் மிகவும் கீழிறங்கி நெறுக்கப்பட்டுப்போவதுண்டு. அப்பொழுது

நெறுக்கப்பட்ட பாகம் ரத்த ஓட்டமில்லாமையால் அழுகல் கண்டு விஷம் உடம்பில் பரவி மரணத்தை உண்டாக்கும். இம்மாதிரியான கேசுகளை 'உடனே' ஆபரேஷன் செய்துவிடவேண்டும்.

அடிவயிற்றில் காற்றுப்புசமும், அமுக்க முடியாத வீக்கமும், வயிற்றில் வலியும், வாந்தி வெளிக்குப்போக உணர்ச்சி, ஆனால் ஒன்றும் போகாது; சரீர உஷ்ணம் குறைந்து, முகம் வெளுத்து; ரொம்ப தாகம்; நாக்கு கருஞ்சிவப்பாகவும் வரண்டும், நாடி மெல்லியதாய் துரிதமாகவும் இருக்க விஷம் முற்றுகிறதென்று அறியவேண்டும். உடனே ஆபிரேஷன். ஆபிரேஷனுக்கு முந்தி கீழ்க்கண்ட மருந்துகள் உபயோகப்படும். இடுப்பு கால்களை உயர்த்தி வைத்து,

நக்ஸ்வாமி, அகோனைட், இவைகளை 10 நிமிஷத்திற்கொருதரம் 1x போடன்சியில் கொடுக்கவும்.

ஆஸிட் சல்ப் இன்ஜெக்ஷன்.

(92) குடல் கட்டிகள்—Tumors of the Intestines.

புற்று 40—60 வரையில் சகஜமாக ஏற்படுவது வழக்கம். எல்லா பாகத்தின் புற்றிற்கும் ஒரே மாதிரி சிகிச்சைதான்.

குறிகள்:. சிலசமயம் அல்ப வலி, வெளிக்குப் போகுமுன் கடும் வலி.

அதிக மலச்சிக்கல் அல்லது பேதியும் மலச்சிக்கலும் மாற்றிவரும்.

வாந்தி, சிலசமயம் மலமும் வாந்தியாகும்.

கட்டி, உருண்டையாய் தென்படும். மலத்தில் ரத்தம், சீழ் முதலியன. சிலசமயம் மகோதரம்.

(93) பவித்ரம்—Fistula in Ano.

பெருங்குடலின் மேல்தோலில் ஆசனவாய்ப் பக்கத்து தோலின் வழியாக ஏற்படும் ஒரு குழாய் போன்றது.

சிரங்குகள், டி. பி. முதலியவற்றில் ஏற்படும்.

எப்போதும் இவ்வியாதியை டி. பி. சம்பந்த முடையதென்றே அறியவும்.

முதலில் சாதாரண சிரங்குமாதிரி கிளம்பி உடைந்து சீழ் முதலியன வெளிப்பட்ட பிறகும் வாய் மூடாமலிருக்கும். அல்லது அடிக்கடி மூடிக் கொண்டு உடையும்.

பெரும்பாலும் இது ஆபிரேஷன் கேசே. மேலுக்கு காலண்டுலா லோஷன் போட்டு அலம்ப வேண்டும்.

சிலிஷியா:- சீழ் தண்ணீர்மாதிரி.

கால்பாஸ், கால் ப்ளுர், காஸ்டிகம், லைகோ-போட், ஸல்ப், ஹைட்ராஸ்டிஸ், ஆரம்மூர், காலோட்ராபிஸ்.

நடு நடுவே பாசில்லினம்.

(94) மூலம்—Piles.

ஆசனவாயில் சிறு ரத்தக் குழாய்கள் கட்டி கட்டிவிடுவது. சிலவை ரத்தம் அதிகமாகக் கொட்டும், சிலவை வெளியே காணப்படும். அல்லது சிலது வலியுடன் கூடியிருக்கும்.

மூலத்தின் அளவிற்குத் தகுந்தாற்போல் அதனுதன் உபாதிகளும் தென்படும்.

பெரும்பாலும் அதிக ஆடம்பர வாழ்க்கையின் பயனாய் இது சம்பவிக்கும். இவர்கள் சற்றே தேகாப்பியாசம் செய்துகொண்டு மெத்தென்ற ஆசனங்க

ளில் உட்காருவதை விட்டுவிடவேண்டும். அஜீரணமும் இதற்கு காரணமாகலாம். ஆகவே வயிற்றையும் சரியானபடி கவனித்துக்கொள்ளவேண்டும்.

நக்ஸ்வாமி:- அடிக்கடி மலம் வெளிப்பட உணர்ச்சி ஆனால் ஒன்றும் போகாது. ஆடம்பர வாழ்க்கையுடையவர்கள்.

ஸல்பர்:- நக்ஸுக்குப் பிறகு மாற்றி மாற்றிக் கொடுக்கவேண்டியது. ரத்தம் வெளிப்படும், காலையில் வயிற்றில் சங்கடம், இரவில் அதிகம், கழுவினாலும் அதிகப்படும்.

ஹாமமலிஸ்:- ரத்தம் பெருகும். மேலுக்கும் லோஷனைப் போடவேண்டியது. அல்லது ஆயின்மெண்டாக வாஸலினில் குழைத்துத் தடவவும்.

ஈஸ்குலஸ்:- இடுப்பு, சப்பை, ஆசனம் இவைகளில் வலி, மலச்சிக்கல். மேலுக்கு ஆயின்மெண்ட்.

தூஜா:- வெட்டைச்சூடுள்ளவர்கள், ஆசனவாயில் ஈரனைப்பு, அறிப்பு. எரிச்சல்.

மெர்குரி:- வெளித்தள்ளும் மூலம், ரத்தம் கலந்த சீதம் (தூஜாவுடன் மாற்றிக்கொடுக்கவும்).

ஆசிட் நைட்:- எரிச்சலுடன் அரிப்பு, மூலம் வெளியான பிறகு ஒரு மணி நேரமாவது கடுப்பு வலி—ஆசனவாய் வெடிப்புகள்.

பாஸ்பரஸ்:- ரத்தம் கொட்டும்.

அலோஸ்:- திராக்ஷைக் கொத்து மாதிரி மலம் வந்துவிட்டால் சற்றும் தாமதிக்கமுடியாது, வலி.

காலின்ஸோனியா:- மலச்சிக்கலுடன் மூலம். கர்ப்பப்பை சீக்குகள்.

சில சமயம் வலி கடுப்பு அதிகமாகி மூலம் வெளித்தள்ளின பிற்பாடு உட்செல்ல முடியாமல் ஆசனவாய் இறுக்கிக்கொண்டால் உருளைக்கிழங்கு ஒற்றடம் கொடுக்கவும். அகோனைட் டிஞ்சரை உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

சில சமயம் ஆபிரேஷனும் செய்யவேண்டும். இன்ஜ்: காப்சிகம், ஸல்பர் முதலியன.

மூலத்திலேயே கார்பாலிக் ஆசிட் கலந்த ஹாமமலிஸ் லோஷனைக் கலந்த இன்ஜெக்ஷன் செய்ய மூலம் குறைந்துவிடும்.

(95) ஆசனவாய் வெடிப்பு—Fissure of Ani.

ரொம்ப வலியுடன் கூடின வெடிப்புகள்.

காலண்டுலா, ஹாமமலிஸ், ஆசிட் நைட், காலோட் ராபிஸ் ஆயின்மெண்ட் மேலுக்கு.

(96) ஆசனவாய் அரிப்பு–Pruritus Ani.

தாங்கமுடியாத அரிப்பு, இரவில் அதிகத் தொந்திரவு கொடுக்கும். வெடிப்பு முதலியவற்றுடனிருக்கும். மூலம், புழு, ஈரல் வியாதி காரணங்களாகும்.

ஆண்டிம் க்ரூட், ரேடியம் புரோம், ஆம்ப்ரா, டியூக்ரியம், சீனா, இக்னேஷியா, ஆசிட் நைட், அலுமினா, லைகோபோட், நேட்மூர் முதலியன.

மேலுக்கு வெர்பாஸ்கம், ஈஸ்குலஸ் ஆயின்மெண்ட்.

இன்ஜ்:— ஸல்பர், மில்கோடின்.

(97) ஆசனவாய் தள்ளுதல்—PROLAPSUS ANI.

மூலம், கடும் மலச்சிக்கல், கடுமையான பேதி, மூத்திரப்பை வியாதி இவற்றினால் ஏற்படுவது.

இக்னேஷியா:- அடிக்கடி மலம் போக பிரயோஜனமில்லாத உணர்ச்சி.

பெர்ர-பாஸ்:- குழந்தைகளுக்கு சிறந்தது.

நக்ஸ்வாமி:- மலச்சிக்கலுடன் திடகாத்திரமான தேகிகள்.

அலோ:- பேதி, கடுப்பு.

போடோ:- பேதியுடன் வரும், முக்குதலினால்.

லைகோ:- சட்டென்று படியாத கேசுகள்.

காம் போஜ்:- மஞ்சள் பேதி—எரிச்சல் வலி.

ரூடா:- கொஞ்சம் முக்கினாலும் வெளிவரும்.

வெளிப்பட்ட பாகத்தை மெதுவாக விரல்களால் உட்தள்ளிவிடவும், இது சௌகரியமாகிறவரைக்கும் இடுப்பு சற்று உயரமாக வைத்துக்கொண்டு படுக்கவும். தினம் காலையில் குளிர்ந்த தண்ணீரில் பத்து நிமிஷ நேரமாவது நனைத்து வைத்திருக்கவேண்டும்.

இன்ஜ்: ரூடா, போடோபில்லம்.

(98) ஈரல் வியாதிகள்.

ஈரல் கடமை.

எச்சல் நீரால் ஸ்டார்ச் பதார்த்தம் சக்கரை சத்தாக மாற்றப்படுகிறது. இச்சக்கரைச் சத்து ஜாடராக்கினியினுலும், பான்கிரியாஸ் நீர், முதலியவைகளினுல் டெக்ஸ்ட்ரோஸ் ஆக மாற்றப்படுகிறது. இது உடனே ரத்தத்தில் கலந்துவிடுகிறது. எல்லாத் தசைகளிலும் பரவுகிறது. லெவுலோஸ் என்ற சக்கரை மாத்திரம் மிச்சப்பட்டு ஈரலினுல் சமயத்திற்கு உதவுவதற்காக ஸ்டாக் செய்யப்படுகிறது.

புரத சத்துக்கள் காஸ்டிரிக் ஜீஸினுல் பெப்டோன் முதலிய வஸ்துக்களாக மாற்றப்படுகிறது. குடலில் சில நீர்கள் இவற்றை அமினோ ஆசிட்டுகளாக மாற்றிவிடுகின்றன. பிறகு இவைகள் ஈரல் வழியாக ரத்தத்தில் கலக்கின்றன. அதிகமான அமினோ ஆசிட்டுகளையும், கழிவு பதார்த்தங்களையும் யூரியா என்ற சிறுநீராகப் பிரித்துவிடுகிறது.

கொழுப்புப் பதார்த்தங்களை ஜீரணிப்பதும், குடலின் அசைவுகளை சாதகப்படுத்துவதும் பித்த நீரின் வேலை. இது ஈரலிலிருந்தே உற்பத்தி.

(99) மஞ்சட்காமாலை—Jaundice.

இது ஈரல் வியாதி இன்னும் பல வியாதிகளில் தென்படும் குறியே.

முதலில் கண் வெள்ளைகள் மஞ்சளாகி, பிறகு நகக்கணு, முகம், கழுத்து, உடல் பிறகு கைகால் மஞ்சளாகும். மூத்திரம் கருஞ்சிவப்பு, அல்லது மஞ்சளாகி மலம் வெளுத்து, மலச்சிக்கல், அசதி,

பயம், வயிற்று வலி, கசப்பு ருசி, சுரம் நாடி மெதுவாக இருக்கலாம்.

சிறுநீரில் நைட்ரிக் ஆசிட்டை விட்டுப்பார்த்தால் அது நல்ல பச்சை நிறமாகிவிடும். பித்தப்பைக்கட்டி ஏற்பட்டிருந்தால் தாளாத வலித்துன்பமேற்படும். வாந்தி, விக்கல் முதலியனவிருக்கும்.

பித்தநீர்க் குழாயில் பித்தநீர்க்கல் வந்தடைப்பதால் மஞ்சட்காமாலை ஏற்படும். இதன் வலி அபாரம். திடீரென்று ஆரம்பித்து சிலநேரம் கழித்து வாந்தியுடன்: திடீரென நின்றுவிடும். இது பித்தப்பை இருக்கும் இடத்திலிருந்து கீழ் நோக்கி பரவும்.

ஹைட்ராஸ்டிஸ்:- டிஞ்சரை கொடுக்கவும்.

அகோனைட்:- ஈரல் வீக்கம், சுரம்.

பொர்:- வலது பக்கம் படுக்கமுடியாது, ஈரல் புறம் வலி.

சைனு:- மலேரியாவினுல், பித்தநீர்க்கல் ஏற்படாமல் தடுக்க நீடித்து உபயோகிக்கவும்.

பாஸ்:-அடிக்கடி வெளுத்த மலம், மனத்தளர்ச்சி இருமல், கடும் காமாலை.

ஆர்சனிக்:- இளைப்பு, கடும் கேசுகள்.

செலிடோனியம்:- வலது தோள்பட்டையில் வலி, எல்லாம் ஒரே மஞ்சள்.

காமோமில்லா:- ஆத்திரம் உடைய குழந்தைகள்.

இன்லூ:- செலிடோனியம், நேட்ஸல்ப்.

லேசான ஆகாரம், நிறையத் தண்ணீர், அடிக்கடி வலிக்கு ஒத்தடம்.

(100) ஈரல் சிறுத்தல்—Atrophy of Liver.

ஒரு அபூர்வமான வியாதி. ஈரல் சுருங்கி முழுவதும் கெட்டுப்போய்விடுகிறது. சிறிது மஞ்சட்காமாலை முன்னால் வரும். சில சமயம் சுரம் 106° வரைக்குமிருக்கும். முற்றினால் அதிக மஞ்சட்காமாலை, வாந்தி, ரத்தப் போக்குகள், வெளுத்த மலம், கர்ப்ப ஸ்திரீகளுக்கு கர்ப்பச்சிதைவு, தலைவலி, ஜன்னி, தசைகள் துடிப்பது, மயக்கத்துடன் மரணம். சாதாரணமாக 7 நாளில் மரணம் சம்பவிக்கும். சிறுநீரில் லியூசின்; டைரோசின் முதலியன இருக்கும்.

க்ரோடாலஸ், லாசெஸிஸ் முதலியன இன்ஜெக்ஷன்களாக கொடுப்பது அவசியம்.

(101) ஈரல் குலைக்கட்டி—Liver Enlar Gement.

கடைசி மார்க்கூட்டெலும்பின் அடிப்பக்கத்தில் நிரம்பினாற்போல்—வலது புறத்தில் ஒரு கனம் போல தோன்றும். தொட்டமுக்கினால் சிறிது கனம் தெரியும்—மலச்சிக்கல்-பசி சரியாயிருக்காது—குமட்டல் வாந்தியுங்கூட இருக்கும்.

பிரியோ:- ஈரல் கெட்டியாகத் தெரியும், மலச்சிக்கல்.

மெர்:- வலது பக்கத்தில் படுக்க முடியாது, கண் மஞ்சள், நடுக்கலுடன். வியர்வை அதிகம், மலச்சிக்கல், வெள்ளை மலம்.

நக்ஸ்வாமி:- மஞ்சள் நீர், மலபந்தம். தேகாப்பியாசமில்லாத சரீரிகள். மூலமும் இருக்கலாம்.

லைகோபோட்:- நக்ஸ்—க்குப்பிறகு. மலச்சிக்கல், உப்புசம், முதுகிலும் வலது பக்கமும் சதா வலி.

காமோமில்லா:- கோபம், பித்தவாந்தி.

ஆர்சனிக்:- நாள்பட்ட கேஸ், எரிச்சல், வாந்தி, பேதி.

செலிடோனியம்:- மஞ்சள் நாக்கு, குமட்டல், தலைவலி, மஞ்சள் நீர்.

பாஸ்பரஸ்:- ஈரல் சுருங்கியிருக்கும்.

சைனா:- நல்ல டானிக்.

ஹைட்ரோகாடைல் } இவையிரண்டையும் டிஞ்சராக தினம் 3 வேளை-இரண்டு
காரிகாபபாயா } மூன்று சொட்டுக கொடுக்கவும்.

இன்ஜ்:- சைனா, கால்ப்ளூர், மெர்.

(102) ஈரல் சிரங்கு—LIVER ABSCESS.

அஸ்தி சுரம், வியர்வை, களைப்பு, அடிக்கடி வாந்தி, மஞ்சள் காமாலை. நன்றாக வீங்கி வலிக்கும் ஈரல், இவைகள் குறிகளாம்.

ஹெபர், மெர், பாப்டீஷியா, சிலிசியா; முதலிய சிரங்கிற்குறிய மருந்துகள்.

சீழ்பிடித்துவிட்டால் ஆபிரேஷன் செய்ய வேண்டியிருக்கும்.

(103) ஈரல் கிரந்தி—Syphilis of Liver.

கம்மா என்று சொல்லப்படும் சிறுசிறு கட்டிகள் ஈரலில் ஏற்படும் மகோதரம் நிச்சயம்; மண்ணீரலும் வீங்கும்; மஞ்சட்காமாலையுமிருக்கும்.

பரம்பரையில் கிரந்தி இருக்கிறதா என்று கவனிக்கவேண்டும்.

சிகிச்சை 'ஸிபிலிஸ்' ஸுக்கு மாதிரியே.

(104) ஈரல் புற்று—Cancer of Liver.

வலது தோள்பட்டையில் வலி, ஈரலில் வலி, உடம்பு சட்டென்று இளைத்து, ஈரல் பெருத்து, தொப்புளுக்கு அடியில்கூட நீண்டுவிடும். கெட்டியாகவும் தொட்டால் வலியும், கரளை கரளையாகவும் தென்படும். மஞ்சட்காமாலை, மகோதரம் இருக்கும். ஒரு வருஷத்திற்குள் மரணம்.

கோலெஸ்டிரின்:- அடிக்கடி.

செலிடோ:- மஞ்சள் மலம், தோள்பட்டை வலி.
ஹைட்ராஸ்:- புற்று தேகவாகு—இளைப்பு.

கார்சிேனுசின்:- நடுநடுவே.

இன்ஜ்:- கார்சினேசின்.

(105) பித்தப்பைக் கல்—GALL STONE.

பித்தப்பையில் பித்தநீர் கற்களாக மாறிவிடுவதுண்டு. பெண்களுக்கு அதிகம். 30 வயதிற்குப் பிறகு சகஜம்.

வலது பக்கத்து விலாப்புறத்திலிருந்து அடிவயிறுவரைக்கும் பரவியிருக்கும் திடிரென்று ஏற்படும் வலி, நடுக்கல், அதிக வியர்வை, நாடி மெதுவாகத் துடிக்கும், சில சமயம் சுரம். வாந்தி, வாந்தியினல் சாதகம். சில மணி நேரத்திற்கு முந்தியே மஞ்சட்காமாலை ஆரம்பித்து சில நாள்வரை தொடர்ந்திருக்கும்.

கல் பித்தநீர்க்குழாயிலிருந்து குடலில் விழுந்தவுடனே வலி சட்டென்று நின்றுவிடும். ஆனல் பலவீனம் மாத்திரம் அதிகமாயிருக்கும். மலத்தைப் பரிசோதித்தால் கல்லிருப்பது தெரியும்.

கால்கார்ப்:- 15 நிமிஷத்திற்கொருதரம்.

பெர்பெரிஸ்:- முதல் மருந்து வேலைசெய்யாவிட்டால் இதை டிஞ்சராகக் கொடுக்கவும்.

டயஸ்கோரியா:- நடந்தால் சற்றுக் குறையும் வலி, அல்லது பின்புறமாக வளைந்தால் குறையும்.

கார்டுயஸ்:- ஈரலில் வலி இருந்தால்.

சைனு:- இதை 6 போடன்ஸியில் நாள்பட சாப்பிட கல் ஏற்படாது.

இன்ஜ்:- பெர்பரிஸ்.

(106) மகோதரம்—ASCITES.

பெரிடோனியத்தில் நீர் சுரப்பு — மகோதரமென்று பெயர். இது தனி வியாதியல்ல. அனேக வியாதிகளுடன்கூட இருக்கும் ஓர் குறி.

ஈரல் வியாதிகள், மூத்திரக்காய் வியாதிகள் முதலியவற்றுடனிருக்கும்.

இத்துடன்கூட மற்ற பாகங்களில் உண்டாகும் நீர் சுரப்பையும் கவனிக்கவேண்டியதே. ரத்தக் குழாய் தடைப்பட்டு சரியானபடி ரத்த ஓட்டமில்லா லாமல் ரத்தம் முறிந்து நீராக சுரக்கிறது.

இந்த வீக்கங்களெல்லாம் மிருதுவாகவும் அசைக்க முடியாமலும், பரவியும், கையினுல் அமுக் கினுல் சிறிது நேரம் பள்ளம் தெரிந்துகொண்டும், இருக்கும். ரொம்ப அதிகமாயிருந்தால் தோல் பளபளத்து, மெல்லியதாகிவிடும்.

சிகிச்சை:-

(i) பொதுவான ஊதல்—(General Dropsy) ஏபிஸ்—தாகமிருக்காது, மூத்திரக்காய் வீக்கம், ஆர்சனிக்—தாகம்—நீரில் உப்புச்சத்து.

ஸில்லா—நீர் பிரியாமல் உப்புசம்.

டிஜிடாலிஸ்—மெதுவான தளர்ந்த நாடி, மூச்சுத் திணரல், மல்லாக்கப் படுக்கமுடியாது — ஹிருதய வியாதியினுலிருந்தால் சிறந்தது. குறைந்த போடன் சியில் கொடுக்கவேண்டும்.

ஹெல்லபோரஸ்—மூளையில் சுரப்பு.

அபோசைனம்—பெருந்தாகம், தண்ணீர் குடித் தால் வாந்தி—சிறந்த மருந்து.

ஈகில் மார்மலஸ்—கால் கைகளில் அதிக சுரப்பு.

பிரியோனியா—மூட்டுகளில் சுரப்பு-மார்புச்சளி, முதலிய வியாதிகளுடனிருந்தால்.

ஸல்பர்—தோல் வியாதிகள் அமுக்கப்பட்டிருந் தால் அதனுல் ஏற்படும்.

ஆரம்— கிரந்தி நீரினுல்.

(ii) வயிற்றில் (Ascites) மகோதரமென்று பெயர்.

அபோசை, ஆர்ச, சைன, க்ரோடான், முதலியன.

(iii) மூளையில் (Hydrocephalus) ஹெல்ல, பெல்ல, ஏபிஸ், மெர்க்.

(iv) நுரையீரலின்மேல் (Hydrothorax)— ஆர்ஸ், பிரியோ, ஸல்பர், டிஜிடாலிஸ், ஹெல்ல.

(v) ஹிருதயத்தில் (Hydropericardium)–டிஜி டாலிஸ், ஸ்பைஜிலியா, ஆர்ச்-அயோட்.

(vi) மூட்டுகளில் (Hydrops Articulorum) — அகோனைட், அயோடம், பிரியோ, ஸல்பர்.

(vii) கணுக்கால்களில்-பெர்ரம், சைன, ஆர்ச்.

(viii) விரையில் (Hydrocele) (நீரண்டம்) ஏபிஸ், பல்ஸா, ரோடா, கிராபைடிஸ், ஆரம்- ஆபிரேஷன் கண்டிப்பாகச் செய்யவேண்டும்.

மகோதரத்திற்கு நீரைக் குத்திஎடுக்கவேண்டும்.

இன்ஜு:- கால்ப்ளுர், நேட்மூர்.

(107) பெரிடோனியம் வீக்கம்—PERITONITIS.

குடல் கிருமிகளினுலும், சீழ் முதலியவற்றினு லும் உண்டாவது. வயிற்றுப்புண், டைபாயிட் புண், அப்பெண்டிக்ஸ், நெறுக்கப்பட்ட ஹெர்னியா முத லான வியாதிகளினுல் வீக்கம் புண் பரவி ஏற்பட லாம்.

வயிறு முழுவதும் தொடமுடியாத ரண வலி, துரிதமான மூச்சு, துரிதமான கம்பிபோன்ற நாடி, குழிவிழுந்த கண்கள், முகம் வெளிறி, கருத்து, மலச் சிக்கல், வாந்தி, விக்கல், வரண்ட நாக்கு, சுரம் இருக்கும், வயிறு விரிவது தெரியாது.

ரொம்ப ஆபத்தானது.

உடனே ஆபிரேஷன் செய்யவேண்டும். அவசியமானல் மார்பியா இன்ஜெக்ஷன் கொடுக்க வேண்டும்.

அகோனைட்:- ஆரம்பத்தில்.

பெல்ல:- நகத்தினல் பிடிங்கினற்போல் வயிற்றினுள் வலி.

பெர்-கார்:- ரொம்பவும் தொடமுடியாத வலி, கடுப்பு.

நாள்பட்டவைகளுக்கு லைகோபோடியம், ஸல்பர் முதலியன.

பாப்டீஷியா, அடிக்கடி உதவும்.

இன்ஃபு:- பைரோஜன்.

ரத்தக்குழாய் வியாதிகள்.

(108) ஹிருதயத்தின் வியாதிகள். Diseases of Heart.

ஹிருதய வீக்கம், ஹிருதயம் பெருத்தல், ஹிருதயத்தைச் சுற்றியிருக்கும் சதைகள் வீக்கம் காணு

தல், ஹிருதய வால்வுகள் கெட்டுவிடுதல் முதலியன தற்காலத்தில் அதிகமாக காணப்படுபவை.

சிறுவயதில் சூலைப்பிடிப்பு, வாயு சுரம், அதிக வேலை, அதிகக்கவலை, இன்ப்ளுயன்ஸா, டிப்திரியா, மூத்திரக்காய் வியாதிகள் முதலியனவும் காரணங்களாகலாம்.

பொதுவாக இவ்வியாதிகளை எந்தெந்த அவயவம் கெட்டுவிட்டதென்று சரிவர தெரிந்துகொண்டு சரியானபடி சிகிச்சை செய்யவேண்டும். இவைகளைப் பூர்ணமாய் குணப்படுத்த முடியாவிட்டாலும் சாதகம் பெரிதும் செய்யலாம்.

(109) ஹிருதய வலி—Angina Pectoris.

திடீரென மார்பில் ஹிருதயமிருக்கும் பக்கம் வலி—வலி இறுக்கிப்பிடித்தாற்போல், எரிச்சல், ரொம்ப பயம், இத்துடன் வரும். ஹிருதயத்திலிருந்து இக்கடுமையான, பயங்கரமான வலி மார்புறம் எங்கும் பரவும். மயக்கம் உடனே இறந்துவிடுவோமென்ற பயம், படபடப்பு, மூச்சுத் திணரல், ஆகவே உடனே எங்காவது உட்கார்ந்துகொண்டு ஓய்வுடனிருக்கவேண்டும், ஒரே வியர்வை—சில நிமிடங்களிலேயே இது சௌகரியமாகி, பின்பு அடிக்கடி ஏற்பட்டு, மரணம் சம்பவிக்கும்.

வலியின்போது:

ஆசிட் ஹைட்ரோசயனிக்:— இதை 3x போடன்சியில் 5 நிமிஷத்திற்கொருதரம் கொடுக்கவும்.

அகோனைட்:- இதை டிஞ்சராக அடிக்கடி சாப்பிடவும்.

க்ளானயின்:-மார்பு வெடித்துவிடும்போல ஹிருதய படபடப்பு, மூச்சுத்திணரல்.

ஸ்பைஜிலியா:- புகையிலை, சாராயம் உபயோகிப் பவர்களுக்கு குத்தி, வெட்டும் வலி, கிழிக்கும் வலி- மயக்கம், மூச்சுத்திணரல், இடதுகை முழுவதும் வலி.

ஸல்பூரிக் ஈதர் } :- முதல் மருந்தை ஒரு ஸ்பூன்
அமில்-நைட்ர் } அளவு சாப்பிட உடனே
வலி சௌகரியமாகும். இரண்டாவதை முகர வேண்டும்.

டிஜிடாலிஸ், விராட்ரம், ஆரம், ஆர்சனிக், ஆர்ச்-அயோட் முதலியன உதவும்.

நாஜா:- நரம்பு பல்ஹீனம்—படபடப்பு சிறந்த மருந்து.

காக்டஸ்:- ஹிருதயம் இரும்புக் கம்பியினால் இறுக்கப்பட்டதுபோல் வலி.

இன்ஜ்:- பெயின்கில், ஆங்கினா.

(110) மயக்கம்—Swooning.

அதிக ரத்தப்போக்கு முதலியவற்றால் ஏற்படு வது, மன அதிர்ச்சியினால் அதாவது பயம், துக்கம், ஆனந்தம்—ஹிஸ்டிரியா முதலியவற்றால்.

உடனே அமில்-நைட், அம்மோனியம் கார்ப் இவற்றை முகரச் செய்யவேண்டும். காம்பர், மாஸ்- சஸ் டிஞ்சரையும் உபயோகிக்கலாம். உள்ளுக்கும் பின்னிரண்டையும் கொடுக்கலாம். முகத்தில் கொஞ் சம் குளிர்ந்த தண்ணீரைத் தெளித்து காற்றோட்ட மாக வைக்கவேண்டும்.

பலவீனத்திற்கு சைனா, ஆர்ச், ஜல்ஸ் முதலி யன பின்பு கொடுக்கலாம்.

ஹிருதய வியாதியினாலிருந்தால் காக்டஸ், டிஜி டாலிஸ், மாஸ்சஸ், முதலியன.

(111) படபடப்பு—PALPITATION.

நாடித்துடிப்பு, சாதாரணத்தைவிட துரித மாகவோ அல்லது பலமாகவோ அல்லது இரண்டும் சேர்ந்தோ இருக்குமானால் 'படபடப்பு, ஏற்படும்.

அஜீரணத்தினால்கூட ஏற்படும். நரம்புத் தளர்ச்சியுடையவர்கள்; ஹிருதய வியாதியுடையவர் கள், மன அதிர்ச்சி, அதிகமான சந்தோஷம், துக் கம், பயம், அதிக தேகப்பரிசிரமம்—அதிக டீ சாப் பிடுவதாலும் ஏற்படும். புகையிலை குடிப்பதாலும் ஏற்படும்.

ஹிருதய தசையில் மாறுதல் ஏற்படுவதால் பட படப்பு கண்டிப்பாக ஏற்படும். இதை ஜாக்கிரதை யாக கவனிக்கவேண்டும்.

அகோனைட்:- பயத்தினால்—சிறந்த மருந்து.

நக்ஸ்வா:- அஜீரணத்தினால்; சாப்பிட்டதும் அதிகமாதல்.

பல்ஸ்:- பேதி—பெண்களுக்கும், சிவந்த சரீர முடையவர்களுக்கும்.

(114) காயிடர்—GOITRE.

இது தைராயிட் கிளாண்டு பெருத்துவிடுவது, இதுவும் பெரும்பாலும் ஸ்திரீகளைத்தாக்குவது காரணம் தெரியாது.

சிலசமயம் ஆபிரேஷன் செய்யவேண்டியதுண்டு.

அயோடம், கேலி-அயோட், ஸ்பான்ஜியா, லேபிஸ் ஆல்பஸ்.

தைராயிடினம் 3x, ஆஸிட் ப்ளூர் 3x முதலியன அதிக உபயோகமுள்ளவை. டியூபர்குலினம், ஸைகோபோடியம் உபயோகப்படும்.

இன்ஜ்:- அயோடம்.

(115) டிடானி—TETANY.

பாரா தைராயிட் என்ற ஒரு ஜதை கிளாண்டுகள் கால்சியம் சத்து சரீரத்தில் உபயோகமாகுவதற்கு உபகரணமானவை. இவை சரியாக வேலை செய்யாவிட்டால் நரம்புகள் கெட்டு, தசைகளில் வலிப்புகள்மாதிரி ஏற்படும்.

இது பெருவாரியாக தாக்கும் இயல்புடையது. ரிக்கெட்ஸ் வியாதியோடு இது வருவது சகஜம்.

கைகள் மார்புப் பக்கம் முடங்கி, கட்டைவிரலும் உள்மடங்கியிருக்கும். கால்விரல்களும் முடங்கும்; நாட்கணக்கில் நீடிக்கும்.

குழந்தைகள் தப்பிக்கும். பெரியவர்களுக்கு காடராக்ட் வியாதி உண்டாகிவிடும்.

கால்சியம் இன்ஜெக்ஷன் அதி அவசியம்.

கால்கார்ப் 10M போடன்சியில் கொடுக்கவும். பெல்ல அல்லது நக்ஸ்வாமி வலிப்புகளுக்கு உபயோகமாகும்.

தைராயிடின் 2x போடன்சியில் அடிக்கடி கொடுக்கவும்.

(116) அடிசன் வியாதி — ADDISON'S DISEASE.

மூத்திரக்காய்களுக்குமேல் அட்ரினல் கிளாண்டுகளிருக்கின்றன. இவை வியாதியுற்றால் ரொம்ப பலவீனம், ஹிருதய பலவீனம், தோல் கருத்து, வாந்தி முதலியன. பசியின்மை, பேதி முதலியன. கருப்பு கலர் முகம், கைகள், முதலிய பலவிடங்களில் ஏற்பட்டுவிடும். ரொம்ப நீடித்து லேசில் சௌகரியமாகாத வியாதி.

கால்-கார்ப்:- பெரும்பாடியான சரீரம்.

அட்ரனலின்:- இதை உபயோகிக்கலாம்.

பாசில்லினம்:- வாரம் ஒரு முறை.

நேட்ரூர்:- அடிக்கடி.

(117) அக்ரோமிகாலி—ACROMEGALY.

மூளையின் அடிப்பக்கத்தில் பிடியூடரி கிளாண்டு இருக்கிறது. இதன் நீர் சுரப்பு ரத்தக்கொதிப்பை அதிகரிக்கும். இது வியாதியுற்றுவிட்டதானால் ராக்ஷஸன் மாதிரி வளர்ந்துவிடுவான். எலும்புகள் பெருக்கும். கால் கைகள் பெரிதாக ஆகும்; நெற்றிப் பொட்டில் தலைவலி, பெருந்தூக்கம், நீரில் சக்கரை, பிறகு கொழுப்பு அதிகமாகும்; நாடி மெதுவாகவும், சரீர உஷ்ணம் குறைந்தும், நிறைய சர்க்கரையும் பிடிக்கும். காயிடரும் இத்துடனிருக்கலாம்.

தைராயிடின், ஹெக்லாலாவா, பாஸ்பரஸ் முதலியன உபயோகப்படும்.

இன்ஜ்:- பாசில்லினம்.

(118) ஸ்பிலீன் கட்டி—SPLENO MEGALY.

ரத்தச்சோகை, ரத்தக்கசிவு, ஸ்பிலீன் வீக்கம், பிறகு ஈரல் வீக்கம், மஞ்சட்காமாலை, மகோதரம், முதலியன. மலேரியா கிரந்திஜுரம் இவைகளுடன் கூடியிருக்கும். ரத்தத்தின் சிவப்பு வடிகங்கள் பாதிக்குமேல் குறைந்துவிடும்.

சியோனுதஸ்:- வலி, வீக்கம்.
அகாரிகஸ்:- குத்தும் வலி.
கார்டுவஸ்:- இதுவும் நல்ல மருந்து.
அர்டிகா:-மலேரியாவிற்குப் பிறகு கவுட் வியாதி.
பாஸ்பரஸ்:- ரத்தக்கசிவு.
இன்ஜ்:- அர்டிகா—வீடிஸ்.

சுவாசக்குழாய் வியாதிகள்.

(119) தொண்டைக்கம்மல்—HOARSENESS.

சத்தம் உண்டாக்கும் ஜவ்வுகள் வேலை செய்யாமலிருந்தால் ஏற்படுவது. சாதாரண ஜலதோஷம், கிரந்திப்புண் (தொண்டையில்) டி. பி. புற்று முதலியன. ஹிஸ்டிரியா, நரம்புதளர்ச்சி முதலியன.

ஆர்னிகா:- அதிக பரிசிரமத்திற்குப் பிறகு.
காஸ்டிகம்:- ஜலதோஷம்.
இக்னேஷியா:- ஹிஸ்டிரியாவினால்.

சொலானம் சான்:- ஜலதோஷத்தினால்-சிறந்தது.
ஜெல்ச:- மாத விலக்கு காலத்தில்.
அயோட்:- பலவீனத்தினால்.
பரைடா கார்ப்:- நாள்பட்டது.
பைடலோகா:- சாதாரணமானது.
கார்போவெஜி:- நாள்பட்டது.
ஹெபர்:- இழுப்புடன்.
ஸ்பான்ஜி:- ஜலதோஷத்துடன்.
இன்ஜ்:- வஸாகாகோ—பிரான்கோலின்.

(120) பிரான்கைடிஸ்—Bronchitis.

தொண்டைக்குழாய் ஜலதோஷம் பிடித்து வீங்கிவிடுகிறது.

சுரம், தலைவலி, அசதி, பயம், தொண்டை கரகரப்பு, இருமல், சூடு, மார்புவலி, ஜலதோஷம் இருமல் அதிகமாகி, கோழை அதிகமாக வெளிப்படும். மூச்சு விடுவதில் சிரமம், வேகமாகவும், இழுப்பு அதிகம் இருமல், சில சமயம் இரத்தம் கலந்த கோழை, மூச்சுவிடும்போது கா கா வென்ற சத்தம், கோழை பிறகு தடிப்பாகி, மஞ்சளாகி சீழ் கலந்து, இருக்கலாம். நாடி துரிதமாகவும், பலவீனப்பட்டுமிருக்கும். சுரம் 105° F வரைக்குமிருக்கலாம். தலைவலி, கண்களில் வலி, இருமினால் அதிகப்படும், நாக்கு நாற்றமடிக்கும், மூத்திரம் சிவந்து காணும், 4-8 நாட்களில் இவ்வியாதி சமனமடையும், வரவர படிமானமாகும்.

வியாதி கடுமையாகுமானால், சில்லென்ற வியர்வை கொட்டும், கபம் கள களவென்ற சத்தம்,

மூச்சுத்திணரல் அதிகமாகி, இரும சக்தியில்லாமல், ஜன்னி கண்டு மரணமடைவர்.

கிரானிக் பிரான்கைடிஸ் என்பது வயதானவர்களுக்கு அதிகமாக உண்டாவது. வழக்கமான இருமல், மூச்சுவிட சிரமம், நிறைய கோழை, சுரமே இருக்காது. அடிக்கடி இருமுவதாலும் நுரையீரலின் காற்றுப்பைகள் அகன்று விரிந்து 'எம்பிசீமா' என்ற வியாதியை உண்டாக்குகின்றன.

சாதாரண ஜலதோஷம் மாதிரியே குறிகள் சீதோஷ்ணஸ்திதி மாறுதலினால் சகஜம்.

அகோனைட்:- ஆரம்பத்தில் சுரம், குளிர், வரட்டு இருமல்.

பிரையோ:- நல்ல சுரம், உலுக்கும் இருமல், தோள்பட்டைகளில் வலி, மலச்சிக்கல்.

பெல்ல:- வரட்டிருமல், வாந்தி, மார்பில் வலி, முகம் சிவப்பு, சுரம்:

மெர்:- தளர்ந்த கபம், வியர்வை.

கேலி அயோட்:-நாள்பட்ட இருமல்—ஜலதோஷத் தலைவலி.

கேலி-பைக்:-கம்பிபோல், பிசின்போல் கோழை.

ஐபிகாக்:- குமட்டல், மூச்சுத் திணரல் தொண்டைச் சளியை வெளிப்படுத்தும்.

ஆண்டிம் டார்ட்:- ரொம்ப பலவீனம், இருமல், கரகரப்பு, நிறைய கோழை, நாக்கு வெளுப்பு படிந்து, வாந்தியெடுக்க உணர்ச்சி, குழந்தைகளுக்கு அதிக உபயோகமுள்ளது.

ஆர்ச்:- படுத்துக்கொண்டால் மூச்சுவிட சிரமம், மூச்சுத்திணரல், வயதானவர்களுக்கும், மெலிந்தவர்களுக்குமுபயோகமானது.

ஆர்ச்-அயோட்:-டி. பி. மாதிரி, இரவில் வியர்வை, ரொம்ப பலவீனம்.

பாஸ்பரஸ்:- நாள்பட்ட கேசுகள், நுரையீரல் தாக்கப்படும்.

ஹெபார்:-நிறையமஞ்சளான கபம், தொண்டைக் கம்மல், விழுங்கும்போது தொண்டை அடைப்பு மாதிரி உணர்ச்சி.

ஜஸ்டிசியா:- ரத்தம் கலந்த கோழை.

ஓசிமம்:- சற்று நாற்றத்துடன், நிறைய கோழை சிறந்த மருந்து.

பல்ஸ்:- படுத்தால் அதிகம்; படுக்கையில் எழுந்து உட்காரவேண்டும்; உஷ்ணமான அறையில் அதிகப்படும்.

ஸல்பர்:- நீடித்த கேசுகள், தலைவலி, ஆஸ்த்மா, மலச்சிக்கல்.

கார்போவெஜி:- வயதானவர்களுக்கு கிரானிக் பிரான்கைடிஸ், அதிகக் கோழை.

ஸாங்கு:- மூச்சுவிடச்சிரமம், கன்னங்கள் சிவந்திருக்கும்.

அம்மோ-கார்ப்:- நாள்பட்ட வியாதி, இருமி கோழையை வெளிப்படுத்த முடியாது.

ஸெனிகா:- வயதானவர்களுக்கு உடம்பை உலுக்கும் கடும் இருமல்.

காஸ்டிகம்:- இருமும்போது சிறுநீர் தெரிக்கும்.

நேட்மூர்:- இருமல் கோழை தண்ணீர்போல, தலைவலியுடனிருமல், சிறுநீர் தெரிக்கும்—மலச் சிக்கல்.

ருமக்ஸ்:- மார்பில் வலி, சில்லென்ற காற்றில் அதிகப்படும்.

ஹையாசி:- படுத்துக்கொண்டால் வரும் இருமல்.

கோனியம்:- மார்பின் நடுவேயிருந்து கிளம்பும் வரட்டிருமல், படுத்துக்கொண்டவுடன் இதுவும் வரும்.

அவியார்:- டி. பி. மாதிரி இன்ப்ளுயன்ஸா சுரத்தில் இருமல்.

கடும் கேசுகளுக்கு இரண்டு மணிக்கொருதரம் கொடுக்கவும். நாள்பட்ட கேசுகளுக்கு தினம் மூன்று தடவையாவது.

ஆகாரம் நன்றாக சீரணிக்கக்கூடியதாகவும், பார்லிவாட்டர் முதலியனதாகவும் இருக்கவேண்டும். இது நாட்பட்ட கேசுகளுக்கு இல்லை.

அதிகமாக குளிர், ஊதல் காற்றுக்கு வெளிப்படாமல் சரீரத்தை கம்பளிச் சட்டையைப்போட்டு காப்பாற்றவேண்டும்.

இன்டு:- வஸாகாகோ, ப்ரான்கோலின் தினம் இரண்டு தடவையாவது கொடுக்கவேண்டும்.

(121) ஜலதோஷம்—COLD.

சிறிது அசதி, குளிர், தலை கனம், தும்மல், கண்களில் நீர் சுரப்பு, மூக்கடைப்பு, தண்ணீர்போன்ற

மூக்குச்சளி, முதலிய குறிகளுடன் ஆரம்பிக்கும். கடுமையான தாக்குதலானால் இருமல், தொண்டைக் கரகரப்பு, கம்மல், வரட்சி, மூக்கு வீக்கம், சுரம், துரித நாடி, பசியின்மை, உடம்பெல்லாம் வலி முதலியன இருக்கும். இதுவே பிரான்கைடிஸ், நிமோனியா, ப்ளூரஸி, இன்ப்ளுயன்ஸா, சிலசமயம் டி. பி. இவைகளுக்கு ஆரம்பமாயிருக்கலாம். ஆகவே உடனடியாக வைத்தியம் செய்வது மிகவும் அவசியம்.

சில்லென்ற காற்றில் இருப்பதாலும், நனைவதாலும், ஈரத்துணிகளை கட்டிக்கொள்வதாலும், இது ஏற்படும்.

காம்பர்:- உடனே கொடுக்க சிறந்தது.

அகோனைட்:- சுரவேகம்; இதுவேபோதும்.

பெல்லிஸ்:- ஐஸ், முதலானவற்றினால்.

யூபரேஷியா:- கண்களிலிருந்து நீர் வடியும்.

ஜெல்சமியம்:- மூக்கிலிருந்து தண்ணீர்போல இருமல், கம்மல், அகோனைட்டிற்குப்பிறகு உடம்பெல்லாம் அசதி, வலி.

மெர்:- தடித்த சளியுடன்கூடினது—அடிக்கடி தும்மல், வியர்வை ஏராளம்.

நக்ஸ்வாமி:- அடைபட்ட மூக்கு.

சீபா:- மூக்கில் புண் உண்டாக்கும் தண்ணீர் போன்ற ஒழுக்கு.

ஸல்ப்:- வாசனை இராது.

ஹெபார்:- மூக்கு வீங்கி தொண்டை விழுங்க சிரமம்.

கேலிபைக்:- நாள்பட்ட சளி, கம்பிப்பிசினி போன்ற கோழை; நாக்கு மஞ்சள் மாசுபடர்ந்திருக்கும்.

ரஸ்டாக்ஸ்:- ஜலத்தில் நனைவதால்.

ப்ரியோ:- தொண்டைச்சளி, தலைவலி பிளக்கும் இருமல்—நல்ல மருந்து.

பாப்டீஷியா:- சுரத்துடனிருமல்.

யூபடோரியம்:- இன்ப்ளுயன்ஸா ஜலதோஷம்.

காமோ:- குழந்தைகளுக்கு.

டல்காமரா:- ஈரதைப்பிலிருந்தால்—ஜலதோஷம் பிடிக்காமலிருக்க.

ட்யூபர்குலினம்:- அடிக்கடி ஜலதோஷம் – நாள்பட்டது.

ஐபிகாக்:- களகளவென்ற கபம்.

இன்ஜ்:- பிராஸ்கோலின், வஸாகாகோ.

(122) ஆஸ்த்மா—ASTHMA.

மூச்சு விடத்திணறல், இழுப்பு, அதிக சத்தத்துடன் இழுப்பு, மார்பு அப்படியே இறுக்கிறாற்போல தோற்றம். மூச்சு நின்றுவிடும்போல பயம், ஒவ்வொரு இழுப்பும் கோழை வெளிவந்தவுடன் சற்று சாந்தம். இம்மாதிரி குறிகளுடன்கூடின ஓர் நோய். இதை காசம் என்று சொல்லுவார்கள்.

இதன் சிகிச்சையைப்பற்றியும், பூரா விவரத்தையும் நம் 'ஆஸ்த்மா' புஸ்தகத்தில் காணலாம்.

முக்கிய மருந்துகள்:-

நக்ஸ்வாமி, ஆசிட் ஹைட்ரோ, குப்ரம்மெட், அகோனைட், ஐபிகாக், லொபீலியா, நேட் ஸல்ப், நேட்மூர், ஐபிகாக், ஸாம்புகஸ், ஸில்லா, பிளாட்டா, ஓசிமம், ஜஸ்டிசியா, ஸல்பர், ஆர்சனிக், கேலிகார்ப், கார்போவெஜ், அர்ஜ்னைட், கேலி அயோட், பல்ஸ், ஆண்டிம்டார்ட், பெல்ல, கால்கார்ப், ஸோரினம், பாசில்லினம் முதலியன.

இன்ஜ்:- பிராஸ்கோலின், அகிருபான், ஆரோசால் முதலியன.

சுவாசாசய அப்பியாசங்கள், ஆகாரநியமங்கள் நன்றாக சீரணிக்கக்கூடிய ஆகாரம் முதலியன கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

(123) நிமோனியா—PNEUMONIA.

இது நுரையீரல் வீங்குவதனால் ஏற்படும் சுரம். சுரம் கடுமையாகக்கண்டு, 10 நாட்களுக்குள் படிந்துவிடும்.

சில சமயம் ஒரு நுரையீரலும், சிலசமயம் இரண்டு நுரையீரலும் தாக்கப்படும்.

திடீரென்று சுரம் ஏற்பட்டு, அமைதியில்லாமல், வலி உள்ளூர, தோள்பட்டைப்பக்கம், மார்புறத்தில் அமுக்கத்துடன் வலி, உடம்பு நோயாகிவிட்டதாகத் தோற்றம்; அடிக்கடி இருமல்; மஞ்சளான, அல்லது பச்சையான கோழை, சற்று சிவப்பு கலந்த அல்லது ரத்தங்கலந்த கோழை, மூச்சு சிரமப்பட்டும், துரிதப்பட்டும், தோல் உஷ்ணமாகவும், நாசிவரண்டு துடிக்கும்; கண்களில் கண்ணீர் இராது; பெருந்

இன்ஜ்:- நிமோட்ரன், ஸெல்பநயோசால் 3x, பயோ ஆம்னின்.

தாக்கப்பட்ட பாகத்திற்கு ஆண்டிப்ளஜிஸ்டின் அல்லது யாஸ் விரைத்துவிடாமல் போட்டுவர வேண்டும். சுரத்திற்குப்போல ஆகாரம் கஞ்சி முதலியன.

(124) ப்ளூரஸி—PLEURISY.

நுரையீரலைச் சுற்றியிருக்கும் மேல் தோலைத் தாக்கும் சுரம்.

திடீரென நடுக்கல், சுரம், குத்திக்கிழிக்கும் வலி, இரண்டு விலாப்புறமும் வலி, ஒரு பக்கம் அல்லது இரண்டுபக்கமும், இருமஇரும வலி அதிகமாகிவிடும், கொஞ்சம் மூச்சு இழுத்து விட்டாலும் அதிகமாகும், மார்க்கூட்டெலும்புகளின் மத்தியில் தொட்டால் ரணம்மாதிரி வலி, மூச்சு வயிற்றின் அடியிலிருந்து வரும், சிணுக்கிருமல், வரண்ட நாக்கு, சிவந்தமுகம், கம்பிபோன்ற துரிதமான நாடி, 100 வீதம், சிறுநீர் கம்மியாகி, சிவந்துமிருக்கும், தாக்கப்பட்ட பாகத்தில் படுத்துக்கொள்ளுவர். மல்லாக்கவும் படுக்கலாம். நிமோனியாவும்கூட ஏற்படலாம். சில கேசுகளில் நீர் சுரந்து 'ஹைட்ரோ தொரக்ஸ்' என்ற வியாதியும்கூடவே உற்பத்தியாகும். அப்போது இதை குத்திவெளிப்படுத்துவதுமுண்டு. அடிபட்டதினாலும், நிமோனியாவிற்குச் சொன்ன காரணத்தினாலும் ஏற்படலாம்.

ஸ்டெதாஸ்கோப்பு வைத்துப் பார்த்தால் பேப்பரைத் தேய்த்தாற்போல் முறமுறவென்று சத்தம் கேட்கும், கொஞ்ச நேரம் கழித்து இது மறைந்துவிடும். பிறகு மத்தென்று சத்தம் மந்தித்துவிடும்.

டி. பி. கிருமியினால் இது பெரும்பாலும் உண்டாகும். உஷ்ணப்பட்டிருக்கும்போது குளிர்ச்சிபட்டாலும் உண்டாவதுண்டு. மார்ப்புறத்தில் ஆபரேஷன்கள் முதலியவைகளினாலும் ஏற்படுவது சகஜம்.

அகோனைட்:- ஆரம்பத்தில் சுரத்துடன், வலி, அமைதியின்மை.

கேலி கார்ப்:- இரண்டு விலாப்புறங்களிலும் குத்தி வெட்டும் வலி.

ப்ரை:- தசைகளில் வலி, அசதி.

ரானங்குலஸ்:- இடது பக்கத்து—வலி கடுமையாக குத்திக் கிழிப்பதுபோல.

இன்ஜ்:- பெயின்கில், பயோ ஆம்னின், முதலியன.

நடுநடுவே இதற்கும் மற்றெல்லா நுரையீரல் வியாதிக்கும் பாசில்லினம் கொடுக்கவேண்டியது. மிக மிக அவசியம்.

மூத்திரக்காய் வியாதிகள்.

(125) மூத்திரப் பரிசோதனை.

மூத்திரத்தை உண்டாக்குவது மூத்திரக்காய். மூத்திரத்தை வைத்துக்கொண்டு வெளிவிடுவது மூத்திரப்பை. மூத்திரக்காய் இரத்தத்திலிருந்து மூத்திரத்தைப் பிரித்து யூரிடர் என்ற குழாய்கள் வழியாக மூத்திரப்பைக்கு கொண்டுவந்து சேர்க்கின்றன.

யூரித்ரா என்ற குழாய் வழியாக மூத்திரம் வெளிப்படுகிறது.

நல்ல தேகாரோக்கியமான மூத்திரம் சிறிது வெள்ளை கலந்த மஞ்சள் நிறமாகவும், காலையில் சற்று நிறம் அதிகமாகவும், மாலையில் சற்று வெளுப்பாகவும் இருக்கும். வாசனை அம்மோனியா மாதிரி இருக்கும். வெடிப்பு நாற்றமிருக்காது. நாழி தங்கியிருந்தாலும் மாசு படியாது. வயதாக ஆக சற்று கடுமையாகவும், ரொம்ப வேலை செய்கிறவர்களுக்கு சிறிது கலர் கூடவுமிருக்கும். சாதாரணமாக 4—6 தடவைகள் சிறுநீர் கழியும் ஒரு நாளில்—வலி, முக்கல் ஒன்றுமிருக்காது.

சாதாரண மூத்திரத்தின் ஸ்பெசிபிக் கிராவிடி 1. 015—1. 025 இருக்கும் அதாவது தண்ணீரை விட சற்றே கனம். அளவு தினம் 45–52 அவுன்ஸ் வரைக்கும் கழியும்.

சாதாரணமாக ஆசிட்டாகத் தெரியும். சாப்பிட்டவுடன் சற்று ஆல்கலைனாக இருக்கும். சக்கரை இருந்தால் தேன் மாதிரியும், க்ளோரோபாரம் வாசனை இருக்கலாம்.

யூரியா:-. சுரம், அதிக நைட்ரஜன் சத்துள்ள ஆகாரம் சாப்பிட்டாலும், டயபிடிஸ், கிரானிக் கவுட் முதலியவற்றில் யூரியா அதிகமாயிருக்கும். பிரைட்ஸ் வியாதி முதலியவற்றில் இது குறைந்து காணும். அவயவங்கள் கெட்டுப்போகும் சமயங்களில் அதாவது ஈரல்வீக்கங்கள், நாள்பட்ட போக்கு, சுரங்களில் கடைசி காலங்களில் இது குறைந்து காணும்.

இது யூரியா மீட்டர் வைத்து பரிசோதனை செய்யவேண்டும்.

யூரிக் ஆசிட் 7—12 கிரெயின் அளவு இருக்கும். மாமிச ஆகாரம், சுரங்கள், ஈரல் ஸ்பிலீன் வியாதிகள், சுவாசகோச, ஹிருதய வியாதிகளிலும் இது அதிகமாயிருக்கும். பூதக்கண்ணாடியினால் பார்த்தால் இது தெரியவரும்.

5 சொட்டு ஒரு பீங்கான் கோப்பையில் வைக்கவும். ஒரு சொட்டு நைட்ரிக் ஆசிட் விடவும். மெள்ள காய்ச்சவும். நன்றாக உலர்ந்தவுடன், ஒரு சொட்டு அம்மோனியாவை விடவும்; உடனே ஊதா கலர் தெரியும்

க்ளோரைட்ஸ்:- சில்வர் நைட்ரேட்டினால் பரிசோதிக்கத் தெரியும். ஆனால் மூத்திரத்தை முதலில் ஆஸிட் நைட்ரிக் விட்டு ஆசிடாக அடிக்கவும்.

பாஸ்பேட்ஸ்:- 2—3.5 கிராம் அளவு தினம் கழியும். பூதக்கண்ணாடி வைத்து பார்ப்பதுதான் நல்ல பரிசோதனை.

அல்புமன்:-இதை உப்புச்சத்து என்று சொல்லுவார்கள்.

(1) கொஞ்சம் நைட்ரிக் ஆசிட் ஒரு டெஸ்ட் ட்யூப்பில் எடுத்துக்கொள். மூத்திரத்தை மெதுவாக அதில் விடவும். இரண்டும் கலக்கும் இடத்தில் ஒரு வெள்ளை வளையம் உண்டாகும்; நிறைய அல்புமனிருந்தால் உடனே வளையம் உண்டாகும், கொஞ்சமாயிருந்தால் இரண்டு மூன்று நிமிஷமாகும்.

(2) மூத்திரத்தை பரிசோதனைக் குழாயில் பாதிவிட்டு நுனியில் ½ அங்குலம் மாத்திரம் காய்ச்சவும், வெள்ளையாக மாறினால் அல்புமனிருக்கிறது.

பாஸ்பேட்டும் இருக்கலாம். ஆகவே ஒரு இரண்டு சொட்டு அசிடிக் ஆசிட் விடவும்; கரையாமலிருந்தால் அல்புமன், கரைந்தால் பாஸ்பேட்ஸ்;

(3) அளவு எவ்வளவு இருக்கிறதென்பதை எஸ்பாச் அல்புமனாமீடரைக்கொண்டு கண்டு பிடிக்கலாம்.

சர்க்கரை:- இதைக்கண்டுபிடிப்பதற்கு அநேக விதங்கள் உண்டு. முக்கியமானவை.

(1) **பீலிங்க்ஸ் டெஸ்ட்:-** ஸொல்யூஷன் நம்பர் 1ஐயும், 2ஐயும் கலந்து பரிசோதனைக் குழாயில் காய்ச்சவும். சொட்டுசொட்டாக மூத்திரத்தைவிடவும். நிறைய சக்கரை இருந்தால் உடனே சிவப்பாக மாறிவிடும். கொஞ்சமாயிருந்தால் மஞ்சள்.

(2) **பெனிடிக்ட்ஸ் டெஸ்ட்:-** பீலிங்க்ஸ் டெஸ்ட்டைவிட சிறந்தது. 5 c. c. அளவு இந்த ஸொல்யூஷனில் 10 சொட்டு மூத்திரத்தைவிடவும். விட்டுக் காய்ச்சவும். சிறிது குளிர்ந்தவுடன் கலர் மாறும்.

அசிடோன்:- சில சொட்டு மூத்திரத்திற்கு புதுசாகத் தயாரித்த ஸோடியம் நைட்ரோ பிரஸைட் சில சொட்டு ஸோடியம் ஹைட்ராக்ஸைட்விடு. கருஞ்சிவப்பு கலர் ஏற்படும். ஸ்டிராங் அசிடிக் ஆசிட் விடவும். சிவப்பு ரோஸாக மாறிவிடும். அசிடோன் இல்லையென்றால் கலர் மறைந்துவிடும்.

அசிடோ அசிடிக் ஆசிட்:- டிஞ்சர் பெர்ரி க்ளோரைட் சேர்த்தால் நல்ல சிவப்பு கலர் ஏற்படும்.

பைல்:- மூத்திரத்தின்மேல் டைல்யூட் டிஞ்சர் அயோடின் விடவும். இரண்டும் கலக்கும் இடத்தில் பச்சை வளையம் ஏற்படும்.

சீழ்:- பூதக்கண்ணாடியின் வழியாய் பார்க்கவும்.

(126) ஆல்புமன் மூத்திரம்—ALBUMINURIA.

மூத்திரத்தில் அல்புமன் இருப்பது. இது மூத்திரக்காய் நோயில் ஏற்படும். மூத்திரக்காய்க்கல், கட்டிகள், ரத்த சோகை, ஸ்கார்லெட் சுரம், டிப்தீரியா, சில கர்ப்பகாலம், சில விஷயங்கள்—காந்தாரிஸ், டர்பென்டைன், ஆர்சனிக், பாஸ்பரஸ், அதிக மார்பியா உபயோகப்படுத்தல் இவைகளினால் இது ஏற்படும்.

அந்தந்த காரணமான வியாதிகளை சரிப்படுத்த வேண்டும்.

(127) மூத்திர விஷம்—URAEMIA.

மூத்திரம் சரியாகப் பிரியாமல் தங்கியிருப்பதனாலும், சில மூத்திரக்காய் வியாதிகளினாலும் விஷம் ரத்தத்தில் கலந்துவிடும்.

காக்காய் வலிப்பு மாதிரி வலிப்புகள், திடீரென்று உற்பத்தியாகும் தலைவலி, குமட்டல், மயக்கஜன்னி, வலிப்புகளுக்குப் பதிலாக வெட்டி வெட்டியிழுக்கிறது.

கண்கள் பார்வையிழக்கலாம்.

இம்மாதிரி பிரக்ஞையற்றிருப்பவனைக்கண்டால் உடனே சிறுநீரை எடுத்து பரீக்ஷை செய்யவேண்டும்.

ஆசிட் கார்பாலிக்:. பிரக்ஞையின்மை.
ஓபியம் 3x:- இரண்டாவது மருந்து.
குப்ரம்:- வலிப்புகள்.

இன்ஜ்:- குப்ரம்.

(128) பிரைட்ஸ் வியாதி—Bright's Disease.

சீழ் கோத்துக்கொள்ளாத மூத்திரக்காய் வீக்கத்திற்கு பிரைட்ஸ் வியாதி என்று பெயர்.

1. அக்யூட் விதம்:- உடம்பு முழுவதும் வீக்கம், சுரம், துரிதநாடி, தாகவரட்சை, அடிக்கடி நீர் பிரியும்; சிறுநீர் குறைந்தும்; அல்புமன் சத்து நிறைந்தும் இருக்கும். பூதக்கண்ணாடி வழியாகப் பார்த்தால் ரத்தங்காணும்.

ஸ்கார்லட் சுரம், சில ஆல்கஹால் முதலிய மருந்துகளால் உண்டாகும்.

2. கிரானிக் விதம்:- தளர்ச்சி, இடுப்புப்பக்கம் வலி, அடிக்கடி சிறுநீர் பிரிய உணர்ச்சி, முகம் வெளுத்து, ஊதி, பசியின்மை, பித்த எரிச்சல், குமட்டல், அல்புமன் நிறைய இருக்கும். இரத்த சோகை ஏற்படும். வியாதி முற்றிவிட்டால், ஜன்னி மயக்கம் முதலியன ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும். இரத்தக் கொதிப்பும் இருக்கும்.

ஏபிஸ்:- ஆரம்பத்தில், உடம்பு ஊதல்.

காந்தாரிஸ்:- நீர் கம்மியாகி, நீர் பிரியும்போது.

ஆர்சனிக்:- அல்புமன் நிறைய, குளிர்ந்த தண்ணீருக்குத் தாகம்.

பெர் கார்:- சீழ் பிடிக்கும் வீக்கம் — கர்ப்ப காலத்தில்.

ப்ளம்பம்:- கவுட்டினால், மலச்சிக்கல்.

பைடலோகா:- நாள்பட்டது.

கால்சிகம், பாஸ்பரஸ், ஸல்பர் முதலியன.

முழுப் பாலே ஆகாரமாக இருந்தால் நல்லது. பாக்கி ஜீரணமாகும் ஆகாரம் ஏதும் கொடுக்கலாம். உப்பில்லாமல் அல்லது உப்புக் குறைத்துக் கொடுப்பது நல்லது.

இன்ஜ்:- கால்சிகம், வீடிஸ்,

(129) மூத்திரப்பை வீக்கம்—CYSTITIS.

கல், பிராஸ்டேட் கிளாண்டு வீக்கம் வெட்டை வெட்டையினால் அடைப்பு முதலியவைகளினால் இது ஏற்படுவது சகஜம். வலி, கனம், நீர் விட்டுவிட்டுப் பிரியும், முக்கல், அதிக சிரமம், சிலசமயம் சீழ், சீதம், ரத்தம் முதலியனவும் நீருடன் கலந்துவரும். வெட்டை சிலசமயம் அதிகமாகப்படும். தங்கினால் கம்பி மாதிரி தங்கிவிடும்.

காந்தாரிஸ்:- நீர் கடுப்பு, எரிச்சல்.

பல்ஸ்:- படுக்கையில் நீர் தானாகப்பிரிந்துவிடும்.

ஆசிட் பென்சாயிக்:- குதிரை மூத்திரம் மாதிரி வீச்சம்.

ஆசிட் நைட்:- ரொம்ப நாற்றமுடைய மூத்திரம்.

கிமாபில்லா:- சிறந்த மருந்து.

டல்காமரா:- ஈரத்தில் நனைவதால், கானபிஸ் ஸடைவா, கேலி அயோட், ஏபிஸ், ஸல்பர், நேட் ஸல்ப் முதலியன நல்ல மருந்துகள்.

மூத்திரப்பையையும் கழுவுவது சில சமயம் நல்லது. இதற்கு வெந்நீர்தான் உகந்தது.

இன்ஜ்:- காஞேகில், ஸல்பதயோசால் 3x.

(130) மூத்திரக்காய்க் கல்—CALCULUS.

சிலசமயம் சிறு கற்கள் மூத்திரக்காயிலிருந்து பிரிந்து பையில்வந்துதங்கி சிறுநீருடன் வெளிவந்து விடும். மூத்திரப்பையிலேயே கற்கள் உண்டாக லாம்.

இடுப்புப்பக்கத்தில் மூத்திரப்பையின் பக்கம் தாங்கமுடியாத வலி; குமட்டலுடன் வாந்தி; சில் லென்ற வியர்வை; அடிக்கடி நீர் பிரிய உணர்ச்சி; அத்துடன் சிறிது ரத்தங்கலந்த நீர். கல் வெளியே வரும்வரைக்கும் வலி விட்டுவிட்டு வரும்.

இவ்வியாதி ஆண்களுக்கே அதிகம்.

எக்ஸ்ரேயின் உதவியினுலும், சிஸ்டாஸ்கோப் என்ற ஆயுதத்தின் உதவியினுலும்; மூத்திரப் பரி சோதனையாலும் இவ்வியாதியை கண்டுபிடிக்கலாம்.

அஜீரணம் உண்டாகாமல் ஆகாரம் உட் கொள்ளவேண்டும். சாராய வகைகள் உதவாது. அதிக் கவலே, அதிக வேலேகூடாது.

ஓசிமம்:- தாங்கமுடியாத வலி, கத்துவான், முறுக்கிக்கொண்டு கதறுவான்; சிவந்த மூத்திரம்.

டயஸ்கோரியா:- தாங்கமுடியாத வலியால் துடிப் பான்.

பெர்பெரிஸ்:- அடிக்கடி நீர் பிரிய உணர்ச்சி, மூத்திரக்காயிலிருந்து கீழ்நோக்கி குத்தும்வலி.

பரீரா:- இது சிறந்த மருந்து. டிஞ்சராகக் கொடுக்க நல்லது.

ஆசிட் ஆக்சாலிக், காந்தாரிஸ், ஆசிட்பாஸ், நக்ஸ்வாமி முதலியன கொடுக்கலாம்.

ஆபிரேஷன் செய்யவேண்டியதவசியம்.

இன்ஜ்:- பெயின்கில், டயஸ்கோரியா.

(131) பிராஸ்டேட் வீக்கம்—PROSTATITIS.

விரைகளுக்கு அடிப்பாகத்தில் கொடி பாகத்தி லிருக்கும் பிராஸ்டேட் கிளாண்டுகள் 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வீங்கி மூத்திரம் பெய்வதில் தாமதம் ஏற்படும். மூத்திரம் பீச்சுவது மெதுவாக இருக்கும்; மூத்திரம் பெய்தாகிவிட்டது என்று எழுந்திருந்த பிற்பாடும் மூத்திரம் வெளிப்படும். அடிக்கடி முக்கிமுக்கிப்போவதினுல் மூலம் முதலி யன ஏற்பட்டுவிடும்.

சமயத்தில் நீர் பிரியாமலிருந்துவிடும்; அப்பொ ழுது சிலாகை போட்டு நீரை வெளிப்படுத்தவேண் டும்.

இதை ஆபிரேஷன் செய்துவிடுவது உத்தமம். உபயோகமுள்ள மருந்துகள்:-

தூஜா, பல்ஸ், பரைடா கார்ப், கால்-கார்ப், கிளிமாடிஸ். கோனியம், லைகோ, பாஸ், ஸெபியா, ஸல்பர், கேலி அயோட், ஓசிமம்–ரத்தம் கலந்த நீர்.

காலபிஸ்–இ–ஆசனவாய் பந்தின்மேல் உட்கார் திருப்பதுபோல்.

ஸொபிடாகோ:- நாள்பட்ட வீக்கம்.

பெர்-பிக்ரி:- வயதானவர்களுக்கு நாள்பட்டது.

இன்ஜ்:- கானோகில், ஆசிட் பிக்ரிக்.

(132) நீர்க்கடுப்பு—STRANGUARY.

இது கல், மூத்திரப்பை வீக்கம், வெட்டை கவுட் ஹிஸ்டிரியா முதலிய வியாதிகளுடன் தென்படும்.

அடிக்கடி நீர் பிரிய உணர்ச்சி, எரிச்சல், வலி, கடுப்புடன்கூடின நீர் பிரிதல், நாள்பட்டதாயிருந்தால், சீழ் சீதத்துடன்கூடியிருக்கும். குழந்தைகளுக்கு சிலசமயம் நாக்குப்பூச்சிகளானால் உண்டாகலாம்.

நக்ஸ்வாமி, காம்பர், பெல்ல, காந்தாரிஸ், கோபைபா, அகோனைட்; லைகோபோடியம், முதலியன.

இது ஒரு குறியேயானதால் காரணமான வியாதிக்கு சிகிச்சை செய்யவேண்டும்.

இன்ஜ்:- ஓசிமம், பயோஆம்னின்.

(133) நீரடைப்பு—RETENTION.

சிறுநீர்பையில்தங்கி வெளிப்படுத்தமுடியாதபடியிருப்பது.

சிலாகை போட்டு நீரை எடுக்கவேண்டும்.

காரணங்கள்:- ஆண்குறி தோலினால் மூடப்பட்டிருந்தால்—இதற்கு ஆபரேஷன்தான் செய்யவேண்டும்.

கல் முதலியன யூரித்ராவில் தங்கியிருந்தால் பிராஸ்டேட் வீக்கத்தினால் பாரிசவாதம், சில ஆபரேஷன்கள் வயதானதினால் நரம்புத்தளர்ச்சி இவைகளினால் ஏற்படும்.

அகோனைட்:- சுரத்தில், பயம், அமைதியின்மை.

காம்பர்:- உடம்பு சில்லிப்பு.

காந்தாரிஸ்:- கடுப்பு, எரிச்சலுடன்.

டெரிபிந்த்:- காம்பருக்குப் பிறகு.

இக்னே:- ஹிஸ்டிரியாவினால்.

க்ளிமாடிஸ்:- அடிக்கடி வெட்டை ஏற்பட்டதினால் நீர்க்குழாயடைப்பு.

நக்ஸ், ஸல்பர்—இவையிரண்டையும் மாற்றி மாற்றி கொடுக்கலாம்—அடிக்கடி நீர் பிரிய பிரியம். ஆனால் போகாது.

ஆசிட் பாஸ், ஓசிமம், முதலியன வயதானவர்களுக்கு உபயோகப்படும்.

இன்ஜ்:- கானோகில், முதலியன.

(134) வெள்ளை-வெட்டை—GONORRHOEA.

கானோகாக்கஸ் என்ற கிருமியினால் சிறுநீர்க்குழா (யூரித்ரா) யின் உட்பாக ஜவ்வுத்தோல் வீக்கமடைவது.

இவ்வியாதியுடையவர்களோடு சம்போகம் செய்தால் இது தொத்தும். சாதாரணமாக 7—3 நாளில் நீர்க்குழாயில் அரிப்பு, எரிச்சல், சிறுகடுப்பு, நீர் பிரியும்போது ஏற்படும். யூரித்ரா வாய் சிவந்து வீங்கி வெளுத்த நீர் கசியும். வியாதி முற்ற முற்ற நீர்க்கடுப்பு அதிகமாகி, எரிச்சல் தாங்க முடியாமல் நிறைய வெள்ளை, மஞ்சள், பச்சை அல்லது ரத்தங் கலந்த நீர் ஊற்றும். ஆண் குறி வீங்கி, முன்தோல் சுருங்கமுடியாமல் ஆகிவிடும். சம்போகத்தில் இச்

சையும் அதிகரிக்கும். அடிக்கடி ஆண்குறி விறைக்கும்; வலிக்கும்; தானகவே இந்திரியமும் வெளிப்படும். உடம்பு மாத்திரம் சாதாரணமாகவே இருக்கும். சிறிது அசதி, சிறிது உஷ்ணமிருக்கலாம்.

2—3 வாரங்கள் கழித்து வீக்கங்கள் வடியும்; 5–6 வாரங்களில் எல்லாம் சௌகரியமாகிவிடும்.

அடிக்கடி இவ்வியாதி திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தால், வெள்ளை மஞ்சள் நிறமாக வெட்டை நீடிக்கும். இதுவே இன்னும் நாள்பட நீர்த்து தண்ணீர்போல் வடியும். இதற்கு 'க்ளீட்' என்று பெயர். சில சமயம் இரவில் வளைந்தும், விறைத்தும் ஆண்குறி வலி கொடுக்கும். இதற்கு 'கார்டீ' என்று பெயர். ஆண்குறியின் நுனியில் வீக்கம் கண்டு சதை சுருக்க முடியாமல் ஆவதுண்டு. இதற்கு 'பைமோசிஸ்' என்று பெயர். சுருக்கின பிறகு வெளியே இழுக்கமுடியாமல் போவது 'பாராபைமோசிஸ்' என்று பெயர். தொடையின் நிணநீர்க் கோளங்கள் வீங்குவதுமுண்டு விதையின் ஒருபாகமும் வீங்குவதுமுண்டு. வாயு, கண் ரோகம், முதலியனவும் சகஜம்.

பெண்பிள்ளைகளுக்கும் இம்மாதிரி உபத்திரவங்கள் உண்டு.

கீழ்க்கண்ட இன்ஜெக்ஷன்களை அவசியம் ஏதாவதொன்று கொடுக்கவேண்டும்.

1. ஹைட்ராஸ்டிஸ் டிஞ்சர் 50-ல் 1 பங்கு கலந்துகொடுக்கவும்.
2. ஜிங்க் ஸல்ப்—1 : 500.
3. அர்ஜன்டம் நைட்—1 : 2000.

4. பொட்டாசியம் பெர்மாங்கனேட்–1:10,000.
5. காலண்டுலா—1 : 2000.
6. ஓசிமம்—1 : 50.

இவைகளை எனிமாகான் அல்லது இர்ரிகேடர் வழியாக நீர்த்துவாரத்தின் வழியே செலுத்தி பையைக் கழுவவேண்டும்.

அகோனைட்:- ஆரம்பத்தில் சுரம் முதலியன.
தூஜா:- மஞ்சளாக, நிறைய, வெட்டை.
காந்தாரிஸ்:- எரிச்சல், கடுப்பு அதிகம்.
கோபைபா:- ஆரம்பத்திற்குப் பிறகு.
நாப்தாலின்:- நாட்பட்ட கேசுகள்,
ஓசிமம்:- கடுப்புவலி, ரத்தங்கலந்த வெட்டை.
நேட்ஸல்ப்:- மஞ்சளான தடிப்பான வெட்டை.
சேபியா:- வெள்ளையாக, தடிப்பான வெட்டை.
மெர்-கார்:- பெட்ரோலியம் முதலியன.

க்ளீட்:- மெர், தூஜா, ஆசிட் நைட், ஸல்ப், ஆக்னஸ், சின்னபரிஸ், ஹைட்ராடிஸ் நாப்தாலின், கயாகம், பெட்ரோல், முதலியன.

'கார்டீ' அகோனைட், காந்தாரிஸ், அர்ஜ்-நைட், ஜெல்சமி.

விரைவீக்கம்:- பல்ஸ், அயோட், கிளிமாடிஸ், மெர், பைடலோகா.

வாயு, கண்வலி முதலியவைகளுக்கு அவைகளுக்குத் தகுந்த சிகிச்சை.

அடைப்பு:- பல்ஸ், யூபடோரி, அகாரிகஸ் முதலியன.

பைமோசிஸ்-
பாராபைமோசிஸ் } இவை இரண்டிற்கும் ஆபரேஷன்தான் அவசியம்.

பெண்களுக்கு கர்ப்பப்பையைத்தாக்கி, கிளைப்பைக்குச் செல்லும். குழாயையும் தாக்கும். இவைகளுக்கு பல்ஸ், அயோட், தூஜா மற்றபடி வெட்டைக்குரிய மருந்துகளையே கொடுக்கவும். இன்ஜெக்ஷன் மருந்துகளைக்கொண்டு அடிக்கடி கழுவவேண்டும்.

இன்ஜ்:- காலேகில், ஸல்பதயோசால் 3x.

(135) இந்திரிய ஸ்கலிதம்— SPERMATORRHŒA.

இது சிறுபிள்ளைகளில் பரவியிருக்கும் ஒரு கெட்ட பழக்கத்தினால் ஏற்படுவது. கை முஷ்டி அல்லது ஹஸ்தப்பிரயோகம் என்று சொல்லப்படும் கெட்ட பழக்கமே. சிறு பெண்களுக்கும் இது ரொம்ப சகஜம்.

ஆண்குறி பலஹீனப்பட்டு, அடிக்கடி இச்சை அதிகமாகி பெரும்பாலும் இராக்காலங்களில் தானாகவே அறியாமல் இந்திரியம் வெளிப்பட்டுவிடும். ஸ்திரீகளைப் பார்த்தாலே இந்திரியம் நழுவும். அஜீரணம், தூக்கம், அசதி, ரத்தசோகை அதிகப்படும். இதனாலேதான் குடும்பச் சச்சரவுகள் அதிகப்படுகின்றன.

சிறு பெண்களுக்கு வெட்டை வெள்ளை ஒழுக்கு ஏற்படும். பாக்கிக்குறிகளான அஜீரணம் முதலியனவும் ஏற்பட்டுவிடும்.

இதற்கு கடுமையான சிகிச்சை செய்யவேண்டும். கெட்ட பழக்கத்தை முதலில் நிறுத்தச்சொல்லி விஷயத்தை விவரமாகச் சொல்லவேண்டும். இதனால் டி. பி. அஜீரணம் நரம்புத்தளர்ச்சி முதலிய வியாதிகள் வளரும் என்று அறிவுறுத்தவேண்டும். முகப்பருக்கள் கண்கள் குழிந்து, வளர்ச்சி குறைந்து வயதானவர்மாதிரி உற்சாகம் இழந்து, தன்னம்பிக்கையற்று, உலகத்தில் வெறுப்பு ஏற்பட்டு வாழ்வையே தியாகம் செய்துவிடுவர்.

ஆகவே தினம் தவறாமல் தேகாப்பியாசம் செய்துவரவேண்டும். மனதை துர் பழக்கங்கள், கெட்ட சினிமாக்கள், கெட்ட நாவல்கள் முதலியவைகளிலிருந்து விலக்கவேண்டும். அதிகக் காப்பி, சாராயம், அதிகமாமிச உணவு முதலியன உதவாது.

மருந்துகளோடுகூட கெட்ட பழக்கத்தை முதலில் விடச்செய்யவேண்டும்.

இதே வியாதி டி. பி., வெட்டை முதலிய வியாதிகளிலேற்படலாம். அப்பொழுது அதற்குத்தகுந்த சிகிச்சை செய்யவேண்டும்.

ஸெலினியம்:- தூக்கத்தின்போது ஸ்கலிதம், காலையில் எழுந்தவுடன் மயக்கம் கிறுகிறுப்பு.

ஆக்னஸ்:- உலகத்திலேயே உயிரோடிருப்பதிலேயே வெறுப்பு—மிக அசதி.

சைனா:- பலவீனம்—அதிக ஸ்கலிதம்.

ஆசிட். பாஸ்:- இதை 1x போடன்சியில் தினம் டானிக் மாதிரி சாப்பிட்டதும் இரண்டு வேளைகள் சாப்பிடவும்.

கேலிப்ரோம்:- நரம்புத்தளர்ச்சி, வலிப்புகள், பருக்கள்.

ஸ்டாபிசே:- மூளை தளர்ச்சி, குற்றம் செய்து விட்டோமோ என்ற மனப்பான்மை.

காந்தாரிஸ்:- வெட்டையுடன்.

டிஜிடாலிஸ்:- ஹிருதய படபடப்புடன்.

நேட்ம்யூர்:- மலச்சிக்கல், சோகை.

நக்ஸ்வாமி:- மலச்சிக்கல்.

கோனியம்:- குறி தளர்ச்சி, முதுகுப்புறம் பல ஹீனம். நிமிர்ந்து உட்கார பலஹீனம்.

கால்பாஸ்:- அதி பலவீனம்.

பாஸ்பரஸ், நேட்பாஸ், கேலிபாஸ், ஆசிட் பிக்ரிக் முதலியனவும் உபயோகப்படும்.

இன்ஜ்:- யோஹிம்பின், ரெஜுவின், வைடமின், ஆசிட் பிக்ரிக்.

நரம்பு வியாதிகள்.

(136) அபாப்ளக்ஸி—APOPLEXY.

பிரக்ஞை தவறுதல், மண்டைக்குள் ரத்தக் கசிவினலேற்படுவது. குறிகள் சட்டென்று தாக்கும் அல்லது மெள்ள மெள்ள வரும். தடாலென்று பிரக்ஞையற்றுவிழுவர். இதற்கு பிரைமரி அபாப்ளக்ஸி என்று பெயர். ஆனல் அதிகப்படியான கேசுகளில் தலைவலி, மயக்கம், குனிந்தால் கிறு கிறுப்பு, தலையில் துடிப்புகள், மூக்கிலிருந்து ரத்தக் கசிவு, தூக்கம், சிறிது கண்பார்வை மங்கல், கண்களில் ரத்தக்கசிவு, செவிடு அல்லது காதுகளில் சத்தம், நாக்கு சரியானபடி பேசமுடியாமை; கண்க

ளுக்கு முன்னல் கருப்புப் புள்ளிகள் பறப்பது; வாந்தி; கை கால்களில் மறமறப்பு; நடப்பதற்கு தள்ளாடுதல்; சில பாகங்களில் வாதம்; இப்படியாக ஆரம்பித்து, பிரக்ஞையற்று விழுவர்.

பிரக்ஞையற்றுவிழும் நிலைமையில் அனேக விதங்களுண்டு. மூளையில் எவ்வளவு ரத்தப்பெருக்கு இருக்கோ அவ்வளவிற்குத் தக்கபடி இருக்கும்.

முகம் உப்பி, நாது திணறிக்கொண்டும், உடம்புத் தோல் சூடாகவும், கண்கள் வெளிச்சத்திற்கு கூசாமலும், பாப்பாக்கள் விரிந்தும், சுவாசம் சத்தத்துடனும், நீர் தடைபட்டும், மலச்சிக்கலுடனும் இருக்கும். அஜீரணம்; வாந்தி, தலைவலி கூட இருந்தால் கவனிக்கபபடவேண்டியவை.

50 வயதிற்குமேல் இது ஏற்பட்டு மரணமடைவது சகஜம். அதிகக்குடி, அதிக புகையிலை, அதிக ஆகாரம், அமிதமான சம்போகம், அதிக மனக் கவலை இவையெல்லாம் காரணங்களாகும்.

இதற்குக் காரணம் ரத்தக் குழாய்களின் வியாதியே.

அகோனைட்;- ஆரம்பத்தில்.

பெல்ல:- சிவந்த முகம், முகத்தில் வலிப்புகள், கண் பாப்பா விரிந்து, பேச்சடைத்து, சிறுநீர் தங்கி விடுதல்.

நக்ஸ்வாமி:- சாராயம், ஆடம்பர வாழ்க்கையுடையவர்கள்.

ஒபியம்:- மயக்கம், பிரக்ஞை தவறுதல் மூச்சு சத்தத்துடன், முகம் உப்பி, அரைக்கண் திறந்து, பாப்பா சுருங்கி, கைகால் சில்லிட்டிருக்கும்.

ஆர்னிகா:- அடிபட்டதினுல்.

பாஸ்பரஸ்:- தாக்குதலுக்குப் பிறகு உடம்பைத் தேற்ற.

அட்ரனலின்:- உடனே இன்ஜெக்ஷனுக கொடுக்கவும்.

தாக்குதலின்போது இம்மருந்துகளை 15 நிமிஷத்திற்கொருதரமாக கொடுக்கலாம். உடம்பிலிருக்கும் இறுக்கலான துணிகளை எல்லாம் தளர்த்திவிடவேண்டும்.

ஆகாரத்தை ஜீரணிக்கக்கூடியதாகச் சாப்பிடவேண்டும். மாமிச ஆகாரம் உதவாது. மீன் உபயோகப்படுத்தலாம்.

இதற்குப் பிறகு பக்ஷவாதம் அல்லது கால் கைகளில் மரமரப்பு மாத்திரம் இருக்கலாம்.

(137) குழந்தை வலிப்புகள்—Infantile Convulsions.

சாதாரண கேசுகளில் குழந்தைகளின் முகத்தில் வலிப்புகள் ஏற்படும். மூச்சுவிடச் சற்று சிரமம், கண் சுழட்டல் முதலியன ஏற்படும். கடுமையான கேசுகளில் திடீரென பிரக்ஞையிழந்து, முகம் தலை முதலிய இடங்களின் தசைகளில் வலிப்பு ஏற்பட்டுவிடும். கண்களுக்கு வெளிச்சம் ஏற்படாது, ஒருபக்கம் வலிப்பு இழுத்து விறைப்பாயிருக்கும். வாயில் நுரைதப்பும், கைகளில் விரல் உள்ளடங்கி முடங்கியிருக்கும், ஓரிரண்டு நிமிஷங்களில் வலிப்புகள் நின்றுவிடலாம்.

வீக்கங்கொண்ட பல்லீரலில் ஒரு பல் அழுக்குவதினுலும், மூளை சுரங்கள், ஆகாரம் போதாத குழந்தைகளுக்கு மூளையில் சரியானபடி இரத்தக் குறைவு ஏற்படுவதாலும், அம்மை முதலிய நொப்பம் காணும் சுரங்களிலும், வயிற்று நாக்குப்பூச்சிகளினுலும், அஜீரணம் முதலியவைகளினுல்.

பெல்ல:- முகம் சிவப்பு, முகம் உஷ்ணப்பட்டு, 15 நிமிஷத்திற்கொருதரம் கொடுக்கவேண்டும்.

காமோ:- பல் முளைக்கும்போது, பச்சையான தண்ணீர் போன்ற மலம்.

குப்ரம்:- கக்குவானிருமலில், காக்கை வலிப்பு மாதிரி.

சீனு:- வயிற்றுக்கிருமியினுல்.

நக்ஸ்வாமி:- அஜீரணத்தினுல்.

ஜெல்சமி:- மூளை வியாதிகளினுல்.

இதூஸா சைனு:- வயிற்றுக்கோளாறினுல் பால் ஒத்துக்கொள்ளாது.

சின்க்-ஸல்ப்:-முகம் வெளுத்து, நரம்புத்தளர்ச்சி.

இன்னு:. குப்ரம், பயோஆம்னின்.

(138) பாரிச வாயு—PARALYSIS.

இதில் அவயவத்தின் அசைவு குறைவுபடும், மூளை அல்லது முள்ளந்தண்டின் வியாதியுடன் கூடியிருக்கும், அடிபட்டதினுல், அல்லது விஷத்தினுல் ஏற்படலாம்.

இதில் அனேகவிதம் உண்டு.

ஒரு பக்ஷவாதம்:- சரீரத்தின் ஒரு பாகம் வாதத்தினுல் தாக்கப்படும். சிலசமயம் ஒருபாதி நாக்கு, முதலியனவும் தாக்கப்படும். கண் இரப்பை மாத்திரம் வாதத்தினுல் தாக்கப்படலாம்; அல்லது கண்ணே ஒருபக்கம் சாய்ந்துவிடலாம். இதற்குக் காரணம் மூளையின் ரத்தக்குழாய் வெடித்துப்போவதுதான். இதன் சிகிச்சை '136 அபாப்ளக்ஸி'க்கு மாதிரிதான்.

இடுப்புப் பக்கமும் கால்களும் தாக்கப்படுவது ஒருவகை; இது முள்ளந்தண்டின் வியாதியினுல் உண்டாவது. இதன் குறிகள் அநேகவிதமாயிருந்த போதிலும் முக்கியமானவை கீழ்க்கண்டபடியே.

கால்கள் ஆட்டம், தசைகளை நம்மிஷ்டப்படி அசைக்கமுடியாமலிருப்பது முதலியன. குழந்தைகளுக்கு வரும் இளம்பிள்ளை வாதம் இதைச் சேர்ந்தது. அதில் ஒரு கால்; அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் ஒரு கை முதலியன தாக்கப்படலாம்.

முகத்திலும் இது ஏற்படுவதுண்டு. இது குளிர்ந்த பனி முதலியவற்றினுலும், மூளையில் கட்டிகள் ஏற்படுவதினுலும் உண்டாகலாம்.

பயித்தியம் பிடித்தவர்களுக்கு பொதுவான பக்ஷவாதம் ஏற்படுவதுண்டு. காரீயம், பாதரசம், முதலிய விஷங்களை உட்கொள்ளுவதினுலும் வாதம் ஏற்படுவதுண்டு. டிப்திரியா என்ற வியாதிக்குப் பிற்பாடும் இது ஏற்படலாம்.

இவ்வியாதி நரம்புகள் கெட்டுப்போவதினுல் உண்டாவதால், கெட்டுப்போன நரம்பைச் சரிப்படுத்துவதென்பது முடியாத காரியமே. ஆனுல் ஆரம்பத்திலேயே சரிவர கவனித்து வைத்தியம்

செய்தால் குணப்படுத்தலாம். முகத்தில் குளிர் முதலியவற்றுல் ஏற்படும் வாதம் சௌகரியமாகிவிடும்.

லேசான எலக்ட்ரிக் கரண்ட் உபயோகித்தல் மிகவும் உபயோகமானது. ஈயத்தால் உண்டான வாதத்திலும். அதிக எழுத்து எழுதும் 'ரைட்டர்' வாதத்திலும் இது மிக்க நன்மையுண்டாக்கும்.

பாஸ்பரஸ் கலந்த எண்ணெ, சிற்றுமுட்டித் தைலம், ஹைபரிகம் எண்ணெ முதலியவற்றைத் தடவி உருவிவிட்டு வருவது சிலாக்கியம்.

1. **முகவாதம்:-** அகோனைட், காஸ்டிகம், பரைடா கார்ப், டல்காமரா.

2. **வாதம்:-** பாஸ்பரஸ், அகாரிகஸ், மெர், கோனியம், ப்ளம்பம், பரைடா கார்ப், கானபிஸ்.

3. **பக்ஷவாதம்:-** ஆர்னிகா, பாஸ்பரஸ், பரைடா கார்ப், நக்ஸ்வாமி, லாசெசிஸ், ஹையாசயாமஸ், ஆரம், அர்ஜெண்ட்-னைட்.

4. **டிப்திரியாவிற்குப் பிறகு:-** ஜெல்ச, கோனியம், காக்குலஸ், டிப்திரினம். அர்ஜெணடம்.

5. **இடுப்பின் கீழ் வாதம்:-** ஆர்னிகா. (இதை மேலுக்கு 1 டிராம், ஆல்கஹால் 1 அவுன்ஸ், டிஸ்டில்ட் வாட்டர் 3 அவுன்ஸ் கலந்து முள்ளந்தண்டு முழுவதும் இரண்டு வேளையாவது தினம் தடவலாம்) ஹைபரிகம், (இதையும் மேற்சொன்னமாதிரி தடவவும்), ஜெல்சமியம், அர்ஜெண்டம்னைட், ஆசிட்-ஆக்சாலிக், லாதிரஸ், கேலி அயோட். ரஸ்டாக்ஸ், பெர்ரம் பிக்ரிக் முதலியன.

6. இளம்பிள்ளை வாதம்:- ஸீகேல், பாஸ்பரஸ், ஆர்சனிக், பரைடா கார்ப், ப்ளம்பம், கால்கேரியா-கார்ப், காஸ்டிகம்.

7. மேலேறும் வாதம்:- கோனியம், ஹைட்ரோ-போபினம், ஜெல்சமியம்.

8 கால் வாதம், கை வாதம்:- (இவைகளினால் காலும் கையும் விழுந்துவிட்டதுபோல் உபயோகமிருக்காது)ப்ளம்பம், கோனியம், பைஸோல் டிக்மா, காஸ்டிகம், குப்ரம், ஜெல்சமியம், காக்குலஸ்.

இவைகளைத் தவிர ஓபியம், க்யூரேர், கேலி-கார்ப், ஸிலிசியா, ஹைபரிகம் முதலியன உபயோகப்படக்கூடியவை.

இன்ஜ்:-வாடினியம், க்யூரேர், பைஸோஸ்டிக்மா, வைடமின் B, முதலியன.

(139) காக்கை வலிப்பு—EPILEPSY.

திடீரென மயக்கமடைந்து கீழே விழுந்து, முகம், கைகால் முதலியவற்றின் தசைகள் வெட்டி வெட்டி இழுத்து, பிறகு நன்றாக தூங்கும் வியாதி இது. இதன் வலிப்புகள் ஒரு பக்கமாக ஆரம்பிக்கலாம், அல்லது பல இடங்களிலும் ஆரம்பிக்கலாம். பெரும்பாலான கேசுகளில் ஆரம்பிக்கும் என்று தோன்றும்போது தலைவலி, மயக்கம், கண்பார்வை மங்கல், காதில் பலவிதமான சப்தம், ஆத்திரம், கண் முன்னால் பலவிதமான புள்ளிகள் பறத்தல், இவை சகஜம். விசேஷமாக ஒரு பூச்சி ஊறுவது போல அல்லது குளிர்ந்த ஜலம் பாய்வதுபோல ஓர் உணர்ச்சி அடிவயிற்றிலிருந்து கிளம்பி மேலேறும். உடனே வலிப்பு காணும், திடீரென சத்த

மிட்டுக்கொண்டு, கீழே விழுந்துவிடுவர், வலித்துக் கொண்டு பிரக்ஞையற்றிருப்பர். கத்தல் சப்தம் பயங்கரமாகவும், விசேஷமாகவுமிருக்கும், கழுத்தின் வலிப்பும். தலையின் வலிப்பும் ரொம்பக் கடுமையானதாயிருக்கும், ஒரு பக்கம் அதிகமாக தாக்கப்படுவது சகஜம், தாடைகளிரண்டும் இறுகி, நாக்கு கூட சில சமயம் கடிக்கப்பட்டுப்போவதுண்டு. வாயிலிருந்து நுரை தப்பும், ரத்தம்கூட கலந்திருக்கும், கணகள் துடித்துக்கொண்டு உருளும், அல்லது ஒரு நிலையில் ஸ்திரமாயிருக்கும், கைவிரல் மூடிக்கொண்டுமிருக்கும். மூத்திரம் தானாக வெளிப்படலாம், மூச்சு விடுவது சிரமப்பட்டும், சீறும் சப்தத்துடனும் கேட்கும். கழுத்தின் ரத்தக் குழாய்களும் நெற்றியின் இரத்தக் குழாய்களும் புடைத்திருக்கும். ஹிருதயம் படபடக்கும். வலிப்பு நின்ற பிறகு நல்ல தூக்கத்தில் ஆழ்ந்துவிடுவர். இதற்குப் பிறகு நோயாளி சாதாரணமாக எழுந்துவிடுவர். அவருக்கு ஞாபகம் ஒன்றுமிராது.

இதில் இரண்டு விதங்களுண்டு. மேற்சொன்னது சாதாரணமானது. இதற்குப் பெயர் (Le grand Mal) 'லீ கிராண்ட் மால்' இரண்டாவது ரொம்பவும் சாதாரணமானது. வெகு சிறிது வலிப்பு, முகம் வெளுப்பு, ஆனால் சரீர உணர்ச்சி சிறிதுமில்லாமல் வந்துவிட்டுப்போய்விடும். அதாவது அந்த நிமிஷத்தில் ஊசியினால் குத்தினால்கூட தெரியாது.

இவ்வியாதி அடிக்கடி வரவர, மனது தளர்ந்து பயித்தியம் பிடித்து, தற்கொலைகூட செய்துகொள்ளுவர். புத்தி குறைந்து, பசி மந்தித்து, மடத்தனம் ஏற்பட்டுவிடும். அதிக சம்போகம், ஹஸ்தப்பிரயோகம், கோபம், பயம், மன அதிர்ச்சி, அஜீரணம், வலிப்புக்காரர்களை அடிக்கடி பார்ப்பது, க்ஷய விஷம் முதலானவை காரணங்களாகும்.

இக்காரணங்களை சரிவர அறிந்துகொண்டு சிகிச்சைசெய்தால்தான் பிரயோஜனப்படும். பூரண குணமாக்குவது சிரமம்தான்.

வலியின்போது, நோயாளி தன் நாக்கைக் கடித்துக்கொள்ளாமல் பாதுகாக்க ஒரு கார்க் அல்லது துணியையாவது கடைவாய் இடுக்கில் வைக்க வேண்டும். தலையை சற்று உயர்த்தி நாலு பக்கமும் கைகால்படாதபடி பாதுகாக்கவேண்டும்.

உடனே அமில்நைட்ரைட்டை மூக்கில் காண்பிக்கவும்.

பெல்ல:- கண் சிவந்து, வெளிச்சம், பார்க்க முடியாது.

க்ளனுயின்:- வலிப்பின்போது கொடுக்க மிகவும் உபயோகமானது.

நக்ஸ்வாமி:- மலச்சிக்கல், கோபம், பின் தலையில் வலி, கால் கை மரமரப்பு.

கேலிசைன்:- நீலம் பூத்து கொடூரமான வலிப்புகள்; மூச்சுத்திணறல்.

கேலி-அயோட்:- நாள்பட்ட கேசுகளுக்கு சிறந்தது.

கேலி-ப்ரோம்:- மாதவிடாயின்போது வரக்கூடியது.

மனத்தளர்வுடன் ஏற்படும் வலிப்பு.

குப்ரம்:- வலிப்புகள் வெகு கடுமையானது.

இபோரைந்த்:- விறைப்பு; நுரை அதிகமாய் தப்பும்.

இக்னேஷியா:- மன அதிர்ச்சி, நாட்பட்ட சோகம்.

ஓபியம்:- தூக்கத்தில் வருவது; அதிக அசதி மலச்சிக்கல்.

அர்ஜ்-நைட்:- அதிக வயிற்று உப்பிசம், அஜீரணம்.

காமோமில்லா:- குழந்தைகளுக்கு வயிற்று வலி, ஒரு கன்னம் சிவப்பு, ஒரு கன்னம் வெளுப்பு, புளிச்ச வாந்தி.

பூபோ:- நாட்பட்ட கேசுகள்—ஹஸ்தப்பிரயோகத்தினால்.

கால்-கார்ப்:- ஊதிப்பெருத்த சரீரிகள்.

ஆர்டிமீஷியா:- 3—5 வாரத்திற்கொரு முறை வரும் கடுமையான வலிப்பு.

ஸல்பர்:- ஸோரினம், ஸிபிலினம், முதலியன நடுநடுவே கொடுக்கவேண்டும்.

இன்ஜ்:- ஆரோசால், இதை வாரம் இரு முறையாக சுமார் 30—40 இன்ஜெக்ஷன்வரை கொடுக்க வேண்டும்.

(140) நரம்பு வலி—NEURALGIA.

தலை, முகம், முதலான இடங்களில், திடீரென்று சுரீர் சுரீரென்று குத்தும், எரிச்சலுடன்கூடின வலி. விட்டுவிட்டுவரும்; இது ஒரு குறியே—அனேக வியாதிகளில் இது ஏற்படும்.

ஒற்றைத்தலைவலி, ப்ளூரஸி முதலியவற்றில் விலாப்புறத்தில் வலி, அக்கி முதலிய வியாதியிலும், ஏற்படும் வலி, கால் நரம்பு வலி (சியாடிகா) மார்ப்

புறத்தில் ஹிருதயஸ்தானத்தில் வலி (ஆங்கினா) ஈரல், விரை, சினைப்பை இவைகளின் இடங்களில் வலி. முதலியன.

முகத்திலும் காலிலும் இது அதிகம். நரம்பின் வழியாக விட்டுவிட்டுத் தெரிக்கும் வலி, கிழிக்கும் வலி அல்லது இழுக்கும் வலி. இது சின்னாட்கள், சில வாரங்கள் கூட இருக்கலாம்.

தலைமயிர் நரைப்பதும் இதனால் ஏற்படுவதுண்டு.

பரம்பரை அல்லது அவயவத்தின் கோளாறு களினாலேற்படும்; அதிக இராக்கண்விழிப்பு, கவலை, அதிக பரிசிரமம், அஜீரணம், ரொம்பக் குளிர்ந்த காற்றில் இருத்தல், வாயு வியாதி, கிரந்தி, பல் சொத்தை, மலேரியா முதலியனவற்றில் கட்டிகள் நரம்பை அமுக்குதல், நரம்புகளில் காயங்கள், இவைகளாலுமுண்டாகும்.

பெல்ல:- தொடமுடியாத வலி—திடீரென்று வந்து சிறிது நேரம் இருந்துவிட்டு திடீரென மறைந்து விடும்.

அகோனைட்:- குளிரினால், பயம், இராக்கண் விழித்தல், கடும்வலி, இரவில் அதிகமாதல்.

ஆர்சனிக்:- எரிச்சலுடன்கூடின டயப்பிரகாரம் வரும்வலி, இரவிலும், அசையாமலிருந்தாலும் அதிகம், பயம். ரொம்ப பலவீனம், கைகால் சில்லிட்டு விடுதல், இன்ப்ளுயன்ஸா, மலேரியா, அதிக வேலை, ஒற்றைத்தலைவலி, சியாடிகா முதலியன.

கோலோசிந்த்:- வெட்டும் வலிகள், இடது பக்கம் அதிகம், திடீரென கடுமையாக வரும், அசையாம

லிருந்தால் சாதகம், ஒற்றடம் கொடுக்க சௌகரியம் சியாடிகா, முகவலி, குடல்வலி முதலியன இதனால் சாதகமாகும்.

சைனா:- மலேரியாவினால், அதிக ரத்தம் சிந்தி விட்டதால்.

ஸ்பைஜிலியா:- இடது பக்கம், கிழிக்கும் துடிக்கும் வலி, கழுத்துவரைக்கும் தலைவலி, பரவும், கண்களும் வலிக்கும், சற்று அதிர்ந்தாலும் அதிகமாகும்; அமுக்கிப்பிடித்துக்கொண்டால் சாதகம்; அமைதியின்மை, வியர்வை மூச்சுவிட சிரமம்.

மக்பாஸ்:- வலது பக்கத்து, விட்டுவிட்டுவரும். சூடான ஒற்றடம் கொடுப்பதினால் சாதகமாகும் வலி.

ரஸ்டாக்ஸ்:- நாள்பட்ட சியாடிகா, வாயு, பிடிப்பு, வாயு முடக்கம், நடக்க ஆரம்பித்ததும் அல்லது அசையாமலிருந்தாலும் இரவிலும் அதிகரிக்கும் வலி.

செட்ரான்:- கடியாரம்மாதிரி டயப்பிரகாரம்வரும் வலி.

லைகோபோடியம்:- திடீரென வரும் வலி; வலது முகம், தலை; தொட்டாலும், பேசினாலும் அதிரும் வலி; மாலை 4—8 மணிவரையில் அதிகரிக்கும்.

காபியா:- காலையில் ஆரம்பித்து மாலை வரையில் இருக்கும் வலி; தூக்கமின்மை, குமட்டல், ஒற்றைத்தலைவலி, பல்வலி.

நேட்மூர்:- இடதுபக்கத்து வலி, மலேரியாவில் அதிக கொய்னா சாப்பிட்டதினால்; அதிக உப்பு சாப்பிடுபவர்களுக்கு ஏற்படுவது.

சிமிசிபியூகா:- கிணைப்பை அல்லது கர்ப்பப்பை வலி, கால்களில் வெட்டி இழுக்கும் வலி.

ப்ளாண்டாகோ:- உள்ளுக்கும் வெளி உபயோகத்திற்கும் சிறந்தது.

செலிடோனியம்:. விலாப்புறத்துவலி. வலது பக்கம் அதிகம்.

கால்மியா:- முகவலி, குமட்டலுடன் அதிகவலி, தலை ஒரு கயிற்றினல் இறுக்கிக் கட்டிவைத்தாற் போல வலி, மூச்சுவிட சிரமம், படபடப்பு, வயிற்று வலி, குன்மவலி, உட்கார்ந்துகொண்டால் சாதகம்; சிறந்த மருந்து.

ஸ்டாபிசேகிரியா:- அடித்தாடையில் வலி, பல் வலி, கன்னம் வீக்கம், குளிர்ந்த ஜலம் பட்டால் அதிகம்; துடிக்கும் வலி, சியாடிகா, டிக்டூலூரா.

பாஸ்பரஸ்:- முகத்தில் கிழிக்கும் வலி, பலவீனப்பட்ட சரீரம்; தாடையில் உதறும் வலி.

மெர்குரி:– சொத்தைப் பல்வலி–முகம் முழுவதும் வலி.

பைடலோகா:- கிரந்தி, வாயு தேகமுடையவர்களுக்கு பல்வலி, வாயு வலி, முதுகு, தோள்பட்டை இவைகளில் வலி, சியாடிகா, மூத்திரப்பையில்வலி.

ரானங்குலஸ்;- மார்க்கூட்டின் வலி, வலதுபுறமதிகம்.

காமோமில்லா:- முகம், கழுத்து, பல், காது, எங்கும் தாங்கமுடியாத வலி; நரம்பு அதிர்ச்சி, பயம்,

தாங்கவேமுடியாத வலி, இரவிலும், சூடுபட்டாலும், அதிகரிக்கும், தலையில் சூடான வியர்வை.

ஸ்டானம்:-லேசாக ஆரம்பித்து, மெள்ள மெள்ள அதிகரித்து, மெள்ளக்குறைந்து, கண் பக்கம் வலிக்கும் வலி.

ஜெல்சமியம்:- கண் வியாதியினல் வலி, பார்வை மங்கல், இரட்டையாகத்தெரிதல், மயக்கம், டயப்பிரகாரம் வரக்கூடியது. அதிக தசை அசதி.

பல்ஸாடில்லா:- வயிற்றில் பிசையும் வலி, கர்ப்பகாலத்தில் பல் அசதி.

மெஜிரியம்:- கண்ணிலிருந்து ஆரம்பித்து இடது பொட்டுப்பக்கம் பரவும் கடும்வலி. கிரந்தி நீரினல்,

ரோடோ:- கால்களில் வாயுவலிகள்.

ப்ளாடினு:- மரமரப்புடன், சில் லுப் பு டனும் கூடின சுருட்டும் வலி.

ஹாமமலிஸ்:- விரை, கிணைப்பையின் வலிகள், திடீரென வயிற்றில் வலி ஏற்பட்டு குமட்டல், மயக்கம் முதலியன.

விராட்ரம்:- வலிக்கும் பாகம் ஐஸ் மாதிரி சில்லிட்டுவிடுதல், புருவ பாகத்தில் வலி, குடல்வலி, கத்திக்கொண்டு வெட்டுவதுபோல, கர்ப்பப்பைவலி.

ஸல்பர்:- வலதுபக்கத்து வலி, உடம்பில் உஷ்ணம், வியர்வை, அசதி, இரவில் அதிகரிக்கும். மெள்ள அதிகரிக்கும் வலி.

பிரியோனியா:- அசைந்தால் அதிகரிக்கும்,

இன்ஜீ:- பெயின்கில், பயோஆம்னின்.

வலிக்கும் நரம்புப் பாகத்தை டிஞ்சர், பெல்ல, அகோனைட், ப்ளண்டாகோ இவைகளைக்கொண்டு தடவவேண்டும். க்ளோராபாரம் லினிமெண்டு உபயோகப்படுத்தலாம்.

ஆகாரமும் மிதமாகவும், ஜீரணம் ஆகக்கூடிய தாகவும், நல்ல கொழுப்பு சத்து அதிகம் உள்ளதா கவும் சாப்பிடவேண்டும். எண்ணை மாலிஷ் செய்ய வேண்டியதும் அவசியமே.

(141) ஒற்றைத் தலைவலி—HEMICRANIA.

இது சரியாக பார்க்குமிடத்து நரம்பு வலியைச் சேர்ந்ததே. இருந்தாலும் இத்துடன்கூட பித்தத் தலைவலியையும் சேர்த்தே மருந்துகள் சொல்வோம்.

ஒற்றைத் தலைவலி ஒருபக்கமாகத் தாக்கும் இயல்புடையது. சிலசமயம் மாறி மாறித்தாக்க லாம் அல்லது ஒரே பொட்டில் வலிகாணலாம். கண் களும் சற்று மங்கலாகத்தென்படலாம். தலைவலி நின்றவுடன் சாதாரணமாகிவிடும். ஆகாரம் வேண்டி யிராமல், குமட்டல், முதலியவற்றோடுகூடினது நரம் புத் தலைவலி, நரம்பு தாக்கப்பட்டிருப்பதால் ஏற் படும் சகல வலிகளும் பொதுவாக காலையில் ஆரம் பித்து, கண்களைச்சுற்றி நீலம் படர்ந்து, கண் பாப்பா சுருங்கி ரொம்ப அவஸ்தைப்படுவர். மயக் கம், பொட்டுகள் துடிக்கும். சிலசமயம் பசியின்மை, வாந்தி குமட்டல். இவையெல்லாம் ஆகாரக்கோளா றினால் ஏற்பட்டதல்ல. ஆகவே இவைகளுக்கு சிகிச் சை செய்யும்போது போன அத்தியாயத்தில் நரம்பு வலிகளுக்கு சொன்னமாதிரி மருந்துகளை உபயோ கிக்கவேண்டும்.

அதிக தேகாப்பியாசமில்லாமலிருப்பது அதிகக் கவலை, ஆயாசம், தூக்கமின்மை, அதிக டீ அல்லது காபி குடித்துப் பழக்கப்பட்டிருந்தால், ஆர்சனிக் விஷம், மலேரியா, வேறு அவயவங்களின் உபத்திர வத்தினாலேற்படும் நரம்புத் தலைவலிகள், பல் உபத் திரவங்கள், பயம், சீதோஷ்ணஸ்திதியின் மாறுதல் முதலியவற்றினாலும் உண்டாக்கப்படலாம்.

பெல்ல:- முகம் கருஞ்சிவப்பு, ரத்தக்குழாய்கள் துடிக்கும்—அசைந்தால், வெளிச்சம்; முதலியனவை களினால் ஏற்படலாம்.

கேலி-கார்ப்:- ரொம்பக்கடுமையான வலி.

கேலி-பைக்:- வலது கண்பக்கம் தலைவலி, ஆரம் பத்தின்போது கண் இருட்டும், தலைவலி அதிகரிக்க கண்பார்வை வரும்.

காப்சிகம்:- மூக்கின் அடிப்பக்கம் அமுக்கும் வலி, குத்தும்வலி, ஒரு பொட்டில் துடிக்கும் வலி.

நக்ஸ்வாமி:- மலச்சிக்கலுடன்.

க்ளானாயின்:- தலைவெடிக்கும்போல தலைவலி.

ஸல்பர்:- உச்சந்தலையில் எரிச்சல் இருமினாலும் இரவில் படுக்கையிலும், அதிகரிக்கும்; அமுக்கிப் பிடித்துக்கொண்டால், வாரம் ஒருமுறை வரும் தலை வலி.

ஸொரியா:- தலை உள்ளுக்குள் ஆடினாற்போல வலியுடன்கூடியிருக்கும்.

ஜெல்ஸ்:- கண்ணிமைகள் கனத்து விழுந்து விடும்; மயக்கம், அதிகமான நீர் பிரிந்தால் தலைவலி சாதகமாகும்.

பிரியோனியா:- அசைந்தால் அதிகரிக்கும்.

விராட்-ஆல்ப்:- தலைவலியுடன் சில்லென்ற வியர்வை-உடல் முழுவதும்.

காபியா:- தூக்கமின்மையுடன் வலி.

சிமிசி:- ஹிஸ்டிரியாவுடன் கூடின வலி; மாதவிடாயின்போது வலி.

ஐரிஸ்:- ஏராளமான பித்தத்தண்ணீர் வாந்தி-ஏராளமான உமிழ்நீர்.

ஸாங்கு:- பின்பக்கம் தலைவலியிலிருந்து வரும் தலைவலி வந்து, வலது கண்ணில் தங்கும்; கால்களில் வலி; தலையில் மின்சார சக்தி பாய்வது மாதிரி சுருக் சுருக்கென்று பாயும் வலி.

லைகோ:- சாயங்காலம் 4–8 மணிவரைக்கும் அதிகரிக்கும் தலைவலி-இரவிலும், போர்த்துக்கொண்டாலும் அதிகரிக்கும். குளிர்ந்த காற்றில் சமனமாகும்.

ஸ்பைஜீலியா:- லாக்-கானினம், சின்கம்; செலிடோனியம், சிலிசியா, ஹெபர், சைனா, காமோமில்லா, கேட்மூர், தூஜா, ஆசிட் பிக்ரிக், இக்னேஷியா, ஆசிட் பாஸ், காக்டஸ் முதலானவைகள் ரொம்ப உபயோகமுள்ளவை.

இன்ஜ்:- வஸாகாகோ, ஆரோசால், ஐரிஸ் முதலியன.

(142) ஹிஸ்டிரியா—HYSTERIA.

இது பெண்களுக்கு மாத்திரம் வரும் வியாதியல்ல. இது ஆண்களுக்கும் வரும். இதை சங்காதோஷமென்றும் சொல்வார்கள். இது ஜனனேந்

திரியங்களின் நரம்புகளின் அதிர்ச்சி, சோர்வு முதலியவைகளினாலேற்படும் மன அதிர்ச்சி, இதன் குணங்குறிகள் பலதிறப்பட்டவையாயிருக்கும். ஆகவே அதற்கு தக்கபடிபார்த்து மருந்து கொடுக்க வேண்டும்.

குறிகள்:- சாதாரணமாக தொண்டைக்கம்மல், தொண்டை முழுங்க முடியாமல் சிரமம்; குலைக்கும் இருமல், ப்ளூரஸி, மூத்திரம் பிரிவதில் சிரமம், மூட்டு, தசைகளில் வலி, அஜீரணம்; தலைவலி, மார்பு, இருதயம், வயிறு முதலிய அவயவங்களில் கோளாறுகள் முதலியன இவைகளின் அளவை மிகைப்படுத்திக் கூறுவது சகஜமாம்.

சிலசமயம் வலிப்புகள் ஏற்படும்; சோகம் போடும். திடீரென ஒருவித கோரமான சப்தம் போட்டுக்கொண்டு, மூர்ச்சையடைவர். காக்கை வலிப்பைப்போல இவன் முகம் விகாரமடையாது; தனியாக இருக்கும்போதோ தூக்கத்தின்போதோ இது ஏற்படுவதில்லை. கண்கள்மேல் நோக்கியும், மூச்சு விடுவது சத்தத்துடனும், மூர்ச்சையடைந்தாலும், பார்ப்பதுபோலவும், முழுப் பிரக்ஞையிழக்காமலும் இருப்பர். இது பல நாழிகை நீடித்திருக்கலாம். சில ஸ்திரீகள் வலிப்புக்குப் பிறகு சுய பிரக்ஞையிழந்து விறைத்தக் கட்டைபோல அசைவற்று கிடப்பர். இது ஒருவிதம் வலிப்பின்போது டிஞ்சர் மாஸ்சஸ் அல்லது காம்பர் முகரச்செய்யவேண்டும். இன்ஜெக்ஷனாகவும் கொடுப்பது நல்லது.

இக்னேஷியா:- தொண்டையில் ஒருகட்டி அடைப்பதுபோல, அடிக்கடி மாறும் குணம்; ஒரு சமயம் சிரிப்பர், அழுவர், இம்மாதிரி, நாள்பட்ட துக்கம், அதிர்ச்சி முதலியவற்றால்.

க்ரோகஸ்:- ஒரேயடியாய் சிரிப்பர், பிறகு ஒரே துக்கம், மாதவிடாயின்போது கம்பி மாதிரி கருப்பு இரத்தக்கட்டிகள்.

ப்ளாடினு:- அகம்பாவம், மற்றவர்களெல்லாம் தன்னைவிடத் தாழ்ந்தவர்களென்ற அபிப்பிராயம்.

சிமிசி:- அடிவயிற்றில் சங்கடம், ஒரே ஆழ்ந்த மனத்தளர்ச்சி, தற்கொலை செய்து கொள்ள எண்ணம்.

ஆரம்:- தற்கொலை செய்துகொள்வதைத்தவிர வேறு வழியில்லையென்ற மனத்தளர்ச்சி.

வாலரியானு:- நரம்புத்தளர்ச்சியினுல் தூக்கமின்மை.

பெல்லடோனு, பல்ஸ், ஸல்ப், ஹையாசயாமஸ், நக்ஸ்-வாமி, நக்ஸ்-மாஸ்ச், அஸபீடிடா, முதலியன சிறந்தவை.

இன்ஜ்:- ஆரோசால், இக்னேஷியா.

(143) நரம்பு வீக்கம்—NEURITIS.

ஏதாவது ஒரு நரம்பு அல்லது பல நரம்புகளின் வீக்கம்.

சீதோஷ்ண ஸ்திதியில் திடீரென்று சில்லிப்பு ஏற்படுதல், பல நரம்புகளின் வீக்கம் குஷ்டம், டிப்திரியா, சாராயம், ஈயம், ஆர்சனிக் முதலியவை களினுல் ஏற்படும். ரத்தசோகை கடுமையானுலும், புற்று முற்றினுலும், பெரி-பெரி என்ற வியாதியாலும் இது ஏற்படும்.

வலி கடுமையாகவும், தொடமுடியாமலும் இருக்கும். கடுகடுப்பும், தெறிக்கும் வலியும், இசிவும், ஊசி குத்துவதுபோல உணர்ச்சியும், பிறகு வலி குறைந்து மரமரப்பும், வாதம்கூட ஏற்படலாம்.

பூரண ஓய்வு கொடுக்கவேண்டும்; மெள்ள மெள்ள எலக்ட்ரிக் கரண்ட் கொடுக்கலாம்.

ஆர்ச:- தாங்கமுடியாத வலி.

இன்ப்ளுயன்ஸாவிற்குப் பிறகு:- டியூபர்குலினம்.

கார்பன்டைஸல்பைட் கடும் வலிகள்.

லாசெசிஸ்:- தூக்கத்தில் அதிகமாதல்.

ப்ளம்பம்:- பாரிசவாதத்துடன்.

நரம்பு வலிகள், பெரிபெரி, சியாடிகா முதலிய வியாதிகளின் சிகிச்சையும் கவனிக்கவும்.

இன்ஜ்:- வைடமின் B, பயோப்ளக்ஸ், ப்ளம்பம்.

(144) நரம்புத்தளர்ச்சி—NEURASTHENIA.

மனத்தளர்ச்சி, நரம்புத்தளர்ச்சியினுல் உடம்பிலும் தளர்ச்சி, இது சித்தபேதம்வரைக்கும்கூட கொண்டுவிடும்.

பரம்பரையாய் வரக்கூடியது இது, அதிகக் கவலை, சாராயம், புகையிலை முதலிய மருந்து விஷங்கள், காம இச்சை, முதலியன காரணமாகும்.

மறதி, திடமின்மை, சோகம், மனச்சோர்வு, ரத்த அமுக்கக்குறைவு, தூக்கமின்மை முதலியன, ஆத்திரம், எதைக்கண்டாலும் மனத்தாங்கல், வியாதி, சாவு இவைகளைப்பற்றி அதிக பயம், இடி, கூட்டம், பொட்டல் திடல் முதலியவைகளைக் கண்டு பயம், வியர்வை, பெரும் ரத்தக்குழாய்களில் துடிப்பு தலைகனம் முதலியனவும் சகஜம். உடம்பு இளைப்பும், பசியின்மையும் இருக்கிறதுண்டு.

ஓய்வு, புஷ்டியான ஆகாரம், பால் முக்கியம். கவலைகளை நீக்கவேண்டும், மனதிற்குப் பிடித்தமான வேலை செய்யவேண்டும்.

இக்னேஷியா, அர்ஜெண்ட்-நைட், லைகோ, ப்ளாடினம், ஜெல்ச, ரேடியம், ஆரம், ஸெபியா, நேட்மூர், சிமிசி, ஸல்ப், லாசெசிஸ், ஆசிட் பிக்ரிக், ஸ்குடெல்லாரியா, கால்கேரியா முதலியன நல்ல மருந்துகள்.

இன்ஃப்:- ரெஜூவின், ஸ்லீபோ.

(145) காரியா—CHOREA.

மனதிற்கு அடங்காத தசைகளில் வலிப்புகள் ஏற்பட்டு ரொம்பவும் வேடிக்கையான அசைவு, டான்ஸ் முதலியவைகளோடுகூடினது இவ்வியாதி.

இது வாயு வியாதியின் ஒருவிதமே. இருதயமும் தாக்கப்படலாம்.

அகாரிகஸ்:-உதறல், இசிவு மாதிரி விநோதமான வலிப்புகள்.

அகோனைட், இக்னே, ஸ்டிராமோனியம், முதலியவைகள் பயத்தினால் ஏற்பட்டால்.

விராட்வி:- அகாரிகசுக்குப் பிறகு முக்கியமான மருந்து, இதை டிஞ்சராக முள்ளந்தண்டில் தடவிவர நல்லது.

ஆர்சனிக்:- உடம்பு பலவீனம்.

சிமிசி:- வாயு வலி, தூக்கமின்மை.

கால்பாஸ், குப்ரம், சீனா, மெர்குரி முதலியன.

இன்ஃப்:- அகாரிகஸ்.

(146) TORTICOLLIS—டார்டிகாலிஸ்.

இது வாயுவின் ஒருவகையே. கழுத்துப்பக்கம் தாக்குதல் ஏற்பட்டு கழுத்து ஒரு புறமாகத் திரும்பி விடும் வலி, விறைப்பு முதலியனவும் ஏற்படலாம்.

குளிரால்:- அகோனைட்.

சிமிசி:- கழுத்தும் தலையும் திரும்பியிருக்கும்; முள்ளந்தண்டு தொட்டால் உறுத்தும்.

கால்கார்ப்:- நாள்பட்ட கேசுகள்.

பிரியோ:- வலி அதிகம், தொட்டாலும், அசைத்தாலுமதிகம்.

டல்காமரா:- ஈரத்தினால், கழுத்தை எக்கச்சக்கமாக வைத்துத் தூங்கினதினால்.

ரோடோ:- புயல், இடி, முதலியன நெருங்கும் சமயம் அதிகமாகும் வலி.

செலிடோ:- வலதுபுறம் வலி.

லாக்-கானி:- புறம்விட்டு புறம்மாறும் மேலுக்கு ஹைட்ரோகாடைல் டிஞ்சரைவிட்டுச் சூடான ஒற்றடம் கொடுக்க நல்லது.

(147) தூக்கமின்மை—SLEEPLESSNESS.

இது ஒரு குறியேயானாலும், முக்கியமாக, தலைவலி, முதலியவற்றைப்போல் கவனிக்கப்படவேண்டியது.

சுரங்களில் வலியினால், வேறு பல வியாதிகளில் அந்தந்த வியாதிக்கு சிகிச்சை செய்ய தூக்கமின்மை குணப்படும்.

வெறும் நரம்புக்கோளாறினால் மனது அனேக விதமாக கற்பனை செய்துகொண்டு தூக்கம் வரா விட்டால் அல்லது அதிகத் தூக்கமிருந்தாலும் கீழ்க் கண்ட மருந்துகள் உதவும்.

தூக்க மருந்துகளான (ஹிப்னாடிக்ஸ்) பார்பி டியூரிக் ஆசிட் மருந்துகள் உபயோகப்படுத்தக் கூடாது.

பாஸிப்ளோரா:- இதை டிஞ்சராக 10 சொட்டு வீதம் கொடுக்கவும்.

அவெனா:- மேற்படி மருந்து மாதிரியே.

அகோனைட்:- பாதி இரவிற்குப் பிறகு, கவலை, பயம், முதலியவற்றினால் தூக்கமின்மை.

காம்பர்:- நரம்புத்தளர்வினால்.

காபியா:- அதிக கண் விழிப்பினாலும், மனது தீவிரமாக வேலை செய்வதாலும்.

சிமிசி:- நரம்பு பலவீனமுள்ளவர்களுக்கு; மனச் சோர்வுடையவர்.

பெல்ல:- முகம் சிவப்பு, தூங்கினவுடன் தூக்கி வாரிப்போடுதல்.

ஓபியம்:- முதலில் மயங்கிக்கிடப்பர்—பிறகு தூக்கமின்மை—பகலில் ஒரே தூக்கம்.

பொர்ரம்:- சோகை, டீ அதிகம் சாப்பிடுவதால், கொஞ்சம் நடந்தால் சௌகரியம்.

நக்ஸ்வாமி:-மலச்சிக்கலுடன் காலையில் 4 மணிக்கு பிறகு.

இக்னே:- அடிக்கடி கொட்டாவி; சொர்ப்பனம் நிறைந்த தூக்கம்.

ஸல்பர்:- அடிக்கடி தூக்கம் கலைதல், கலைந்தால் நன்றாக விழித்துக்கொள்வர்.

லைகோ:- பகலில் தூக்கம், இரவில் மனது வெகு தீவிரமாக வேலை செய்யும்.

பல்ஸ்:- காலைவரையில் தூக்கமின்மை, பிறகு நல்ல தூக்கம், காலையில் எழுந்தபிறகும் தூங்காதது மாதிரி அசதி.

ஹையாஸ்:- கண் சுழன்றுகொண்டேயிருக்கும். ஒரே சொர்ப்பனம்.

ரஸ்டாக்ஸ்:- படுக்கையில் அமைதியின்மை, தொழில் தொல்லைகள்; படபடப்புடன் சொப்பனம்.

காமோமில்லா, குப்ரம், ஸெபியா, பாஸ், ஆர் சனிக், ஹைஹக்ரோபில்லா முதலியன.

இன்ஜ்:- ஸ்லீபோ.

கண் வியாதிகள்.

(148) கண் வலி—Conjuctivitis Opthalmia.

இது சகலருக்கும் எல்லா வயதிலும், எல்லா காலத்திலும் ஏற்படும்; ஆனால் பனிகாலத்தில் ஏற் படுவது சகஜம்.

இவ்வியாதிக்கு நல்ல புஷ்டியான ஆகாரம்தான் தேவை.

இவ்வியாதி சில நாட்களில் சௌகரியமானாலும் ஆகலாம் அல்லது பல நாள் நீடிக்கலாம்.

இது மிகவும் தொத்து வியாதி. தூசி, புகை, சூடு, காற்று, அதிக நேரம் கண்களை உபயோகப் படுத்தல் முதலானவை காரணங்களாகும். பல் சொத்தை அஜீரணம் முதலானவைகளால்கூட கண்கள் பாதிக்கப்படலாம்.

உஷ்ணம், வலி, சிவப்பு, வீக்கம் முதலிய அறிகுறிகளுடன் கண்வலி காணும். கண்ணிமைகள் சிறிது வீங்கலாம் அல்லது நன்றாக வீங்கி கண்களையே மறைத்துவிடலாம். கண்களில் மண் புகுந்து விட்டாற்போல உறுத்தல் வலியிருக்கும்; சிலசமயம் உறுத்தல் அதிகக்கடுமையாக வெட்டுவதுபோலவும் இருக்கலாம்.

கண் பார்வை மழுங்கும். கண்களிலிருந்து கண்ணீர் வடியும், பீளை அதிகம் சாயும்; பீளை அதிகமாயிருப்பதனால் காலையில் கண்ணிமைகளிரண்டும் ஒட்டிக்கொள்ளும்.

இது மிகவும் தொத்து வியாதியானதினால், பட்டாலும் போதும்; உடனே வந்துவிடும்.

இதில் ஒரு கடுமையான விதமுண்டு. வெட்டை வியாதியினால் ஏற்படுவதுசகஜம். பிறக்கும் குழந்தைகளுக்கு வெட்டையுடைய ஸ்திரீகளினால் ஏற்படும். பிறந்த 3-வது நாள் கண்கள் வீங்கும்; இமைகள் வீங்கி நன்றாக ஒட்டிக்கொள்ளும்; அவைகளைத் திறந்தால் மஞ்சள் சீழ் வெளிவரும்; இது சரியானபடி உடனே சிகிச்சை செய்யப்படாவிட்டால் கண்ணின் கருப்பு பாகம் (க்கார்னியா) கெட்டுவிடும். கண் பார்வை கெட்டுவிடும். இதற்கு தாயாருக்கு கர்ப்ப

காலத்திலேயே வெட்டைக்கு சிகிச்சை செய்ய வேண்டும்.

பிறந்த பிறகு கண்களை ஸில்வர் நைட்ரேட் 1:100 ஸொல்யூஷன் ஒரு சொட்டு விட்டு சுத்தப் படுத்தவேண்டும் அல்லது 1:5000, மெர்குரி பெர்க்ளோரைட் லோஷன் விடவேண்டும்.

கண்களை அடிக்கடி வெந்நீரினால் கழுவுவது நல்லது, பிறகு கீழ்க்கண்ட லோஷன்களை உபயோகிக்கவும்.

(1) பொரசிக் ஆசிட்.—1:60.

(2) காலண்டுலா—1:100.

(3) யூபரேஷியா—1:50.

(4) அர்ஜ்-நைட் 1000—1:50.

இவைகளை ஆயின்மெண்டாகவும் செய்து கண்களில் தடவலாம்.

அகோனைட்:- குளிர்காற்றினால் ஏற்பட்டால், சுரம்-துரிதநாடி, பயம்.

பெல்ல:- சிவப்பு அதிகம், துடிக்கும் வலி, பொட்டுகளில் அதிக வலி.

யூபரேஷியா:- ஏராளமான கண்ணீர்.

மெர்குரி:- பீளை சீழ் கலந்திருக்கும் – கண்களை அசைத்தாலும், தொட்டாலும் வலி; அரிப்பு உறுத்தல்.

அர்ஜ்-நைட்:- குழந்தைகளுக்கு நல்லது. சீழுடன் கூடினது.

பல்ஸாடில்லா:- கண்ணிமைகள் ஒட்டிக்கொண்டு கண்ணீர் அதிகமாகி, கண்களில் சுரீர் என்ற வலி.

ரஸ்டாக்ஸ்:- அதிக சீழில்லாமல், வலி.

ஹெபர்:- கிரானிக்.

மெர்-கார்:- கார்னியா புண்ணாகிவிட்டால்.

ஆர்னிகா:- அடிபட்டதினாலேற்பட்டால்.

இவைகளைத்தவிர ஸிலிஸியா, லைகோ, ஆண்டிம் டார்ட், தூஜா (மேலுக்கும் போடலாம்.)

கால்-கார்ப்:- ஸ்பைஜிலியா, பைடலோகா, முதலியன கொடுக்கலாம்.

இன்ஜ்:- பயோ ஆம்னின்.

(149) கண் அசதி—EYESTRAIN.

சாதாரணமாக கண்களை உபயோகிப்பதில் கண்வலி, சிரமம் முதலியன ஏற்பட்டால் அது வியாதியேயாகும். தூரதிருஷ்டி, சமீப திருஷ்டி முதலான திருஷ்டிக்கோளாறுகளே இம்மாதிரி முதன்முதலில் தென்படும்.

தலைவலிதான் முக்கியமான அறிகுறி. கண் பார்வையில் கோளாறு தெரிவதற்கு முன்னமேயே தலைவலியைத்தானதிகமாகக் கவனிக்கப்படுவது. மயக்கம் கண் பாரிசத்தில் நரம்பு வலி, கண்களை உபயோகிப்பதனால் வலி முதலியன; ஒரு சினிமா, டிராமா, ரயில், கார், பிரயாணம் இவைகளுக்குப் பிறகு தலைவலி ஏற்பட்டால் கண் கோளாறே. கண்களில் நீர் சுரத்தல், எழுத்துக்கள் புகை மாதிரி தென்படுதல்; அடிக்கடி கண் கிரிக்கட்டிகள், அடிக்கடி கண் சிமிட்டல் முதலியன சகஜமான அறிகுறிகள்.

சரியான கண்ணாடிகள்தான் சிறந்தது.

(150) கண்ணில் அந்நிய வஸ்துக்கள். FOREIGN BODIES.

தூசி முதலிய எந்தப் பதார்த்தங்களும் கண்ணில் விழுந்தால் அவைகள் பெரும்பாலும் மேல் கண்ணிமையின் உட்புறத்தில் தங்கிவிடும். கொஞ்சம் கண்ணிமையை பிரட்டி எடுத்துவிடலாம். பிறகு இளம் வெந்நீரினால் விட்டுக்கழுவ நல்லது.

சுண்ணாம்பு கண்ணில் விழுந்துவிட்டால் சர்க்கரைத் தண்ணீர் விட்டு அலம்பவேண்டும்.

(151) தூரதிருஷ்டி—FARSIGHTEDNESS.

அருகில் உள்ள பதார்த்தங்களை பார்ப்பதில் சிரமமேற்படும். வாசிக்கும் புத்தகங்களை நன்றாக தூரத்தில் நகர்த்திப் பிடித்துக்கொள்ளவேண்டும். இது 40 வயதிற்குமேல் சகஜம். தகுந்த கண்ணாடிகள் போட்டுக்கொள்ளவேணடும்.

காஸ்டிகம், லிலியம் டிக், ஜெல்சமியம், பாஸ்பரஸ் முதலியன உதவும்.

(152) சமீப திருஷ்டி—NEAR SIGHTEDNESS.

இரவில் மிகவும் அருகில் வைத்துப்பார்த்தால்தான் கண் நன்றாகத்தெரியும்; இது கண்ணின் உருண்டை சற்று நீண்டுவிட்டதனால் ஏற்படுவது. சாதாரணமாக பார்ப்பதற்கே கண் சற்று உப்பி முன்வந்திருப்பதுபோலத் தெரியும். இது 25 வயதுவரையில் அதிகரித்துக்கொண்டிருக்கும். கடுமையான சிக்குகளினாலும் இது பாதிக்கப்படும்.

ஆர்னிகா, காஸ்டிகம், ரஸ்டாக்ஸ், ஜெல்ச, நேட்மூர் முதலிய மருந்துகள் கொடுக்கலாம்.

சரியான கண்ணாடி போட்டுக்கொள்ளவேண்டியதுதான்.

Amaurosis (அமரோசிஸ்) இது திடீரென ஏற்படும் குருட்டுத்தன்மை.

அகோனைட்:- அதிக உஷ்ணகாலத்தில் குளிர்ந்த ஜலத்தில் குளிப்பதனால் ஏற்படுவது.

ஜெல்ஸ:- திடீரென ஏற்படுவது.

பெல்ல:- கண்களுக்கு முன்னால் மின்னும் சாமான்கள் பறப்பது மாதிரி. இரவில் கண் மங்கல்.

நக்ஸ்வா:- அதிகப் புகையிலை உபயோகப் படுத்துவதால்.

பாஸ்:- பலவிதமான கலர்களைப் பார்ப்பர். எழுத்துக்கள் வாசிக்கும்போது ஒரே கருப்பாகத் தெரியும்.

ஹெபர்:- சாதாரண குத்துவிளக்கு முதலியன போதாது.

அர்ஜ்-நைட்:- நரம்புத்தளர்ச்சியினால்.

Amblyopia:- (ஆம்பிளியோபியா) இது பலவீனமான பார்வை.

சைனு:- கடும் வியாதிகளுக்குப் பிறகு.

ஆசிட்.பாஸ்:- அதிக சம்போகத்தினால்,

நக்ஸ்:- அதிக புகையிலையினால்.

ரூடா:- கண்களை ரொம்ப உபயோகப்படுத்தி சிரமப்படுத்துவதினால்.

சீனு:: கலர் பார்வை,

Hemiopia (ஹெமிஓபியா) இது பாதி சாமானை மட்டும்தான் பார்க்கும் பார்வை.

லிதியம்-கார்ப்:- வலது பாதி பக்கம் மறைந்துவிடும்—அதாவது ஒரு மனிதனைப் பார்த்தால் இடப் பக்கம் மட்டும்தான் தெரிவான்.

லைகோ:- இடதுபக்கம் மறையும்.

ஆசிட் ம்யூர்:- மேல் பாகத்தில் எந்தப்பாதியும் மறையலாம்.

ஆரம்:- மேல்பாதி முழுவதும் மறைவு.

இன்ஜ்:- இவைகளுக்கெல்லாம் அந்தந்த இன்ஜெக்ஷனை செலுத்தவேண்டும்.

(153) காடராக்ட்—CATARACT.

கண்ணுக்குள்ளிருக்கும் லென்ஸ் அல்லது அதன் பை வெளுத்துப்போய்விடும். அதாவது அதன் ஊடே வெளிச்சம் பாயாது.

இதில் அனேக விதமுண்டு. அதாவது பிறப்பின்போதே ஏற்படலாம். நீர் ரோகம் அதிக சம்போகம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகளினால் ஏற்படும்.

சாதாரண பார்வைக்கே வெண்மையாயிருப்பது தெரியும். முற்ற முற்ற கண் பார்வை சுத்தமாகத் தெரியாது. ஒரு கண்ணில் ஆரம்பித்து, இரண்டிற்கும் பரவலாம். முதன்முதலில் ஒரு பனித்திரை வழியாய் பார்ப்பதுபோல் இருக்கும். பிறகு ஒரு விளக்குச்சுடர், அதைச்சுற்றி ஒரு தேஜஸ் இருப்பதுபோல் தோன்றும். சாயங்கால வேளைகளில் பார்வை அவ்வளவாகப் பாதிக்கப்படாது. நேராகப் பார்ப்பதைவிட சற்றுச் சாய்வாகப் பார்த்தால் பார்வை கொஞ்சம் கூடத்தெரியும்.

இவ்வியாதி பரம்பரையாகக்கூட வருவதுண்டு.

ஆரம்பத்தில் சினரேரியா மாரிடியா என்ற மருந்தை கண்களுக்குப் போட்டுவர சௌகரியம்' தினம் 3 வேளை, பலமாத காலம் போட்டுவருவது சிலாக்கியம். டயபிடிஸால் ஏற்பட்டதற்கு டயபிடிஸ்ஸுக்கு சிகிச்சை செய்யவேண்டும்.

கால்-கார்ப்:- கெட்டியான காடராக்ட் ஆரம்பத்தில்.

பாஸ்:- பிறகு.

சிலிசியா:- முற்றின பிறகு.

கால்சிகம்:- வாயு உபத்திரவமுடையவர்களுக்கு.

கோனியம்:- வயதான பிரம்மசாரிகள் அல்லது அதிக நரம்புத்தளர்ச்சியுடையவர்கள், அடிபட்டதினால்.

மற்றபடி யூப்ரேஷியா, ஆர்னிகா, பெல்ல காலபிஸ், ஸல்ப், கால்ப்ளூர் முதலியன.

முற்றிப்போய் பார்வை மழுங்கிப்போனவர்களுக்கு ஆபிரேஷன் கண்டிப்பாய் செய்யவேண்டும்.

(154) ஓரக்கண்—SQUINTING.

இரு கண்கள் ஒரே டயத்தில் நேராகப் பார்க்க முடியாததினால் சாய்த்துப் பார்க்கவேண்டியிருக்கும்.

பிறக்கும் குழந்தைகளுக்கு இரு கண்களும், தனித்தனியே பார்ப்பதால் கோணல் பார்வை இருக்கும். பிறகு பழகப்பழக இரண்டு கண்களும் சமமாகப் பார்க்கும் இயல்பு பெறுவ. இரண்டு கண்களிலும் விழும் நிழல் மூளையில் ஒன்றாகக் கலப்பதால் பார்வை சரியாகயிருக்கும். ஒரு கண்ணில் கோளாறு ஏற்பட்டால், அல்லது ஒரு கண்ணில் தசைகளில் பலவீனமேற்பட்டாலும், பார்வை ஓரக் கண்ணாகிவிடும்.

தூரதிருஷ்டி, காடராக்ட், கடும் அம்மைபோன்ற சுரங்களினால், அதிகமான கிட்டப்பார்வை முதலியவைகளினாலேற்படும்.

நல்ல கண்ணைப் பொத்திக்கொண்டு கெட்ட கண்ணை சரிவரப் பழக்குவது முக்கியம்.

கண்ணாடிகள் போடவேண்டுமா என்று சோதனை செய்துகொள்ளவேண்டும். பிறகு.

பெல்ல:- வலிப்புகளுக்குப் பிறகு ஏற்பட்டால்.

ஹையா:- தசைகளில் வலிப்புகள் ஏற்பட்டால்.

சைக்லாமன்:- இரண்டு கண்ணும் மூக்குப்புறம் சாய்ந்திருந்தால்.

ஸ்டிரா:- ஐன்னி, கண் பிதுங்கி.

ஸல்புர்:- நடுநடுவே, நாள்பட்ட கேசுகள்.

ஜெல்ச:- ஏதாவது ஒரு கண் உட்புக்கம் சாய்ந்திருந்தால்.

அலூமின:- உள்கண்ணின் தசைகள் பலஹீனப் பட்டுவிட்டால்.

ஸ்பைஜி:- சீனு இவையிரண்டும் வயிற்றுப்பூச்சிகள் காரணமாக.

பாஸ்:- நரம்புத்தளர்ச்சி.

ஆபிரேஷன் சில சமயங்களில் பண்ணவேண்டி வரும்.

இன்ஸ்:- அததற்குத் தக்கபடி.

(155) க்ளாகோமா—GLAUCOMA.

இது ரொம்ப ஆபத்தான வியாதி; கண்களுக்குள் நீரின் அழுக்கம் அதிகப்படுதலால் இது ஏற்ப

டாது. இதைக் கண்டுபிடிப்பது சற்று சிரமம்தான். 45 வயதிற்குப் பிறகுதான் இது ஏற்படுவது. பெரும்பாலும் இதற்கு அடிப்படையான காரணம், அதிக மனக்கவலை, நாள்பட்ட துக்கம் இவைகள்தான்.

தூரதிருஷ்டி ஏற்பட்டு வரவர அதிகப்படும்; வெளிச்சத்தைச்சுற்றிலும் ஒளிவீசும்; சாமான்களை ஒரு பனித்திரையினூடே பார்ப்பது போலிருக்கும். வரவர கண் பார்வை போய்விடும். உடனே சரிவர வைத்தியம் செய்யாவிட்டால் கண்ணையிழக்கவேண்டியதுதான்.

வலி கடுமையாக இருக்கும்; கண் சிவக்கும். கண் வீங்கும்; அடிக்கடி வாந்திஎடுத்தல்; சாதாரணமாக ஜலதோஷம் பிடித்த கண் மாதிரி இருக்கும். பாப்பா விரிந்தும், கண் கருப்புப்பாகம் சுரணை தெரியாமலிருக்கும். பார்வை வெகு சீக்கிரம் மங்கிவிடும்; ஒருதடவை அல்லது இரண்டு தடவை இவ்வியாதி வந்தால் கண் பார்வை நிச்சயமாய் போய்விடும். ஒரு கண்ணில் வந்தால் இரண்டாவது கண்ணும் சீக்கிரம் பாதிக்கப்படும்.

ஆரம்பத்தில் உடனே ஆபிரேஷன் செய்தாலொழிய பிரயோசனப்படாது.

உபயோகப்படக்கூடிய மருந்துகள்.

பெல்ல, காமோக்ளேடியன், சைனா, பாஸ், ஆசிட் பாஸ், நக்ஸ்வாமி, கோலோசிந்த், ஈசரின், மெர்-கார், ஜெல்ச, யூபரேஷியா, ஆர்னிகா, ஸ்பைஜிலியா முதலியன.

(156) கிரிக்கட்டி—STYE.

இது சகலருக்கும் தெரிந்த வியாதியே. சிறு சிறு கட்டிகளாக கண்ணிமையின் ஓரங்களில் கிளம்பும். திரும்பித் திரும்பிவரும்.

பல்ஸ்:- இது ஆரம்பத்தில் கொடுக்கவேண்டிய மருந்து. இது தவறினால்.

ஸ்டாபிசே:- இது நல்லது.

ஹெபார்:- சீழ்பிடித்துவிட்டால்; நாள்பட்ட கேசுகளுக்கு ஸல்பர்.

கால்-கார்ப்:- கிராபைடிஸ் முதலியன உதவும்.

போரிக் ஆஸிட் அல்லது காலண்டுலா திராவகத்தை விட்டு சூடான ஒற்றடம் கொடுக்கவேண்டும். நன்றாகப் பழுத்து சீழ்பிடித்துவிட்டால் ஆபிரேஷன் செய்துவிடவேண்டும்.

காது வியாதிகள்.

(157) காது வலி—EAR ACHE.

இது அநேக காரணங்களினால் ஏற்படும்.

(i) காதிற்குள் சிரங்கு:- ரொம்ப ஆபத்தான அதிக வலியுடன்கூடியது. அடிக்கடி சிரங்குகள் ஏற்படுவதால் காதின் உட்சுவர்கள் தடித்து, ஜவ்வு தடித்து செவிடு ஏற்பட்டுவிடும்.

சாதாரண சிரங்கிற்கு மாதிரியே அகோனைட், பெல்ல, மெர், ஹெபர், ஸிலிசியா, ஸல்பர் முதலியன கொடுக்கவேண்டும். காதிற்குள் டிஞ்சர் பெல்லடோனா, அல்லது டிஞ்சர் ஓபியம் போடலாம்.

(ii) காதில் சீழ்வடிதல்—OTITIS.

தொண்டைமூக்குவியாதிகளினால் இது ஏற்படும். காதில் கடும் வலி, செவிடு, சிறிது சுரம்; குழந்தைகளுக்கு இது மூளை சுரம்போலவே காணும். திடீரென வலி குறைந்து காது ஜவ்வு பொத்தலாகிவிடும்; காதிலிருந்து சீழ்கொட்டும்.

அகோனைட்:- குளிர் காற்று, வாடை முதலியவை களினலேற்பட்டால்.

ப்ளண்டாகோ டிஞ்சர்:- இதை பாதி வெந்நீரில் கலந்து 10—15 நிமிஷத்திற்கொருதரம் காதில் போட்டுவர குணம். இதை உள்ளுக்கும் கொடுக்கவும்.

மெர்க்:- வலி தாங்க முடியாமல் சுவற்றில் தலையை மோதிக்கொள்ளுவர்.

பெல்ல:- மூளைத்தாக்கப்பட்டு, முகம் சிவந்து நல்ல வலி.

பல்ஸ்:- மணல்வாரிக்குப் பிறகு, சுரீர் என்று பாயும் வலி.

காமோ:- தாங்கமுடியாத வலி.

கேலிஸூர்:- நாள்பட்ட வெள்ளை சீழ்.

மாக்பாஸ்:- தாங்க முடியாத விட்டுவிட்டு வரும் வலி.

ஸல்ப்:- அக்யூட் குறிகள் சமனமான பிறகு.

காப்சிகம்:- மாஸ்டாயிட் தாக்கப்பட்டால்.

வலியைக் குறைப்பதற்காக அடிக்கடி கார்பாலிக் ஆசிட், கொகேன், ௧ளசரின் (5 கிரெயின் ஒவ்வொன்றிலும், 1 டிராம் கிளசரினில் கலக்கவும்.) சிலசமயம் டிஞ்சர் ஓபியம்; போரிக் ஆசிட்லோஷன் முதலிய போடவேண்டும்.

காதில் சீழ்வருவது செவிட்டை உண்டாக்கும். ஆகவே ஜாக்கிரதையாக இதை கவனிக்கவேண்டும். நாள்பட சீழ் வருவதினல் ரொம்ப கடுமையான காம்பிளிகேஷன்கள் ஏற்பட்டுவிடும்.

சீழ் வந்துகொண்டிருக்கும்போது காது செவிடாக இருப்பது மிக நல்லது. சீழ் வராமல் செவிடு ஏற்பட்டுவிட்டால் சௌகரியமாகிறது மிகவும் சிரமம். பொதுவாக காதில் அடிக்கடி ஸிரிஞ்ச் செய்வது. காது சிழை பஞ்சைவைத்து துடைத்துவிட்டு காலையில் மாத்திரம் ஒருதரம் சுத்த வெந்நீரால் கழுவவேண்டும். இரவில் படுக்கப்போகும்போது காதை நன்ருக அடைத்துவிடக்கூடாது. காதில் மருந்தை போட்டுக்கொண்டு படுக்கவேண்டும்,

காதினுள் போட்டுக்கொள்ளக்கூடிய மருந்துகள்.

(1) போரிக் ஆசிட், ப்ளண்டாகோ மிக்ஸர் (மில்க் சுகரை நன்ருக ப்ளண்டாகோ டிஞ்சர்விட்டு நனைக்கவும். அவ்வளவு போரிக் ஆசிட் சேர்த்து கலக்கவும். நன்ருக பவுடர் காய்ந்துவிடுகிறவரையில் கலக்கவும்.) இதை காதில் தினம் இரவில் போட்டுக்கொள்ளலாம்.

(2) கேலிஸூர் 6x பவுடர்.

(3) ஹைட்ராஸ்டிஸ் எட்டு சொட்டு கிளசரின் அரை அவுன்ஸ்.

(4) ஆசிட்நைட்ரேட் ஆப் மெர்குரி ஆயின்மெண்ட்.

(5) போரிக் ஆஸிட்.

(6) காலண்டுலா டிஞ்சர்.

(7) நாட்பட்ட கேசுகளுக்கு முல்லீன் எண்ணை,

(8) ஹைட்ரஜன் பெராக்ஸைட். (இது கழுவுவதற்குமட்டும் உபயோகப்படும்.)

(9) கார்பாலிக் ஆசிட் கிளசரின் (இது அதிக நாற்றமுள்ள சீழுக்கு உபயோகப்படும்— ஆசிட் கார்பாலிக் 1 டிராம், கிளசரின் 1 அவுன்ஸ், டிஸ்டில்ட் வாட்டர் 5 அவுன்ஸ்)

சிலசமயம் மூளை தாக்கப்படும் அளவிற்கு கடுமையான குறிகளேற்பட்டுவிட்டால், காது ஜவ்வை பொத்தல் செய்துவிடவேண்டியிருக்கும். இதனல் நல்லதே. தடித்துப்போன ஜவ்வினலேற்பட்ட செவிட்டிற்கு இம்மாதிரி தாமே துளை ஏற்படுத்துவது நல்லதே. மூளை தாக்கப்படும்போலிருந்தால் மாஸ்டாயிட் ஆபிரேஷன் செய்யவேண்டிவரும்.

ஆகவே அதற்குத் தக்க மருந்துகளையும் இன்ஜெக்ஷன்களையும் உபயோகிக்கவேண்டும்.

இன்ஜ:- பெயின்கில், ஸல்பதயோசால், வியூக்யூர், கால்ஸல்ப், கேலி பைக்ரோம், ஸோரினம், பாஸ்பரஸ், கேலி அயோட் முதலியன.

(158) காது செவிடு—DEAFNESS.

காது சீழினல் ஏற்படும் செவிட்டிற்கு மேலத்தியாயத்திலேயே சிகிச்சை சொல்லிவிட்டோம்.

(1) காது குறும்பை—CERUMEN.

காதுகளில் பூச்சிகள் புகாமலிருக்கவும், காது கெட்டு வரண்டுவிடாமலிருக்கவும் காதில் ஒருவித எண்ணெய்ப்பசையுள்ள மெழுகுபோன்ற வஸ்து தயாரிக்கப்படுகிறது. சிலசமயம் சிலர் காதை அதிகமாக நோண்டி நோண்டி இக்குறும்பையை உள்ளே தள்ளிவிடுகிறார்கள். இது உள்ளே தங்கி இறுகி

விட்டால் செவிடு ஏற்பட்டுவிடுகிறது. காதில் சத்தமும், மயக்கமும் சில சமயம் ஏற்படுகிறது. காது ஸ்பெகுலம் வைத்துப்பார்க்க இது நன்றாகத் தெரியவரும்.

இரண்டு மூன்று இரவுகளில் காதில் ஆலிவ் எண்ணெய் அல்லது நல்லெண்ணெயைவிட்டு ஊறவைக்கவும். பிறகு ஸிரிஞ்சைக்கொண்டு மெதுவாக, உடம்பு சூடுடைய வெந்நீரினல் பீச்சவேண்டும். ஏனென்றல் வெந்நீர் அதிக சூடாயிருந்தாலும், அதிக சில்லிப்பாக இருந்தாலும் மயக்கமேற்படும். காதை ஸிரிஞ்ச் செய்யும்போது காதின் மேல் பாகத்தை இடது கைவிரலால் தூக்கி இழுத்து தலைப்புறமாக பிடிக்கவேண்டும்.

உள்ளுக்கு கிராபைடிஸ், கோனியம், ஸல்பர், முதலியன உபயோகப்படும்,

(2) நரம்புத் தளர்ச்சியினல் செவிடு.

இதனல் வலியிருக்காது.

(3) மூளை வியாதிகளினல், உட்காது அடைபடுவதினல், ஜவ்வு புண்ணாகி பொத்துப் போவதினல்; சில காது நரம்பு வாதத்தால் தாக்கப்படுவதினல்; சில தொண்டை வியாதிகளினல்; சில மருந்துகளினல்.

(4) பிறவியிலேயே ஊமையாகவும் செவிடாகவும்—இவ்வியாதி தீராது.

வயது, பரம்பரை செவிட்டுத்தனம் மூளைக் கோளாறுகள், முதலிய சகலவற்றையும் கவனித்து மருந்து கொடுக்கவேண்டும்.

அதிகக் கொயினவை உட்கொண்டதினல், தொண்டையில் டான்சில்ஸ் வீக்கம் கண்டு செவிடு

ஏற்படுவதினால், நாட்பட்ட காது சீழினால், வாயு, கவுட், சிபிலிஸ் முதலிய வியாதிகளினால் செவிடு ஏற்பட்டிருந்தால் நிவர்த்தியாவது சிரமமே. சிலருக்கு திடீரென ரயில் சத்தம், பெருங்கூட்டத்தின் சத்தம், பெரிய மிஷின்களின் சத்தம்; இடி இம்மாதிரி சந்தர்ப்பங்களில் காது கேட்டதானால், இம்மாதிரி செவிட்டை நிவர்த்தி செய்வது சுலபமல்ல. எப்படியிருந்தாலும் காரணத்தைக் கண்டுபிடித்து அதற்குத்தகுந்த சிகிச்சைசெய்வதுதான் சரியான முறை.

ஜுரத்திற்குப் பிறகு:- பெல்ல, பல்ஸ், சைனா, ஸல்ப். ஆசிட் பாஸ் கேலிமூர்.

அடிபட்டதினால்:- சைனா ஸல்ப், கோனியம், ஆர்னிகா.

காதுகளில் சத்தம்:- பெல்ல, ஸல்ப். சோடாசேலிசிலஸ், சைனாஸல்ப், நக்ஸ்வாமி, இக்னேஷியா, பாப்டீஷியா, ஜெல்சமியம், கிராபைடிஸ் முதலியன.

டான்சில்ஸ்:- மெர்-அயோட், கேலி அயோட், அயோட், பரைடாகார்ப், தூஜா, மார்பில்லினம், முதலியன.

ஜலதோஷத்தினால்:- அகோனைட், பல்ஸ், பெல்ல, மெர், கேலி அயோட், டல்காமரா, பிரியோனியா.

பலஹீனத்தால்:- ஆசிட் பாஸ், சைனா ஸல்ப், அயோட், காக்டஸ்; பெட்ரோலியம், ஆர்சனிக், கார்போவெஜி.

ரத்தக்கெடுதலால்:- பெர்ரம்-பிக்ரிகம், பெர்ரம் பாஸ், ஆரம்.

இன்ப்ளு:- பாஸ், பயோஆம்னின், வாடினியம்.

காதில் சதை வளருவதுண்டு. இதற்கு பாலிபஸ் (Polypus) என்று பெயர்.

கால்-கார்ப்:- மற்ற இடங்களிலும் கிளாண்டுகள் வீங்கியிருந்தால்.

தூஜா:- சிறந்த மருந்து. இதை மேலுக்கும் டிஞ்சராகத் தடவி வரலாம்.

ஸாங்கு, ஆசிட் நைட்ரிக், டியூக்ரியம் முதலியன உதவும்.

(159) மூக்கு வியாதிகள்.

பீனசம்—OZÆNA.

நாசியின் ஜவ்வுச்சதைகள் சுருங்கி சீழ்போன்ற அழுத்தமான சளி வெளிவந்துகொண்டிருக்கும். நாசியில் பொருக்கு தட்டிக்கொண்டு துர்நாற்றம் கடுமையாக இருக்கும். ஆனால் இது நோயாளிக்கே தெரியாது.

சிபிலிஸ், சுரங்கள், அடிபட்டதினால், முதலியவைகளினால் ஏற்படலாம்.

காட்மியம்-ஸல்ப்:- சகிக்கமுடியாத நாற்றம் ஆழமான புண்கள்.

ஸிபிலினம்:- நடு நடுவே அடிக்கடி கொடுக்க வேண்டும்.

ஆரம்:- நாசிகளில் சூடு, மஞ்சள் பச்சையான சளி.

ஹைட்ராஸ்டிஸ்:- மஞ்சளான கடிப்பான சளி—இதை மேலுக்கும் முரியாட் ஆப் ஹைட்ராஸ்டிஸ் ஆக போடலாம்.

நைட்ரிக்-ஆசிட்:- அதிக மெர்குரி நாட்டு வைத்தியர்களால் கொடுக்கப்பட்டிருந்தால்.

கேலி-பைக்:- தடிப்பான, கம்பிமாதிரியான, ரத்தம் கலந்த சளி.

ஆர்சனிக்:- ரொம்பவும் நாட்பட்ட, சுலபமாக நிவர்த்தியாகாத, தண்ணீர்போன்ற சளி.

ஸோரினம்:- ஸோரா தேகிகள்.

ஸாங்கு-நைட்:- மஞ்சள் நிறமான நீடித்த சளி.

அலுமென்:- ரத்தம் கொட்டும் புண் இவைகளைத் தவிர மெர்கு அயோட், பைடலோகா, சின்கம் முதலியனவும் உபயோகிக்கப்படும்.

இன்ஜ்:- காட்மியம், வீடிஸ்.

(160) மூக்கிலிருந்து ரத்தம் கொட்டுதல்.

EPISTAXIS.

இது ஒரு சாதாரணமான வியாதியாயிருந்தாலும், சில கடும் வியாதிகளில் இது அறிகுறியாயிருக்கலாம். ரத்தம் அதிகமாயிருந்தாலும் அடிக்கடி பெருகிக்கொண்டிருந்தாலும் இதை அவசியம் சிகிச்சை செய்யவேண்டும்.

மயக்கம், தலையில் கனம், பொதுவாக ஒரு நாசியிலிருந்துதான் பெருகும். சில சமயம் இந்த ரத்தம் மூக்கின் வழியாக சென்று வாயின் வழியாக வெளிவரும்.

மூக்கில் அடி, இருமல், நாசிப்புண், டி.பி, ரத்தக்கொதிப்பு முதலியவைகளினால் ஏற்படும். சில

சமயம் ஸ்திரீகளுக்கு மாதவிடாய்க்குப் பதிலாக இது ஏற்படலாம்.

மில்லிபோலியம்:- பொதுவாக தலைவலியுடன், முகம் சிவப்பு.

ஆர்னிகா:- அடிபட்டதினால்.

அகோனைட்:- ரத்தக்குழாய் அதிர்ச்சியினால்.

பெல்ல:- முகம் சிவந்து, துடிக்கும் தலைவலி.

பல்ஸ்:- மாதவிடாய்க்குப் பதிலாக ஏற்பட்டால்.

ஸீகேல்:- கருப்பு ரத்தம், சுரத்தின்போது.

பெர்ரம் பாஸ்:-காரணமில்லாமல் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தால்.

மெலிலோடஸ்:- முகம் ரத்தச் சிவப்பு.

க்ரோகஸ்:- மூக்கிலிருந்து கட்டிகட்டி கம்பிபோல் தொங்கும்.

ஹமமலிஸ்:- ரத்தம் சொட்டும்; கருரத்தக்குழாயிலிருந்து ரத்தக் கசிவு.

நாசியை அலம்புவதற்கு ஹமமலிஸ் லோஷன் அட்ரனலின் 1:1000 லோஷன் போடவேண்டும்.

இந்த லோஷன்களை போடுவதற்கு முன்னால், உப்புத் தண்ணீரால் அலம்பவேண்டும். குளிர்ந்த தண்ணீரை நெற்றி; கழுத்து, பிடரிப்பக்கங்களில் அடித்தால் நல்லது. இரண்டு கைகளையும் உயர்த்தி சிறிது நேரம் வைத்திருத்தல் நல்லது.

இன்ஜ்:- பயோஸ்டிப்டிக் அடிக்கடி கொடுக்க வேண்டும். டிஞ்சர் பைகல்ரிலிஜி இன்ஜெக்ஷன் கொடுக்கலாம்.

(161) மூக்கில் சதை வளருதல்—Polypus Nasi.

கருஞ்சிவப்பு நிறமாய் வழ வழவென்று நன்றாக நகர்த்தப்படும்படியாய் வளர்ந்து தொங்கிக் கொண்டிருக்கும். சில சமயம் சீழும் பிடித்துக் கொள்ளலாம்.

மூக்கில் மூச்சுவிட சிரமம், பேசும்போது மூக்கால் பேசுவதுபோன்ற னொண னொண என்ற சப்தம், நாசி வழியாய்ப் பார்த்தால் சதை வளர்ந்திருப்பது நன்றாகத் தெரியும்,

ஸாங்கு:- தலைவலி அடிக்கடி, கன்னம் சிவப்பு (இதை ஸாங்கு-நைட் பவுடராக மேலுக்குப் போடவும்),

டியூக்ரியம்:- இதையும் மேலுக்கும் போடலாம். இது சிறந்த மருந்து.

தூஜா, கால்-கார்ப், பார்மிகா, கேலி-பைக்; கேலி-நைட், ஆசிட் நைட்ரிக், காட்மியம் ஸல்ப், ஸோரினம், பாஸ்பரஸ், மெர்-அயோட் முதலியன உதவும்.

இன்ஜ்:- கானோகில், தூஜா, டியூக்ரியம்.

(162) அடினாயிட்ஸ்—ADENOIDS.

இது குழந்தைகளுக்கு டான்ஸில்ஸ்கூட ஏற்படுவது சகஜம். அடிக்கடி ஜலதோஷம் ஏற்படும்; இது நாசித்துவாரம் வாயின் உட்பக்கத்தில் சேரும் இடத்தில் வளர்வது. குறட்டை விடுவது சகஜம். அடிக்கடி தூக்கம் பயத்தினால் கலைவது. உடம்பு இளைக்கும்: பாடங்களில் சிரத்தை வராது; யூஸ்டேஷியன் குழாயில் அடைபடுவதால் காதும் செவிடாகலாம். அடிக்கடி காதுவலி, காதில் சீழ் முதலியன.

இதை ஆபரேஷன் செய்வது நலம்.

டான்ஸில்ஸுக்கு சொன்ன மருந்துகள் இதற்கும் உபயோகப்படும்.

கால்-கார்ப், பாசில்லினம், கால்பாஸ், ஸல்பர், தூஜா, ஸோரினம், பரை-அயோட், அயோட், காரிகா பாபயா, நேட்மூர், பரை-கார்ப் முதலியன.

இன்ஜ்:- கால்பாஸ், பரைடா.

தோல் வியாதிகள்.

(163) தோல் அரிப்பு—PRURIGO.

தோல் தடித்து, கருத்து, அதிக அரிப்பு, சிறு சிறு கொப்புளங்கள்கூட இருக்கலாம். தாங்கமுடியாத அரிப்பு, ஏதோ ஊருகிறப்போல் தோற்றம், சொரிந்து சொரிந்து புண்ணாகிவிடும், தூக்கம் கெடும், ஆகவே இரவில் தூக்கம் வராமல் ரொம்ப அவஸ்தைப்படுவர்.

ரேடியம்:- இரவில் அதிகக் கடுமையான அரிப்பு.

ஸல்பர்:- தாகம், தோல் வரண்டிருக்கும், படுக்கையிலதிகம், முக்கியமான மருந்து.

ஆர்சனிக்:- எரிச்சலுடன் அரிப்பு, பலவீனமுடையவர்கள்.

அலுமினா:- வரண்ட தோல் ரத்தம் பெருக்கும்—அரிப்பு தாங்கமுடியாது.

ரூமக்ஸ்:- சில்லிப்பு பட்டவுடன் அரிப்பு அதிகம்.

அம்ப்ரா:- ஸ்திரீ யோனியிலும், ஆசனவாயிலும் அரிப்பு.

டாலிகஸ்:- பயித்தியம் பிடிக்கும்படியான அரிப்பு.

கார்போவெஜி:- யோனியில் அரிப்பு, எரிச்சல், உறுத்தல்.

கலாடியம்:- யோனியில் அரிப்பு.

காலின்ஸோனியா:- கர்ப்பத்தில், யோனி அரிப்பு, மலச்சிக்கல், மூலம்.

மாகோனைரம்:- கடி, படை அரிப்பு.

பெட்ரோலியம்:- தோல் உரிந்துகொண்டு, ஸோரியாஸிஸ், அரிப்பு.

டாரண்டுலா:- மாதவிடாய்க்குப் பிறகு அரிப்பு.

ஸிபியா:- யோனியில் அரிப்பு எரிச்சல், துடைப் பக்கம் கொப்புளம்.

மெஜி:- ஊருவதுபோல அரிப்பு; ஒரு இடத்தில் சொரிந்தால் இன்னொரு இடத்தில் அரிப்பு காணும்.

கிரியோஸோட்:- அரிப்புடன் வீங்கியிருந்தால்.

லைகோ, இக்னேஷியா, அபோஸைனம், காஸ்டிகம், ஏபிஸ், கார்பாலிக் ஆசிட், ரஸ்வெனினடா, முதலியவை உதவும்.

மதுமேகத்தில் அரிப்பு இருக்கும். அதற்குத் தக்க சிகிச்சை செய்யவேண்டும்.

மேலுக்கு கார்பாலிக் ஆசிட் லோஷன், ஆயில் லெவண்டர், ஸல்பர் ஆயின்ட்மெண்ட், மெஜிரியம் லோஷன் முதலியன உபயோகப்படுத்தவேண்டும்.

கலாய்டல் ஸல்பர் உபயோகப்படுத்தலாம்.

இன்ஜ்:- காஸ்டிகம்; ரேடியம்.

(164) அர்டிகேரியா—URTICARIA.

இது ஒட்டுவாரொட்டியல்ல; பெரும் கொப்புளங்களாகவும், தடிப்பாகவும் அரிப்பு, எரிச்சல, கருப்புடனும் கூடியிருக்கும். இது ரத்தத்தின் கெடுதலால் ஏற்பட்டதால் சுண்ணும்புசேர்ந்த மருந்துகளைக் கொடுக்க நலம். இவைகளின் கடுப்பு காஞ்சொறி பட்டால் எப்படி அரிப்புடன் தடிக்குமோ அப்படியிருக்கும். மாலையில் அதிகப்படும். குளிர் காற்று பட்டாலும் அதிகப்படும்.

அஜீரணம், சில ஆகாரங்கள், புளிப்பு பதார்த்தங்கள், சிலமருந்துகள் முதலியவற்றால் ஏற்படலாம்.

ஏபிஸ், க்ளோரால் ஹைட்ரேட், அர்டிகா, அகோனைட், பல்ஸ், நக்ஸ், ஆண்டிம்-க்ரூட், டல்கமரா, அஸ்டாகஸ் ப்ளுவஸ், ஹைட்ராஸ்டிஸ், பிரியோனியா, ஆர்சனிக், சைஜைசல்ப், இக்னேஷியா, ட்ராசியா, டிராசரா முதலியன.

அடிக்கடி இளம் வெந்நீரில் சுத்த ஸோப்பு போட்டு குளிப்பது நலம்.

அஜீரணம் உண்டாகக்கூடிய பதார்த்தங்கள் சாப்பிடக்கூடாது.

இன்ஜ்:- மில்கோடின், அர்டிகா.

(165) PITYRIASIS—பொடுகு.

இது ஒரு மேல் தோல் சம்பந்தமான வியாதி. தோல் செதில் செதிலாக உதிரும். சிவப்பு, அரிப்பு; முதலியவைவுமிருக்கும்.

ஆர்ச:- சிறந்த மருந்து.

ரேடியம்:- நல்ல சிவப்பு, எரிச்சல் வலி,

நேட்-ஆர்ச்:- பொடுகு, செதில் செதிலாக உடம்பில் சூடு அதிகப்பட்டால் அரிப்பு அதிகம்.

ஆசிட் ப்ளூரிக்:- வரண்ட தோல்—தலை அரிப்பு—மயிர் உதிருதல்.

ஸெபியா:- தலை பொடுகு ஈரமைப்புடன்.

மெஜ்ரி:- தலைமயிர் உதிர்வதுடன் நல்ல அரிப்பு.

கிராபைடீஸ்:- பிசுக்கென்ற நைப்பு. மயிர் உதிருதல்.

லைகோ:- ஆர்சனிக்குடன் மாற்றி மாற்றிக் கொடுக்கவும்.

கிளசரினுடன் போரிக் ஆசிட் அல்லது டிஞ்சர் காசியா ஸொபோரா தடவவும்.

இன்ஜ்:- அலோஸ், ரேடியம்.

(166) ஸோரியாசிஸ்—PSORIASIS,

வரண்ட வெள்ளைச்செதில்களுடன்கூடின ஒரு தோல் வியாதி. தோலில் வெடிப்புகள், இருக்கும். இது தொத்து வியாதியல்ல. கொப்புளங்களிருக்காது.

சிறிது அரிப்பு இருக்கும்; மற்றபடி வேறு ஒரு தேகக்கோளாறுமிருக்காது. முழங்கை, முழங்கால், எலும்பு தோலுக்கு சமீபம் இருக்கும் இடங்களில் இது சிறு சிறு வெள்ளைப்பொட்டுகளாகவும், வரண்ட வெள்ளைச் செதில்களுடனும் ; காணும். மார்ப்பக்கம், முதுகு அல்லது ஒரு கால் கை பூராவும் பரவிக்காணலாம்.

ரொம்பவும் பிடிவாதமான வியாதி இது.

அடிக்கடி வத்தலான மீன்களைச் சாப்பிடுவதாலும், பச்சை காய்கறிகள் போதாமையாலும், அதிகக் கவலை, அதிகமான வேலை முதலியவைகளாலும் இது ஏற்படலாம். ஆஸ்தமா, டி. பி. உடையவர்களுக்கு இது வருவது சகஜம்.

ஆர்சனிக், ரேடியம்புரோம், தைராயிடின் (ரத்த சோகையுடையவர்கள்); குப்ரம் (இளம்பெண்கள்); பெட்ரோல் (ஆழமான வெடிப்புகளுடைய பிடிவாதமான நாட்பட்ட கேசுகள், மழை காலத்திலும், குளிரிலும் அதிகமாகும்); மெர்-அயோட் (ஸிபிலிஸ் சம்பந்தமுடைய கேசுகள்), கிரிஸோபானிக் ஆசிட், ஆசிட் நைட், ஐரிஸ்வெ, ஸல்பர், லைகோ, கேலி-அயோட், டியூக்ரியம், ஈதியோப்ஸ், ஆண்டி (கிளாண்டு வீக்கமுடையவர்கள்); கிராபைடிஸ் (காதின் பின்பக்கம், உள்ளங்கை, கைகளின் பின்பக்கம் முதலிய இடங்களில் ஸிபிலிஸ் சம்பந்தப்பட்டவை); சிகூடா (தொட்டால் எரிச்சலுடன் கூடினது); காசியா ஸொபோரா, பொராக்ஸ் (ஆர்சனிக்குக்கு அடுத்தபடி சிறந்த மருந்து); காலோட்ராபிஸ், ஹைட்ரோகாடைல் முதலியன சிறந்த மருந்துகள்.

இன்ஜ்:- ஆரோசால், பொரக்ஸ், ரேடியம்-ப்ரோம்.

(167) அக்கி—HERPES.

கரப்பான் மாதிரி இல்லாமல் பெரும் கொப்புளங்களாக அல்லது சிறு கொப்புளங்களாகவோ தனித்தனி கூட்டமாக உடம்பின் பல பாகங்களிலும் சற்று வீக்கத்துடன் நீர்போன்ற திரவத்துடனும் அல்லது வெளுப்பு நிறமான திரவத்துடனும் ஏற்படும். பிறகு காய்ந்து, பொருக்குகட்டி, அல்லது உடைந்து காய்ந்துவிடும்.

இதில் பலவிதங்கள் உண்டு. ஒன்று உடம்பில் பாதி பாகத்தைச் சுற்றி வளையமாக ஒரு நரம்பின் போக்கை அனுசரித்து கொப்பளம் காணும். சுரம், கடும்வலி, எரிச்சலுடன் 14—22 நாள் அடிக்கும். பார்ப்பதற்கு பாதி உடம்பு பெல்ட் போட்டமாதிரி தெரியும். சில சமயங்களில் இது முகம், தோள் பட்டை, வயிறு, துடையின் மேல்பக்கம் முதலிய பாகங்களில் காணப்படும்.

மலேரியா, நிமோனியா, ஜலதோஷம், மெனிங்கைடிஸ் முதலிய சுரங்களில் உதட்டில் மாத்திரம் சிறு சிறு கொப்பளங்களாகக் காணும்.

சீதோஷ்ண ஸ்திதி மாறுதலாலும், சிறு வயதிலும் பெரும்பாலும் இவ்வியாதி பீடிக்கும். சிற்சிலருக்கு இது புண்ணாகவும் ஆகிவிடலாம்.

இவ்வியாதி நரம்பு வியாதியானதினால் எரிச்சல், கடுப்பு, நரம்பு வலியுடன் கூடியிருக்கும்.

மற்றபடி உடம்பில்வலி, அசதி, சுரம், தலைவலி, குளிர், நரம்புவலிகள் முதலியன சகஜமாகவிருக்கும்.

அகோனைட்:- குளிர் வாடைக்காற்று வீசுவதினால்—பயம்—கவலை.

வாரியோலினம்:- இதை அடிக்கடி கொடுக்க வேண்டும்.

ரஸ்டாக்ஸ்:- சாதாரண கேசுகளுக்குத் தகுந்தது. ஈரத்தில் நனைந்திருந்தால்.

ஆண்டிம்டார்ட்:- கொப்புளங்கள் ரொம்ப அரித்துக் கொண்டும், தண்ணீர்மாதிரி உள்ளேயிருக்கும்.

ரானங்குலஸ்:- வலி தாங்கமுடியாதது. வலது புறம் மார்பில் சுரீர் சுரீரென்ற வலி.

மெஜி:- வயதானவர்களுக்கு.

ப்ருனஸ் ஸ்பைன்:- வலி எவ்விடமிருக்கிறதென்று தெரியாமலிருந்தால்.

ஆர்சனிக்:- பலவீனமுடையவர்கள்; நாட்பட்ட கேசுகள்.

பைடலோகா:- புண்கண்ட கேசுகள்.

காமோக்ளாடியம், சிஸ்டஸ், நேட்மூர், மாங்கானஸ், ஸ்டாபிசே, கிராபைடிஸ்; ஸெபியா, டெல்லூரியம், ஸல்பர், ஹெபர், இக்னேஷியா முதலியன நல்ல மருந்துகள்.

இன்ஜ்:- ஸல்பதயோசால் 3x, ஆசிட் நைட், ஆண்டிம்டார்ட்.

மேலுக்கு கொகேன் ஆயின்மெண்ட், காந்தாரிஸ் லோஷன், டிஞ்சர் பைடலோகா, சின்க்பேஸ்ட் முதலியன உபயோகப்படும். ப்ளண்டாகோ டிஞ்சர் வலியைக் குறைக்க உபயோகிக்கவும்.

(168) கரப்பான்—ECZEMA.

தோல் வீக்கம் சம்பந்தப்பட்டது. சிவந்து நெருக்கமாக சிறுசிறு கொப்பளங்கள் ஒன்றுகூடி பிசுக்கான ஊன் வெளிப்பட்டுக்கொண்டும் மஞ்சள் பொருத்தட்டிக்கொண்டுமிருக்கும் வியாதி. இதன் நீர் துணியில் பட்டால் துணி கஞ்சிபோட்டமாதிரி விறைப்பாக ஆகிவிடும். இதுதான் இதற்கும் பாக்கியுள்ள தோல் வியாதிக்கும் வித்தியாசம். வலி, எரிச்சல், குத்தல் முதலியனவுமிருக்கும்.

குழந்தைகளுக்கு ரொம்ப சகஜமாக வரும் வியாதி. எல்லா வயதுள்ளவர்களுக்கும் வரும். ரொம்ப பிடிவாதமான வியாதி.

கொப்பளங்கள் தோலின் அடிப்பாகத்தையும் தாக்கிவிடும்; மேலும் மேலும் கொப்பளங்கள் வெடித்துக்கொண்டே இருக்கும். அரிப்பு கடுமையாகவும் வெடிப்பும் அதிகமாகவுமிருக்கும். காய்ந்து போன பாகத்தில் தோல் தடித்து பிசுக்கென்ற கசிவுடன்கூடியிருக்கும்.

தலைப்பாகம், காதின் பின்பக்கம், முகம், முன்கை, கால், முதலிய பாகங்களில் சகஜம்.

இதை கடும் வெளிப்பூச்சு மருந்துகளால் அமுக்கிவிட்டால், ஆஸ்த்மா, யானைக்கால், கணை, பிரான்கைடிஸ், வெள்ளை, பேதி முதலியன உண்டாகலாம். இதில் பலவிதமான அறிகுறிகளுக்குத் தக்கபடி கடுமையும் பலவிதமாகவிருக்கும்.

ஸிபிலிஸ், டி. பி. சம்பந்தப்பட்டிருந்தால் இவ்வியாதி சௌகரியமாவது சுலபமல்ல.

இது ஒரு தேகவாகின் வியாதி, பரம்பரையாகக் கூடவரும்; அதிகபவுடர் உபயோகித்தல், வர்ணங்களில் உழலுதல், சரியான சாப்பாடு, காலாகாலத்தில் இல்லாதது, அதிககவலை முதலியன காரணங்கள்.

கவுட் வியாதியுடையவர்கள், கொத்தனர் (சுண்ணும்பில் வேலை செய்வதால்), சமையல்காரன் (அதிகச் சர்க்கரையில் புழங்குவதால்), சக்கிலியன் (சேர்ந்தாப்போல் துடைகளை இறுக்கிக்கொண்டு ரொம்ப நாழி உட்கார்ந்திருப்பதால்), வண்ணுத்தி (அதிகமாக சோடா சோப்பு முதலியவற்றில் புழங்குவதாலும்), இவ்வியாதியினல் சிரமப்படுவது சாதாரணம்.

அஜீரணம் உண்டாகாமல் தடுத்துக்கொண்டு பால் ஆகாரம் மிதமாக சாப்பிடவேண்டியதவசியம்.

ரஸ்வெனி:- சாதாரண கரப்பான்.

க்ரோடான்:- முகம், யோனி அதிக அரிப்பு.

காந்தாரிஸ்:- எரிச்சல், கடுப்பு அதிகம்-புண்ணொதருதல்.

ரஸ்டாக்ஸ் 10 M, C M–இதைக் கொடுக்க ஞாஸ்தியாகித்தான் அமுங்கும். ஆகவே தயாராக இருக்கவேண்டும்.

அர்டிகா:- எரிச்சல், அரிப்பு, கடுப்பு.

மெர்:- சீழ் பிடித்திருந்தால்.

ஹெபர்:- குத்துவலியுடன் சீழ் பிடித்திருந்தால்.

பொவிஸ்டா:- பின் கைகளில் (ரொட்டி சுடுபவர்களுக்கு அதிகம்).

கிராபைடிஸ்:- பிசுக்கென்ற நீர்போன்ற கசிவு (இதை சிடசியன் ஆயின்மெண்டுடன் உபயோகிக்கலாம்).

கேலி-பைக்:- ஆழமான புண்–கம்பிபோன்ற இழுக்கக்கூடிய கசிவு.

அலுமினு:- வரண்ட நாள்பட்ட அரிப்புடன் கூடினது.

ஓலியாண்டர்:- தலையில்.

சிகூடா:- மஞ்சள் பொருக்குடன் மோவாய்க்கட்டையில் (ஆண்களுக்கு).

வயோலா, லைகோ, கால்-கார்ப், ஸிலிசியா, ஆர்சனிக், ஆண்டிம்-டார்ட், பெட்ரோல், மெர்-கார், முதலியன சிறந்தவை.

கன் பவுடர்-இதை 3 கிரெயின் அளவு தினம் மூன்று முறை நாள்பட கொடுத்துவரவும்.

இன்ஜ்:- அக்மாரிஸ், மில்கோடின், க்ரோடான்.

மேலுக்கு:-க்ரோடான்-ஆயின்மெண்ட், கார்பாலிக் ஆசிட் ஆயின்மெண்ட்(ஆசிட் 20 சொட்டு, வாசலின் ஒரு அவுன்ஸ்), பிஸ்மத் ஆயின்மெண்ட் (பிஸ்மத் 60 கிரெயின்-வாசலின் 2 அவுன்ஸ்), கிராபைடிஸ் ஆயின்மெண்ட், ஷார்க்லிவர் ஆயில் ஆயின்மெண்ட் ரஸ்டாக்ஸ் ஆயின்மெண்ட் முதலியன சிறந்தவை.

(169) பரு—ACNE.

பருவ காலத்தில் அநேகருக்கு இது சிறு சிறு தோல் சினைப்புகளாக உண்டாகும். ஒரு விதத்தில் இதை அழுக்கினால் வெறும் வெள்ளை மாவுபோன்ற வஸ்து வெளிப்படும். இந்த விதம் சிறு பெண்களுக்கு சகஜம்.

நாள்பட்ட விதம் ஒன்றுண்டு. கடினமாகவும், சிவந்த அஸ்திவாரத்துடனும் இது தோலுக்கு ஒரு விதமான வரட்சியையும் உண்டாக்கிக்கொண்டு பழுக்காமலும் இருக்கும். இவைகள் வலியுடன்கூடியிருக்கும்; சிவந்துமிருக்கும்.

முகம் விகாரமடைந்து, கன்னங்களில் விகாரமான பள்ளங்கள் தோன்றி அழகு கெடும்.

சிலசமயம் டிஞ்சர் அயோடின் சாப்பிட்டாலும் இது வருவதுண்டு.

இதற்குக் காரணம், வயிற்று நரம்புத் தளர்ச்சி அதிக சாராயக்குடி, கடும் மலச்சிக்கல், பருவகாலம், மாதவிடாய் நிற்கும் காலம், மாதவிடாய் சரியாக

வராத காரணத்தினாலும், ஹஸ்தப்பிரயோகம், முகத்திற்கு பவுடர் அதிகமாக உபயோகித்தல் முதலியன காரணமாகலாம்.

நல்ல திறந்தவெளியில் தேகாப்பியாசம், ஜீரணமாகக்கூடிய ஆகாரம், தேகத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளுதல் முக்கியமானவைகளாம்.

மேலுக்கும் ஸல்பர் லோஷன், (ஒரு டீஸ்பூன் டிஞ்சர், ஒரு அவுன்ஸ் டிஸ்டில்ட் வாட்டர்) ஸல்பூரஸ் ஆசிட் லோஷன் (சரிபாகம் தண்ணீர்) டிஞ்சர் ஓசிமம் லோஷன் (1 அவுன்ஸுக்கு—2 அவுன்ஸ் வாட்டர்); முதலியன உபயோகப்படுத்தலாம். இவைகளைத் தவிர டிஞ்சர் அகாரிகஸ், ரூமக்ஸ், ஆசிட் பாஸ் (1 பாகம்-4 பாகம் வாட்டர்) தடவலாம்.

கார்போவெஜ்:- சாதாரண பரு.

அப்ரோடானம்:- ரொம்ப சிறந்த மருந்து.

கேலி-ப்ரோம்:- நாள்பட்ட பருக்கள்.

பல்ஸ், ரேடியம், பெல்லிஸ், ஆசிட் பாஸ், போரக்ஸ், ஹைட்ரோ காடைல், ஆண்டிம்-க்ரூட், நக்ஸ்வாமி, கால்-கார், அயோடம், ஆர்ச்-அயோட் முதலிய மருந்துகளும் உபயோகப்படும்.

இன்ஜ்:- கேலிப்ரோம், அப்ரோ, ஓசிமம்.

(170) பரியாரிப் படை—SYCOSIS.

ஸிபிலிஸ் என்ற கிரந்தியினால் ஏற்படாத சாதாரணமான மயிர்க்காம்புகளின் வியாதி. இது மீசை, தாடிப்பக்கம்தான் வரும். இது பொதுவாக வியாதியுடைய ஒருவருக்கு க்ஷவரம் செய்த கத்தியினால் இன்னொருவருக்கு க்ஷவரம் செய்வதினால் ஏற்படு

வது. ஆகவே க்ஷவரம் செய்துகொள்ளும்போது கத்தியை கிருமி நாசினி லோஷனில் கழுவி உபயோகிக்கவும்.

சிவந்த அரிப்புள்ள கொப்பளங்கள் கிளம்பும். அரிப்பு அதிகமாகி சொரியச் சொரிய இது அதிகப்படும். அக்கிமாதிரி நீர் வெளிப்படும். இந்த நீர் காய்ந்து, பொருக்குகட்டி சிரமம் கொடுக்கும். மயிர்கள் சோபையிழந்து, முறிந்து விழுந்துவிடும்,

இது ரொம்பவும் பிடிவாதமான வியாதி. நாள்பட வைத்தியம் செய்வது அவசியமாகும்.

ஆண்டிம் டார்ட், கால்-கார்ப், பாசில்லினம், ஹெபர், பைடலோகா முதலியன சிறந்த மருந்துகள்

இன்ஜ்:- தூஜா, கானேகில்.

மேலுக்கு ஆயின்மெண்ட் ஆப் டைல்யூட் மெர்குரி நைட்ரேட் அல்லது ஆசிட் ஸல்பூரஸ் உபயோகிக்கவும். ஆண்டிம்-டார்ட்டை கிளசரினோடு கலந்து தடவலாம்.

(171) புண்—ULCER.

தோலில் சீழ் முதலியவற்றுடன் ஏற்படுவது. சீழுடனிருக்கும் வியாதியுண்டாக்கும் கிருமிகள் புண்ணை ஆறவிடாமல் தடுத்து, சதையையும் அரித்துவிடுகின்றன.

மதுமேகம், ஸிபிலிஸ், குஷ்டம், மூத்திரக்காய் வியாதி முதலிய தேக சம்பந்தமான வியாதிகளில் புண் சீக்கிரம் ஆறுவதில்லை. இவைகளெல்லாவற்றையும் கவனித்து சிகிச்சை செய்யவேண்டும்.

புண்ணிலிருந்து நாற்றமுடைய ஊன் நீர் அல்லது சீழ் அல்லது ரத்தக்கட்டு முதலியன வந்து

கொண்டேயிருக்கும். சுற்றியிருக்கும் பாகங்கள் சிவந்து, வீங்கி, பெருத்து வலியுடன் கூடியிருக்கும்.

அடிபடுவது, எக்ஸ்ரே புண், கட்டுகள் இறுக்கிக் கட்டுவது, டி. பி, முதலியவைகளினால் இது ஏற்படும்.

இதை ஆற்றுவது மிகவும் ஜாக்கிரதையாக கவனிக்கப்படவேண்டிய விஷயம். நாள்பட்ட சீழ் வெளிப்படுவதால் உடல் சக்தி குன்றிவிடும். வர வர க்ஷீணம் ஏற்பட்டு மரணம் சம்பவிக்கலாம். ஆக உடனே புண்ணை ஆறச் செய்வதற்கு புண்ணிருக்கும் பாகத்திலிருந்து கிருமிகளை ஒழிக்கவேண்டும். இதற்கு தினம் சுத்தமாக கிருமி நாசினிகளை உபயோகித்து அலம்பிக் கழுவவேண்டும். புண்ணிற்கு நல்ல ரத்த ஓட்டம் வரும்படியாகச் செய்யவேண்டும்.

நல்ல டானிக்குகள், புஷ்டியான ஆகாரங்கள் முதலியன கட்டாயம் தேவை.

தினம் காலண்டுலா லோஷனால் அலம்பிவிட்டு காரைத்துணியை நனைத்து கட்டவேண்டும். ஹாமமலிஸ், போரிக் ஆசிட், ஹைட்ராஸ்டிஸ், முதலியன உபயோகப்படுத்தவேண்டும்.

ஸிலிசியா, ஹெபர், லாசசிஸ், ஹாமமலிஸ், கேலி-அயோட், பெல்லடோனா, ஆர்சனிக், ரஸ்டாக்ஸ், கால்-கார்ப், ஸல்பர், பெர்ரம்பாஸ், நேட்மூர், முதலியன உபயோகிக்கவேண்டிய மருந்துகள்.

இன்ஜ்:- தக்கபடி பயோ ஆம்னின், ஸல்பதயோசால் முதலியன.

லோஷன்கள்:-

1. காலண்டுலா:-

டிஞ்சர் ¼ அவுன்ஸ்
வாட்டர் 6 ,,

2. ஹைட்ராஸ்டிஸ்:- (நாள்பட்ட ஆறாத புண்.)

டிஞ்சர் ¼ அவுன்ஸ்
வாட்டர் 6 ,,

3. ஆர்சனிக்:- (பலஹீனமானவர்கள்.)

டிஞ்சர் ⅛ அவுன்ஸ்
வாட்டர் 6 ,,

4. ஸிலிசியா:- (தண்ணீர்மாதிரியான சீழ் நாள்பட்ட புண்).

சிலிசியா 6 ¼ அவுன்ஸ்
வாட்டர் 6 ,,

5. கேலி-பைக்ரோம் (கிரந்திப்புண்—ஆழக் குழிந்த புண்).

கேலி-பைக் 1 கிரெயின்
வாட்டர் 6 அவுன்ஸ்

6. பியோனியா:- (அழுகல் நாற்றம் வீசும் புண்—வலி தாங்காது.)

பியோனியா ⅛ அவுன்ஸ்
வாட்டர் 6 ,,

7. காமோக்ளாடியன்:- (நாட்பட்ட குஷ்டப் புண்கள்.)

3 போடன்சி டிஞ்சர் ¼ அவுன்ஸ்
வாட்டர் 2 ,,

8 நைட்ரேட் ஆப் மெர்குரி ஆயின்மெண்ட்

ஆயின். மெர் நைட்ரேட் ¼ அவுன்ஸ்
வாசலைன் 1 ,,

9. நைட்ரிக் ஆசிட்:- (சதை அழுகும் புண்.)

ஆசிட்-நைட்ரிக் 1 x–¼ அவுன்ஸ்
வாட்டர் 6 ,,

10. ஹைபரிகம்:- (படுக்கைப் புண்.)
ஹைபரிகம் 1:25

11. லாசெசிஸ்:- (அழுகல் புண்.)
லாசெசிஸ் 6—⅛ அவுன்ஸ்
வாட்டர் 2 ,,

12. எக்கினேஷியா:- (விஷக்கடி, விஷப்புண்)
1:1 லோஷன்.

13. ஹைட்ரோகாடைல்:- (கர்ப்பப்பை புண்.)
1:20 லோஷன்.

இவைகளைத் தவிர நெருப்பு சுட்ட புண்ணிற்கு 14. ஏபிஸ், 15. காந்தாரிஸ் முதலியவைகளை 1:20 பாகத்தில் உபயோகப்படுத்தவேண்டும்.

இன்று:- பயோ ஆம்னின், ஜெராவின் வைட்டமின்கள் முதலியன.

(172) கடி, படை—RINGWORM.

இது வெகு சாதாரணமாக இடுப்பு, முதுகு, முகம் முதலிய பாகங்களில் ஏற்படக்கூடியது.

இது டி. பி, கிருமியினாலும் மற்ற ஒருவிதக் கிருமியினாலும் உண்டாவது. இது தலையிலும் அதிக

மாக ஏற்படும். தலையில் ஏற்பட்டால் மயிர்கள் சத்திழந்து, முறிந்து, உதிர்ந்துவிடும். உதிரும்போது தலையில் அரைக்கால் அங்குலம் அளவு மிஞ்சி நிற்கும். தலையில் வருவதுமாத்திரம் 16 வயதிற்கு மேற்பட்டு வருவதில்லை.

ஒரு சிறு சிவப்பு புள்ளியாக ஆரம்பத்தில் இருந்து சிறுகச் சிறுக பெரிதாகும். மோதிர வளையம் மாதிரி நடுவில் ஒன்றுமில்லாமல் ஓரங்கள் மாத்திரம் தடித்து அரிப்புடனும், சிறு கொப்புளத்துடனும் பரவும். தலையில் ஏற்பட்ட வெளுர் கருப்பு நிறமான செதில்களால் மூடப்பட்டு மயிர்கள் உதிர்ந்து நிற்கும். நடு நடுவே சில நல்ல மயிர்கள் திட்டு திட்டாய் நிற்க தலை முழுவதும் தாக்கப்படலாம்

சரியானபடி சிகிச்சை செய்யப்படாவிட்டால் இது வெகுநாள் நீடிக்கலாம்.

எக்ஸ்-ரே அல்ட்ராவயலட்ரே முதலியவைகளுக்கு நோய்ப்பட்ட பாகங்களை காண்பித்துவர சில கேசுகள் சௌகரியமாகும்.

மயிர்களை சுத்தமாய் வெட்டிவிட்டு நன்றாக கார்பாலிக் ஸோப்பினால் கழுவிவிட்டு சிறிது ஷார்க் லிவர் ஆயிலைத் தடவவும். இதற்குப் பிறகு டிஞ்சர் கிரிஸோபானிக் ஆசிட்டைத் தடவவும்; அல்லது ஆஸிட் கிரிஸோபானிக் 4 கிரெயின்—வாசலைன் 1 அவுன்ஸ் இதை ஆயின்மெண்டாக உபயோகிக்கவும்; நைட்ரேட் ஆப் மெர்குரி ஆயின்மெண்டும் மிக நல்லது. காஸியா ஸொபோரா டிஞ்சரைத் தடவிவர அல்லது டிஞ்சர் காரிகர்வைத் தடவிவர நல்லது.

உள்ளுக்கு.

பாசில்லினம்:- இதை அவசியம் நடுநடுவே கொடுக்கவேண்டும்.

ஸல்பர்:- வயிற்றில் பித்தக்கோளாறு புளிச்ச ஏப்பம், பசியின்மை முதலியன.

ஸெபியா, லைகோபோடியம் இவையிரண்டையும் ஸல்பருக்குப் பிறகு மாற்றி மாற்றிக் கொடுத்து வர நல்லது.

கால்-கார்ப்:- அதிகம் பெருத்தவர்கள்.

பல்ஸ்:- மாதவிடாய்க் கோளாறுள்ளவர்கள்.

டெல்லூரியம்:- சிறந்த மருந்து.

இன்ஜ்:- டிபீ, லியூக்யூர் முதலியன.

(173) பிளவை—CARBUNCLE.

ஒருவித ஸ்டாபிலோகாக்கஸ் பயோஜீஸ் என்ற கிருமியினால் சதையின் அடித்தோலை சப்குடேனியஸ் சதைகளைத் தாக்கும் இயல்புடையது. இவ்வியாதி கிட்னி வியாதிகள், மதுமேகம் இவற்றோடு ஏற்படுவது சகஜம்.

சூடான, தடிப்பான ஒரு வீக்கம் 1 அங்குலத்திலிருந்து 6 அங்குலம் குறுக்களவு உடையதாக கிளம்பும். சாதாரண சிரங்கைவிட கடினமாக இருக்கும். எரிச்சல், துடிக்கும் வலியுடன் கூடியிருக்கும். ஒரு மந்தச் சிவப்பு நிறமாகவிருக்கும். தொடமுடியாதபடி வலிக்கும். பொதுவாக முதுகு, கழுத்தின்புறம் இவைகளில் கிளம்பும். வரவர மேல்தோல் சிவந்து அடியில் ஒன்றிரண்டு வாரங்களில் சீழ் பிடித்துக் கொள்ளும். சீழ் பல பாகங்களில் கண்கள் ஏற்பட்டு

வெளிக்கிளம்பும். பிறகு இந்த ஓட்டைகளெல்லாம் ஒன்று சேர்ந்து மூளைகள் வெளிப்பட்டு சீழ் தாராளமாய் வெளிவரும். இவ்வியாதியினால் உடல் நலம் மிகவும் பாதிக்கப்படும்; சுரம் ஏற்படும்; பசி மந்திக்கும்; ஜன்னிகூட ஏற்படும். மரணம் ஏற்படுவது சகஜம்.

ஆந்திராசினம்:- பொதுவாக அதிக எரிச்சலுடன் கூடிய மருந்து—சிறந்தது.

எகினேஷியா:- இதை டிஞ்சராக உபயோகிக்க வேண்டும். சுரம் லேசாக தினம் அடிக்கும். உடம்பு சக்தி குறைவு.

பெல்ல:- துடிக்கும் வலி—சிவப்பு—வீக்கம்.

ஹெபர்:- ரொம்ப தடித்த தோல்.

ஆர்சனிக்:- பெரியதான, ரொம்ப எரிச்சலுடன் கூடினது.

பூபர்பியம்:- தாங்கமுடியாத எரிச்சல்.

லாசெசிஸ்:- ரத்தத்தில் விஷம் கலந்தவுடன்.

டாரண்டுலா:- கொட்டும் வலி, எரிச்சல் தாங்க முடியாது.

ஆர்னிகா:- கருஞ்சிவப்பானது. (இதை மேலுக்கும் போடலாம். 5 சொட்டு ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைக்கவும்.)

கார்போவெஜி:- கால்கைகள் சில்லிப்பு; ரொம்ப தளர்ந்த உடல் நலம்.

கன்பவுடர்:- மற்ற மருந்துகளுடன் சேர்த்து இதை மூன்று கிரெயின் அளவில் தினம் 3 தடவை கொடுக்கவும்.

சிலிசியா:- சட்டென்று பழுக்காத ஆறாத கட்டி.

ஏபிஸ்:- வரவர எரிசிபிலஸ் பரவிக்கொண்டிருந்தால் தேனீ கொட்டினதுபோல் எரிச்சலுடன் வலி.

மேலுக்கு கால்சி-க்ளோர், போரிக் ஆசிட், காலண்டுலா, கன்பவுடர், ஆர்னிகா, எக்கினேஷியா முதலியன உபயோகிக்கவேண்டும்.

நல்ல புஷ்டியுள்ள ஆகாரங்கள், முட்டை, பால், காட்லிவர் ஆயில், ஈரல் சத்து முதலியன அவசியம் கொடுத்து உடம்பைத் தேற்றவேண்டும்.

இன்னும்:- பூபர்பியம், லாசெசிஸ், ஸல்பதயோசால் 3x முதலியன.

(174) சிரங்கு கட்டி—BOIL.

இது பிளவை மாதிரிதான்; ஆனால் தோலை மாத்திரம்தான் தாக்கும். இது உடைந்தால் ஒரு துவாரம்தானிருக்கும். பிளவையிலிருப்பது போல பல துவாரங்களிருக்காது. இது ஒன்றாகவோ அல்லது பல சேர்ந்தே புறப்படும். சிறு கட்டியாக சிவந்து வலியுடன் புறப்படும். வரவரப் பெரிதாகி வலி தெரிப்பதுமாதிரி இருக்கும். சீழ் கோத்துக் கொள்வதற்காக வலி அதிகரிக்கும். மாலை வேளைகளில் சுரமடிக்கும்; வெடிக்கும், பிறகு சீழ் வெளிப்படும். கடைசியில் மூளை வெளிவரும்.

சில கட்டிகள் சீழ் பழுக்காமலே உள்ளே அமுங்கிவிடும். ஒன்று அமுங்கினால் இன்னும் பல இடங்களில் கிளம்பும். பொதுவாக இவைகள் முதுகு கழுத்து, கை, புட்டம் முதலிய இடங்களில் வரும். ரத்தத்தில் விஷத்தன்மை, ஆகாரக் கோளாறு, மதுமேகம், நீரில் அல்புமன் சத்து முதலியன இருப்பவர்களுக்கு அதிகம் வரும்.

கட்டி கிளம்பினவுடன் சூடான ஒற்றடம் கொடுத்துவரவேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தடவையாவது செய்யவேண்டும். சீழ் பிடிக்கும் வரைக்கும் இதைச் செய்யவேண்டும். யாளி விதையை அரைத்தாவது, அரிசி மாவையாவது பற்றாக உபயோகிக்கலாம். ஆண்டிபிளஜிஸ்டின் போடலாம்.

சில சமயம் ஸ்பிரிட்ஸ் காம்பர் தடவிவர கட்டிகள் சீழ் பிடிக்காமலே அமுங்கிவிடலாம்.

கார்பாலிக் ஆசிட் லோஷன் (1: 50); பைடலோகா டிஞ்சர், கால்சியம் க்ளோரைட் ஸொல்யூஷன் (1: 25) முதலியனவும் உபயோகிக்கலாம்.

சீழ்பிடித்த பிறகு நன்றாக ஆபரேஷன் செய்துவிட்டு காலண்டுலா லோஷன்போட்டு சுத்தப்படுத்தவேண்டும்.

பெல்ல:- ஆரம்பத்தில் கொடுக்க சீழ்பிடிக்காமலே தடுத்துவிடும்.

இதை 2x போடன்சியில் அடிக்கடி கொடுத்து வருவது சிறந்தது.

மெர்க்:- சீழ்பிடிக்கும்போலிருந்து இரவில் வலி அதிகமானல்.

ஹெபர்:- சீழ்பிடிக்க ஆரம்பித்ததும் சிலசமயம் ரொம்ப ஹைபோடன்சியில் (10 M, C M அல்லது D M) கொடுத்தால் சீழ்பிடிக்காமலே தடுத்துவிடும். சீழ்பிடித்துவிட்டாலும் அதிகம் பிடிக்காமல் சௌகரியப்படுத்தும்.

ஸிலீஷியா:: நாட்பட்ட சீழ், லேசில் புண் ஆறாது.

ஆசிட் நைட்:- புண்ணிற்குமேல் சதைகள் புற்றுபோல் வளரும். மேலுக்கும் இதை உபயோகிக்கலாம்.

கல் ஸல்ப்:- எல்லாவித கட்டிகளுக்கும் கொடுத்துவர நல்லது.

ஸல்பர்:- அடிக்கடி வரும் கட்டிகளுக்கு இதை பத்து நாள் நீடித்துக் கொடுக்க அடிக்கடி வருவது நின்றுவிடும்.

பைடலோகா:- கல்மாதிரி கெட்டியானவை சுரங்களுக்குப் பிறகு ஏற்படுபவை.

ஆந்திராசினம், எக்கினேஷியா, ஆர்னிகா, கால்-கார்ப், பாசில்லினம் முதலியன உதவும்.

இன்ஜ்:- பயோஆம்னின், ஸல்பதயோசால் 3x; முதலியன.

(175) விரற்சுத்தி—WHITLOW.

கால் விரல் அல்லது கைவிரலின் நுனியில் ஏற்படும் சிரங்கு. இது சீழ் பிடித்து உடையும். வலி கடுமையாக இருக்கும். இதில் பலவிதம் உண்டு. மேல் தோல் மாத்திரம் சீழ்பிடித்து வெறும் நீர் நிரம்பிய கொப்புளம்மாதிரி கிளம்பி சற்று எரிச்சல் வலியுடனிருக்கும். தோலின் அடிப்பாகம் சீழ் பிடிப்பது மற்றொருவகை. இது அதிகவலி, எரிச்சல் குத்தலுடன் கூடியிருக்கும். நகத்தினடியில் புறப்பட்டால் நகமே விழுந்துவிடும். டெண்டன் என்ற தசை நார்களில் பிடிப்பதுமுண்டு.

சாதாரண சிரங்கிற்கு உள்ள காரணங்களே இதற்கும், அடி, வெட்டுப்படுதல், சிராய்த்து விஷக் கிருமி உட்புகுதல், முதலியனவாம்.

சரியானபடி சிகிச்சை செய்யப்படாவிட்டால் இது நகத்தைத் தாக்குவதுமட்டுமின்றி கையையும் தாக்கி எலும்பையும் தாக்கிவிடும். கண்டவுடன்

சூடான ஒற்றடம் கொடுக்கவேண்டும்; அல்லது பொறுக்கக்கூடிய வெந்நீரில் அடிக்கடி வைத்து வைத்து எடுக்கவேண்டும். மேலுக்கு அடிக்கடி டயஸ்கோரியா டிஞ்சர், பாஸ்பரஸ் 3x, காலண்டுலா லோஷன், பெல்லடோனா டிஞ்சர் முதலியன போட வேண்டி வரும்.

உள்ளுக்கு:-அகோனைட், பெல்லடோனா, ஹெபர், மெர், ஸிலிசியா, ஆசிட் ப்ளூரிக், டயஸ்கோரியா, லாசெசிஸ், ஆந்திராசினம் முதலியன கொடுக்க வேண்டிவரும்.

ஆரம்பித்தவுடனேயே ஸிலிசியா ஹை போடன்சியில் அடிக்கடி அதாவது 3 மணிக் கொருதரம் சாப்பிட சீழ் பிடிக்காமலே இருந்து விடும்.

சீழ் பிடித்து முற்றிவிட்டால் ஆபரேஷன் செய்துவிடவேண்டும்.

இன்னும்:- ஸல்பதயோசால் 3 x, ஆந்திராசினம், ஹெபர், முதலியன.

(176) ஆணி—CORN.

தோலின் மேல் பாகம் தடித்துக் கல்போல் இறுகி நடுவே ஒரு ஆணி மாதிரி இருக்கும். இந்த ஆணி தோலின் கீழே வளர்ந்து மிருதுவான பாகங் களில் அமுக்கினால் தாங்கமுடியாத வலி ஏற்படும். இந்த ஆணி கடினமாகவும், வரண்டும், செதிலோடு கூடினதாகவுமிருக்கலாம். மிருதுவாகவும் ஸ்பாஞ்ச் போலவுமிருக்கலாம். சில சமயம் சீழும் பிடித்து அதிக வலியுடனுமிருக்கலாம். பெரும்பாலும் சரி யான பாதரட்சை, பூட்ஸ் இல்லாததால்தான் இது ஏற்படுகிறது.

இது புறப்பட்டவுடன் தடித்த கடினமான பாகத்தை மெதுவாக கத்தரித்து எடுத்துவிட்டு சுற்றி யுள்ள பாகங்கள் அதிகமாகக் காயம் படாதபடி பார்த்துக்கொண்டு தினம் இரவில் படுக்கப்போகும் போது ஆர்னிகா ஆயின்மெண்ட் ஆசிட் ஸாலிசிலிக் ஸொல்யூஷன் அல்லது ஹைட்ராஸ்டிஸ் ஆயின் மெண்ட் போட்டுவரவும்.

மிருதுவான ஆணியாயிருந்தால் தடித்ததோலை கத்தரித்துவிட்டு டிஞ்சர் ஆர்னிகா அல்லது ஆர்னி-கா கிளசரின் போட்டுவரவும். அதிகமாக நடக்கா மல் அல்லது நடக்கவேண்டியிருந்தால் பஞ்சு வைத் துக் கட்டிக்கொள்ளவும்.

பெர்ரம்பிக்ரிக், ஆண்டிம் க்ரூட், கால்-கார்ப், ஸல்பர், நைட்ரிக் ஆசிட், முதலியன கொடுத்து வரவும். கால்காரியா கார்பையும் ஸல்பரையும் காலையிலும் மாலையிலும் மாற்றி மாற்றிக் கொடுத்து வர மிக நல்லது.

இன்னும்:- ஆர்னிகா.

(177) பாலுண்ணி—WART.

தோலில் மேல் பாகம் தடித்து, உருண்டைக் கட்டிகளாக கிளம்பி, பார்ப்பதற்கு காலிபிளவர் மாதிரியுமிருக்கும். இது கை கால், முகம் முதலிய இடங்களில் வந்து மறையலாம். வெட்டையுடைய வர்களுக்கு வருவது சகஜம். சிலது நாய்க்குடை மாதிரி அடிபாகம் சிறுத்து மேல்பாகம் விரிந்திருக் கும்.

துஜா:- முதுகு, தலை, மோவாய்க்கட்டை முத லிய இடங்களில் பெரிய பாலுண்ணிகள். சிலசமயம் நைப்பும், ரத்தமும் கசியும்.

ஆசிட்-நைட்:- காலிபிளவர் மாதிரி அடிக்கடி ரத்தம் பெருகும்; அரிப்பு, குத்தல், முதலியன.

ரஸ்டாக்ஸ்:- தூஜா சரியானபடி வேலை செய்யா விட்டால் இதை உபயோகப்படுத்தவும்.

ஸல்பர்:- கை கால் முதலிய இடங்களில் அனே கம்—நாட்பட்டது.

ஆண்டிம்க்ரூட்:- அஜீரணத்துடன்கூடியிருக்கும்.

காஸ்டிகம்:- சிறியவை; அடிப்பாகம் மிருதுவாக வும், மேல்பாகம் கடினமாகவுமிருக்கும்; கண்ணிமை கள், முகம், கை கால்கள் முதலிய இடங்களில்.

கால்-கார்ப்:- அரிப்பு, கடுப்பு, வீங்கியும் இருக்கும். ஊளைச்சதையுடையவர்கள்.

கேலிமூர்:- கைகளில் உண்டானவை.

நேட்மூர்:- உள்ளங்கைகளில்.

ஸோரியா:- ஆண் குறியின் தோலின் உட்பக்கத் தில்—பெரிய கருப்பு உண்ணிகள் சரீரத்தில்.

பெர்-பிக்ரிக்:- ரத்தச் சோகையுடையவர்கள்—தொங்கும் உண்ணிகள்.

ஆண்டிம்டார்ட், டல்காமரா முதலியனவும் உபயோகப்படும்.

இன்ஜ்:- தூஜா, கால்பாஸ்.

(178) மண்டைக்கரப்பான்—Ringworm of the Scalp.

இதைப்பற்றி விரிவாக கரப்பானைப்பற்றி சொல்லும்போது விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆக வே அந்த அத்தியாயத்தைப் பார்க்கவும்.

(179) மயிர் உதிர்தல்—ALOPECIA.

மயிர் [illegible] வளராமல் சொட்டை விழுந்துவிடும். இதற்குக்காரணம் ஒரு கிருமி. சில சமயம் ஸிபிலிஸ் காரணமாகலாம்.

சுட்டிசுட்டியாக மண்டையில் திட்டுகள் ஏற்பட்டு மயிர்கள் உதிர்ந்து தோல் மாத்திரம் தெரியும். சில இடங்களில் மயிர் கட்டையாக நிற்கலாம். இவைகளைப் பிடுங்கினால் சுலபமாக வந்துவிடும். கரப்பானில் மாதிரி மயிர் உடையது.

சிலருக்கு தாடியிலும் இம்மாதிரியேற்படலாம். இது கொஞ்சம் சிரமம் கொடுக்கக்கூடிய வியாதிதான். நாட்பட வைத்தியம் செய்யவேண்டியிருக்கும்.

மேலுக்கு மெர்குரி அயோட் ஆயின்மெண்ட், (ஒரு கிரெயின்—வாசலைன் 2 அவுன்ஸ்) காந்தாரிஸ் லோஷன் போடவேண்டும். அலோஸ் லோஷன்.

உள்ளுக்கு:-

கேலிகார்ப:- மயிர் வரட்சியடைந்து விழும்.

ஆசிட் ப்ளூரிக்:- மயிர் உதிர்தல்.

ஆசிட் பாஸ்:- அதிகக் கவலை, துக்கம், மனத் தளர்ச்சியினால் மயிர் உதிர்தல்.

ஆசிட் நைட்:- தலையில் கரப்பான்.

ஆர்னிகா:- வழுக்கை.

ஸோரியா:- சிறந்த மருந்து.

இன்ஜ்:- அலோஸ்.

(180) பேன்—PEDICULOSIS.

இது சகலருக்கும் சாதாரணமாகத் தெரிந்த வியாதி. இது ஒரு பூச்சி. இது வேர்வைத்

துவாரம் வழியாக ரத்தத்தை உறிஞ்சி சாப்பிடும். அரிப்பு இருக்கும். தலை மயிரை குட்டையாகக் கத்தரித்து வைத்திருப்பவர்களுக்கு இது அதிகமாக பாதிக்காது. அசுத்தமாக இருப்பவர்களைத்தான் இது அதிகமாகத் தாக்கும்.

இதில் மூன்று விதம் உண்டு. தலை மயிரில் வசிப்பது; உடம்பில் வசிப்பது; மர்மஸ்தானத்தில் வசிப்பது. ஆனால் இவை ஒரே பூச்சியிலிருந்து மூன்றும் உண்டாகலாம்.

தலையில் பேன் இருந்தால் கரப்பான் வியாதியும் உடனே ஏற்பட்டுவிடும்.

ஆகவே உடம்பை ரொம்பவும் சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பது மிகவும் அவசியம். தலையில் அதிகப் பேன் இருந்தால் தலையை மொட்டையடிக்கலாம். அல்லது கொஞ்சம் குட்டையாகக் கத்தரித்துவிட்டு ஆயின்மெண்ட்களையும் லோஷன்களையும் உபயோகப்படுத்தவேண்டும். உடம்பில் பேனிருந்தால் உடுத்தும் துணிகளை சுத்தமாக கொதிக்கவைத்துஉபயோகிக்கவேண்டும். மேலுக்கு மாத்திரம் மருந்து உபயோகப்படுத்தினால் மட்டும் போதாது. உள்ளுக்கும் மருந்து கொடுக்கவேண்டும்.

பாசில்லினம்:- இதை வாரம் இருமுறை கொடுத்து வரலாம்.

நேட்மூர்:- இதை அதிகமாக சளிபிடிப்பவர்கள், உடம்பு சோகைபிடித்தவர்கள்.

ஸல்பர்:- நடுநடுவே கொடுக்கவும்.

மேலுக்கு:- ஸல்பர் லோஷன், இதை அடிக்கடி போட்டுவந்தாலே போதுமானது.

அக்குள், மர்மஸ்தானம் முதலிய இடங்களில் ஸ்டாபிசேகிரியா டிஞ்சரை தடவி வந்தாலும் போதும்.

தலையில் மெர்-அயோட் லோஷன் 1 : 2000) அல்லது அம்மோனியேடட் மெர் ஆயின்மெண்ட் உபயோகப்படுத்தவும்.

(181) சொரி சிரங்கு—SCABIES.

இது ஒரு தொத்து வியாதி. ஒரு சிறு கிருமியினால் உண்டாவது. இதில் பெண் ஜாதி மட்டுமே தோலுக்குள் நோண்டிக்கொண்டு சென்று முட்டையிட்டு தொந்திரவு கொடுக்கிறது. தோலின் மடிப்புகளில் இது சென்று அதாவது விரல்களின் இடுக்குகள், அக்குள், வயிறு சதையின் மடிப்புகள் முதலிய இடங்களில் தங்குகிறது. அதிகமாக தலையும், முகமும் பாதிக்கப்படுவதில்லை. ரொம்பவும் அரிப்புடன் கூடிய கொப்புளங்கள் கிளம்பும் அதுவும் படுக்கையின் உஷ்ணத்தில் அதிகமாக அரிக்கும்.

நன்றாக வெந்நீரில் உடம்மைச் சுத்தப்படுத்த வேண்டும். வெந்நீரில் டிஞ்சர் வியூகஸ் ஆஸ்பரா அல்லது ஸல்புரடட் பொடாஷ் ஆவது கலந்து (1 காலன் தண்ணீருக்கு கால் அவுன்ஸ்) குளிக்கலாம். பிறகு ஸல்பர் ஆயின்மெண்ட் தினம் இரவில் தேய்த்துக் கொள்ளலாம். (ஸ்கின்னி ஆயின்மெண்ட் நம்மிடம் தயாராவது சிறந்தது) எல்லாத் துணிகளையும் ஸல்பர் புகையில் காட்டவேண்டும். துணிகளையும் நன்றாகக் கொதிக்கவைத்து உபயோகிக்கவேண்டும். மூன்று தடவைகளுக்குமேல் ஸல்பரை உபயோகப்படுத்தினால் வியாதி நீடிக்குமே தவிர பிரயோசனப்படாது. ஆகவே கடுமையாக ஆயின்மெண்ட் 3 தடவை உபயோகப்படுத்திவிட்டு சிகிச்சையை நிறுத்திவிடவேண்டும்.

அரிப்பை அடக்க ஆயில் லெவண்டர் அல்லது பால்சம்பெரு உபயோகிக்கலாம். ஆனல் இவைகள் ஸல்பர் ஆயின்மெண்ட் மாதிரி அவ்வளவு உபயோகப்படாது.

உள்ளுக்கு ஸல்பர், ஸோரினம், லியூகஸ் ஆஸ்ப்ரா முதலியன உதவும்.

(182) விஷப்பூச்சி கடிகள்—INSECT STINGS.

அதிகமாக நம்மை கொட்டுவது தேனீ, குளவி, கொசு முதலியன. இவைகளின் கடி ரொம்ப கடுமையானதில்லை. தேள், பாம்பு, பூரான், நட்டுவாக்களி, ஜலமண்டலி முதலியவைகளின் விஷம் சற்றுக் கடுமையானது.

ஆனல் குளவியும், தேனீயும் கூட்டமாகச் சேர்ந்து ஒருவனைத் தாக்கினல் மரணம் சம்பவிக்கலாம். அல்லது ரொம்ப முக்கியமான பாகங்களான கண், தொண்டை முதலிய இடங்களில் கொட்டினலும் அபாயமே. இவைகளைத்தவிர விஷமுள்ள எட்டுக்கால் பூச்சிகள், சிலந்திகள், முதலியவைகளும் விஷமுடையவே. சில ஈக்களும் விஷமுடையவே. மூட்டுப்பூச்சி, காந்தாரிஸ் ஈ, மஞ்சள் விஷ சுர ஈ; முதலானவைகளும் உண்டு. எறும்பு, கரப்பான், சில வண்டுகளும் மனிதனைத் தாக்கும்.

இவைகளைத் தவிர காஞ்சொறி முதலிய செடிகளும் வலி உண்டாக்கும்.

பொதுவாக விஷக் கொட்டுகளுக்கும் கடிக்கும், கொட்டுவாயில் உடனே அம்மோனியாவைத் தடவவும். லீடம் டிஞ்சரைத் தடவலாம். ரஸ்டாக்ஸ் டிஞ்சரும் சிலசமயம் உபயோகப்படும். இவை கிடைக்

காவிட்டால் ஒரு பச்சை வெங்காயத்தை நறுக்கி அதை கொட்டின இடத்தில் நன்ருகத் தேய்க்க நல்லது.

உள்ளுக்கு லீடம் டிஞ்சரை 5நிமிஷத்திற்கொரு தரம் கொடுக்கவும். தேனீ கொட்டுகளுக்கு அர்டிகா டிஞ்சர் நல்லது.

ஏபிஸ், கிரைன்டீலியா டிஞ்சர் நல்லது.

டிஞ்சர் லியூகஸ் ஆஸ்ப்ரா ரொம்ப நல்லது. இதை உடனே இரண்டு சொட்டு டிஞ்சரை இன்ஜெக்ஷன் செய்யக்கூடிய வாட்டருடன் கலந்து சதைநக்கடியில் இன்ஜெக்ஷன் செய்ய மிக நல்லது.

சிலசமயம் தேள்கடி கெட்ட ரத்தக் குழாயில் விழுந்துவிட்டால் உடம்பு வியர்த்துக்கொட்டி, சில்லிட்டு சோகம் போட்டுவிடும். லாசெசிஸ் உடனே அடிக்கடி கொடுக்கவேண்டும். கார்போவெஜிடபிலிஸ் மிக உபயோகமானது.

டிஞ்சர் லியூகஸ் இன்ஜெக்ஷன் உடனே செய்யவேண்டும்.

நட்டுவாக்களியின் விஷமும், ஜலமண்டலியின் விஷமும் ரொம்பக் கொடியவை. வாயில் நுரை தப்பி, சோகம்போட்டு, உடம்புசில்லிட்டு, சரீர உஷ்ணம் குறைந்து அபாயமேற்படும்.

இதற்கு கார்போஜி, விராட்ரம் விரைட், ஆர்சனிக் இவை மூன்றும் உபயோகமாகும்.

நிமோட்ரன் இன்ஜெக்ஷன் மிகச் சிறந்தது. இதை ரத்தக் குழாய் வழியாகக்கூட அவசரமான தேசுகளில் உபயோகிக்கலாம்.

பாம்புக்கடி:- இது முக்கியமானது. நல்லபாம்பின் விஷத்திற்கும் மற்ற பாம்புகளின் விஷயத்திற்கும் வித்தியாசம் அதிகம்.

அதிக விஷமுள்ள பாம்புகள் பார்ப்பதற்கு வெகு அழகாகவும், கண்ணைக் கவரும் கலர்களுடனிருக்கும். மேல்வாயில் இரண்டு பற்கள்தானிருக்கும். தலைக்கடியில் கழுத்து மெலிந்துமிருக்கும்.

பாம்பின் விஷம் எவ்வளவு அளவில் சரீரத்திற்குள் செலுத்தப்படுகிறதோ அவ்வளவுக்களவுதான் அபாயமதிகம். அதோடுகூட எந்தபாகத்தில் பாம்புக் கடிக்கிறதோ அதைப்பொறுத்து மிருக்கிறது. உதாரணமாக பாம்பின் விஷம் ரத்தக் குழாயிலேயே சென்றுவிட்டால் உடனே ரத்தம் கெட்டு, மூர்ந்து, வாந்தியுடன் மரணம் சம்பவிக்கும். சிறு குழந்தைகளுக்கும் வியாதியினால் உடல் மெலிந்தவர்களுக்கும் பாம்புக்கடி அபாயமாகும்.

கடித்த இடத்திற்கு மேலே ஒரு கைக்குட்டையையோ, கயிற்றையோ இறுக்கிக் கட்டவும். இறுக்கிக் கட்டினால் விஷம் சட்டென்று ரத்தத்துடன் கலந்து மேலேறாது.

கடிவாயை கத்தியினால் கீறி, பெர்மாங்கனேட் பொட்டாஷியத்தைத் தேய்க்கவும். காயம் நன்றாக கருக்கிறவரைக்கும் தேய்க்கவும். பிறகு நல்ல உப்பை தேய்க்கலாம். அல்லது லியூகஸ் டிஞ்சரைத் தடவவும்.

கடிவாயிலிருந்து ரத்தத்தை உடனே யாரைவிட்டாவது உறிஞ்சி எடுக்கச் செய்யலாம். வாயில் புண்ணுள்ளவர்கள் அல்லது வேறு வியாதியுடையவர்கள் இதைச் செய்யக்கூடாது. ஏனென்றால்

புண்ணுள்ளவர்கள் உறிஞ்சும்போது விஷம் புண் வழியாக ரத்தத்தில் சேர்ந்துவிட்டால் ஆபத்து.

நிறைய விஸ்கி, ஆல்கஹால் அல்லது பிராந்தியைக் கொடுக்கலாம். 15–20 நிமிஷத்திற்கொருதரம் நிறையக் குடிக்கச் செய்யலாம். கொஞ்சம் போதையேற்பட்டவுடன் நிறுத்தலாம்.

புண்மேலுக்கு கார்பாலிக் ஆசிட் தடவி உள்ளுக்கும் கொடுக்கலாம்.

ரொம்ப மயக்கம் சோகம்போட்டுவிட்டால்.

ஆர்சனிக், ஆசிட் ஹைட்ரோ சயனிக், மாஸ்சஸ் முதலியன உபயோகமாகும்.

சிலசமயம் அம்மோனியாவை ரத்தக் குழாய் வழியாக செலுத்துவதுமுண்டு

நிமோட்ரன் சிறந்த இன்ஜெக்ஷன்; இதை ரத்தக்குழாய் வழியாக அல்லது சதையிலும் (Intra-muscular) கொடுக்கலாம்

அகோனைட்டையும், பெல்லடோனாவையும் 1x போடன்சியில் மாற்றி மாற்றி 5 நிமிஷத்திற்கொருதரம் கொடுத்துவர மிகவும் நல்லதென்று சிலருடைய அனுபவம்.

விஷவேகம் குறைந்தவுடன் புண்ணை சாதாரண புண்மாதிரி ஆற்றிக்கொள்ளலாம்.

(183) சீழ்க்கட்டி ABSCESS.

முதன் முதலில் சிறு கட்டிமாதிரி கிளம்பி தெரிக்கும் வலி. சூடு, சிவப்பு, வீக்கத்துடனும் கூடியிருக்கும். தோல் கலர்மாறி சீழ்பிடிக்கும். வலி அதிக

கடுமையில்லாமலிருக்கும்; ஒரு கலம் இருப்பது மாதிரி புலப்படும். சீழ் அதிகமான பாகங்கள் மிருதுவாகி நடுவே கருஞ்சிவப்பு அல்லது நீலமாகமாறி, தோல் வெடித்து, சீழ் ஆழமான பாகத்தில், ஸ்தனங்களில் முதலிய இடங்களில் ஏற்பட்டால் வலி சட்டென்று குறையாமல் நீடித்து இருக்கும். சீழும் உடனே வெளிப்பட முடியாமலிருக்கும். உடலில் வேறு அதிகத் தொந்திரவு இல்லாவிட்டாலும் சுரமும், குளிரும் இருக்கும்.

சில நீடித்த கேசுகளுமுண்டு. இவைகளில் மேற்சொன்ன கடுமையில்லாவிட்டாலும் மற்றபடி பாக்கிக்குறிகளிருக்கும். எலும்பிலும் சீழ் பிடிப்பதும் உண்டு. பொதுவாக இவைகளெல்லாம் உடம்பின் பலஹீனம், அடி காயங்கள் முதலானவைகளினுல் ஏற்படுவவையே.

கட்டிகளுக்குச் சொன்னமாதிரியே இவைகளுக்கும் வைத்தியம் செய்யவேண்டும்.

அகோனைட், பெல்லடோனு, ஏபிஸ், மெர்குரி முதலியன சீழ்பிடிப்பதற்கு முந்தி உபயோகப்படும்.

மேலுக்கும் இவைகளை டிஞ்சராக உபயோகிக்கலாம்.

ஆர்ஸ்; கால்ஸல்ப், ஹெபர், சிலிசியா, டாரண்டுலா முதலியன கொடுக்கவேண்டியிருக்கலாம்.

சீழ்பிடிக்கும்போது அதிகமாக உபயோகிக்க வேண்டியது:

ஹெபர், ஆர்சனிக், சைனு, ஸிலிசியா.

யாளிவிதை, அரிசிமாவு பற்று உபயோகிக்கலாம். காலண்டுலா லோஷனை அடிக்கடி உபயோ

கிப்பது நல்லது. (1 டீஸ்பூன் அளவு—10 அவுன்ஸ் ஜலத்தில் கரைக்கவும்) சிலசமயம் கடுமையான வலியைக் குறைக்க சுண்ணாம்பு நீரை உபயோகிப்பதுமுண்டு.

பற்று போடுவதைவிட லோஷன் உபயோகிப்பதே சிறந்தது.

சீழ்பிடித்துவிட்டது என்று நன்றாகத்தெரிந்துவிட்டால் ஆபிரேஷன் செய்துவிடவேண்டியது அவசியம்.

ஆபிரேஷன் செய்தபிறகு காலண்டுலா லோஷன்போட்டு அலம்ப, புண் சீக்கிரமாக ஆறும்.

ஆகாரம் நல்ல புஷ்டியுள்ளதாகக் கொடுக்க வேண்டும்.

நாட்பட்ட சீழ்வடிதலுக்கும், ஸிலிசியா, கால்ஸல்ப், நேட்மூர், சைனு, கன்பவுடர், ஆர்சனிக், ஆசிட் ப்ளூரிக் முதலியன சிறந்தன.

ரத்தம் கெட்டுவிட்டால்: ஆர்னிகா, பைரோஜன், ஆந்திராசினம் முதலியவை உபயோகமாகும்.

இன்று: கால்ஸல்ப், கால்பாஸ், ஸல்பதயோசால் 3x முதலியன.

(184) நெருப்பு சுட்ட புண்—BURN.

இதில் பலவிதங்களுண்டு. விதங்கள் கடுமையில் தான். வெறும் சூடான வெந்நீர், எண்ணெ முதலியவை படலாம்; அல்லது நெருப்பே நன்றாகச் சுட்டுவிடலாம். புண்ணின் அபாயம் அதன் பரப்பையும், ஆழத்தையும், தன்மையையும் பொறுத்திருக்கிறது.

சாதாரணமாகத் தோல் மாத்திரம் சிவந்திருக்கலாம். சிறு கொப்பளங்கள் கண்டு சீக்கிரம் ஆறிவிடலாம். தோல் நன்றாக சுடப்பட்டுவிட்டால் ஆறாத புண்கள் ஏற்பட்டுவிடலாம். தோலும் அதற்கடிபாகத்தின் தசைகளும், நரம்புகளும் தாக்கப்பட்டுவிட்டால் ஆபத்து மிக அதிகம். இதில் சுரம், விஷம் ரத்தத்தில் கலந்து ஸெப்டிக் ஆகிவிடுதல் முதலியன சகஜம்.

நெருப்பு சுட்டவுடன் ஒரு அதிர்ச்சி உண்டாவது சகஜம். இது சாதாரணமாக 1 அல்லது 2 நாள் வரைக்கும் கடுமையாகவோ அல்லது வயதிற்கும் புண்ணின் பரப்பிற்கும் தகுந்தபடி குறைவாகவோ அதிகமாகவோ இருக்கும். நாடி துரிதமாகி, மணிக்கட்டின் பக்கம் தெரியாது. உடம்பு மிகவும் சில்லிட்டு. வியர்த்து, தாகம் அதிகமாகி, பயம் ஏற்பட்டுவிடும்.

இது குழந்தைகளுக்கு அதிகமாகக் காணப்படுவதால் உடனே உடம்பில் சூடு உண்டாக்கப் பிரயத்தனம் செய்யவேண்டும். அடிக்கடி 105° F சூட்டில் உப்புத் தண்ணீரை (1 பைண்ட் தண்ணீருக்கு 1 டீஸ்பூன் உப்பு) மெதுவாக ஆசனவாய் வழியாக உட்செலுத்தவேண்டும். ஒருமணி இரண்டு மணிக்கொருதரம் 2 அவுன்ஸ் குழந்தைகளுக்கும் வயது அதிகரிக்க அளவையும் அதிகரித்து வயதானவர்களுக்கு 20 அவுன்ஸ்வரையிலும் உட்செலுத்தலாம்.

சாதாரண சிவப்பிற்கு டிஞ்சர் அர்டிகாவில் (1 : 4) நனைத்து கம்பளியை அல்லது லிண்ட் துணியைப் போடலாம்.

கொஞ்சம் கொப்பளங்கள் கிளம்பிவிட்டால் டிஞ்சர் ஏபிஸ், டிஞ்சர் காந்தாரிஸ் (1 : 10) மேலுக்குப் போட்டுவரவும்.

பிக்ரிக் ஆசிட்:- இது $1\frac{1}{2}$ டிராம், ஆல்கஹால் 3 அவுன்ஸ், டிஸ்டில்ட் வாட்டர் 40 அவுன்ஸ் அளவில் தயாரித்து, காரைத்துணி அல்லது லிண்ட் துணியை இதில் நனைத்து கொஞ்சம் பிழிந்துவிட்டு புண்களில் போட்டுவிடவும். பிறகு காற்றுப் புகாதபடி பஞ்சினால் மூடவும். எவ்வளவுக்கெவ்வளவு தண்ணீர் படாமலிருக்கிறதோ அவ்வளவு நன்மை. இதுவே பெரும்பாலான கேசுகளில் போதும்.

காரன் ஆயில் (இது சமபாகம் சுண்ணாம்பு நீரும், சமபாகம் யாளிவிரை எண்ணெயும் சேர்ந்ததே.):— கொப்புளங்களை உடைத்துவிட்டு இதை மேலுக்குப் போட உபயோகிக்கவும். இது அதிகப்புண், ரொம்ப பரவியிருக்கும் புண்ணிற்குச் சிறந்தது.

கார்பாலிக் ஆசிட் ஆயில்:- ஒரு பாகம் கார்பாலிக் ஆசிட், 12 பாகம் ஆலிவ் ஆயில் இதைக் கலந்து உபயோகிக்கலாம். இதில் எண்ணெ அதிகம் சேர்ந்திருப்பதால் போடுவதற்கும் எடுப்பதற்கும் வாகாது. ஒரு லிண்ட் துணியை போட்டுவிட்டு அதன் மேல் வேறு துணியை இதில் நனைத்துப் போடவேண்டும். மாற்றும்போது மேல் துணியை மாத்திரம் மாற்றிவரவேண்டும்.

அடிக்கடி டிரஸ்ஸிங்கை மாற்றுவது உசிதமல்ல.

புண் ஏற்பட்டிருந்தால் போரிக் ஆயின்மெண்ட் காலண்டுலா அல்லது அர்டிகா ஆயின்மெண்ட் உபயோகிக்கலாம்.

உள்ளுக்கு:- அகோனைட், — இது அதிர்ச்சிக்குச் சிறந்தது.

காந்தாரிஸ்:- கொப்புளங்கள், எரிச்சல்.

ஏபிஸ்:- குத்துவலியுடன் எரிச்சல்.

கேலி-பைக்:- குழியான புண்கள்.

ஹெபர்:- சீழ் பிடித்தால்.

லிகேஸ்,
கார்போவெஜி: } அழுகல்.

ஆர்சனிக்:- கருத்த புண்கள்.

காஸ்டிகம்:- புண்கள் ஆறின பிறகு ஏற்படும் நரம்புக் கோளாறுகளுக்கு.
இன்னும்:- காந்தாரிஸ் முதலியன.

(185) மூச்சு நின்றுவிடுதல்—ASPHYXIA

தண்ணீரில் முழுகிவிடுதல், தூக்குப்போட்டுக் கொள்ளுதல், சில விஷக்காற்றுகள் இவைகளில் மூச்சுத்திணறலும் மூச்சடைப்பும் ஏற்படலாம்.

ஹிருதயம் துடிப்பதோ, மூச்சு வெளிவந்து உட்செல்லுவதோ வெளிப்பார்வைக்குத் தெரியாது. கண்ணிமைகள் பாதி மூடியிருக்கும்; பாப்பா விரிந்திருக்கும்; தாடைகள் இறுகி; விரல்கள் பாதி மூடங்கியுமிருக்கும். நாக்கு வெளிப்பட்டு பற்களுக்கிடையிலும்; உடம்பு சில்லிப்பும் இருக்கும்.

ஒரு விநாடிகூட இதில் தாமதிக்கக்கூடாது. உடனே நோயாளியைக் கிடத்தி இறுகியிருக்கும் கட்டுகளைத் தளர்த்திவிடவேண்டும். தண்ணீரில் இருந்து எடுத்தவனை குப்புறக்கவிழ்த்து வாயிலிருக்கும் தண்ணீர் வெளிப்படும்படியாகச் செய்யவேண்டும். உடனே அவசரமாக 'ஆர்டிபிசியல் ரெஸ்பிரேஷன்' செய்யவேண்டும். கீழ்க்கண்ட விதிகளை முக்கியமாக கவனிக்கவேண்டும்.

முதன் முதலில் எச்சல், தண்ணீர், தூசி முதலியவைகளை வாயிலிருந்தும், நாசியிலிருந்தும் துடைக்கவும். வாயைத் திறந்து, நாக்கை வெளியே இழுத்துவைக்கவும். இது வெளியே இருக்கவேண்டும். உள்ளேவிட்டுவிடக் கூடாது. கழுத்து, மார்பு முதலிய இடங்களிலிருந்து இறுகியிருக்கும் துணிகளை தளர்த்திவிடவேண்டும்.

மெள்ள ஒரு மட்டமான இடத்தில் மல்லாக்கப் படுக்கவைக்கவும். தலையையும் தோள்பட்டைகளையும் சற்றே உயர்த்தி வைக்கவும். ஒரு தலைகாணியையோ, அல்லது மடித்த துணியையோ உபயோகிக்கவும்.

பிறகு மூச்சு வரும்படிசெய்ய தலைப்பக்கம் முதலுதவி செய்பவர் நின்றுகொள்ளவேண்டும். அல்லது முழங்கால்களில் உட்கார்ந்துகொள்ளலாம். முழங்கைகளுக்கு முன்புறம் சிக்காளியின் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு மெதுவாக சிக்காளியின் தலைப்பக்கமாக உயரத் தூக்கவும். இரண்டு கைகளும் தலைப்பக்கம் நெருங்கவேண்டும். இதனால் காற்று சுவாசப் பையில் இழுக்கப்படுகிறது. இம்மாதிரி நிலைமையில் இரண்டு வினாடிகள் வைத்துக்கொண்டிருந்த பிறகு. இரண்டு கைகளையும் திருப்பிக்கொண்டுவந்து இரண்டு மார்ப்புறங்களில் மிருதுவாகவும், திடமாகவும் அமுக்கவேண்டும். இதுவும் இரண்டு விநாடிகள் செய்யவும். இதனால் சுவாசப் பையிலிருந்து கெட்ட காற்று வெளிவந்துவிடும். இன்னொருவர் கூடமாட மார்ப்புறத்தை அமுக்கிக் கொடுத்தால் கரிமில வாயு வெளிவருவது செளகரியம். இரண்டுபேரும் ஒத்து ஜாக்கிரதையாக வேலை செய்யவேண்டும்.

இம்மாதிரி ஜாக்கிரதையாகவும் தீர்மானமாகவும் ஒரு நிமிஷத்திற்கு 15 தடவை செய்யவேண்டும். அதிகமாகவும் செய்துவிடக் கூடாது. குறைவாகவும் செய்யக்கூடாது. தானாக மூச்சுவிட பிரயத்தனம்செய்வது தெரிந்தவுடன் நம் முயற்சியை நிறுத்திவிடலாம்.

அம்மோனியாவை நாசியில் முகரச் செய்யவும். அட்ரனலின் இன்ஜெக்ஷன் கொடுக்கலாம்; ஆண்டிம்டார்ட் இன்ஜெக்ஷனும் கொடுக்கலாம்.

மூச்சுவிட ஏற்பாடு செய்யும்போதே நாசியில் அம்மோனியம் கார்ப் அல்லது பொடியைக்கூட உபயோகப்படுத்தலாம். குளிர்ந்த தண்ணீரையும் சூடான தண்ணீரையும் மாற்றி மாற்றி முகத்திலும் மார்பிலும் தெளிக்கவும். நன்றாக சூடேறும்படியாக முகத்தையும் மார்பையும் தேய்க்கவும்.

இவையெல்லாம் நமக்கு நன்றாகத்தெரிந்து ஒரு மணி நேரமாவது நாடித்துடிப்பும் மூச்சுவிடுதலும் நின்றுவிட்டவரையிலும் செய்து பார்க்கவேண்டும். ஒரு மணிநேரம் ஆகிவிட்டால் பிழைப்பது துர்லபம்.

மூச்சுவிட ஆரம்பித்தபிறகு நன்றாகக் கம்பளியினால் போர்த்து கால்களிலிருந்து மேல்புறமாக நன்றாகவும் துரிதமாகவும் தேய்க்கவேண்டும். கம்பளிக்கு அடிப்புறமாகவாவது அல்லது மேல் போர்த்தியிருக்கும் காய்ந்த துணிக்கு மேலாகவாவது தேய்க்கவேண்டும்.

சூடான ஒற்றடம் கொடுக்கவேண்டியிருக்கும். வெந்நீர் நிரப்பின பைகள், பாட்டில்கள் இவைகளை வயிற்றிலும், அக்குள்களிலும், துடைகளுக்கு இடையிலும், உள்ளங்கால்களிலும் வைக்கலாம்.

கொஞ்சம் உயிர்வந்தபிறகு சற்று முழுங்குவதற்கு சக்தி வந்தவுடன் கொஞ்சம் வெந்நீர், அல்லது பிராந்தி அல்லது காபி கொடுக்கவும். மெள்ள நன்றாகக் காற்றோட்டமுள்ள அறையில் குளிரில்லாமல் படுக்கவைக்கவேண்டும். நன்றாக தூங்கச்செய்யவேண்டும்.

இம்மாதிரியே முறைகள் தூக்குப் போட்டுக் கொண்டவர்களுக்கும் செய்யவேண்டிய தவசியம். கழுத்தில் இறுகியிருக்கும் கயிற்றை உடனே அறுத்துவிட்டு மேற்சொன்னவகையில் சுவாசத்தை ஏற்படுத்தவேண்டும்.

மின்னல் தாக்குண்டால் சிலர் பிரக்ஞையிழப்பதுண்டு. அவர்களுக்கும் இம்மாதிரியே செய்யவேண்டும். நிறையக் குளிர்ந்த தண்ணீரை உடம்பில் 10–15 நிமிஷம் அடிக்கவேண்டும்.

(186) காயம்—WOUND.

இதில் அனேக விதங்களுண்டு, நல்ல கூரான கத்தி முதலிய ஆயுதங்களினால் ஏற்படுவது அறுத்த புண் குத்துவதினால் குத்துங் காயம். கோணல்மாணலாக கிழிபடுவதால் **கிழிந்த காயம்**, நசுங்குவதினால் **நசுங்கல் காயம்**, **சுட்ட காயம்**, விஷப்புண், (பாம்பு முதலியவைகளினால் ஏற்பட்டவை) கடைசி இரண்டும் முந்தியே விவரிக்கப்பட்டுவிட்டன.

பாக்கிக் காயங்களுக்கு பொதுவான சில விதிகளை நாம் அனுசரிக்கவேண்டியதவசியம்.

(1) ரத்தப் பெருக்கை உடனே நிறுத்தவேண்டும். சிறு ரத்தக்குழாய்களாயிருந்தால் பொதுவாக

ரத்தம் வரும் பாகத்தை மேல் தூக்கி நிறுத்தி பஞ்சு முதலியவற்றால் அமுக்கிக் கட்ட நின்றுவிடும். காலண்டுலா லோஷன் உபயோகப்படுத்தினால் ரத்தப் பெருக்கும் குறைந்து, சீழும் பிடிக்காது.

ரொம்ப அதிகமான ரத்தப்பெருக்காக இருந்தால் காயம்பட்ட பாகத்தை நன்றாக சோதனை செய்து ரத்தக் குழாய்களை கட்டவேண்டிவரும். இது அனுபவமுள்ள ஸர்ஜனால் செய்யவேண்டிய காரியம் கொஞ்சம் திறமைசாலியாயிருந்தால் ஒரு ஆர்டரி பார்செப்ஸ் உதவி செய்து நல்ல ரத்தக் குழாயை சற்று அமுக்கிப்பிடித்து முன்னிழுத்து ஸில்கினால் கட்டலாம்.

இடைவிடாமல் கருப்பு நிறமான ரத்தம் வெளி வந்துகொண்டேயிருந்தால் இது கெட்ட ரத்தக்குழாயிலிருந்து வருகிறதென்று அறியலாம். இதற்கு கொஞ்சம் கிருமி நாசம் செய்யப்பட்ட பஞ்சை அடையாக வைத்து நன்றாக அமுக்கிக் கட்டிவிடவும்.

(2) காயத்தில் அந்நிய வஸ்துக்கள் ஏதாகிலும் இருந்தால் அதாவது, தூசி, மயிர், கண்ணாடித்துண்டு கட்டிதட்டின ரத்தம் இவைகளெல்லாவற்றையும் லோஷனால் அலம்பி பார்செப்ஸ் உதவிகொண்டு நீக்கிவிடவேண்டும்.

(3) ஆபிரேஷன் செய்த காயங்களை சுலபமாக பொருத்தித் தைத்துவிடலாம். மற்ற காயங்களில் ஓரங்களை சரியானபடி பொருத்தி தைக்கவேண்டிய அவசியமேற்படும். மற்றபடி ஸர்ஜன்தான் செய்ய வேண்டும். தினம் கட்டுகட்டவேண்டியது. புண்களை கவனிக்க வேண்டியது ரணசிகிச்சை நன்றாக அறிந்தவர் செய்யவேண்டும்.

உள்ளுக்கு அகோனைட், ஆர்னிகா, பெல்லடோனா, ஹைபரிகம் முதலியன கொடுக்கவேண்டியிருக்கும்.

(187) சிராய்ப்பு அடி—BRUISE.

தோலில் பிளவு ஏற்படாதபடி உராய்தல், முட்டிக் கொள்ளுதல் முதலானவைகளினால் ஏற்படுவது. ஒரு மொட்டையான ஆயுதத்தினால் அடி; அவயவம் இரண்டு உருளைகளுக்கிடையில் அமுக்கப்படுவது இம்மாதிரியானவைகளினால் இது ஏற்படும்.

ரத்தம் கட்டி ஊமைக்காயம் ஏற்பட்டுவிடும். ஊமைக்காயம் ரொம்ப அதிகமாகயிருந்தால், ஸர்ஜன் உதவி பெறவேண்டும். சிறிதாகயிருந்தால் உடனே ஆர்னிகா லோஷனை (ஒரு அவுன்ஸ் தண்ணீருக்கு பாதி டீஸ்பூன் டிஞ்சர்) போட்டுவரவேண்டும்.

தோல் பிளந்திருந்தால் ஹாமமலிஸ் டிஞ்சரை (ஒரு அவுன்ஸ் தண்ணீருக்கு 10 சொட்டு) உபயோகப்படுத்தவும். எலும்புகள் சிராய்க்கப்பட்டிருந்தால் ரூடா டிஞ்சரை (ஒரு அவுன்ஸ் தண்ணீருக்கு 10 சொட்டு) உபயோகிக்கவேண்டும். ஸ்தனங்களில் காயம் ஏற்பட்டுவிட்டால் பெல்லிஸ் பெரன்னிஸ் அல்லது அதற்குப் பிறகு கோனியம் டிஞ்சரை உபயோகப்படுத்தவும்.

கைவிரல் கால்விரல்கள், நரம்புகள், முள்ளந்தண்டு முதலிய நரம்பு ஸ்தானங்கள் காயப்பட்டால் ஹைபரிகம் டிஞ்சரை உபயோகிக்கவும்,) சரிபாதி தண்ணீரும் டிஞ்சரும்.)

உள்ளுக்கும் மேற்சொன்ன மருந்துகளையே உபயோகிக்கவும்.

இன்ஜ்:- ஆர்னிகா.

(188) சுளுக்கு—SPRAIN.

தசைநார்களில் கன்றுபின்றுவென்று இழுக்கப்படுவதாலும், மக்களித்துக் கொள்ளுவதாலும் ஏற்படுவது.

நல்ல சூடான ஒற்றடம் உடனே கொடுக்க வேண்டும்; அல்லது வெந்நீரில் ஆர்னிகா (20 அவுன்ஸ் ஜலத்திற்கு ஒரு டீஸ்பூன்) டிஞ்சரைவிட்டு அதில் அந்த பாகத்தை அமுக்கிவைக்கலாம். 3 மணிக்கொருதரம் இதைச் செய்யவும்.

ஒரு நாளில் குணம் தெரியாவிட்டால் பெல்லிஸ் பெரன்னிஸ் டிஞ்சரை இதே மாதிரி உபயோகப் படுத்தலாம். குணம் தெரிந்தவுடன் மேலுக்கு உபயோகப்படுத்தும் மருந்தை நிறுத்திவிட்டு உள்ளுக்கு மாத்திரம் கொடுத்துவரலாம்.

உள்ளுக்கு ஆர்னிகா, ரஸ்டாக்ஸ், பெல்லிஸ் பெரன்னிஸ், ரூடா, ஹைபரிகம் முதலியன உபயோகமாகும்.

இன்ஜ்:- ஆர்னிகா.

(189) எலும்பு முறிவு—FRACTURE.

எலும்பு முறிந்திருக்கிறதா என்று முதலில் பார்த்துக்கொள்ளவேண்டும். ஒடிந்த எலும்புகளின் துண்டுகள் உராய்வதால் கொறகொறவென்ற சப்தம் உண்டாகும் அல்லது டக்கென்ற சப்தம் நகர்த்தினால் உண்டாகும். மேல் பாகத்தை கெட்டியாய் பிடித்துக்கொண்டால் கீழ்ப்பாகத்தை நன்றாக அசைத்து நகர்த்தலாம். உடையாத எலும்பாயிருந்தால் இது முடியாது. வலியிருக்கும். உடைந்த பாகத்தை ஆட்டவும் அசைக்கவும் முடியாது. தோலில் காயம் ஏற்படாமலிருந்தால் சாதாரண முறிவு என்றும், ஒடிந்த எலும்பின் நுனி குத்தி தோலில் காயம் ஏற்பட்டுவிட்டால் 'காம்பவுண்ட் முறிவு' என்றும் சொல்வார்கள். இவையெல்லாம் சரிப்படுத்துவது சர்ஜன் வேலை.

முதன் முதலில் சர்ஜனிடம் கொண்டுபோவதற்கு முன் கீழ்க்கண்டபடி செய்வது நல்லது.

கால் ஒடிந்திருந்தால் கணுக்காலிலிருந்து ஒரு துணியைக்கட்டி முழங்காலின் கீழும் மேலும் இன்னொரு பாகத்தை கட்டி கால் அசையாமல் கொண்டு செல்லவேண்டும்.

கை ஒடிந்திருந்தால் கையைத் தூக்கிக் கட்டி கழுத்திலிருந்து தொங்கவிடவேண்டும்.

விலா எலும்பு ஒடிந்திருந்தால், மார்ப்புறத்தை ஒரு பிளானல் துணியினால் இறுக்கிக் கட்டி தோள் பட்டைகளில் உதவிக்கு இழுத்துக் கட்டவும். இதனால் வலி சற்று சாதகமாகும்.

இத்துடன்கூட காயங்கள் ஏற்பட்டு ரத்தக்கசிவு முதலியன ஏற்பட்டால் அவைகளை முன்னத்தியாயத்தில் சொன்னபடி சிகிச்சை செய்து நோயாளியை ஜாக்கிரதையாகவும் நிதானமாகவும் கொண்டு போகவேண்டும். அவசரமும், ஆத்திரமும் இந்த சமயத்தில் உதவாது. சர்ஜன் அருகிலேயே இருந்தால் அவரைக்கூட்டி நோயாளியைக் காண்பித்து சிகிச்சை செய்யலாம்.

உள்ளுக்கு:-

ஸிம்பிடம்:- சிறந்த மருந்து. இதனால் ஒடிந்த எலும்புகள் ஒட்டிக்கொள்ளும்.

ரூடா:- வலி, சிராய்ப்பு அதிகமாயிருந்தால்.

கால்-பாஸ்:- எலும்பு வளர்ச்சியில்லாதவர்கள்.

ஸிலிஸியா:- ரிக்கெட்ஸ் உடையவர்கள்.

இன்ஜ்:- கால்பாஸ்.

மருத்துவமும் சிசு சம்ரக்ஷணையும்.

மருத்துவத்தைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு முன் பெண் ஜனனேந்திரியத்தைப்பற்றித் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். அதை விவரமாக தேக கூற்றைப்பற்றி சொல்லும் நம் மருத்துவம் என்ற புத்தகத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

கர்ப்பச் சின்னங்கள்.

1. மாதவிடாய் நின்றுபோதல்.

2. 6-வாரத்திற்குமேல் குமட்டல். வேறு அஜீரணம் முதலியன இராது.

3. முதல், இரண்டாவது கர்ப்பகாலத்தில் மார்புகள் புடைத்து மார்பு நுனி கருத்துப் பெருக்கும்.

4. மார்பு நுனியைச்சுற்றி இருக்கும் கருப்புப் பாகம் நன்ருகக் கருக்கும்.

5. ஸ்தனங்களில் பால் ஊறலாம்.

6. அடிவயிறு பெருத்தல். இது கர்ப்பப்பையில் நீர் தங்குதல், கர்ப்பப்பைக் கட்டி முதலியவைகளினுல்கூட ஏற்படும். ஆகவே நன்ருகப் பரீக்ஷிக்க வேண்டும்.

7. 4 அல்லது 5-வது மாதத்தில் கர்ப்பப்பை வயிற்றில் உயரும். உள்ளிருக்கும் பிண்டம் அசையும். தாயைக்காட்டிலும் மற்றவர்களுக்கு தொட்டுப் பார்த்தால் நன்ருகத் தெரியும்.

8. 6-வது 7-வது மாதங்களில் சிசுவின் ஹிருதயத் துடிப்பு நன்ருக ஸ்டெதாஸ்கோப் வைத்துப் பார்த்தால் தெரியும். 140 to 160 வரை நிமிஷத்திற்கு துடிக்கும். 9 மாதத்திற்குப் பிறகு 120 to 140 இருக்கும்.

9. கர்ப்பப்பையின் அளவு சாதாரணமாக கீழே கொடுக்கப்பட்டபடியிருக்கும்.

6-வது மாதம் கர்ப்பப்பை தொப்புள்வரை பெருத்திருக்கும். 7-வது மாதம் தொப்புளுக்குமேல் 3 விரல் அளவு பெருத்திருக்கும். 8-வது மாதம் 6 விரல் அளவு, 9-வது மாதம் 9 விரல் அளவு, 10-வது மாதம் 6 விரல் அளவு. அதாவது கீழே இறங்கி விடும்; இறங்கின 10 to 15 நாட்களுக்குள் பிரசவம் ஆகிவிடும்.

சுமாராக கர்ப்ப காலம் 280 நாள்.

ABORTION & MISCARRIAGE—கர்ப்பச்சிதைவு.

இதற்கு அனேக காரணங்கள் உண்டு. சுரங்கள், கிரந்தி (Syphilis) வெட்டை (Gonorrhoea) டி. பி. ஹிருதய வியாதிகள், மூத்திரக்காய் வியாதிகள் முதலியன. பயம், அடிபடல் முதலியனவும் காரணமாகலாம்.

சிதைவுக்கு முன் கருப்பு கட்டியாக ரத்தப் பெருக்கு இருந்தால், ஸீகேல், க்ரோகஸ், பல்ஸாடில்லா முதலியன.

ஸீகேல் இன்ஜெக்ஷன்

வாந்தி ஏற்பட்டால்—ஐபிகாக் முதலியன.

அடிபட்டதினுல் என்ருல்:— ஆர்னிகா மருந்தும் இன்ஜெக்ஷனும், மருந்துகளை 10 சொட்டு அல்லது 10 மாத்திரை அரை டம்ளர் ஜலத்தில் கரைத்து அரைமணிக்கொருதரம் கொடுக்கவேண்டும்.

டெலிவ்ரீஸி, பெயின்கில் இன்ஜெக்ஷன்கள் 3, 4 தரம் கொடுக்கவும்.

அப்படியும் கர்ப்பச்சிதைவு ஏற்பட்டுவிட்டால், பிரசவம்மாதிரி கவனிக்கவும்.

இம்மாதிரி அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருந்தால், நம்மிடம் தயாராகும் (Delivereasy) டெலிவரீஸி, லாஸோன் முதலியன வாங்கிக்கொடுக்கவும்.

காலோபில்லம், கேல்பாஸ் இன்ஜெக்ஷன்களை அடிக்கடி கொடுக்கவும். தடுப்பதற்காக பல்ஸாடில்லா, ஸீகேல், சிமிஸிபியூகா, கால்கேரியா ப்ளூர் முதலியன உள்ளுக்கு ஆரம்பமுதல் கொடுக்கவும்.

நம்மிடம் கிடைக்கும் "டெலிவரீஸி" கர்ப்பச் சிதைவு ஏற்படாமல் தடுக்கும். ஸெட் 3 மாதத்திற்கு உதவும். 'சுகப்பிரசவமருந்தும்' நம்மிடம் கிடைக்கும்

LABOUR—பிரசவம்.

இது இயற்கையின் ஒரு சாதாரண சம்பவம். இதில் அதிகமாக நாம் சேஷ்டை செய்வதாலும், பொறுமையில்லாத காரியங்களாலுமே கஷ்டம் அதிகரிக்கிறது. பிரசவம் இயற்கையாக வலியில்லாத ஒரு சம்பவமே.

பிரசவ வலி:-280 நாள் ஆனதும் இது ஏற்படும்.

(1) கணக்காக ஒழுங்கான டயப்பிரகாரம் இது வரும். வரவர கடுமை அதிகமாகும். கர்ப்பப்பை நன்றாக அமுங்கி எழுவது தெரியும்.

(2) உண்மையான பிரசவ வலி இடுப்பிலும்; விலாப்புறத்திலும்தானிருக்கும்.

(3) வலிகள் யோனித் துவாரத்தின் வழிப்பக்கமே நோக்கும்.

(4) சில சமயம் பனிநீர் என்று சொல்லப்படும் திரவம் யோனியிலிருந்து வெளிப்படும்.

தாயார் முதுகுப்புறமாக படுத்துக்கொண்டு கால்களை மடக்கி வைத்துக்கொள்ளவேண்டும். வலி வரும்போதுமட்டும் வயிற்றை கீழ்ப்புறம் கைகளினால் அமுக்கிவிடவேண்டும். தாயார் பயப்படவேண்டாம். கொஞ்சம் பொறுமையுடனிருந்தால் மருத்துவச்சியின் உதவியில்லாமலே பிரசவம் ஏற்படும்.

முதன்முதலில் வலிகள் சுமாராக ½-நிமிஷம் கண்டு 15–30 நிமிஷம் ஒன்றுமிருக்காது. வரவர அதிகமாகும். அடிக்கடி ஏற்படும். கையை வைத்துப் பார்த்தால் வயிறு முழுவதும் இறுகி வலி நின்றவுடன் தளர்ந்துவிடும்.

சிறிது ரத்தம் யோனியின் வழியாக வெளிவரலாம்.

கர்ப்பப்பையின் வாய் நன்றாக விரிந்து யோனியின் வாயும் விரிந்து, ஒன்றாகிவிடும்.

வலி வரும்போது கையை உள்ளே செலுத்தினால் ஒரு பை கிண்ணம்மாதிரி தென்படும். வலி நின்றவுடன் உள்ளே போய்விடும்.

இது குழந்தை மிதக்கும் நீர்ப்பை. இதன் பெயர் (Bag of Water) என்று சொல்வார்கள். நீரின் பெயர் Liquor Amnii. (லிக்வர் ஆம்னி).

பிரசவம் மூன்று நிலைமையாய் பிரிக்கப்படும்.

முதல் நிலைமை—First Stage.

கர்ப்ப வாய் பிரியும் நிலைமை கர்ப்பப்பையின் வாய் மெதுவாகப் பிரிந்து 'நீர்க்குடம்' தென்படும்.

பூராவும் விரிந்தபின் யோனியின் வாயும் ஒரே குழாய் ஆகிவிடும். சிசுவின் தலைப்பாகம்தான் சாதாரண பிரசவத்தில் தென்படும். இந்த சமயத்தில் நீர்க்குடம் உடையும்; கொஞ்சம் வெளிவரும். இந்த நிலைமை முதல் பிரசவத்தில் கொஞ்சம் நீண்டும் மற்ற பிரசவங்களில் குறைந்தும் இருக்கும். பொதுவாக முதல் பிரசவத்தில் 16 மணி நேரமும் பின் பிரசவங்களில் 8 மணி நேரமும் ஆகலாம். சில சமயம் வாந்தியும் ஏற்படலாம்.

Second Stage.

இது சிசு வெளிவந்துவிடும் நிலைமை. 5 விரலும் உள் நுழைந்தால் சிசு வெளிவந்துவிடும் என்று தீர்மானிக்கவேண்டும். கர்ப்பப்பை வாயிலிருந்து இப்பொழுது சிசுவின் தலை யோனிக்கு வரும். ஒவ்வொரு வலியும் நீண்ட, ஆழ்ந்த மூச்சுடனும், முக்கலுடனும். தாயார் முக்கித் தள்ளுவதுடனும் இருக்கும். கொஞ்சம் வலியை இச்சமயத்தில் பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான். தலை நன்றாக வெளிவரும்போது ஆசனவாயும் நன்றாக விரிந்து தெரியும். சில சமயம் கடினமான பிரசவமாயிருந்தால் ஆசனவாய்க்கும் யோனித் துவாரத்திற்கும் மத்தியிலிருக்கும் (Perineum) பெரினியம் கிழியலாம், சில நிமிஷம் கழித்து ஒரு வலி வந்து தோள்பட்டை வரும். உடல், கால் முதலியன வரிசையாய் வெளிவரும். உடல் வந்தவுடன் ரத்தம் கலந்த நீர்க்குடத்துத் தண்ணீர் வெளிப்படும். இந்த நிலைமை சுமார் முதல் பிரசவத்தில் 3 மணி நேரமும் பிற்காலத்தில் 10—15 நிமிஷமும் இருக்கும்.

Third Stage.

இது நஞ்சு வெளிப்படுவது. நஞ்சு, தொப்புள் கொடி முதலியன வெளிவரும் டயம்.

சிசு வந்த 10—30 நிமிஷம்களுக்குப் பிறகு கர்ப்பப்பை சிறுத்து, கெட்டியாகி, உருண்டையாகி, அப்புறம் இப்புறம் நகரும்படியாய் இருக்கும். ஒரு மூக்கு முக்கினால் நஞ்சு கொடியுடன் யோனித்துவாரத்தில் வரும். அப்பொழுது அதை இழுத்துப் போட்டுவிடலாம். நிறைய ரத்தம் வெளிப்படும்.

சிசு பிறந்தவுடன் மூச்சுவிட ஆரம்பிக்கும் நன்றாக அழும். வாயும் தொண்டையும் ஈரமான சுத்தமான பஞ்சுத்துணியினால் நன்றாக துடைக்கப்படவேண்டும். மூச்சு நன்றாய் வந்தவுடன் அல்லது கொடியில் துடிப்பு நின்றவுடன், கொடியை அறுத்துவிடவும். கொதிக்கவிட்ட ட்வைன் நூலினால் இரண்டு முடிச்சுப்போடவேண்டும். தொப்புளிலிருந்து 1½ இஞ்சு தூரத்தில் ஒன்றும் இன்னும் ஒரு இஞ்சு தள்ளி இன்னொன்றும் போடவும். நன்றாக இறுக்கிக் கட்டி கத்தரித்துவிடவேண்டும். பிறகு வெள்ளைத் துணியினால் பஞ்சுவைத்து வயிற்றைச் சுற்றி கட்டிவிடவேண்டும்.

ABNORMAL LABOUR—கஷ்டப் பிரசவங்கள்.

1. **Placenta Praevia**:— இதில் பிளசண்டா என்னும் நஞ்சு கர்ப்பப்பையின் வாயின்பக்கம் ஏற்பட்டுவிடும். சாதாரண கர்ப்பத்தில் மேல் பக்கத்தில் இருக்கும். இப்படியிருப்பதால், 7, 8 மாதங்களில் ரத்தம் வெளிப்படலாம். ஏனென்றால் சிசு வளர வளர நஞ்சு வழக்கம்போல வளரமுடியாமல் சில இடங்களில் ரத்தக் குழாய்கள் கிழிபடுகின்றன. பிரசவம் எப்போதும் காலத்திற்கு முந்தியே ஏற்படும். தாயாருக்கும் சிசுவுக்கும் பெருத்த ஆபத்து. எப்படியிருந்தாலும் டாக்டரோ, மருத்துவச்சியோ ஒன்றும் செய்யமுடியாது. சிசு வந்த பின் நஞ்சும்

வெளிப்பட்டபின், ரத்தம் நிற்க வழி செய்ய வேண்டும்.

2. முகம் வெளிவருதல் :-

இரண்டாவது நிலைமை ஆரம்பத்தில் கையினால் தடவிப்பார்த்து முகம் வருகிறது என்று தெரிந்து கொள்ளலாம். சாதாரணமாக சௌகரியமாக பிரசவம் ஆகிவிடும். சில சமயம் ஒரு கை வெளி வந்தோ தொப்புள் கொடி வெளிவந்தோ இருந்தால் கர்ப்பப்பைக்கு மேலே கைகளின் உதவியினால் மெள்ள சிசுவை திருப்பிவிடலாம். இதெல்லாம் அனு பவத்தில் நேரில் செய்து தெரிந்துகொள்ளவேண்டிய சமாச்சாரங்கள்.

3. புட்டம் வெளிவருதல்–**Breech or Pelvic Presentation:-**

ஆரம்ப காலத்திலேயே வயிற்றில் கையைத் தடவி தலை வெளி வருகிறதா அல்லது புட்டமா என்று தெரிந்துகொள்ளலாம். தலையைவிட புட் டம் மெதுவாகவும், கோணல்மாணலாகவும் தென் படும். யோனித்துவாரம் வழியாகப் பார்த்தால் கைக்கு தென்படாமல் உயர இருக்கும். நீர்க்குடம் பெரும்பாகம் வெளிவரும். நீர்க்குடம் உடைந்த வுடன் புட்டம் கைக்கு தென்படும்.

இதனால் ஏற்படும் கஷ்டங்கள்:—

(a) நீர்க்குடம் முன்னாலேயே உடைந்துவிடுதல்.

(b) கால்கள் வெளிப்படுதல். பிரசவம் இதனால் நீடிக்கும்; கஷ்டமும் அதிகம்.

(c) ஒரு கையோ அல்லது இரண்டுமோ முகத்துடன் சேர்ந்து வந்து தலைவரும்போது கஷ் டப்படுத்துதல்.

குழந்தைக்கு இதில் ஆபத்து அதிகம். பிரசவத் திற்கு முந்தியே கண்டுபிடிக்கப்பட்டால் தலையைப் பிரசவத்திற்கு திருப்பிவிடலாம். முதல் பிரசவத்தில் இது செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

4. தோள்பட்டை வருவது :—

இது அபூர்வம்; ஆனால் ரொம்ப சிக்கலானது. ஆபத்தானது. பிரசவ காலத்திற்கு முந்தியே தெரிந் துகொள்ளலாம். இப்படிப் பிறந்தால் சிசு மரிப் பது சகஜம். அல்லது திடீரென்று நீர்க்குடம் உடைந்தவுடன் தானாக திரும்பி புட்டமோ தலையோ வெளிவரலாம். 10-வது மாதத்திலேயே கண்டு பிடித்து பல்ஸாடில்லா, இன்ஜெக்ஷன் அல்லது உள்ளுக்கு கொடுத்துவந்தால் சரியான பிரசவம் ஏற்பட்டுவிடும். இது நிச்சயம்.

இல்லையென்றால் 2 விரல் விரிவு ஏற்பட்டவுடன் விரல்களின் உதவியினால் தோளைத்திருப்பி (நீர்க் குடத்தை உடைத்துவிட்டு) மாற்றவேண்டும். இல்லை நீர்க்குடம் உடைந்து ஒரு கை வெளிவந்துவிட்டால், தாய்க்கு "க்ளோரோபாரம்" கொடுத்து வெளி வந்த கையை உள்ளே செலுத்தி, சிசுவை மாற்றி செய்யவேண்டும்.

5. இரட்டைச் சிசு :—

சாதாரணமாக கொஞ்சம் சீக்கிரமாகவே பிரச வம் ஏற்பட்டுவிடும். ஒன்று தலையும், ஒன்று புட்ட மும் வழக்கம். முதல் சிசுவிற்குப் பிறகு 15–30 நிமி ஷம் ஓய்வு ஏற்பட்டு, வலியுடன் இரண்டாவது சிசு வும் உடன் பிறக்கும். இரண்டிற்கும் பொதுவான நஞ்சு வெளிவரும். அல்லது தனித்தனியாக இருந் தால் அந்தந்தச்சிசுவுடன் வரும்.

மருந்து:—மனிதனுக்கு தெரிந்த காலம் முதல் பிரசவ வலி என்று இருந்தே வந்திருக்கிறது. இதற்கு காரணம் என்ன என்பது இன்றுவரையில் கண்டு பிடிக்கப்படவில்லை. கடவுள் வேண்டுமென்று செய்தாரா அல்லது நம்முடைய பிசகினலா அப்படியென்ருல் என்ன பிசகு என்பது இதுவரையில் மனித அறிவிற்கு எட்டாத விஷயமாகும்.

போன நூற்றுண்டு மயக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்டபின், மனிதன் பிரசவத்தின்போது மயக்க மருந்தை உபயோகப்படுத்தி வந்திருக்கிருன். ஆனல் அதற்கும் சரியான பலன் கிட்டவில்லை.

நம் முறையில் இதுவரையில் அற்புதமான நலன்கள் கிடைத்திருக்கின்றன.

காமோமில்லா:- ஒரு சிறந்த மருந்து இதற்கு மிஞ்சினது கிடையாது.

வழக்கமாக 6x வீரியத்தில் (போடன்சியில்) 5 சொட்டு 4 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து அரை மணிக்கு ஒருதரம் கொடுக்க சௌகரியமாகிவிடும். சாதாரண கேசுகளுக்கு ஒன்று அல்லது இரண்டு வேளைகளே போதும்.

காமோமில்லா:- தொடைகள் வழியாக கீழிறங்கும் கடுமையான வலி, ரொம்ப ஆத்திரமும், கடுகடுப்பும் இருக்கும். தாங்கமுடியாத வலி; பயம், தூக்கத்தில் கூட முனகிக்கொண்டிருப்பர். பயங்கரமான கனவுகள்.

அகோனைட்:- பயம், வலி கடுமை, உடம்பு முழுவதும் வியர்வை.

பல்ஸாடில்லா:- வலி மெதுவாக வருதல்.

நக்ஸ்வாமிகா:- சரியில்லாத வலி. அடிக்கடி, நீர் பிரிக்க எண்ணம்.

காலோபில்லம்:- கர்ப்பப்பை வாய் பிரியாமல், கெட்டியாய் இருத்தல் வலி கடுமையாக இருந்தும் கர்ப்பப்பை வாய் மலராது. சுரம், தாகம்.

சிமிசிபியூகா:- வலி நரம்புகளில் துடிக்கும், பொதுவாக இரண்டு வாரங்களுக்கு முந்தியிருந்தே தினம் ஒரு வேளை கொடுக்கவும்.

வீகேல்:- ஒல்லியான பெண் அடிக்கடி பொய் வலி ஏற்பட்டதனல் கர்ப்பப்பை தளர்வடைதல். வலி நீடித்து மெதுவாக வருதல்.

பெல்லடோனு:- வலி திடீரென்று வந்து திடீரென்று விட்டுவிடும். தசைகள் விறைப்பாய் இருக்கும். வயதான ஸ்திரீகளுக்கு முதல் பிரசவமாய் இருந்தால்.

ஜெல்சிமியம்:- வலிப்புகள், அசர்ந்து, வலியுடன் குழந்தை மேலேறுவது போலிருக்கும்.

ஐபிகாக்:- இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் போகும் வலி; அடிக்கடி குமட்டல், வாந்தி.

ஆர்னிகா:- பிரசவமான பிறகு கண்டிப்பாய் நாலு டோஸ் கரைத்து இரண்டு மணிக்கு ஒரு தரம் கொடுக்கவும். இது உடம்பு வலிகளை நீக்கி ரணம், சுரம் வராமல் தடுக்கும்.

கேலிபாஸ்:- இதை பிரசவ வலியுடன் ஹோமியோ மருந்துடன் 15 கிரெயின் அளவு சேர்த்து கலந்து கொடுப்பது மிகவும் நல்லது. இதைப் பிரசவம் ஆனபிறகும் ஆர்னிகாவுடன் சேர்த்துக்கொடுக்கவும்.

காலோபில்லா டெலிவரி இன்ஜெக்ஷன்கள்:- பிரசவமான பிறகு பத்து நாட்களுக்கும், நக்ஸ்வாமிகா 200 போடன்சியில் தினம் மூன்று வேளை கொடுத்து வரவும். வேறு எந்த மருந்தும் கொடுக்கவேண்டாம்.

உடம்புவலி ஏதாவது இருந்தால் ரஸ்டாக்ஸ் 200 கொடுக்கவும்.

மண்குத்து வலி:- ஏற்பட்டால் காலோபில்லம் 200—4 வேளை கொடுக்கவும்.

பிரசவ இசிவு—ECLAMPSIA.

பிரசவத்தின்போதோ, பிரசவமானவுடனோ இசிவு வந்தால் அபாயகரமானது. இது பெரும்பாலும் கர்ப்ப காலத்தில் நீரில் உப்பு (Albumen) இருப்பதால் ஏற்படுவது. ஆகவே கர்ப்ப காலத்தில் அதுவும் கடைசிக் காலங்களில், கால்களில் வீக்கம் கண்டிருந்தாலும் அவசியம் நீரைப் பரிசோதித்து உப்பில்லாமல் சாப்பிடச்சொல்லி 'அல்பிமினூரியா' என்ற பாடத்தில் சொல்லியபடி வைத்தியம் செய்வது அவசியம்.

நீரை இசிவு வந்ததும் பரிசோதித்தால் நிறைய ஆல்புமன் இருப்பது தெரியும். உஷ்ணப்படுத்தினதும் நீர் கெட்டியாகக்கூட ஆகிவிடும்.

உடனே அபோசைனம் இரண்டு அல்லது மூன்று சொட்டு டிஸ்டில்டு வாட்டர் (நீராவியைக் குளிரவைத்து சுத்தப்படுத்தின தண்ணீர்—Distilled Wtaer) 1 c. c. அல்லது 2 c. c. அளவில் கரைத்து சதையின் அடியில் இன்ஜெக்ஷன் செய்துவிடவும்.

அட்ரபின் 1/200 இன்ஜெக்ஷன் செய்யலாம்.

பெல்லடோனா, ஜெல்சமியம், குப்ரம், மாஸ்சஸ்; ஓபியம், சிகூடா, ஸ்டிராமோனியம், வெராட்ரம் விரைட், சின்கம், மாக்பாஸ் முதலியன.

பிரசவத்திற்குப் பிறகு ரத்தப்பெருக்கு:— ஐபிகாக், ஹாமமலிஸ், பெர்ரம்பாஸ்.

கர்ப்பப்பையை நன்றாக வெளிப்பக்கத்திலிருந்து அமுக்கி, சூடான ஹாமமலிஸ், கலந்த தண்ணீரை விட்டு கழுவவேண்டும். பிறகு காரைத்துணியையும், பஞ்சையும் ஹாமமலிஸ் லோஷனில் (தாய்த்திராவகம் ½ அவுன்ஸ் தண்ணீர் 16-அவுன்ஸ்) நனைத்து யோனியின் வழியாக கர்ப்பப்பை வாயை அடைக்கவேண்டும்.

பால் சுரம்—MILK FEVER.

சில சமயம் பிரசவமான 2-வது அல்லது 3-வது நாள் ஸ்தனங்களில் பால் சுரக்கும்போது சுரம் உண்டாகும்.

பிரியோனியா, பல்ஸாடில்லா உள்ளுக்குக் கொடுத்து கேலிபாஸ் 6x பவுடரை வெந்நீரில் குழைத்து ஸ்தனங்களின்மேல் போடவும்.

பயோ ஆம்னின் இன்ஜெக்ஷன்.

பால் குறைந்திருந்தால்: பல்ஸாடில்லா, அஸபிடிடா அர்டிகா யூரன்ஸ், கால்கேரியா கார்ப், இக்னேஷியா, பெர்ரம்பாஸ்.

அதிகமாயிருந்தால்:— பிரியோனியா, சிமிசிபியூகா, சைனா, ஸிலிசியா, ஸல்பர்.

பிரசவ சுரம்—PUERPERAL FEVER.

ரொம்ப கஷ்டப்பட்ட பிரசவத்தினாலும், நஞ்சு சரியானபடி வெளிப்படாமல் உள்தங்கி அழுகுவதினாலும் ஏற்படும். இது கடுமையான சுரம். ஸெப்டிக் சுரமென்றும் சொல்லுவார்கள்.

ஸல்பதயோசால் 3x இன்ஜெக்ஷன் நாளைக்கு இரண்டு தரம் கொடுக்கவேண்டும்.

பாப்டீஷியா இன்ஜெக்ஷன் கொடுக்கலாம்.

பாப்டீஷியா, ஆர்ஸனிக், பைரோஜன், லாசெசிஸ், ரஸ்டாக்ஸ், வெராட்ரம் விரைட், பீரியோனியா வரிசைக்கிரமமாக சிறந்த மருந்துகள், பெர்ரம் பாஸ், கேலிபாஸ், இவையிரண்டையும் மேற்சொன்ன மருந்துகளுடன் சேர்த்தே டானிக் மாதிரி கொடுக்கவும்.

உன்மத்தம்—MANIA or INSANITY.

பிரசவத்திற்குப் பிறகு சிலருக்கு பைத்தியம் ஏற்படும்.

ஆரம்மெட்:- தற்கொலை செய்துகொள்ள எண்ணம், மதம், கடவுளைப்பற்றி பைத்தியம்.

பெல்லடோனா:- துப்பவும், அடிக்கவும் ஆரம்பிப்பர். பயந்துகொண்டு ஓடி ஒளிவர். தூக்கமின்மை.

கானபிஸ் இன்டிகா:- அனேக எண்ணங்கள் அலைமோதும். ஒரு விநாடி ஒரு யுகம் போலவும் ஒரு இஞ்சு அளவு ஒரு மைல் போலவும் தோற்றம்.

காந்தாரிஸ்:- காம இச்சை அளவுக்குமீறி. குலைத்தல். கடித்தல்.

சிமிசிபியூகா:- தான் பைத்தியமாக ஆகிவிடுவோமோ என்ற எண்ணம். மன ஓய்வு. அசதி, துக்கம், ஒன்றிலும் பற்றில்லாமல் இருத்தல். அதிகக் கோபம்.

ஹையாசயாமஸ்:- தாளமுடியாத கோபம், கவலை, தன் உறவினர்களைத் தெரியாது; உணர்ச்சியே யிராது; கிள்ளினாலும், அடித்தாலும் உணர்விருக்காது; நிர்வாணமாயிருக்கப் பிரியம். அசங்கியமான பாட்டு, சைகை, நீர் பிரியாமலிருத்தல்; விஷம் வைத்துவிட்டதாக கம்ப்ளெயிண்ட், சந்தேகம்.

இக்னேஷியா:- அடக்கி வைக்கப்பட்ட மனத்தாங்கல்கள், துக்கம் முதலியனவற்றால் அடிக்கடி அழுவர்.

லாஸெஸிஸ்.- ரொம்பப் பேச்சு, வம்பு, பொறாமை சந்தேகம், தூக்கத்திலிருந்து பயத்தினால் அலறிப் புடைத்து எழுதல்.

பிளாடினம்:- யோனியில் குறுகுறுவென்ற உணர்ச்சி, திமிர், அகம்பாவம், யோனியிலிருந்து கருப்பான, தார் போன்ற போக்கு.

பல்ஸாடில்லா:- அழுகை, கண்ணை மூடினால் விநோதமான சத்தங்கள், விநோதமான காக்ஷிகள்.

ஸ்டிராமோனியம்:- தனியாக இருக்க பயம், அசங்கியமான வார்த்தைகள், வம்பளப்பர், பிரார்த்தனை, முகம் வீங்கி சிவந்திருக்கும்.

தூஜா:- குழந்தைகளையும், உறவினர்களையும் பற்றி கவலையில்லை. சாதம் வேண்டாமென்பர். யாரோ ஒரு அன்னியர் தன் படுக்கையில் இருப்பது போன்ற எண்ணம்; ஏதோ தெய்வீக சக்தி தன்னை ஆட்டுவது போல.

வெராட்ரம் ஆல்பம்:- யாரையும் அணைத்துக் கொள்ள ஆசை. துணியைக் கிழிப்பர்.

சின்கம்:- திருடர்கள், பிசாசுகள், பயங்கரமான காக்ஷிகள் இவைகளை நினைத்து பயம்; கால்கள் சதா அசைந்துகொண்டேயிருக்கும்.

இன்னும் ஒபியம், ஸல்பர், நக்ஸ்வாமிகா முதலிய மருந்துகள். கேலிபாஸ், கால்கேரியாபாஸ், ஸிலிசியா. அந்தந்த இன்ஜெக்ஷன்கள். சொல்லியிருக்கும் மருந்துகளை ஆண் வைத்தியங்களுக்கும் குறிகளைக் கவனித்துக் கொடுத்து சௌகரியப்படுத்தலாம்.

ஸ்தனங்கள் சிறுத்தல்:- கோனியம், அயோடம், நைட்ரிக் ஆஸிட் முதலியன. அயோடம் இன்ஜெக்ஷன்.

கல்போன்று கெட்டியாய் இருந்தால்:- ஆஸ்டிரியஸ், பிரியோனியா, கால்கேரியா ப்ளூர், கார்போ அனிமாலிஸ், கோனியம், பைடலோகா, அயோடம்.

புற்று:- இது ரொம்பக் கடினமான வியாதி. நம்மிடம் கேட்டுத் தெரிந்து செய்யவும்.

ஆஸ்டிரியஸ், பைடலோகா, கார்போ அனிமாலிஸ், கார்சினோசின், கோனியம், ரேடியம், காலிசிலிகா, தூஜா, அயோடம் முதலியன.

மார்பு நுனி வெடிப்புகள்:- ஆர்னிகா, காஸ்டோரம், கிராபைடிஸ், பைடலோகா, ரடான்ஹியா, ஸிலிசியா, கேலிமூர்.

ஹைட்ராஸ்டிஸ் லோஷன் போட்டு தினம் கழுவவும்.

கேஸ் நெ. 1. வயது 21-முதல் பிரசவம் 1947.

மூன்று நாளாக அவஸ்தை. ஆயுதங்களோடு தயாராக பார்க்கச் சென்றோம். உத்திரத்திலிருந்து ஒரு கயிற்றைத் தொங்கவிட்டு அதைப் பிடித்துக் கொண்டு 3 நாளாக சேர்ந்தார்போல் நின்று கொண்டேயிருந்தாள். படுக்கவும் முடியவில்லை.

மருத்துவச்சி பரிசோதனை செய்ததில் 2 விரல் கர்ப்பப்பை வாய் மலர்ந்திருந்ததாக தெரிவித்தாள். 3 மணி நேரத்திற்குள் பிரசவம் ஆகிவிடுமென்று தெரிவித்துவிட்டு காமோமில்லா 10 M போடன்சியில் 6 வேளை கரைத்து ஒரு மணிக்கு ஒரு தரம் கொடுத்தோம். ஒரு 'டெலிவரீலி' இன்ஜெக்ஷன் செய்தோம். இரண்டு மணி நேரத்தில் சுகமான பிரசவம் ஆயிற்று.

எப்படி ஹோமியோபதி!

கேஸ் நெ. 2. 1945. G. R. வயது 20.

இது நமது சிஷ்யர் கேஸ். இருந்தாலும் ரொம்ப interesting கேஸ். பிரசவ வலி ஏற்பட்டு 6 மணி நேரம் ஆகிவிட்டது. சிரமம் அதிகம், மருத்துவச்சி பார்த்ததில் வலது கால் வெளியே வந்துவிட்டது. 'இது என்னால் முடியாது டாக்டரை அழைத்து வாருங்கள்' எனக் கூறிச் சென்றுவிட்டாள். நமது சிஷ்யர் உடனே ஒரு வேளை சிரமப்பட்டு ஆயுதம் போடவேண்டியிருக்குமோ என்று பயந்துகொண்டு லேடி டாக்டரை அழைக்கச் சென்றார். போவதற்கு முன் 'பல்ஸாடில்லா 200' மூன்று டோஸ் கரைத்துக் கொடுத்து அரை மணிக்கு ஒரு தரம் சாப்பிடுங்கள் என்று சொல்லிச் சென்றார். அவர் போய் வருவதற்கு ¾ மணி நேரம் ஆயிற்று; ஆனால் இவர் வெளியே சென்ற கால் மணிக்கெல்லாம் திடீரென்று ஒரு கடுமையான வலி வந்தது. வெளி வந்திருந்த வலது கால் டக்கென்று உட்சென்றுவிட்டது. மறுபடியும் லேடி டாக்டர் வருவதற்குள் குழந்தை சாதாரணமாக தலை முதலில் வந்து பிரசவமாகிவிட்டது. இதைக் கேள்விப்பட்டு லேடி டாக்டர் மிகவும் ஆச்சரியப்பட்டார். ஏனென்றால் இம்மாதிரி 'அதிசயங்கள்' அலோபதி வைத்தியத்தில் கனவுகூட காண

முடியாது. இப்பேர்ப்பட்ட கேசுகளாலேயே ஹோமியோபதியின் மகத்துவம் தழைத்தோங்குகிறது.

கேஸ் நெ. 3. வயது 19 செல்லப்பெண் முதல் பிரசவம் 1945.

பெண் மசக்கை என்று தானே உட்கார்ந்து பிரசவத்திற்கு ஒரு மாதம் முதற்கொண்டே 'பஜ்ஜி' தட்டிச் சாப்பிட்டு வந்தாள். பிரசவ வலி ஆரம்பிப்பதற்கு 4 மணி நேரம் முந்தி சுமார் 30 பஜ்ஜிகள் தட்டிச் சாப்பிட்டாள். இரவு 2 மணிக்கு வலி ஆரம்பித்தது. எப்போதுமே பிரசவ கேசுக்கு போகும்போது என்னென்ன ஆகாரம் சாப்பிட்டாள். என்று கேட்டுத்தெரிந்துகொள்ளவேண்டும்.

பஜ்ஜி சமாசாரம் தெரிந்தவுடன் ஒரு எனிமா கொடுத்துவிட்டு 'டெலிவரீஸி' இன்ஜெக்ஷன் கொடுத்து பல்ஸாடில்லா 10 M மூன்று டோஸ் அரை மணிக்கு ஒரு தரம் கொடுத்தோம். இரண்டாவது டோஸ் சாப்பிட்ட பிறகே குழந்தை பிரசவமாகிவிட்டது.

பல்ஸாடில்லா இம்மாதிரி பஜ்ஜி, வடை, எண்ணைப் பதார்த்தங்கள் முதலியவைகளில் மசக்கை என்று சொல்லிக்கொண்டு சாப்பிடுபவர்களுக்கு சிறந்த மருந்து.

எதற்கும் பிரசவத்திற்கு மூன்று மாதம் முந்தியே நம் "டெலிவரீஸி" செட் மாத்திரைகளை உபயோகப்படுத்துவது நல்லது. ஒரு விதமான தொந்தரவும் பிரசவ காலத்தில் ஏற்படாது.

ஸ்திரீயின் தனிப்பட்ட வியாதிகள்.

மாதவிடாய் சம்பந்தமான வியாதிகள்:—

(a) நாள்பட்டும் முதல் மாதவிடாய் ஏற்படாமலிருந்தால்:— பல்ஸாடில்லா 200. தினம் ஒரு வேளை, வெள்ளை பட்டாலும் இதைக் கொடுக்கவும்.

ஸெபியா 200:- வெள்ளை பட்டுக்கொண்டும், முகம் வெளுத்தும் இருந்தால்.

பிரையோனியா 200:- மாதவிடாய்க்குப் பதில் மூக்கிலிருந்து ரத்தப் பெருக்கு.

(b) மாதவிடாய் குறைந்தும் பட்டும் படாமலிருந்தால் பல்ஸாடில்லா, ஸெபியா, கார்போவெஜி.

(c) சீக்கிரம் சீக்கிரமாக பட்டால், அளவும் ரொம்ப அதிகமாயிருந்தால்; நக்ஸ்வாமிகா, பிளாடினா, கார்போவெஜி, ஐபிகாக், கால்கேரியா கார்ப் முதலியன.

(d) வலியுடன்கூடிய மாதவிடாய்:—

பெல்லடோனா:- நல்ல சிவந்த இரத்தம்; கருப்புக் கட்டிகள், நாற்றம். வலி தாங்கமுடியாது.

காக்டஸ்:- ரொம்ப கடுமையாக துடிக்கும் வலி. படுத்தவுடன் மாதவிடாய்ப் பெருக்கு நிற்கும்.

காலோபில்லம்:- வெட்டி வெட்டி இழுக்கும் வலி. முதல் இரண்டு நாளும் வலி. உடம்பு முழுவதும் வலி.

ஸிமிஸிபியூகா:- கணைக்குத் தவறி வரும் மாதவிடாய்; அதிக ரத்தப் பெருக்கு, பக்கங்களிலிருந்து வயிற்றுப் பக்கம் வலி. தாங்கமுடியாத வலி.

காக்குலஸ்:- காற்று உப்புசம்; வயிற்றில் கல் உராய்வதுபோல் வலி.

க்ரோகஸ்:- கம்பிபோல், கருப்பு ரத்தக்கட்டிகள், நாற்றம், வயிற்றில் உயிருள்ள வஸ்து உருளுவது போல்.

சாபினா:- நாள் நீடிக்கும் மாதவிடாய்; ரத்தம் நீற்றுப் போயிருத்தல், வெட்டுவதுபோல் அல்லது இழுப்பதுபோல் மேலும் கீழும் வலி.

ஸிகேல்:- வயிற்றில் தாங்கமுடியாத இசிவான வலி; ரத்தம் கருப்பாகவும், கட்டியாகவும், துர்நாற்றமும், ரத்தம் கபக் கபக்கென்று ஊற்றுபோல் வெளிவரும். கீழே அமுக்கும் வலி.

ஸெபியா:- காலையில் மாத்திரம் பெருக்கு. ரத்தம் ரொம்பக் குறைவு; கர்ப்ப காலத்திலும் ரத்தக் கசிவு.

அஸ்டிலேகோ:- அடிக்கடி நீடித்த அதிகரித்த ரத்தப் பெருக்கு; கருப்பாகவும் கட்டித் கட்டியும் சதா கசிந்துகொண்டும் துடைப்பக்கம் பரவியிருக்கும் வலி.

கேலிபாஸ்:- இடது பக்கம் கண் பாகத்தில் தலை வலியுடன் மாதவிடாய் வலி.

லாசஸிஸ்:- மாதவிடாய் நிற்கும் காலத்தில் (45 வயது to 55) கருப்பு, கட்டியான ரத்தம், உச்சந் தலையில் எரிச்சல்.

பிளாடினா:- முதல் நாள் குடல் முதலியன எல்லாம் வெளிவந்துவிடும்போல் கருப்புக் கட்டியான ரத்தம், மகா அகம்பாவம்.

பல்ஸாடில்லா:- கணக்கில்லாதது, உள்ளுர குளிர், தண்ணீர்போல் அல்லது தடிப்பாகவும், கட்டி கட்டியாகவும்.

பொதுவாக இவ்வியாதிகளில் 'மென்ஸின்', வெட்டை கலந்திருந்தால் "வியூக்யூர்" இன்ஜெக்ஷன் வாரத்திற்கிருமுறை கொடுப்பது அவசியம். கேலிபாஸ், பெயின்கில் இன்ஜெக்ஷன் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும். 'லாஸோன்' என்னும் மருந்து உள்ளுக்கு கொடுக்கவேண்டும். இது மிகவும் சிறந்த மருந்து.

உடம்பு ரத்தக் குறைவு இருந்தால் பயோ ஆம்னின், இரும்பு. மில்கோடின் இன்ஜெக்ஷன்கள், 'பயோபிளக்ஸ்' முதலியவை கொடுக்கவேண்டும்.

(e) தங்கிப்போன மாதவிடாய்.

இது கர்ப்பத்தினாலும், கர்ப்பப்பை கட்டிகள், புற்று முதலியவையினாலும், இரத்தச் சோகையினாலும் இருந்தால் அததற்குத் தகுந்த சிகிச்சை செய்யவேண்டும்.

(1) ரத்தச் சோகையினால்:— பெர்ரம், கேலி கார்ப், நேட்ரம் மூர், பல்ஸாடில்லா, ஸிகேல், கால்கேரியா பாஸ்.

(2) ஜலதோஷத்தினால்:— அகோனைட்; ஆண்டிம் க்ரூட், கோனியம், டல்காமரா, பல்ஸாடில்லா, ரஸ்டாக்ஸ்.

(3) பயத்தினால் ஏற்பட்டால்:— அகோனைட், ஓபியம், லைகோபோடியம்.

(4) ஆஸ்த்மாவுடன் இருந்தால்:-ஸ்டான்ஜியா.

(5) பைத்தியத்துடன்:—ஸ்டிராமோனியம்.

(6) பாண்டு வீக்கத்துடன்:-ஏபிஸ், கேலிகார்ப்.

(7) வயிற்றுவலியுடன்:—காக்குலஸ்.

(8) மஞ்சட்காமாலையுடன்:—சியோனாதஸ்.

(9) மண்டை வலியுடன்:—ஜெல்சமியம்.

(10) கண் வலியுடன்:—பல்ஸாடில்லா.

(11) சினைப்பை வீக்கத்துடன்:— ஆண்டிம் க்ரூட், அகோனைட், பெல்லடோனு.

(12) வேறு எந்த பாகத்திலிருந்தாவது ரத்தம் வந்தால்:— பிரியோனியா, பெர்ரம், ஹார்மமலிஸ், ஐபிகாக், பாஸ்பரஸ், பல்ஸாடில்லா.

ரத்தத்தின் நிறம்.

(1) நல்ல சிவப்பு:—அகோனைட், பெல்லடோனு ஐபிகாக், மில்லிபோலியம், ஸாபினு, டிரில்லியம், அகேலிபா, லாஸோன்.

(2) அடிக்கடி மாறுதல்:—பல்ஸாடில்லா.

(3) கட்டி கட்டினது:— அம்மோனியம் கார்ப், காமோமில்லா, சைனு, காக்குலஸ், கேலிமூர், நக்ஸ் வாமி, ப்ளாடினு, ஸாபினு.

(4) கருப்பான:—காக்குலஸ், க்ரோகஸ், ஹாம மலிஸ், கேலிகார்ப், கேலிமூர், மாக்பாஸ், நைட்ரிக் ஆஸிட், ப்ளாடினு, பல்ஸாடில்லா.

(5) சூடான:—பெல்லடோனு.

(6) துர்நாற்றம்:—கார்போவெஜி, கேலிகார்ப், மெடரினம், ஸோரினம், ஸிகேல், ப்ளாடினு.

(7) தார் மாதிரி:—காக்குலஸ், க்ரோகஸ், மாக் கார்ப், மெடரினம், ப்ளாடினு.

(8) கம்பி மாதிரி:—க்ரோகஸ், ப்ளாடினு, கேலி மூர், க்ரியோஸோட், மாக்பாஸ், நைட்ரிக் ஆஸிட், நக்ஸ்மாஸ்ச்.

(9) தண்ணீர் மாதிரி:— அலுமினு, பெர்ரம், கேலிபாஸ், நேட்ரம் ஸல்ப், நேட்ரம் மூர், நேட்ரம் பாஸ், ஸிகேல், ஸாபினு.

(10) வெளுத்த நிறம்:— அலுமினு, கார்போ வெஜி, க்ராபைடிஸ், கேலிகார்ப், பல்ஸாடில்லா, நேட்ரம்மூர்.

மாதவிடாயின்போது குறிகள்.

வயிறு புண் மாதிரி, உப்புசமும்:— அபோசை னம், காமோமில்லா, சைனு, காக்குலஸ், ஸெபியா.

வயிற்றில் கல் போட்ட மாதிரி கனம்:-அலோஸ், பெல்லடோனு, கேலி கார்ப், கேலி ஸல்ப், பல்ஸா டில்லா, ஸெபியா.

கண் மங்கல்:—பல்ஸாடில்லா.

மூச்சுவிட சிரமம்:— குப்ரம், அயோடம் ஸ்பான்ஜியா.

ஸ்தனம் வீங்குதல், வலி:-பிரியோனியா, கோனி யம், பல்ஸாடில்லா, லாக்கானினம், பைடலோகா, மெர்குரி.

கால் கை எரிச்சல்:— கார்போவெஜி, காமோ மில்லா, ஸல்பர்.

வயிற்றுப் போக்கு:— அம்மோனியம் கார்ப், பாஸ்பரஸ், வெராட்ரம், கேலிபாஸ்.

முகம் சிவப்பு:—ஸாங்குனேரியா, பெர்ரம்பாஸ்.

முகம் வெளுத்து, கண் குழிந்து:— ஐபிகாக், வெராட்ரம் ஆல்ப்.

கால் வீக்கம்:—க்ராபைடிஸ், லைகோபோடியம், பல்ஸாடில்லா.

தலைவலி:—பிரியோனியா, பெர்ரம்பாஸ், ஜெல்சமியம்.

மார்பு படபடப்பு:— காக்டஸ், நேட்ரம் மூர், ஸாங்குனேரியா, ஸல்பர், ஸெபியா, ஸ்பான்ஜியா.

வெள்ளை படுதல்:—பரைடா கார்ப், கால்கேரியா கார்ப், கார்போவெஜி, காஸ்டிகம், க்ராபைடிஸ், நேட்ரம் மூர், பல்ஸாடில்லா, லாசேரன்.

LEUCORRHOEA—வெள்ளை, வெட்டை.

எந்த வயதிலும் இது வரலாம். ஹைட்ராஸ்டிஸ் லாஸோன், முதலிய லோஷன்களைப்போட்டு அடிக்கடி அலம்பிக்கொள்ளவேண்டும். ஆங்கிலத்தில் இதற்கு ‘டூஸ்’ Douche என்று பெயர்.

உள்ளுக்கு கீழ்க்கண்டவை சிறந்தவை.

அலூமினு:- பகலில் நாள்பட்டது; மாதவிடாய்க்கு முந்தியும் பிந்தியும் அதிகப்படும்.

ஆரம்மெட்:- கிரந்தி நீருள்ளவர்.

காலோபில்லம்:- சிறுமிகளுக்கு;— புஷ்பவதியாவதற்குமுன் வரும் வெட்டை கால்கேரியா கார்ப்— சிறுமிகளுக்கு—உடம்பு – ஊதி—வியர்வை கொட்டும்.

க்ராபைடிஸ்:- ரொம்ப அளவு அதிகம்; இராப் பகல் கொட்டும்.

ஹைட்ராஸ்டிஸ்:-
கேலிஸல்ப்:- } :—மஞ்சள், கடிப்பாக, கர்ப்பப்பையிலிருந்து கம்பிமாதிரி தொங்கும்.

க்ரியோஸோட்:— திடீரென்று வந்து மறையும். மஞ்சள், துர்நாற்றம், அரிப்புடன்.

மார்க்யுர்:- வலி, மலச்சிக்கல், ஆட்டுப்புழுக்கை மாதிரி மலம், ஒவ்வொரு தரமும் மலம் கழிந்தவுடன் கடிப்பாக வெள்ளை.

ப்ளாடினு:- வலியில்லாமல் மாதவிடாய்க்கு சமீபத்தில். படபடப்பு.

பல்ஸாடில்லா:- மூக்குச்சளிபோல், ரொம்ப காம இச்சை.

ஸெபியா:- துர்பலமான, மெலிந்த பெண்கள், சம்போகம் வலியுடனிருக்கும்—தாங்காது.

கோனியு:- தினம் ஒரு வேளை ஒரு க்ரெயின் கொடுக்க நல்ல டானிக்.

ஸிலிசியா:- உடம்பு முழுவதும் வலி, தண்ணீர் மாதிரி மாதவிடாய்க்குப் பதிலாக.

ஸல்பர்:- நடுவே கொடுக்கவேண்டியது.

கால்கேரியா பாஸ்:- முட்டையின் வெள்ளைக்கருபோல் நல்ல டானிக்.

கேலிமுர்:- பால்போல் வெள்ளை.

கேலிபாஸ்:- பட்ட இடம் வெந்துபோகும்; நரம்பு தளர்ச்சி; கர்ப்பப்பை வியாதியும் இந்த வெள்ளையுடன் சம்பந்தப்பட்டிருந்தால் நல்ல அனுபவமுள்ள ஸர்ஜனைக் கலக்கவேண்டும். எமக்கு எழுதவும். பொதுவாக “லியூக்யூர்” இன்ஜெக்ஷன் முக்கால் வாசி கேசுகளைக் குணப்படுத்திவிடும். வெட்டைச் சூடு இருந்தால் ‘ஸல்பதயோசால்’ 3x இன்ஜெக்ஷன் கொடுக்கவேண்டும். மெடரினம், டியூபர்குலினம், ஸோரினம், கார்சினேசின் முதலியன நடுநடுவே கொடுக்கவேண்டும்.

பொதுவாக தினம் காலையில் 200 போடன்சியில் ஒரு வேளை கொடுக்கலாம். சில சமயங்களில் அடிக்கடி கொடுக்கலாம்.

நம் “லாஸோன்” இதற்கு உகந்த மருந்து.

"பயோபாஸ்பேட்ஸ்" டானிக் உபயோகப் படுத்தவேண்டும்.

சினைப்பை—OVARIES.

கர்ப்பப்பையின் இரண்டு பக்கத்திலும் முட்டை வடிவமான இரண்டு கோளங்கள் (Glands) உள்ளன. கர்ப்பப்பையின் இரண்டு பக்கங்களிலும் இவைகளிலிருந்து இரண்டு குழாய்கள் வந்து சேருகின்றன. (Fallopian Tubes) சினைப்பையிலிருந்துதான் முட்டைகள் (Ova) கர்ப்பப்பையில் வந்துசேருகின்றன. சம்போகம் ஏற்பட்ட பின்னர் ஆண் தாது இம் முட்டையுடன் சேர்ந்து இரண்டும் ஒன்றாகக் கலந்து கர்ப்பப்பையில் குழந்தையாக வளருகிறது. இம் முட்டைகள் குழந்தையாக மாறாவிட்டால் மாத விடாய் மூலமாக வெளித்தள்ளப்படுகின்றன.

இவைகளுக்கு ஏற்படும் வியாதிகள், டியூபர் குலோசிஸ், புற்று, நீர்க்கட்டி, சதைக்கட்டி, வீக்கம் முதலியன கட்டிகள் சாதாரணம். வீக்கங்களுக்கு மற்ற பாகத்தின் வீக்கம் போலவே சுரம், வலி முதலியவற்றிற்கும் மருந்து கொடுக்கவேண்டும். மற்ற வியாதிகளை நம் ஆஸ்பத்திரியின் அனுபவமுள்ள டாக்டர்களைக் கொண்டுதான் பரிசை செய்து சிகிச்சை செய்யவேண்டும்.

கர்ப்பப்பையிற்கும் இதே மாதிரி வியாதிகள் உண்டு: சிகிச்சையும் அனுபவம் உண்டு.

யோனிக்குழாயின் வியாதிகள்—DISEASES OF VAGINA.

(1) நரம்பு வலி (2) வெளித்தள்ளுதல். (3) காற்று உப்புசம். (4) பவித்திரம். (5) வீக்கம். (6) நீர்க்கட்டி. (7) பாலுண்ணி போன்ற வளர்ச்சிகள். (8) அரிப்பு. (9) கிரந்திப்புண் முதலியன.

பொதுவான சிகிச்சை:—

இக்னேஷியா:— சம்போகத்தின்போது தாங்க முடியாத வலி, எரிச்சல்.

ஹெலோனியஸ்:- அரிப்பு–சூட்டுடன் எரிச்சல்.

நேட்ரம்மூர்:- யோனி வரண்டிருத்தல், சம்போகத்தில் இச்சையின்மை.

நைட்ரிக் ஆஸிட்:- வெடிப்புகள்—கிரந்திப்புண், ரத்த வெட்டை.

ப்ளாடினா:- நரம்புத்தளர்ச்சியினால் இசிவு மாதிரி வலி.

நக்ஸ்வாமிகா:- அரிப்பினால் கைமுஷ்டி (ஹஸ்தப் பிரயோகம்) செய்தல்; வீக்கம், எரிச்சல், சம்போகம் செய்யமுடியாது.

ஸெபியா:- சம்போகம் வலிக்கும்; ஊசி குத்துவதுபோல் வலி, சிறுசிறு சினைப்புகள்.

அரூமன்:— யோனி தொடமுடியாது, யோனி சுருங்கிவிடுதல்–சிறுசிறு கட்டிகள்.

ஸிலிசியா:- கையால் தொடமுடியாது–அரிப்பு.

காக்குலஸ்: தாங்கமுடியாத வலி சம்போக காலத்தில்.

காலோபில்லம்:- இசிவுபோன்ற வலி, ஹாமமலிஸ் லோஷன் போட்டு தினம் அலம்பவும்.

கட்டிகளுக்கு:- கோனியம், மார்க்யூர், ஸெபியா, கால்கேரியா ப்ளூர்,

பவித்திரம்:— ஸிலிசியா, கால்கேரியா ப்ளூர், லைகோபோடியம், கிராபைடிஸ்.

காற்றுப்புசம்:– புரோமின், லைகோபோடியம்.

வெளித்தள்ளுதல்:—அர்ஜென்டம், பெர்ரம், நக்ஸ் மாஸ்சடா, ஸெபியா, நேட்ரம்மூர் முதலியன எல்லாவற்றிற்கும் ‘மென்லின்’, ‘லியூக்யூர்’ ‘பெயின்கில்’ ‘பயோ ஆம்னின்’, ‘மில்கோடின்’ முதலிய இன்ஜெக்ஷன் கவனிக்கப்படவேண்டியது.

‘லாசோன்’ உள்ளுக்கு கொடுக்கவேண்டிய முக்கிய மருந்து.

சில கட்டிபோன்ற வியாதிகளுக்கு ஆபிரேஷன் செய்யவேண்டியிருக்கும். அவைகளைப்பற்றி நம்மிடம் நன்ருகத் தெரிந்துகொண்டு சிகிச்சை செய்யலாம்.

புற்று:— இது கொடிய நோய் ஆபிரேஷன், எக்ஸ்-ரே ட்ரீட்மெண்ட், முதலியன.

‘ரேடியம்’ இன்ஜெக்ஷன் உள்ளுக்கு ரேடியம் கார்சினோசின், கோனியம் முதலியன.

மலடு—STERILITY.

இது பிள்ளை உண்டாகாமலிருப்பதனுல் ஏற்படும் சீக்கிற்கு பெயர், கர்ப்பப்பை, சினைப்பை வியாதியினுல் ஏற்பட்டால் அதை நீக்கவேண்டும். வேறு அவயவங்களின் வியாதி காரணமாக இல்லாவிட்டால், கீழ்க்கண்ட மருந்துகள் உபயோகப்படும்.

ஆரம்மெட், கால்கேரியா கார்ப், பாஸ்பரஸ், நேட்ரம் மூர், அயோடம், லாசோன், போரக்ஸ் முதலியன.

‘டெலிவரின்’ மாத்திரைகள்.

‘ரெஜுவின், இன்ஜெக்ஷன்,

——o——

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
x		137. குழுந்தை வலிகள்	137. குழந்தை வலிப்புகள்
xv	30	பசோரா ...	சோரா
xviii	7	பண்ணவேண்டும் ...	பண்ணமுடியும்
,,	25	வார்த்தை தற்போதும்	வார்த்தை தற்போது
xx	18	பெரில் ...	பெரிய
xxxvi	27	சக்தியை ...	சக்தியையும்
xxxviii	9	முறையே ...	முறையை
xLiii	3	ஆபத்து ...	ஆபத்து.
xLvi	6, 7	வெண்டிரிசில் ...	வெண்டிரிகில்
Lii	27	அதை ...	சதை
Liii	17	ஆண் குறுயின் ...	ஆண் குறியின்
3	18	தலைவலியுல் ...	தலைவலியும்
9	2	பஸ்ஸாடில்லா ...	பல்ஸாடில்லா
20	17	கசையில் ...	கடைசியில்
32	1	Dungue ...	Dengue
32	28	ரத்தம் ...	ரத்த
33	3	பெரும்படி ...	பெரும்படி.
34	26	ஹிருதம் ...	ஹிருதயம்
36	24	அமோட் ...	அயோட்
48	12	இருக்ரும் ...	இருக்கும்
53	21	அப்புதமாக ...	அற்புதமாக வேலை
64	17	எல்லோருக்கும் ...	செல்வோருக்கும்
67	25	இது ...	இதில்
76	23	ஸ்டிரிக்லேன் ...	ஸ்டிரிக்னைன்
96	8	ஹைட்ரோ கானடல் ...	ஹைட்ரோகாடைல்
,,	24	பெருப்பாலும் ...	பெரும்பாலும்
105	29	சொடடுவீதம் ...	சொட்டு வீதம்
117	22	காமோமில்லா பேதி ...	காமோமில்லா
120	1	பல்யீரல் ...	பல்லீரல்
125	1	Gastricvlcer ...	Gastriculcer
136	10	காரணங்களேயே ...	காரணங்களே
138	3	ஐரிஸ்டிரைக்ஸ் ...	ஐரிஸ்டினக்ஸ்

146	16	Enlar Gement ...	Enlargement
151	16	சொடா ...	சோடா
155	3	ஜல்ஸ் ...	ஜெல்ஸ்
161	18	காகா ...	கரகா .
170	4	யால் விரைக்கு ...	யானி விரைக அரைக்கு
172	18	வாசமோ ...	வாசமோயும்
175	6	விஷயங்கள் ..	விஷங்கள்
180	8	புச்சிகளாலல் ...	பூச்சிகளினால்
188	15	Convulisions ...	Convulsions
194	25	இபோரைக் ...	இபோகைக்
216	2	மாரிஷியா ...	மர்ஷியா
231	3	கருப்பு ...	கறுப்பு
,,	15	ட்ராகியா ...	ட்ராகியா
235	21	பொருக்கட்டி ...	பொருக்குக்கட்டி
244	2	சந்திரிருக்கு ...	சக்திரிருக்கு
253	8	உடையது ...	உடையாது
258	2	விஷயத்திற்கும் ...	விஷத்திற்கும்
267	9	இயரிருக்கும் ...	இயகிரிருக்கும்
277	1	சிமிஷைக்களுக்கு ...	சிமிஷங்களுக்கு
,,	4	ருக்கு ...	முக்கு .
282	25	Wtaer ...	Water
294	27	அடிப்புருக்கை ...	அடிப்புருக்கை
296	12	வளருகிறது ...	வளருகிறது

LL:4:6
N49

101624

LIST OF BOOKS.

(IN TAMIL.)

1. ஹோமியோ இன்ஜெக்ஷன்.
2. ஜுரம்.
3. அஸ்த்மா.
4. நம் நாட்டு மருந்துகள்.
5. ஹோமியோ கீ நோட்ஸ்.
6. பேட்டெண்ட் மருந்துகள்.